தி.க.சி.
என்றொரு
மானுடன்

செ.திவான்

தி.க.சி. என்றொரு மானுடன்

வரலாற்றாசிரியர்
செ.திவான், எம்.ஏ.,எம்ஃபில்.,

நூலாசிரியரின் 96வது நூல்

நூலின் தலைப்பு	:	தி.க.சி. என்றொரு மானுடன்
பொருள்	:	வரலாறு
நூலின் ஆசிரியர்	:	செ.திவான், திருநெல்வேலி-627002
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	2015, டிசம்பர் 6
உரிமை	:	ஆசிரியருக்கே
பக்கங்கள்	:	176
அச்சிட்டோர்	:	சிவசக்தி ஆர்ட்ஸ், சிவகாசி
நூல் வடிவமைப்பு	:	இர்ஷாத், நெல்லை, 9489115236
விலை	:	ரூ.150/-

வெளியீடு

சுஹைனா பதிப்பகம்

106F, 4A, திருவனந்தபுரம் சாலை, நெல்லை,
பாளையங்கோட்டை - 627002 போன்: 0462-2572665

உள்ளே.....

எண்ண அலைகள் 04

தி.க.சி. வாழ்க்கைக் குறிப்புகள் 05

தி.க.சி. என்றொரு மானுடன் 15

ஏழுணா 30

தி.க.சி. யின் திறனாய்வுகள் 59

புதுமைப்பித்தன் 70

அவர் படைப்புகளே அவரின் வாக்குமூலம் 97

விமர்சனங்கள் - மதிப்புரைகள் - போட்டிகள் 122

திகசி - திவான் 128

நிறைவாக 170

எண்ண அலைகள்



உலகமே பாராட்டிய அய்யா தி.க.சி. குறித்து இது முழுமையான வாழ்க்கை வரலாறோ அல்லது அவரது பணிகளைப் பற்றிய முழுமையான ஆய்வு நூலோ அல்ல.

கம்பன் சொல்வானே ஆசைபற்றி அறையலுற்ற ஒரு சிறு முயற்சி. அய்யா அவர்களுக்கும் - அடியேனுக்கும் இடையே இருந்த தந்தை - மகன் உறவைப் பற்றியும், அய்யாவிடம் அடியேன் கண்ட அளப்பறிய அற்புதக் குணங்களைப் பற்றிக் கூறும் சிறு நூல்.

1982 ஆகஸ்டில் நியூ செஞ்சரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட் 18 ரூபாய் விலையில் ஜீவா பவள விழா பிறந்த நாள் வெளியீடாக எனது பிரியத்திற்குரிய அண்ணன் சாகித்திய அகாடமி விருது பெற்ற நாவலாசிரியர் பொன்னீலன் எழுதி 406 பக்கங்களில் வெளிவந்த '**ஜீவா என்றொரு மானுடன்**' என்ற நூலுக்கு திகசி தான் அவ்வாறு தலைப்பை சூட்டியதாக எளியேனிடம் கூறினார்கள்.

திகசி அவர்கள் தோழர் ஜீவானந்தம் வாழ்க்கை பற்றிய நூலுக்கு சூட்டிய அதே பெயரினை அடியேனும் திகசியின் வாழ்க்கைக் குறிப்புகள் அடங்கிய நூலுக்கும் சூட்டியுள்ளேன்.

இந்நூல் வெளிவர உதவிய எல்லாம் வல்ல இறைவனுக்கும், எனது துணைவியார் டாக்டர் திவானி ஜஹானரா, எனது மகள்கள் தி.நஜாத்M.C.A., டாக்டர் தி.சுஹைனா, பேரன் ரெஹான் சுலைமான், ஜனாப். அப்துல் நசீர், சிவசக்தி ஆர்ட்ஸ் குமரேசன் ஆகியோருக்கும், காலத்திற்கும் நன்றி

எளியோன் வாழ்வதற்காக எழுதவில்லை
எழுதுவதற்காகவே வாழ்கிறேன்

ரெகான் சுலைமான் இல்லம்,
106F, 4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை,

செ.திவான்

தி.க.சி. என்றொரு மானுடன் வரலாற்றுக் குறிப்புகள்

பெயர் : **தி.க.சிவசங்கரன்**

தமிழக மக்களால் அறியப்பட்ட மூன்று எழுத்து
: **தி.க.சி.**

பிறந்த நாள் : 30.03.1925

பிறந்த ஊர் : **திருநெல்வேலி**

பெற்றோர் : **கணபதியப்பன் - பர்வதம்மாள்**

உடன்பிறந்தோர் : **ஒரே தங்கையும் தம்பியும்**

குடும்பம் : **நடுத்தர, வியாபார, விவசாயக் குடும்பம்**

1931-இல் தந்தையார் காலமானபோது தி.க.சி.க்கு வயது
: **ஆறு**

1932-இல் தாயார் காலமானபோது தி.க.சி.க்கு வயது
: **ஏழு**

தாயாரைப் பற்றிய தி.க.சி.யின் பதிவு
: **'என் முதல் பேராசான்!'**

மரணப் படுக்கையில் இருந்தபோது தாயார் தி.க.சி.யிடம் சொன்ன மூன்று கட்டளைகள் :
- ★ **நல்லாப் படிக்கணும்!**
- ★ **நல்லவனா வாழணும்!**
- ★ **நல்ல பேரை எடுக்கணும்!**

பெற்றோரை இழந்த நிலையில் தி.க.சி.யை வளர்த்து ஆளாக்கியது
: **தாத்தா சீவலப்பேரி கு.சிவசங்கரன்**

பள்ளிக் கல்வி பயின்றது: **நெல்லை டவுண் மந்திரமூர்த்தி உயர்நிலைப்பள்ளி**

11-ஆவது வயது முதல் தி.க.சி.யைச் செதுக்கிய சிற்பி
: **மகாகவி பாரதியார்**

நூலகங்களுக்குச் சென்று தி.க.சி. படித்த நாளேடுகள்
: **'சுதேச மித்திரன்', 'தினமணி', விடுதலை'**

வார, மாத, மாதம் இருமுறை இதழ்கள்
: **'ஆனந்த விகடன்', 'ஆனந்த போதினி' 'பிரசண்ட விகடன்'**

ஆங்கில நாளேடுகள் : **'தி இந்து', 'மெட்ராஸ் மெயில்'**

நெல்லை இந்துக் கல்லூரியில் இண்டர் மீடியட் வகுப்பில் சேர்ந்தது
: **1941 ஜூன்**

தி.க.சி.யின் இளைமைக் கால நண்பர்கள்
: **தி.ப.திருஞானசம்பந்தம் (தி.ப.நி.), மசூதுதனன், ரகு, சங்கரலிங்கம், கே.வேலாயுதம், பெருமாள், ராஜூ, குமாரசாமி, டிஎஸ்.சண்முகசுந்தரம்**

கல்லூரியில் பயின்ற போது தி.க.சி.யின் அறிவை விரிவாக்கிய தமிழ்ப் பேராசிரியர்கள் : **கு.அருணாசலக் கவுண்டர், ஆ.முத்துசிவன்**

தி.க.சி. வல்லிக்கண்ணனை முதன் முதலில் சந்தித்தது
: **1941 ஆம் ஆண்டு**

வல்லிக்கண்ணனுடனான தி.க.சி.யின் குரு-சிஷ்ய உறவு நீடித்திருந்தது
: **1941இல் தொடங்கி நவம்பர் 9,2006 அன்று வல்லிக்கண்ணனின் இறுதி மூச்சு நிற்கும் வரையில்**

ஒரு இளைய எழுத்தாளராகத் தி.க.சி. வாழ்வைத் தொடங்கியது
: **1941 ஆம் ஆண்டு**

தி.க.சி.யை பெரிதும் ஈர்த்த எழுத்தாளர்கள்
: **வ.ரா.(வ.ராமசாமி)**

தி.க.சி. விரும்பிப் படித்த பிறமொழி எழுத்தாளர்கள்
: **லியோ டால்ஸ்டாய், செக்காவ், மாப்பசான், தாமஸ் ஹார்டி, ஜேன் ஆஸ்டன், முல்க்ராஜ், ஆனந்த், காண்டேகர்**

தி.க.சி.யின் திருமண நாள்
: **ஆகஸ்ட் 22, 1942, அப்போது வயது 17**

வாழ்க்கைத் துணைவியார் பெயர்
: **தெய்வானை**

மக்கட் செல்வம் ஆண் மக்கள்
: **கணபதி,**
கல்யாணசுந்தரம் (கல்யாண்ஜி, வண்ணதாசன்)
இராமலிங்கம்

பெண் மக்கள் : **ஜெயலெட்சுமி, சாந்தா, கௌரி**

சிறுகதை வெளி வந்த ஆண்டு
: **1942**

வெளிவந்த இதழ் : **'பிரசண்ட விகடன்'(மாதம் இருமுறை இதழ்)**

சிறுகதையின் தலைப்பு : **'வண்டிக்காரன்'**

படைப்புப் பணியில் நீண்ட நெடுங் காலம் தி.க.சி.க்கு உற்றுழி உதவியவர்கள்

: 1. **'சரஸ்வதி' ஆசிரியர் வ.விஜயபாஸ்கரன்**

: 2. **பேராசிரியர் நா.வானமாமலை**

: 3. **தொ.மு.சி.ரகுநாதன்**

: 4. **ஆ.சம்பந்தமூர்த்தி எனும் ஏ.எஸ்.மூர்த்தி**

இலக்கியப் பணத்தில் தி.க.சி. படைத்தவை

: **சிறுகதை, கவிதை, கட்டுரை, ஒற்றையங்க நாடகம், இலக்கியத் தினாய்வு**

தாம்கோஸ் வங்கியில் காசாளராக வேலை கிடைத்தது

: **1945-ஆம் ஆண்டின் தொடக்கத்தில்**

வங்கி ஊழியராகவும் தொழிற் சங்கவாதியாகவும் தமிழகத்திலும் கேரளத்திலும் பணியாற்றிய காலம்

: **19 ஆண்டுகள் (1945-1964)**

'அண்ணாச்சி' என்று அழைக்கப்படும் எழுத்தாளர் சிந்துபூந்துறை எஸ்.சண்முகம் அவர்களுடன் இணைந்து 'நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ்' எனும் பதிப்பகத்தை நடத்தியது

: **மே, 1995 முதல் மே 1962 வரை**

இப்பதிப்பகம் வெளியிட்ட நூல்கள்

: **அரசியல் போதனை நூல்கள், ரஷ்ய, சீன இலக்கிய மொழிபெயர்ப்பு நூல்கள்**

மதுரை வங்கியின் கொச்சிக் கிளையில் பணியாற்றியது

: **1962 முதல் 1964 வரை**

வங்கி பணியில் இருந்து ஓய்வு பெற்றது

: **1964- ஆம் ஆண்டில்**

சென்னையில் சோவியத் செய்தித் துறை ஆசிரியர் குழுவில் சேர்ந்தது

: **டிசம்பர் 14, 1964**

ஜீவாவின் 'தாமரையில்' பொறுப்பாசிரியராகக் கடமையாற்றியது

: **1965 முதல் 1972 வரை**

கால் நூற்றாண்டுக் கால வளர்ச்சிக்குப் பங்களிப்பைச் செலுத்திய இதழ்கள்

: **'சாந்தி', 'கணையாழி', 'கண்ணதாசன்', 'எழுத்து', 'இலக்கிய வட்டம்', 'சுபமங்களா', 'செம்மலர்', 'வானம்பாடி'**

தி.க.சி. உள்ளிட்ட எழுத்தாள நண்பர்களுக்கு தமது இல்லத்தையே களமாக்கி மேடை அமைத்துத் தந்த இலக்கியப் புரவலர்

: **C.A.K.ரத்தின சபாபதி (குளத்தூர் ஜமீன்தார்)**

தி.க.சி. போற்றிய இலட்சிய வழிகாட்டிகள்

: **மார்க்ஸ், லெனின், சிங்கார வேலர், பெரியார், ஜீவா, நா.வானமாமலை, பாரதியார், பாரதிதாசன்**

நெல்லை வாலிபர் சங்கத்துடன் இணைந்து தி.க.சி. நடத்திய கையெழுத்துப் பத்திரிக்கை

: **'இளந்தமிழன்' (1941-1948)**

நெல்லையில் நண்பர்களுடன் இணைந்து தி.க.சி. செயல்பட்ட இலக்கிய அமைப்பு

: **'கலைஞர் கழகம்' (1947-1954)**

நெல்லை நண்பர்களுடன் சேர்ந்து தி.க.சி. செயல்பட்ட பிறிதோர் இலக்கிய அமைப்பு

: **முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (1955-1958)**

கலை, இலக்கிய வளர்ச்சிக்கென சிந்துபூந்துறை சண்முகம் அண்ணாச்சி வீட்டில் இயங்கி வந்த கழகம்

: **'கலைஞர் கழகம்'**

தி.க.சி.யின் புனைப் பெயர்களில் ஒன்று

: **'துருவன்'**

தி.க.சி. சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றது

: **2000-ஆம் ஆண்டு**

விருது பெற்றுத் தந்த நூல்: **'விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள்'**

தி.க.சி. பற்றிய ஆவணப் படம்

: **21இ, சுடலைமாடன் கோவில் தெரு, திருநெல்வேலி டவுண்**

ஆவணப் படத்தை தயாரித்தவர்
: எஸ்.ராஜ்குமாரன்

ஆவணப் படம் பெற்ற விருதுகள்
: திருப்பூர் தமிழ்ச் சங்க விருது
த.மு.எ.ச. விருது
தாரகை இலக்கிய விருது

ஈரோடு 'மக்கள் சிந்தனைப் பேரவை'யின் பாரதி விருதினைப் பெற்றது
: 2011 ஆம் ஆண்டு

'தி.க.சி. நாட்குறிப்புகள்' : 304 நாட்கள் தி.க.சி. எழுதிய நாட் குறிப்பு

தொகுப்பாசிரியர் : வே.முத்துக்குமார்

தி.க.சி. பெற்ற விருதுகள்: லில்லி தெய்வசிகாமணி விருது
சான்றோர் பேரவை விருது
உலகப் பெருந்தமிழர் விருது

துணைவியார் இறந்தது : 2006 ஆம் ஆண்டு

தி.க.சி. வகுத்தளித்த பஞ்சீலக் கொள்கைகள்
: தமிழியம், பெண்ணியம், தலித்தியம்,
சுற்றுச்சூழலியம், மார்க்சியம்

தி.க.சி.யின் கண்ணோட்டத்தில் நமக்கு வழிகாட்டிகள்
: மகாகவி பாரதியார்,
: புரட்சிக் கவிஞர் பாரதி தாசன்
: மாக்சிம் கார்க்கி

ஒரு படைப்பில் இருக்க வேண்டும் எனத் தி.க.சி. வலியுறுத்தும் மூன்று கூறுகள் : கலையழகு (Artistic Beauty)
: உலகளாவிய மனித குல நேயம்
(Universal Humanism)
: சமூக நோக்கு (Social Outlook)

தமிழ் எழுத்தாளர்களிடம் மேலோங்கிக் காணப்பட வேண்டும் எனத் தி.க.சி. எதிர்ப்பார்பவை
: தத்துவ தரிசனம்
: இலட்சியக் கடமை
: மக்கள் பணி

தி.க.சி.யின் கருத்தியலில் ஒவ்வொரு தமிழனுக்கும் இருக்க வேண்டுவன

: **'அறிவினிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்தினில் அன்பினார் வெள்ளம், பொறிகளின் மீது தனியரசாணை'**

ஒரு விமர்சகனுக்கு அவசியம் எனத் தி.க.சி. வலியுறுத்தும் மூன்று பண்புகள்

: **உண்மை**

: **நடுநிலை**

: **நேர்மை**

தி.க.சி. இன்றைய இளைஞர்களுக்கு விடுக்கும் செய்தி

: **நல்ல நூல்களை வாசிக்க வேண்டும்**

: **நூல்களில் உள்ள சிந்தனைகளை யோசிக்க வேண்டும்**

: **மனித குலத்தை நேசிக்க வேண்டும்**

தி.க.சி. கருத்தியலில் பாரதி எனும் கொடியில் பூத்த இரு மலர்கள்

: **பாரதி தாசனும், ஜீவாவும்**

தி.க.சி.யின் குறிக்கோள் : பாராட்டு என்பது ஒரு மழை அந்த மழை இல்லாமல் எந்த இலக்கியச் செடியும் வாடிவிடக்கூடாது.'

தி.க.சி. பற்றிய இரத்தினச் சுருக்க மதிப்பீடுகள் கி.ராஜநாராயணன்

: **தி.க.சி.யை சுக்குக்கு ஒப்பிட்டுச் சொல்லலாம்!**

பழ.நெடுமாறன் : **'சிறியன சிந்தியாதான்!'**

பொன்னீலன் : **'யாருக்கும் கட்டுப்படாத இடதுசாரி இலக்கியச் சிங்கம்'!**

மகேந்திரன் : **'திறனாய்வில் தனித்துவத்தை உருவாக்கியவர்'!**

எஸ்.தோதாத்ரி : **'தி.க.சி. ஒரு சிறந்த மனிதநேயவாதி'!**

டி.செல்வராஜ் : **'செயல் வீரர்'!**

கலாரசிகன் : **'தி.க.சி.யிடம் நான் கற்ற பாடம், மனம் திறந்து மற்றவர்களைப் பாராட்டுவது'!**

அசோகமித்திரன் : 'மிக்க அன்புடன்' என்று கடிதத்தை முடிக்க நான் தி.க.சி.யிடமிருந்து தான் கற்றேன்!

மேத்தா : 'அஞ்சலட்டை போல் திறந்த மனம் கொண்டவர்!'

கழனியூரன் : 'சிரித்த முகத்தோடு மரணத்தை தழுவிய இனிய மனிதர்!'

விக்கிரமாதித்தன் : 'கனிந்த மானுடன்'

கலாப்ரியா : 'அன்பென்னும் பெருவெள்ளம்!'

ஸ்டாலின் குணசேகரன் : 'ஜனநாயகப் பண்பு மிக்கவர்!'

கதிர்பாரதி : 'தி.க.சி. ஒரு நீர்ப்பாய்ச்சி!'

செ.திவான் : தி.க.சி. என்றொரு மானுடன்

தி.க.சி. போற்றும் விமர்சனம் : ஒப்பியல் விமர்சனம்: ஆழமும் அகலமும் கொண்டது; இன்று மிக மிகத் தேவையானது.

தி.க.சி.யின் எதிர்பார்ப்பு : 'கலை இலக்கியப் பெருமன்றமும், முற்போக்கு எழுத்தாளர் கலைஞர் சங்கமும் இணைந்து செயல்படணும்!'

தி.க.சி.யின் ஒப்புதல் வாக்குமூலம்

: 'நான் இலக்கிய உலகின் தோட்டக்காரன், அங்கு வளரும் செடிகளுக்கு நீர்பாய்ச்சுகிறேன். இதுவே என் இலக்கிய பணி.'

தமிழ் வளர்த்த நான்கு முக்கிய 'சி'க்கள்

: டி.கே.சி., வ.உ.சி., ம.பொ.சி., தி.க.சி.

தி.க.சி. க்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டபோது அவரை நேரில் சென்று சந்தித்த எழுத்தாளர் நா.பார்த்தசாரதி கூறியது

: 'நான் அவ்வையாராக இருந்தால் உங்களுக்கு நெல்லிக்கனியை கொடுத்து அதிக நாள் வாழ வைப்பேன்!'

தி.க.சி. மதிப்பீட்டில் மகாகவி வழிவந்த விடுதலைப் போராட்ட வீரர்கள்

: இரா. நல்லகண்ணு

: என்.சங்கரய்யா

: பழ.நெடுமாறன்

'தாமரை' இதழின் இரங்கல் செய்தி

: தமிழ் எழுத்துக்களில் முக்கியமான மூன்றெழுத்தை விழுங்கி விட்டது மரணம்!

தி.க.சி.நிறைவேறாத ஆசை

: 1945 முதல் 1964 வரை வங்கி ஊழியராகவும் தொழிற்சங்கவாதியாகவும் தமிழகத்திலும் கேரளத்திலும் பெற்ற அனுபவங்களை ஒரு நாவலாகச் சித்தரிக்க வேண்டும் என்பது

தி.க.சி. காலமான நாள் : 25.03.2014

தி.க.சி.யின் இறுதிக் கால ஆசைகளில் ஒன்று

: மறுமலர்ச்சி திமுகழகப் பொதுச் செயாலாளர் தமிழர் தலைவர் வைகோ எப்படியாவது, தமிழர்களுக்கு குரல் கொடுக்க நாடாளுமன்ற உறுப்பினராக வேண்டும்.

தி.க.சி.யின் மரண சாசனம்: இன்றைய சூழலுக்கு தகுந்தபடி இந்தியாவில் லெனினிடம் தமிழ்ச் சூழலும் வளர்க்கப்பட வேண்டும்!

'சிங்காரவேலர், பெரியார், ஜீவா, பாரதியார், பாரதிதாசன் இவர்களின் சாரம் சமூகத்தில் ஏற்றப்பட வேண்டும்.

தி.க.சி.யின் நூல்கள்

வசந்த காலத்திலே (ரஷ்ய நாவல்) சென்னை: தமிழ்ப் புத்தகாலயம் 1951

எது நாகரீகம் (மாக்சிம் கார்க்கி கட்டுரைகள்), சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1952

சீனத்து நாடகம் (சீன நாவல்), சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1952

போர் வீரன் காதல் (சீன நாவல்), சென்னை: தமிழ்ப் புத்தகாலயம், 1952

குடியரசுக் கோமான் (மார்க்சிம் கார்க்கி), ரவி பிரசுரம் 1952

கார்ல் மார்க்சின் இல்வாழ்க்கை

திறனாய்வு நூல்கள்

தி.க.சி.யின் திறனாய்வுகள், சென்னை : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், 1993

விமர்சனத் தமிழ், சிவகங்கை: அன்னம், 1993

விமர்சனங்கள், பேட்டிகள், மதிப்புரைகள், கோவை: விஜயா பதிப்பகம், 1994 சாகித்திய அகாதெமி பரிசு (2000) பெற்றது.

மனக்குகை ஓவியங்கள், சென்னை: பூங்கொடி பதிப்பகம், 1999

கடல் படு மணல், சென்னை: நிவேதிதா புத்தகப் பூங்கா, 2010

காலத்தின் குரல், நெல்லை: ஆவாரம் பூ, 2012.

சார்ந்து வெளியான நூல்கள்

தி.க.சி. எனுமொரு திறனாய்வுத் தென்றல் – மு.பரமசிவம், சென்னை: நர்மதா பதிப்பகம், 1999

தி.க.சி. என்றொரு மனிதம் (தொகுப்பு ஆவணம்) அ.நா. பாலகிருஷ்ணன், ஞானியாரடிகள் மன்றம், 2004



தி.க.சி. நேர்காணல்கள்

பிரிய சகோதரா (தொ.ஆ.) சுகதேவ், சீனி குலசேகரன், சென்னை: கலைஞர் பதிப்பகம் – *2012*

தந்தைமை தவழும் வளைவு வீடு – தி.சுபாஷினி, மித்ராஸ், *2012*

நிழல் விடுத்து நிஜத்திற்கு (கடிதத் தொகுப்பு) குள்ளக்காளிபாளையம் கே.பாலசுப்பிரமணியன், நெல்லை: ஆவாரம்பூ பதிப்பகம் – *2013*

தி.க.சி.யின் நாட்குறிப்புகள், தொகுப்பாசிரியர்: வே.முத்துக்குமார், சென்னை: சந்தியா பதிப்பகம், *2014*

தி.க.சி. எனும் ஆளுமை, தொகுப்பாசிரியர்கள்: பேராசிரியர் இரா.மோகன், புதுகை மு.தருமராசன், வானதி பதிப்பகம், *2014* சென்னை

தி.க.சி. என்றொரு மானுடன், செ.திவான், சுஹைனா பதிப்பகம், பாளையங்கோட்டை *2015*

தி.க.சி. என்றொரு மானுடன்

ஆறு கொள் சடிலத்தானும், அயனும் என்று இவர்கள் ஆதி,
வேறு உளகுழுவை எல்லாம் மானுடம் வென்றது அன்றோ!

– கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம்,
நட்புக்கோட் படலம் பாடல் 3804

கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்,
காளிதாசன் கவிதை புனைந்ததும்

மகாகவி பாரதியார் ஸ்வசரிதை பாடல் 24

“முப்பது கோடி ஜனங்கள் சங்கம்
முழுமைக்கும் பொதுவுடமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை – வாழ்க
பாரத சமுதாயம் வாழ்கவே
மனிதர் உணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ”
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ – புலனில்
வாழ்க்கை இனியுண்டோ...
இனியொரு விதி செய்வோம் – அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்
எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை

எல்லாரும் இந்நாட்டு மன்னர்...
பாரத சமுதாயம் வாழ்கவே ஜெய ஜெய ஜெய
பாரத சமுதாயம் வாழ்கவே

கவிதைச் சிகரக் கொடுமுடியில் தான் நட்ட கொடியில் பாரதி பொறித்த மாணிக்க வரிகள் இவை.

இதற்கு மேலாக

மனித குலம்
கண்ட கனவில்லை
கொண்ட ஆசையில்லை
இசைத்த பாடலுமில்லை

உன்னதத்திலும் உன்னதமான இந்தக் கனவை
புனிதத்திலும் புனிதமான இந்த ஆசையை
இனிமையிலெல்லாம் இனிமையான இந்தப் பாடலை
நடைமுறைப் படுத்துகின்றவன் எவனோ
அதற்காகப் போராடுகின்றவன் எவனோ
அதற்காகத் தன் அனைத்தையும் தியாகம்
செய்கின்றவன் எவனோ
அதற்காக,
அறிவு பூர்வமாக உலகை அணுகி,
உணவு பூர்வமாக நெருங்கி,
செயல் பூர்வமாக இரண்டறக் கலந்து
கரைந்து போகின்றவனெவனே
அவனே
மனிதன் உருவாக்கிய சொற்களிலெல்லாம்
நிகரற்ற சொல்லாகிய
மனித உன்னதம் அனைத்தையும் ஒரு சேர உணர்த்தும்
உன்னதச் சொல்லாகிய
மானுடன் என்ற சொல்லுக்குத் தகுதியானவன்!

ஜீவா!
அவன் வாழ்ந்த காலத்தில்
அவன் வாழ்ந்த தேசத்தில்
அந்தச் சொல்லுக்கு ஆகத் தகுதியாக்கிக் கொண்ட
தமிழன் அவனே!
ஆம், ஜீவா ஒரு மானுடன்

என்பார் அண்ணன் பொன்னீலன்
(ஜீவா என்றொரு மானுடன் பக்கம் 392, 393)

ஜீவாவோடு தி.க.சி.யையும் சேர்த்துக் கொள்வோம். தி.க.சி. என்ற மானுடனின் வாழ்வின் சில பக்கங்கள்.....

30.3.1925



ஜீவா

திருநெல்வேலி கணபதி அப்பன், ஜீவாஅம்மாள் தம்பதியருக்குப் பிறந்தவர் சிவசங்கரன். பார் அதிரக் கவிபாடிய பாரதிப் புலவனின் தந்தை சின்னச்சாமி அய்யரின் பூர்வீகம் சீவலப்பேரி.

ஏர்த் தொழிலாகிய பயிர்த் தொழிலுக்குப் பயன்படும் தண்ணீரைத் தேக்கி வைக்கும் நிலையம் ஏரி எனப்படும். சித்தூர் பல்லவனேரி! தொண்டை நாட்டில் திரையன் ஏரி (தென்னேரி) கொங்கு நாட்டில் வீரபாண்டியப்பேர் ஏரி, பாண்டிய நாட்டில் மாறனேரி, ஆறுமுகனேரி, நாங்குநேரி, பத்மனாபன் ஏரி (பதுமனேரி) அலங்காரப்பேரி, விசுவநாதப்பேரி, கண்டியப்பேரி, சீவலப்பேரி என பல ஏரிகள் உண்டு. முக்கூடல் பழைய பெயர், பிற்காலப் பாண்டிய மன்னன் ஸ்ரீவல்லபன் பேரேரி என பல ஏரி ஒன்று உண்டாக்கி, அதற்கு சீவல்லவப்பேரேரி என்று பெயரிட்டார். அப்பெயரே சீவலப்பேரி என்று ஆயிற்று. கிபி 1895 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ஸ்ரீவல்லபமங்கலம் (1600 of

1895) முக்கூடற்பள்ளுவில் சீவலனாடு எனவும் சீவல மங்கை எனவும் இவ்வூர் குறிக்கப்பட்டுள்ளது. (ரா.பி.சேதுப்பிள்ளை ஊரும் பேரும், சென்னை 1946, பக்கம் 46)

சீவலப்பேரியில் வாழ்ந்த சிவசங்கரன் பிள்ளை திருநெல்வேலிக்கு குடிபெயர்கிறார். இவரின் மகன் கணபதியப்பன், அவரது அருமை மகன் நமது தி.க.சி.

சிவசங்கரன் பிள்ளை நெல்லையில் சம்பந்தம் பிள்ளையின் தேங்காய் மண்டியில் பணியாற்றுகிறார். நன்நடத்தை, நாணயம் அவரை உயர்த்திற்று. தனது தேங்காய் கடையை சம்பந்தம் பிள்ளை சிவசங்கரன் பிள்ளைக்கே தந்து விடுகிறார்.

வியாபாரத்தில் அக்கரை கொண்டு உழைத்த சிவசங்கரன் பிள்ளை. நெல்லை வாழ் மக்களில் முக்கிய மனிதர்களில் ஒருவரானார். நெல்லை நகர் மன்ற உறுப்பினர், நெல்லையப்பர் கோவில் ஆலய அறங்காவலர், நீதிமன்ற நடுவர் குழு உறுப்பினர் ஆகிய மதிப்புமிகு பதவிகளை வகித்த சிவசங்கரன் பிள்ளையின் மூத்த மனைவியின் தலைமகன் நமது தி.க.சிவசங்கரன். முதல் மனைவி நோயால் இறந்தார். இரண்டாவது மனைவியும் சில ஆண்டுகளில் மறைந்தார். மூன்றாவது திருமணமும் நடந்தது. தி.க.சி.யின் அத்தை பாப்பாத்தியம்மாள், பார்வதி என்ற பெண்ணை சிவசங்கரன் பிள்ளைக்குத் திருமணம்



செய்து வைத்தார். சிவசங்கரன் பிள்ளை 1960 களில் வாழ்வை நிறைவு செய்தார்.

நமது தி.க.சி. பிறந்த ஊர் தாய் வழிப்பாட்டியின் வீடு அமைந்துள்ள **அரியநாயகிபுரம்** ஆகும். 1930களில் தனது ஐந்து வயதில் தந்தையை இழந்தார். 1932 களில் தனது ஏழாவது வயதில் தாயையும் இழந்தார். தி.க.சி. உடலால் தாத்தா சிவசங்கரன் பிள்ளையால் வளர்க்கப்பட்டார். உள்ளத்தால் நல்ல நூல்களாலும் தமிழ்ப் பற்று உணர்வாலும் வளர்ந்தார் தி.க.சி.

காசநோயால் அவதிப்பட்டு மரணப் படுக்கையில் இருந்த தி.க.சி.யின் தாயார் அப்போது மகனுக்கு சொன்ன அறிவுரைகள் பிஞ்சு மனத்தில் மந்திரச் சொல்லாகவே பதிந்து விட்டது.

நல்லா படிக்கணும்
நல்லவனா வாழணும்
நல்ல பேரெடுக்கணும்

இது தான் தி.க.சி.க்கு தாயார் இறுதி வேளையில் சொன்ன அறிவுரைகள். அதன்படியே வாழ்ந்து மறைந்தவர் நம் தி.க.சி.

1936 இந்திய விடுதலைப் போர் கொழுந்து விட்டு எரிகிறது. நெல்லையிலும் போராட்டம், அந்நியத் துணி எதிர்ப்பு, ஜவுளிக்கடை மறியல், ஆர்ப்பாட்டம், தெருவில் தேசபக்த பஜனை, பாரதி பாடல்களை முழங்கிச் செல்லும் சுதேசி வீரர்கள்.

தியாகி எம்.ஆர். சுப்பிரமணியம்

மாவீரன் பகத்சிங் பாட்ஜ் அணிந்து கதராடை கதர்க் குல்லாவுடன் சென்ற தியாகி எம்.ஆர். சுப்பிரமணியன், மகாகவி பாரதி பாடல்களைப் பாடிக் கொண்டு சென்றதைக் கண்ட தி.க.சி.யின் உள்ளம் அவரை அரசியலில் ஆர்வம் கொள்ளச் செய்தது.

திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆறுமுக நாவலர் நூலகத்திலும், இன்னும் பிற இடங்களிலும் நூல்களை எடுத்துப் படிப்பதே தி.க.சி.யின் முழு வேலை.

பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியிலும், நெல்லை இந்துக் கல்லூரியிலுமாக இண்டர் மீடியட் வகுப்பை நிறைவு செய்தார் தி.க.சி.

கு.அருணாசலக்கவுண்டர் – ஆ.முத்துசிவன்

பன்னூலாசிரியரும் சிறந்த தமிழ் அறிஞர்களுமான கு.அருணாசலக் கவுண்டர், ஆ.முத்து சிவன் ஆகியோர் தி.க.சி.க்கு தமிழார்வத்தை ஊட்டினர். பாவேந்தர் பாரதிதாசனது கவிதைகளை அருணாசலக்கவுண்டர் தி.க.சி.க்கு அறிமுகப்படுத்தினார்.

1940களில் '**நெல்லை வாலிபர் சங்கம்**' என்ற அமைப்பை துவக்கினார் தி.க.சி. இதே காலகட்டத்தில் தொ.மு.சி.ரகுநாதன், '**ஜவகர் வாலிபர் சங்கம்**' கண்டார். '**மணியரசு செந்தமிழ்க் கழகமும்**' சில இளைஞர்களால் உருவாக்கப்பட்டு நடத்தப்பட்டு தேசியம், விடுதலை, சமூக நலன் தி.க.சி.யை முன்னோக்கி நடைபோட வைத்தது.

1941 – வல்லிக்கண்ணன்

திருநெல்வேலி மாவட்டம் இராஜவல்லிபுரத்தில் 12.11.1920இல் பிறந்தவர் எளியேனது மரியாதைக்குரிய வல்லிக்கண்ணன். நெல்லையில் அரசடிப் பாலத்தெரு வீட்டில் குடியிருந்த அவரது அண்ணன் கோமதி நாயகம், தி மெடிக்கல் ஸ்டோர் எனும் மருந்துக் கடையில் வேலை பார்த்து வந்தார். அவருடன் அன்னையார், தம்பி முருகேசன், அவர்களுடன் வல்லிக்கண்ணனும் அந்த வீட்டிலே தங்கியிருந்தார்.

இதய ஒலி

'இதய ஒலி' எனும் கையெழுத்துப் பத்திரிக்கையை தொடங்கி வல்லிக்கண்ணன் நையாண்டி பாரதி, கோரநாதன், மிவாங்கி, சொனமுனா பிள்ளையார் முதலிய புனைப் பெயர்களில் எழுதிக் குவிக்கத் தொடங்கினார்.

21ஈ சுடலைமாடன் கோவில் தெரு

தி.க.சி. அவர்கள் குடியிருந்த நெல்லை டவுண் 21ஈ சுடலை மாடன் கோவில் தெருவிலிருந்து குளிப்பதற்காக வாய்க்காலுக்குப்

போகும் வழியில் அரசடித் தெரு; அங்கு வல்லிக்கண்ணன் குடியிருக்கும் வீடு. அங்கு சென்று நூல்களைப் படித்திட, புதிய பத்திரிகைகள் வாசிக்க தி.க.சி.க்கு நல்ல வாய்ப்பாயிற்று.

நெல்லை வாலிபர் சங்கம்

திருநெல்வேலி சம்பந்தர் தெருவில் ஒரு வீட்டில் நெல்லை வாலிபர் சங்கம் நடந்து வந்தது. அந்தக் கூட்டத்தில் வாரம் தோறும் மாடியில் கூட்டம். ஒரு நாள் மகாகவி பாரதி பற்றிப் பேச வல்லிக்கண்ணனை அழைத்திருந்தார்கள். அவ்வாறு நெல்லை வாலிபர் சங்கத்தில் பாரதியைப் பற்றி வல்லிக்கண்ணனைப் பேச அழைத்தவர் தி.க.சி. அந்தக் கூட்டத்தில் பொதுவுடைமை என்றால் என்ன? என்ற தலைப்பில் தொ.மு.சி.ரகுநாதன் அற்புதமாக உரையாற்றினார்.

நெல்லை வாலிபர் சங்கத்தின் தலைவர் ஆக வல்லிக்கண்ணன் ஆனார். 'இளந்தமிழன்' என்ற கையெழுத்துப் பிரதி பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டது. அதில் தொடர்ந்து எழுதுவதில் ஆர்வம் காட்டியவர் தி.க.சி. (வல்லிக்கண்ணன் வாழ்க்கைச் சுவடுகள், சென்னை 2001, பக்கம் 52)

1941 ரா.பி.சேதுபிள்ளை

1941 டிசம்பரில் நெல்லை வாலிபர் சங்கத்தின் ஆண்டு விழா. சொல்லின் செல்வர் ரா.பி.சேதுப்பிள்ளை சிறப்பு அழைப்பாளர். ஆண்டு விழாவின் முதல் பக்கத்தில் '**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்**' எனும் பாவேந்தரின் பாடல் வரிகள் அச்சிடப்பட்டிருந்தன. ரா.பி.சேதுப்பிள்ளை உறவு தி.க.சி.க்கு கிடைத்தது. அந்தக் கால கட்டத்தில் திருநெல்வேலியில் நண்பர்கள் என்று தி.க.சிவசங்கரனும், தி.ப.திருஞான சம்பந்தமும், திருவனந்தபுரம் எஸ்.சிதம்பரமும் தினந்தோறும் மாலையில் பேசி மகிழ்ந்தார்கள் என்று வல்லிக்கண்ணன் குறிப்பிடுகிறார். (நிலைபெற்ற நினைவுகள், இரண்டாம் பாகம், சென்னை, 2007, பக்கம் 34)

இளந்தமிழன்

இளந்தமிழன் இதழில் தி.க.சி. நடைச்சித்திரம் பாணியில் கட்டுரைகள் எழுதினார். மணிக்கொடியில், வ.ரா.

 

இரசிகமணி டி.கே.சி. - வல்லிக்கண்ணன்

தமிழுக்குப் புதிதாக அறிமுகப்படுத்தியிருந்த இலக்கிய வடிவம் நடைச்சித்திரம். தி.க.சி.யும் **வண்டிக்கார வேலு, மாடு மேய்க்கும் கருப்பசாமி** என்றும் கட்டுரைகளை எழுதினார். வீட்டு வேலைக்காரி பற்றிய நடைச்சித்திரம் ஒன்றையும் எழுதினார்.

இளந்தமிழன் ஓராண்டில் நின்று போனது.

இரசிகமணி டி.கே.சி.

இந்தக் காலகட்டத்தில் நெல்லை வண்ணார்பேட்டையில் இருந்த டி.கே.சி. வீட்டிற்குச் சென்று, வல்லிக்கண்ணன், வேலாயுதம், தி.க.சி. ஆகியோர் அறிமுகம் ஆகிக்கொண்டார்கள்.

வல்லிக்கண்ணன் 'கிராம ஊழியன்' என்ற இதழில் பணியாற்றச் சென்று விட்டார்.

புதுமைப்பித்தன்

தி.க.சி. நெல்லை ம.தி.தா. இந்துக் கல்லூரியில் பயின்ற காலத்தில் பேராசிரியர் அ.சீனிவாசராகவன் ஏற்பாட்டில் புதுமைப்பித்தன் பேச வந்தார். **'நானும் என் கதைகளும்'** என்ற

தலைப்பில் அவர் உரையாற்றினார். மேடையில் அங்கும் இங்கும் உலவி கிராப்புத் தலையை கையால் கோதிக் கொண்டு, ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை தனக்குத் தானே சிரித்துக் கொண்டும் புதுமைப்பித்தன் பேசிய பேச்சை தி.க.சி. அவர்கள் அடிக்கடி அடியேனிடம் நினைவு கூர்வார்கள்.

வாழ்க்கைத் துணையும் - முதற் கதையும்

1942இல் அவரது முதல் சிறுகதை வண்டிக்காரன், வல்லிக்கண்ணனால் வாசித்துப் பரிந்துரைக்கப்பட்டு, நாரண.துரைக்கண்ணனால் அவரது பிரசண்ட விகடனில் பிரசுரமாயிற்று.

22.8.1942 இல் தனது அத்தை மகள் தெய்வானையை தி.க.சி. திருமணம் செய்து கொண்டார். அப்போது இருவருக்கும் வயது பதினேழு.

1941 முதல் 1943 வரை கல்லூரி வாழ்க்கை, திருமண வாழ்க்கை, அரசியல் ஈடுபாடு, வேலை தேடுதல் என்று வாழ்க்கைச் சக்கரங்கள் தி.க.சி.யின் வாழ்வில் சுழன்றது.

1944 கிராம ஊழியன்

வேலை தேடும் முயற்சி வெற்றி பெறவில்லை. முதல் மகன் கணபதி பிறந்தார். வாழ்வில் புதிய அத்தியாயம் பிறந்தது. எழுத்துலக வாழ்வும் ஆரம்பமாயிற்று. கலாமோகினி, கிராம ஊழியன் பத்திரிக்கைகளில் தி.க.சி.யின் படைப்புகள் பிரசுரமாயின.

'கிராம ஊழிய'னில் தி.க.சி. எழுதிய கவிதை ஒன்று சுவையானது. அந்தக் கவிதை இது தான்:

உலவும் கவிதை

பில்லுக் கட்டைத் தலை சுமக்க
பில்லரிவாள் இடையிருக்க
அந்தி ஒளி சாய்கையிலே
அவள் அசைந்து போறாளே!

புதுக் கள்ளின் நுரைபோல
பொங்கி வரும் புத்தழகு
மங்கி வரும் கதிரொளியில்
மயக்கந் தரு குதையா!

அணில் கடித்த மாம்பழம் போல்
அழகு சொட்டும் செவ்விதழ்கள்
சருகான வெற்றிலையில்
அமு தினிமை கண்டனவோ!

காதில் கரு வோலை
கண்டத்தில் பாசிமணி
அரையிற் கிழிந்த உடை
அமைவான குலுக்கு நடை
அத்தான் வந்திடுவான்
அந்திவரை உழுதுவிட்டு
செத்தெ முந்திப் போகவேணும்
செம்மறியைக் கட்ட வேண்டும்

என்றெண்ணம் ஓடிவந்து
இங்கு முகம் திரும்பி நிற்க
சலங்கை ஒலி சிந்திவிட்டு
சாடிவரும் இளமறியும்
அப்போது பார்த்து விட்டேன்
அவளழகு முழுவதையும்
என் நெஞ்சத்தை கிளறிவிட்ட
எழுத வொண்ணாக் காவியத்தை!

இக்கவிதையை மணிக்கொடி எழுத்தாளரும், கிராம ஊழியன் ஆசிரியருமான கு.ப.ரா. வெளியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

'கிராம ஊழிய' னில் கவிதைகள் எழுதியதைத் தொடர்ந்து திரைப்பட விமர்சனங்களும், புத்தக மதிப்புரைகளும், சினிமாவுக்குப் பத்திரிகை அளித்து வந்த முக்கியத் துவத்தைக் கண்டித்தும் கட்டுரைகள் எழுதினார் தி.க.சி.

தி.க.சி.யின் திரைப்பட விமர்சனத்தால் திரை உலகில் 'கிராம ஊழியன்' பற்றி பேசப்பட்டது. அதன் விளைவு 'கிராம ஊழிய'னுக்குப் பெரிய அளவில் இழப்பு ஏற்பட்டது.

ஆம், தி.க.சி.யின் சினிமா விமர்சனங்கள் நல்ல இரசனையை, யதார்த்தமும், கலையம்சமும் நிறைந்த திரைப்படங்களைப் பார்க்கப் பரிந்துரைத்தது. பொழுது போக்கு என்ற போர்வையில் யதார்த்தம் எள்ளளவும் இல்லாத திரைப்படங்களை, அதிலும் தமிழ் மக்களின் மதிப்புக்குரிய பண்பாட்டை மண்ணாக்கும் மசாலாத் தனத்தைக் கடுமையாக விமர்சித்தது.

அந்த வரிசையில் முதல் இடம் பெற்றது எஸ்.எஸ்.வாசன் தயாரித்த 'மங்கம்மா சபதம்' என்ற திரைப்படம்.

ஆடல், பாடல்களுடன் பாலுணர்வு காட்சிகள் மிகுதியாக இடம் பெற்றிருந்த அப்படத்தை தி.க.சி. கடுமையாக விமர்சித்து 'கிராம ஊழிய'னில் எழுதினார். அதனால் தி.க.சி.க்குக் கிடைத்த பாதிப்புத்தான் அதிகம்!

தி.க.சி.யின் விமர்சனத்தைப் படித்த எஸ்.எஸ்.வாசன் கிராம ஊழியன் பத்திரிகைக்கு தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த விளம்பரத்தை நிறுத்திவிட்டார். இதன் மூலம் தி.க.சி.யின் சினிமா விமர்சனப் பார்வை எத்தகைய கடுமையும், காரசாரமும் கொண்டிருந்தது என்பதை புரிந்து கொள்ளலாம். தி.க.சி.யின் சினிமா விமர்சனத்தால் 'கிராம ஊழியன்' என்ற ஓர் இலக்கியப் பத்திரிகைக்கு ஏற்பட்ட இழப்பு மிகப்பெரியது என்றாலும் அதைவிடப் பெரியது, தமிழில் தரமான திரைப்படம் வரவேண்டும், அதன் மூலம் பழைமை வாய்ந்த தமிழ் மொழியின் சிறப்பும், பெருமையும், தமிழர்களின் கலை உணர்வும் அனைத்திந்திய அளவில் மட்டும் அல்லாமல் உலக அளவிலும் பரவி தமிழர்களின் பெருமை பேசப்பட வேண்டும் என்னும் ஓர் எழுத்தாளனின் இலட்சிய வேட்கை. பத்திரிகையாளரும், பிற்காலத்தில் இலக்கிய வள்ளலுமாகத் திகழ்ந்தவருமான எஸ்.எஸ்.வாசன் விளம்பரங்களை விரும்பிய

அளவுக்கு விமர்சனங்களை விரும்பவில்லை என்பது வருத்தத்திற்குரிய விஷயம்.

1930-களில் எஸ்.எஸ்.வாசன் அவர்களை தமிழ்ச் சமுதாயத்துக்கு அறிமுகப்படுத்திய பத்திரிகை ஆனந்த விகடன். அந்தப் பத்திரிகையில் 'அறிவுப் போட்டிகள்' என்ற பெயரில் குறுக்கெழுத்துப் போட்டிகள் நடத்தப்பட்டன. அந்தக் காலத்தில் ஆனந்த விகடன் பத்திரிகையின் முதன்மையான அம்சம் அதுதான்.

விகடன் பத்திரிகையில் வெளிவந்த குறுக்கெழுத்துப் போட்டி பற்றி விவரங்களைத் தெரிந்துகொள்வதற்கு 'நாரதர்' என்ற பத்திரிக்கையை வெளியிட்டது விகடன் நிறுவனம். அப்பத்திரிகையில் சினிமா செய்திகளும் வெளிவந்தன.

'நாரதர்' பத்திரிகையில் சினிமா நடிகைகள் உபயோகிக்கும் வாசனைத் திரவியங்களைப் பற்றி கவர்ச்சியாக எழுதப்பட்டிருந்தன. அதைப்படித்த தி.க.சி. வருத்தமுற்றார். கவர்ச்சியைக் கண்டிக்கும் வகையில் விமர்சன ரீதியில் 'கிராம ஊழியனில்' எழுதினார். அதற்கு விகடன் நிறுவனம் தக்க மரியாதையை அளித்தது. அதுவரை மாற்றுப் பிரதியாக அனுப்பி வைத்த 'நாரதர்' பத்திரிகையை நிறுத்தியது! (இந்தத் தகவலைச் சொன்னவர் எனது பிரியத்திற்குரிய வல்லிக் கண்ணன்) (மு.பரமசிவம், தி.க.சி. என்னுமொரு திறானாய்வுத் தென்றல், சென்னை 1999, பக்கம் 46-49)

1946-1948 இல் திருவனந்தபுரத்தில் புதுமைப்பித்தனை இறுதிக் காலத்தில் ஆதரித்தவரும், தி.க.சி.யின் நண்பனுமான கவிஞர், திருவனந்தபுரம் எஸ்.சிதம்பரம், 'கவிக்குயில்' என்ற தலைப்பில் இரண்டு மலர்களைத் தயாரித்தார். அந்த மலர்கள் தயாரிப்பில் வல்லிக்கண்ணனுக்கும் பங்குண்டு.

அந்த மலர் ஒன்றில் சமுதாயப் பார்வையுடன் 'அங்கே?' என்ற தலைப்பில் தி.க.சி. கவிதை ஒன்றை எழுதினார். இதோ அந்தக் கவிதை.

அங்கே?

1

சாக்கடைச் சோற்றை
யாம் உண்கிறோம்
அங்கே
சர்க்கரைப் பொங்கலை
ஜமாய்க்கிறார்!

2

கந்தையால் மானத்தைக்
காக்கிறோம்; வாடைக்
காற்றிலே நடுங்கித்
துடிக்கிறோம்
சிந்தையிலே அருளிலார்
பாதகர் - அங்கே
சீமைத் துணிக்கு
அலைகிறார்!

3

மெத்தைக்குப் பூந்துகில்
வேண்டுமாம்
மேனியைப் பஞ்சணை
உறுத்துமாம்
செத்தையில் குப்பையில்
படுக்கிறோம்;
தேள்களும் ஈக்களும்
முட்டையும்
கொத்திப் பிடுங்கினும்
தூங்குகிறோம்
கோடையில் வாடையில்
சாகிறோம்

4

சூழுக்கு விதியின்றி
அலைகையில் - அங்கே
கோப்பையில் சாராயம்
ஓடுது!
அம்மையின் மார்பில்
ரத்தத்தை - எங்கள்
அருமைக் குழந்தை
குடிக்கையில்
'ஆர்லிக்'சு மாவுக்கு
அலைகிறார் அதற்கு
ஆயிரம் பேறு
சிபாரிசு!
கொண்டவன் சீக்கிலே
காய்ந்திட,
கூடவே யிருந்து
குமைகிறோம்
அங்கே -
அண்டை வீட்டுக்காரக்
குட்டியை
அடித்துக் கொண்டு போக
யோசனை!
எங்கள் குறைகளை
இயம்பினேன்
அதற்கின்றே பரிகாரம்
தேடுவீர்
இல்லாத சாதி என்
றிகழ்ந்திடல் இனி
நில்லாது எங்கள்
கைச் சுத்தியல்!

இக்கவிதை சுப. நாராயணன் ஆசிரியராக இருந்த வை.கோவிந்தனின் 'சக்தி'யில் *1945–1947* கால கட்டத்தில் மறுபிரசுரம் செய்யப்பட்டது.

இவ்வாறு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களைப் பற்றி தி.க.சி. எழுதிய கவிதைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிட திருவனந்தபுரம் எஸ்.சிதம்பரம் விரும்பியபோது, எழுத்துத் துறையில் இன்னும் பக்குவப்பட வேண்டும் என்று, அந்த முயற்சியைத் தடுத்துவிட்டார் தி.க.சி. அதனாலே தி.க.சி.யின் கவிதை, கதை போன்ற படைப்பிலக்கியங்கள் அன்று நூலாக வெளிவராமல் போயின.

சக்தி

1944 இல் திருநெல்வேலி ஜங்ஷனில் இருந்த தாம்கோஸ் பேங்கில் காசாளர் (கேஷியர்) வேலை ரூபாய் *30* சம்பளத்துடன் ரூ.*7.50* பைசா பஞ்சப்படியுடன் தி.க.சி.க்கு கிடைத்தது. (டாக்டர் இரா.மணிகண்டன், எழுத்துலக பிரம்மாக்கள், சென்னை, *2006*, பக்கம் *32*) பொதுவுடைமைச் சார்புள்ள திகசி வங்கித் தொழிலாளர் சங்கம் அமைப்பதிலும், வங்கி ஊழியர்களுக்கான அமைப்பில் பாடுபடுவதுமாக பொழுதைக் கழித்தார். பாங்கு நிர்வாகம் தி.க.சி.யை படாத பாடு படுத்தினார்கள்.

1949 சக்தி சுதந்திர மலரில் தி.க.சி. துருவன் என்கிற புனைப்பெயரில் ஏழணா என்ற சிறுகதையை எழுதியுள்ளார்.

அந்தக் கதையில் பாங்க் காஷியர் சீமான், பியூன் வீராசாமி, பாங்க் மானேஜர் ஆகியோரை மையமாக வைத்து எழுதப்பட்ட கதைதான் ஏழணா. இதோ அந்தக் கதை. இது தி.க.சி.யின் வாழ்வின் மறுபக்கத்தில் ஒன்று தான் என்று எண்ண வேண்டியுள்ளது.

ஏழுணா - தி.க.சி.

கோட்டை ஸ்டேஷனில் புளிச் சிப்பம் போல் அடைந்திருந்த கூட்டத்திலிருந்து பிதுக்கி வெளித் தள்ளப்பட்டான் அவன்.

உடலிலே ‘சதசத’ வென்ற வியர்வை. அதே போல மனசிலும் புழுக்கம். மாதக் கடைசியாதலால் உடற்புழுக்கத்தை விட மனப்புழுக்கம் அதிகம்.

நெற்றியில் அரும்பி முகத்திலே வழிந்து கொண்டிருந்த வேர்வையை தனது அழுக்குக் கைக்குட்டையால் துடைத்தவாறு ‘ஓவர் பிரிட்ஜில்’ ஏறி இறங்கினான். ஆபீஸ் நண்பருக்குக் கொடுக்க வேண்டிய கை மாற்று, குழந்தைக்கு வாங்க வேண்டிய ஆரஞ்சு, வீட்டு வாடகை, பலசரக்கு சாமான் ஆகியவற்றில் மனம் உழன்று கொண்டிருந்தது. எண்ணற்ற கவலைகள் மனதைச் சரக்கூடம் போட்டு வளைக்க அவற்றிலிருந்து மீளும் வழியைப் பற்றிச் சிந்தித்து விடைகாண முடியாமல், இயந்திரம்போல் பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்தான் அவன்.

ஆனால் அவனை முன்னேறவிடாமல் கண்ணை இழுத்து நிறுத்தியது அக்காட்சி.

பிளாட்பாரத்தில் ஒரு சிறு கும்பல். அதிலே ஒரு ரிக்ஷாகாரன் தனது ‘சவாரி’யான ஒரு கனவானின் சட்டையைப் பிடித்து இழுத்து நிறுத்தி இரைச்சல் போட்டுக் கொண்டிருந்தான்.

803 நிர் ‘கிளாஸ்கோ’ மல்ஜிப்பா, ஜரிகை அங்கவஸ்திரம் கையிலே ‘இந்துப் பத்திரிகை’ ஆகிய தளவாடங்களுடன் காட்சியளித்த அந்தக் கனவானும் ஏதோ திட்டிக் கொண்டிருந்தார்.

‘பிரபாத்திலிருந்த வரேன் சாமி. நாலணாப் பேசிகினு மூன்றரையணாத் தான் தருவேன்கிறார்’ என்றான் ரிக்ஷாவாலா.

‘டேய்! உன்னிடம் மூன்றரையணாத்தானே பேசினேன்? ஏன் பொய் சொல்றே?’ என்றார் கனவான்.

“என்னய்யா... வண்டியில ஏறி உட்கார்ந்துகினே, ‘வேகமாய் போடா’ என்று முதுகிலே காலை வைத்து மிதிச்சே! இப்போ அரையணாக் கேட்டால்..” என்று கண்களில் கோபம் தெறிக்க அவர் சட்டையைப் பிடித்து உலுக்கினான் அவன்.

இச்சமயத்தில் கூட்டத்திலிருந்த ஒருவர் தலையிட்டார்.

‘அரையாணாவைப் பார்க்காதீர்கள் ஸார்! வேர்க்க விறுவிறுக்க ஓடி வந்திருக்கிறான்... பாவம்‘ என்றார் அவர்.

‘அதுக்கில்லை ஸார்... நான் பேசியது மூணரை அணாத்தான். அதற்கு மேல் எதற்கு கொடுக்கணும்?’

‘ஒனக்காக எத்தினி வேகமாய் இஸ்துகினு வந்தேன் சாமி?’ என்றான் ரிக்ஷாக்காரன்.

‘கொடுங்க ஸார்! இதை வாங்கி அவன் சீமானாய்ப் போய்விடமாட்டான்.’ என்றார் மத்தியஸ்தர்.

‘சொன்னால் சொன்னதுதான்... மனுஷனுக்கு ஒரு ‘பிரின்சிபிள்’ வேண்டாமா?’

ரிக்ஷாகாரன் விடவில்லை. அவரை வாயில் வந்தபடி திட்டினான். கனவானும் சளைக்கவில்லை. ஆங்கிலத்திலும் தமிழிலுமாக ஏசினார். போலீஸ்காரனைக் கூப்பிடுவேன் என்றார். ரிக்ஷாகாரன் ‘வா போவோம்‘ என்றான். வாக்குவாதம் முற்றிவிட்டது.

கடைசியில்.....

‘இந்தாப்பா! அரையணா! நீ போ.... நேரத்தை வீணாக்காதே! அவர் அரையணாவை மிச்சம் பிடித்து சீமானாகட்டும்‘ என்று ரிக்ஷாகாரனிடம் ஒரு அரையணாவை வீசி அவனை அனுப்பினான் ஒரு பஸ் கண்டக்டர்.

சீமானின் முகம் கறுத்தது. அவர் அரையணாவை மிச்சம் பிடித்ததால், நடையைக் கட்டினார்.

கும்பலுடன் இந்தக் காட்சியைப் பார்த்த அவனும் அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு நடந்தான். சிறிது நேரத்திற்குள் அவர் வேலை பார்க்கும் பாங்கி வந்துவிடவே நத்தையைப் போல தனது சிந்தனைகளை உள்ளிழுத்துக் குறுக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான்.

பத்திலிருந்து பன்னிரண்டு வரை பம்பரமாகச் சுழன்று வேலை பார்த்தான் அவன். 'பார்ட்டி' களிடமிருந்து 'செக்குகளுக்கும், டிராப்டுகளுக்கும் பணம் கொடுப்பதுமாக இரண்டு மணி நேரம் ஓடியது. அவனது மேஜைக்கு எதிரில் நின்ற கூட்டமும் கலைந்தது.' தலையைத் தூக்கி தனது எதிரேயிருந்த கடிகாரத்தில் மணி பார்த்தான் அவன். சரியாக மணி பன்னிரண்டு. கத்தை கத்தையாக நோட்டுகளை எண்ணி விரல்கள் நோவெடுத்தன. அவைகளைச் 'சொடக்கு' முறித்து விட்டான் அவன்.

நல்ல கடுமையான வெயில் வெளியே கொளுத்தியது. ஆபிசிலே மின்சார விசிறிகூட இல்லை. நெற்றியிலும் மோவாயிலும் துளி துளியாக நிற்கும் வேர்வையைத் துடைத்தான். தாகம் நாக்கை வறட்டியது. 'ஒரு கப் காபி சாப்பிட்டால் தேவலை' என்று நினைப்பு. ஆனால் பையிலே எட்டணா சில்லறைத்தான் கிடந்தது. அதிலே தனது நோஞ்சான் குழந்தைக்கு ஆரஞ்சு வாங்க வேண்டும். ஆகவே 'தண்ணீர் சாப்பிடுவதே உத்தமம்' என நினைத்து பியூனைக் கூப்பிட்டான்.

'வீராசாமி'

'சார்' என்று குரல் கொடுத்தவாறு அவன் பாங்கி ஏஜெண்டிற்குத்தான் வாங்கி வந்த பாதாம்கீரைக் கொண்டு போனான்.

தனது வேர்வை நாற்றம் நிறைந்த கைக்குட்டையில் மீண்டும் வேர்வையைச் சேர்த்தான் அவன். கணக்குப் புத்தகங்களில் கொஞ்சம் உழுது தள்ளினான்.

'என்ன சார்?' என்று திரும்பி வந்தான் பியூன்.

'ஒரு கிளாஸ் குளர்ந்த ஜலம் கொண்டு வா' என உத்திரவிட்டுப் பின்னும் பல 'செக்'குகளுக்குப் பணம் கொடுக்கலானான்.

பியூன் அவன் மேஜைமேல் ஒரு கிளாஸ் தண்ணீரை வைத்துவிட்டு 'சார்! உங்களை அக்கவுண்டெண்ட் கூப்பிடுகிறார்' என்றான்.

பணப்பெட்டியைப் பூட்டித் திறவுகோலை எடுத்துக் கொண்டு அக்கவுண்டெண்ட் முன்னால் போய் நின்றான்.

'மிஸ்டர் காஷியரே! நமது ஏஜண்டின் நண்பர் கங்காதரனிடமிருந்து போன் வந்தது. ஐம்பதினாயிரம் ரூபாய் வேண்டுமாம். அவரிடம் நம்பிக்கையான ஆள் ஒன்றும் இல்லையாம். ஆகவே தொகையை எடுத்துப்போய் அவரிடம் கொடுத்துவிட்டு வந்துவிடுங்கள். கூட, வீராசாமியை அழைத்துப் போங்கள்.... மிஸ்டர்! இருபதாயிரத்துக்கு பத்து ரூபாய் நோட்டு வேண்டுமாம். ஆகவே முப்பதினாயிரம் நூறுக்கும், இருபதாயிரம் பத்தாகவும்....'

'வேலைக் கழுதை இல்லை' என்று மனசுக்குள் முணு முணுத்துக் கொண்டு, கிளம்பினான் அவன்.

'சார் செலவுக்குக் காசு வாங்கிக் கொண்டீர்களா?' என்றான் வீராசாமி.

'நாம் செலவழித்து விட்டுக் கணக்கை சொன்னால் தந்துவிடுவார்கள். வா போகலாம். முதலிலே ஆளுக்கொரு காபி சாப்பிடுவோம். துறைமுகம் வரை – ஒரு மைல் – போய் வரணுமே! வெயில் ஆளை வேக வைக்கிறது. **காலுக்குச் செருப்புக் கூட இல்லை....'**

'ரிக்ஷாவிலே போய் விடுவோம் சார்! பணம் ஜாஸ்தியாயிருக்கிறது.... கல்கத்தாவிலே நடந்த மாதிரி...'

'அதெல்லாம் நம்மிடம் நடக்காது வா! முதலில் காப்பித் தண்ணியை உள்ளே தள்ளுவோம்.... அப்புறம் டிராமிலே போவோம்'

'ஐயோ'

'என்ன 'ஐயோ'? என்னிடம் ஏழணாத்தான் இருக்கு. அப்பனே டிராமிலேதான் நாம் போயாகணும்... மேலும் ரிக்ஷா சவாரி எனக்குப் பிடிக்காது... வா ஜல்தி'

'சீக்கிரம் போய்விட்டு இரண்டு மணிக்குள் திரும்பணும் சார், ஏஜெண்டு வீட்ல அம்மா மூணு மணிக்கு அங்கே வரச்சொன்னாங்க'.

இருவரும் காபி சாப்பிட்டுவிட்டு ராயபுரம் டிராமில் ஏறினார்கள். துறைமுகம் செல்ல.

கங்காதரனிடம் அவர்கள் பணத்தை கொடுத்து விட்டுத் திரும்பும் போது மணி ஒன்றிருக்கும். வெயில் மண்டையைப் பிளந்தது. கண்களை இருளச் செய்து மயக்கத்தில் ஆழ்த்தியது.

அவன் டிராமைப் பிடிக்க அவசர அவசரமாக ஓடினான். ரஸ்தாவிலே தார் இளகி நின்று சப்பாத்திக் கள்ளி போல் காலில் அப்பிக் கொண்டது. ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து ஓடும் டிராமில் தொத்திக் கொண்டனர் இருவரும்.

வெயிலின் கிறக்கத்தோடு பசியின் கிறக்கமும் அவனைப் பிடித்துக் கொண்டது. ஆனால் கடற்கரையிலிருந்து வீசிய மெல்லிய பூங்காற்று அவனுக்கு ஓர் இன்ப லாகிரியைத் தந்தது.

துறைமுகத்திலிருந்து பாரவண்டி இழுப்பவர்களின் முதுகிலே வழிந்தோடும் வேர்வை வெள்ளத்தையும் கடற்கரை ஸ்டேஷனிலிருந்து ‘சவாரி’ ஏற்றிக் கொண்டு இழுத்துச் செல்லும் ரிக்ஷாக்காரர்களையும் பெட்டி நிறைந்த சாப்பாட்டுப் பாத்திரங்களைச் சுமந்து முகத்திலே சுருக்கமும் உள்ளத்திலே கவலையுமாகச் செல்லும் சோற்றுக் கூடைகாரிகளையும் இம்பீரியல் பாங்கியின் எதிரே கார்களிலிருந்து இறங்கி வரும் துரைகளையும், சேட்டுகளையும் அவன் கண்கள் தாவித் தாவித் பிடித்துக் கொண்டிருந்தன.

ஹைகோர்ட் வந்ததும் அதன் மேலிருக்கும் கலங்கரை விளக்கத்திற்கு அவன் மனம் ஒரு கணம் தாவிச் சென்றது. அதன் மேலிருந்து சென்னை நகரத்தையும் நீலக்கடலையும் வட்டமிட்டு மீண்டும் அவனிடமே திரும்பி வந்தது...

பிராட்வேயில் இருவரும் இறங்கினார்கள்.

கனவும் பசியும் குழம்பிய நிலையிலே அவன் மீண்டும் உள்ளே நுழையும் போது மணி ஒன்றரை.

‘பணத்தையெல்லாம் கொடுத்து விட்டீர்களா? என்றார் அக்கவுண்டெண்ட்.

‘ஆமாம்‘

‘வீராசாமி எங்கே’

'பின்னால் வந்தானே?' என்று அவன் திரும்பும் முன் பியூனும் ஏஜெண்டு அறைக்குள் புகுந்து அவரிடம் சங்கதியைச் சொன்னான். அவர் அவனிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தார்.

அவன் தனது இடத்திற்கு சென்று 'துறைமுகம் போய் வர பிரயாணச் செலவு ஏழணா' என்று ஒரு வவுச்சர் எழுதி ஏஜெண்டிடம் அனுப்பினான். தான் நியாயமாக ஏழணாவைத் தன் கையிலிருந்து செலவழித்ததினாலும் பாங்கி விஷயத்திற்காக அல்லாமல் ஒரு தனி நபரின் சௌகரியத்திற்காகச் சென்று வந்ததினாலும் அவன் ஏழணா செலவெழுதத் தீர்மானித்தான்.

அவன் அனுப்பிய செலவுக் குறிப்பைக் கண்டதும் ஏஜெண்டு அவனைக் கூப்பிட்டனுப்பினார்.

'என்ன ஐயா ஏழணாப் போட்டிருக்கிறீர்? டிராமிலே போய் வந்ததாக வீராசாமி சொன்னானே?'

'ஆனால் எனக்கு செலவானது ஏழணா'

'அதெப்படி? இங்கிருந்து துறைமுகம் போய்வர ஆளுக்கு ஒன்றரையணாத்தானே?'

'ஐம்பதினாயிரம் கொண்டு போனேன். அதற்காக 'ரிக்ஷாச் செலவு' என்று ஏழணாப் போட்டிருக்கிறேன்.'

'நீர் ரிக்ஷாவில் போகவில்லையே?'

'நான் அதில் ஏறுவதில்லை'

'அப்படியானால், டிராமுக்குள்ள சார்ஜ்தான் கொடுக்க முடியும்'

'சார்! ரிக்ஷாவில் இரண்டு பேர் போய் வர ஒரு ரூபாய் ஆகும். வீண் செலவு எதற்கு என்று தான்....'

'டிராமில் போய் வந்தீராக்கும்'

'ஆமாம்'

'அப்படியானால் இருவருக்கும் மூன்றணாத்தானே ஐயா ஆகிறது?'

அச்சமயம் வீராசாமி ஏஜெண்டு அறைக்குள் ஏதோ காரியமாக வந்தான்.

'என்ன வீராசாமி டிராமிலே தானே போய் வந்தீர்கள்? எப்படி ஏழணா ஆயிற்று?'

'நாலணாவுக்கு காபி சாப்பிட்டோம் சார்?'

'ஒஹோ உமது காப்பிச் செலவையெல்லாம் பாங்கிக் கணக்கிலா எழுதுகிறீர்? பாங்கி என்ன கற்பக விருட்சமா அல்லது உங்கள் குடும்பச் சொத்தா?'

'இரண்டுமில்லை. பிரயாணப்படி என்றால் இம்மாதிரிச் செலவுகளையும் சேர்த்து எழுதுவது தானே வழக்கம்? இங்கே இதற்கு முன்புகூட இம்மாதிரி படிச் செலவுகள் தரப்பட்டிருக்கின்றன.'

'அதிருக்கட்டுமையா. மூன்றணாத்தான் உமக்கு 'சாங்ஷன்' செய்ய முடியும்'

'சார் நான் ரிக்ஷாவில் போகாமல் பாங்கிற்கு ஒன்பதணா லாபம் உண்டாக்கியிருக்கிறேன்?'

'அது வேறு விஷயம்'

'நான் நடந்து போய்விட்டு வந்தால் உங்களுக்குத் திருப்தியாக இருக்கும்'

'ஓய் வீண் கதை அளக்காதேயும். உம்மை யாரய்யா காபி சாப்பிடச் சொன்னது?'

அவன் உதடுகள் கோபத்தால், துடித்தன, தொண்டை அடைத்துக் கொண்டது. கண்கள் சிவந்தன.

'அதைப் பற்றி நீங்கள்..... எனக்குத் தேவையிருந்தது.... பசித்தது சாப்பிட்டேன்'

'உமது தேவைகளை நிரப்ப பாங்கி தரம் சத்திரமல்ல' என்று கத்தினார் அவர்.

'உங்களுடைய நண்பருக்காகத் தானே நான் சென்றேன். இது பாங்கி விஷயமல்லவே? மூன்றாம் பேருக்குச் செய்யும் ஊழியம் தானே?'

'அவர் மூன்றாம் பேர்வழியல்லவோய்! எனது நண்பர்... நமது பாங்கில் கணக்கு வைத்திருப்பவர். அவருக்காக நீர் உதவி செய்யவில்லை. எனக்காகச் செய்தீர். என் கட்டளையை நிறைவேற்றினீர்'.

'உங்களது கட்டளையை ஆபீஸ் ஜோலியைவிட்டு, பசியும் பட்டினியும் கிடந்து நிறைவேற்ற வேண்டுமென்று' பாங்கி விதிகளில் சொல்லப்படவில்லை'

'போய்யா நீ பிரமாத சட்டம் படித்தவன் .... மரியாதையில்லாமல் பேசினால்........ ஹும்..... ஜாக்கிரதை'

'மரியாதையுடன் தான் பேசுகின்றேன். நியாயத்தைத் தான் சொல்லுகிறேன்'

'அப்படியானால் நியாயமாய் மூன்றணாவைப் பெற்றுக்கொள்ளும்'.

'சார் எனக்கு அந்த மூன்றணாவும் தேவையில்லை. உங்களுக்கு உதவி செய்ததில் எனக்கு ஏழணா நஷ்டமானாலும் பரவாயில்லை'

ஒரு ஏளனப் சிரிப்புடன் வெளியேறி தன் இடத்தில் உட்கார்ந்து வேலையைப் பாக்கத் தொடங்கினான் அவன். ஆபிசையே அடித்துத் தூள் தூளாக்கிவிடலாமென்று கோபம் வந்தது. அத்துடன் கண்களில் கண்ணீரும் பொங்கியது.

மாலையில் அலுவல் முடிந்து ஏஜெண்ட் வீடு சென்றதும், எல்லோரும் அவனைச் சூழந்துகொண்டு சமாசாரம் என்னவென்று கேட்டனர். நடந்ததைச் சொன்னான் அவன்.

'அடப்பாவி நாலணாவுக்காக இந்தத் தகராறு பண்ணினான் அவன். பாங்கி கற்பகவிருட்சமா என்று கேட்டானே. அவன் மட்டும் பார்ட்டிகளிடமிருந்து பணமாகவும், பண்டமாகவும் வாங்குகிறானே அது?'

'நமக்காவது எண்பது ரூபாய் சம்பளம். அவன் மாதம் ஐநூறல்லவா வாங்கினான்'.

'அதிருக்கட்டும். இவன் முன்பு ஒரு தடவை துறைமுகம் வரை ஒரு பார்ட்டியைப் பார்த்து வர பத்து ரூபாய் டாக்ஸி பில்

போட்டான். போகும்போது அங்கே டாக்ஸியில் போய்விட்டு, திரும்புகையில் பஸ்ஸிலே வந்துட்டானையா! இரண்டு மூன்று ரூபாய் டாக்ஸிச் செலவு போக பாக்கி இவன் ஜேபியிலே'

'பாருமேன்.... இவன் பொறுக்கித் தனத்தை'

கங்காதரனுக்கு இன்று ஐம்பதாயிரத்தையும் உம் மூலம் கொடுத்து அனுப்பியிருக்கானா? இவன் மகள் சடங்கிற்கோ, மகன் பூணலுக்கோ அவனிடமிருந்து வெள்ளிச் சாமானைப் பிடுங்கிவிடுவான்'

இவ்விதம் பற்பல குரலில் அனைவரும் அவரை எதிர்த்தனர். ஆனால் அவன் உள்ளம் ஒரு சுரண்டல் காரனுக்கு வீண் ஊழியம் செய்ததோடு, ஏழணாவையும் இழந்தோமே என்று மிக வருந்தியது. தன் நோயாளிக் குழந்தைக்கு ஆரஞ்சு வாங்கக் கூடக் காசில்லையே என்றெண்ணும்போது தான் காபி குடித்த முட்டாள்தனத்தை நினைத்து அவன் தன்னையே நொந்து கொண்டான். அவன் ஒருவரிடமும் விடைபெறாமல் தன் பையை எடுத்துக் கொண்டு கோட்டை ஸ்டேஷனை நோக்கி நடந்தான்.

தெருவின் திருப்பத்தில் இருந்த ஆரஞ்சுப் பழக் கூடைக்காரி, 'என்ன சாமி, பழம் வேணுமா' என்று கேட்டாள். அவன் அவளை ஏறிட்டுப் பார்க்காமல் விரைவாக நடந்தான். அவனது நெஞ்சு வெந்தது.

அந்த ரிக்ஷாகாரனிடம் இருக்கும் தைரியம் கூட என்னிடம் இல்லை. அந்த பயல் கழுத்திலே பிரியைச் சுற்றி இழுத்து நான் ஏழணாவை வாங்கி இருக்கணும்.... ரிக்ஷாவில் சென்ற கனவானும் எனது ஆபீஸ் கனவானும் ஒரே ரகம் தான்.... ஒரே வர்க்கம் தான்.... ஆனால் நான் தான் ரிக்ஷாகாரனிடம் இருந்த துணிச்சல் இல்லாத கோழையாகி விட்டேன்....

உடனே தானும் அந்த ரிக்ஷாகாரனும் சேர்ந்துக் கொண்டு பிடுங்குவதாக ஒரு கற்பனை. தனது கற்பனையை நினைத்து அவனுக்குச் சிரிப்பு வந்தது.

வீட்டிற்குள் நுழைந்ததும் குழந்தை அவனிடம் 'அப்பா'வென்று தாவினான். 'என்னடா கண்ணு' அவனை வாரியணைக்கும் போது அவன் குரல் தளதளத்தது. நெஞ்சிலே

அனல் காற்றுபோல ஏதோ விசிறியடித்தது. 'இவனை வைத்துக் கொள்' என்று மனைவியிடம் கொடுத்து விட்டு முகம் கால் கழுவ கொல்லைப்புறம் சென்று அங்கு தன் கண்களில் பெருகிய நீரைத் துடைத்துக் கொண்டான் அவன்.

அவன் திரும்பி வரும்போது மனைவி அவன் பைக்குள் கையைவிட்டு பழங்களைத் தேடிக் கொண்டிருந்தாள். அவள் கண்களில் ஏமாற்றமும் வருத்தமும் கவிந்திருந்தன.

'என்ன பழம் வாங்கி வரவில்லையா? குழந்தை காலையிலிருந்து கேட்டு அழுதானே?' என்றாள் ஆற்றாமையோடு.

'ஆபீஸ் ஓநாய் அதைத் தட்டிப் பறித்து விட்டது' என்று சொல்லிச் சிரிக்க முயன்றான் அவன்.

'ஆபீஸ் ஓநாயா? யார் அது?'

அவன் அவளுக்கு ஆதியோடந்தமாய் எல்லாவற்றையும் விளக்கிவிட்டு, 'ஆபீஸ் நாய்க்குப் போட்டது ஏழணா எனக் கணக்கெழுதி விட்டேன்' என்றான்.

'உங்களுக்கென்ன தர்மப் பிரபு' என்றாள் அவள் சுருக்கமாக.

'பின் அந்த வெறி நாயுடன் என்ன செய்யச் சொல்லுகிறாய்? இதற்கு மேல் முறைத்தால் வேலையைத் தொலைத்து விடுவான்'

'அதற்காக அவன் அடிக்க அடிக்க முதுகைக் குனிந்து கொடுக்கப் போகிறீர்களாக்கும். இல்லை, இல்லை அந்த ரிக்ஷாக்காரன் செய்தது போல் செய்துவிட வேண்டியது தான்'

காலையில் தான் கண்ட காட்சியை விஸ்தாரமா அவளுக்கு கூறினான் அவன். அவள் முகத்தில் சிரிப்பு மலர்ந்தது.

'அந்த ரிக்ஷாக்காரன் தான் பிழைக்கத் தெரிந்தவன். நான் மட்டும் உங்கள் ஸ்தானத்தில் இருந்தால்....'

'என்னத்தைக் கிழித்து விடுவாய்'

'உங்களைப் போலவா ஏழணாவை வாங்காமலா வருவேன்?'

'உன்னோடு பேச முடியாது, தாயே நீ ஆணாய் பிறந்திருக்க வேண்டியவள்'

இது அவளைச் சுருக்கென்று தைத்து விட்டது. சிறிது நேரம் கழித்து அவன் சொன்னான்.

'ஆம்! நீ சொல்வது ரொம்ப சரி! நமக்கு இன்று ஏழுணாத்தான் முக்கியம். **அதனை ஒருவன் சுரண்டுவதைத் தெரிந்தும், மனமறிந்து விட்டுவிடக் கூடாது தான்.**'

சக்தி சுதந்திர மலர் 1949

பாங்கில் நியாய உணர்வோடு பணியாற்றிய திகசியை ராமநாதபுரம், பரமக்குடி, சேலம், எடப்பாடி, கொச்சி என்று பல ஊர்களுக்கும் மாற்றினார்கள். எங்கு பணிபுரிந்தாலும் ஊக்கம் குன்றாது தொழிற்சங்கப் பணியைத் தொய்வின்றி தொடர்ந்தார் தி.க.சி.

தி.க.சி. மாணவனாக வாழ்ந்த காலத்திலேயே பொதுவுடைமை இயக்கத்தினருடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அப்போது பொதுவுடைமை இயக்கத்தின் மாணவர் அமைப்புக்குப் பொறுப்பாக இருந்த தோழர் ப.மாணிக்கம் அவர்களின் அறிமுகம் இதற்கான வழியை அமைத்தது. சிந்துபூந்துறை சண்முகம் அண்ணாச்சி, எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதன், உடன் பயின்ற தோழர் ஏ.எஸ்.மூர்த்தி, பேராசிரியர் நா.வானமாமலை ஆகியோருடன் பழகும் வாய்ப்பு தி.க.சி.க்கு கிட்டியது.

போர் வீரன் காதல்

If happened at willow castle எனும் ஆங்கில நூலை 'போர் வீரன் காதல்' எனும் தலைப்பில் திகசி 1950 களில் மொழி பெயர்த்தார். உறுதியான கட்டுப்பாடும் சிறந்த ஒழுக்கமுள்ள சீனச்செம்படையில் மனித உணர்ச்சியும், வாழ்வின் அபிலாஷைகளும் எவ்வாறு கௌரவிக்கப்படுகின்றன என்பதை போர் வீரன் காதல் எனும் சிறு நாவல் ஒளியிட்டுக் காட்டுகிறது. சீனாவில் 1944களில் வெளிவந்த அந்த நாவலை ஆங்கிலத்திலிருந்து 78 பக்கங்களில் எளிய நடையில் தி.க.சி. தமிழாக்கித் தந்துள்ளார்.


போர்வீரன் காதல்

நான்காவது* ஸ்குவாடின் தலைவன் தனது வீரர்களி
நிலையைப்பற்றிக் கூறிவிட்டு, ஒரு கணம் தயங்கி நின்று
அவன் முகத்தில் கவலை குடிகொண்டிருந்தது.

"கமிஸார்" என்று அவன் தயக்கத்துடன் துவங்
ஞன். "என் துணைவனுக்குத் தவறான எண்ணம் தோன்

"பற்நாட்டு நல்லறிஞர் சாத்திரங்க"ளைத் தமிழில் தரவேண்டுமென்ற எங்கள் ஆசைக்கு உறுதுணையாயிருந்து வரும் நண்பர் தி.க.சிவசங்கரன் அவர்கள், இந்நூலையும் சொல்லாட்சி மிக்க எளிய நடையிலே நன்கு தமிழாக்கித் தந்திருக்கிறார், அவருக்கு எங்கள் நன்றி என்று தமிழ்ப் புத்தகாலயத்தார் தி.க.சி. நன்றி தெரிவித்துள்ளனர்.

வசந்த காலத்திலே – 1951 மார்ச்

1950 நவம்பர் இறுதியில் தமிழ்ப் புத்தகாலயத்தார் தி.க.சி.யை அழைத்தார்கள். ஸ்டாலின் பரிசு பெற்ற நாவல் ஜார்ஜ் குலியா எழுதியது Sprink Time in saken அதனை திகசியிடம் மொழி பெயர்க்கச் சொல்லிப் பணித்தார்கள்.

சோசலிஸ்ட் சகாப்தத்தின் வீரம் மிகுந்த சாதனைகளைச் சித்தரிக்கும் சோவியத் இலக்கியத்தின் குறிக்கோள். சோவியத் இலக்கியம் கேவலம் சாதாரணச் சரித்திரமல்ல; அது மக்களின் அறிவை வளர்க்கும் சக்தி வாய்ந்த கருவியாகும்.

ஜார்ஜ் குலியாவின் இலக்கியத்தை தமிழ்நாட்டிற்கு அறிமுகம் செய்யும் வாய்ப்பை திகசிக்கு அளித்த தமிழ்ப்புத்தகாலயத்தாருக்கு 15.2.1951 தி.க.சி. மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துள்ளார்.

28 அத்தியாயங்களைக் கொண்ட வசந்த காலத்திலே நாவல் 168 பக்கங்களைக் கொண்டது. அதனை 1951 மார்ச்சில் வெளியிட்டது. தமிழ்ப் புத்தகாலயம் இதோ இதன் முகப்புப் பக்கம்.

வசந்த காலத்திலே!

[ஸ்டாலின் பரிசு நாவல்]

ஜார்ஜி குலியா

தமிழாக்கம்

தி. க. சிவசங்கரன்

தமிழ்ப் புத்தகாலயம்

576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5.

சீனத்துப்பாடகன்

1951 நவம்பரில் சென்னை *3*, நவபாரத பிரஸில் அச்சிடப்பட்டு வெளிவந்த நூல் சீனத்துப்பாடகன். பீகிங் (சைனா) கல்ச்சுரல் பிரஸ் அதிபர்களிடம் உரிமை வாங்கி வெளியிடப்பட்ட நூல். *75* பக்கங்களைக் கொண்டதாகும். அதனை தமிழாக்கம் செய்தவர் நமது தி.க.சி. இதோ இந்த நூலின் முகப்புக் பக்கமும் தி.க.சி. எழுதிய முன்னுரையும்;



சீனத்துப் பாடகன்

சோ ஷு-லி

தமிழாக்கம் :—

தி. க. சிவசங்கரன்

தமிழ்ப் புத்தகாலயம்

மயிலாப்பூர் :: சென்னை-4.

திகசியின் முன்னுரை

"சீனத்துப் பாடகன்" (Rhymes of Li yu-tasi) *என்ற இந்நூலை உங்கள் முன் படைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.*

மா ஸே – துங்கின் சீனத்தைப் பற்றி இன்று அறியாதார் ஒருவருமில்லை. மக்கள் சீனம் இன்று ஆசியாவின் ஜோதியாக, காலனி மக்களின் கலங்கரை விளக்கமாக நமது கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றது. சீனாப்புரட்சியின் வெற்றி முழக்கம், அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆசிய மக்களின் விடுதலை ஆர்வத்தை உந்தித் தள்ளுகிறது; குறிப்பாக ஒவ்வொரு இந்தியனின் நாடி நரம்பையும் முறுக்கேற்றி, அவனது அவல வாழ்வை அகற்றத் தூண்டும் போர்ப்பறையாக விளங்குகின்றது. இன்று இந்திய மக்கள் நவ சீனத்தின் அரசியல், கலை, இலக்கியம் ஆகியவற்றை அறியத் துடிக்கின்றனர். இந்தத் துடிப்பின் விளைவாகவே நானும் இந்நூலைத் தமிழாக்கத் துணிந்தேன்.

"சீனத்துப் பாடகன்" என்ற இந்நூல் 1943ல் எழுதப்பெற்றது; இந்நூலாசிரியருக்குப் பெரும் புகழ் தேடித்தந்தது. இவரைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் இங்குச் சொல்லியாக வேண்டும்.

இந்நூலாசிரியரான சோ–ஷூ–லி, இன்றைக்கு நாற்பத்தைந்தாண்டுகளுக்கு முன்னர், வட சீனாவில், ஷான்சி மாகாணத்தில், ஒரு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். மூன்றாம் வகுப்புப் படிக்கும்போது, லஞ்ச லாவணியம் நிறைந்த பள்ளித் தலைமையாசிரியரை, எதிர்த்து நடந்த இயக்கத்தில் கலந்து கொண்டார்; அதனால் பள்ளியை விட்டு விரட்டப்பெற்றார். அன்று முதல், ஜப்பானுடன் யுத்தம் துவங்கும் வரை; பள்ளி ஆசிரியர் முதல் நாடோடி வரை, பற்பல தினுசான வாழ்க்கை நடத்தியிருக்கிறார்.

ஜப்பானிய எதிர்ப்பு யுத்தத்தின் போது, இவர் ஜப்பானிய அணிகளுக்குப் பின்னுள்ள கொரில்லாத் தளங்களில் நிர்வாக அதிகாரியாகவும், அரசியல் ஊழியராகவும் இருந்துள்ளார். இறுதியில் சீனாவின் தலைசிறந்த பிரசுராலயமான சின் ஹூவா பதிப்பகத்தில் ஆசிரியராகச் சேர்ந்தார். இச்சமயத்தில் தான் இவரது இலக்கிய சிருஷ்டிகள் வளர்ந்து உரம்பெற்றன.

இவர் இரண்டு மூன்று நாவல்களும், ஏழு சிறு கதைத் தொகுதிகளும், ஐந்து நாடகங்களும், இரண்டு குட்ஸூக்களும் (சிந்துச் சரிதைகள்) எழுதியுள்ளார்.

'புகழ் பெறு முன்னே, பழுத்துக் கனிந்த ஆசிரியன்; தனக்கெனத் தனிநடை வகுத்துக் கொண்ட சுயம்பான கலைஞன்; மக்களின் எழுத்தாளன். இவரது கதைகளின் வெற்றி, தோழர் மா ஸே–துங்கின் இலக்கியக் கொள்கையின் வெற்றியாகும்.' என்கிறார் பிரபல விமர்சகரும், மக்கள் சினத்தின் கலாச்சார உதவிப் பிரதம மந்திரியுமான சௌ–யாங். இதற்கு மேல் இவரைப்பற்றிக் கூறிவிட முடியாது!

இறுதியாக எனது இலக்கிய முயற்சிகளில் மிகுந்த ஆர்வம் காட்டி, எனக்கு இடைவிடாது ஊக்கமளித்து வரும் தமிழ்ப் புத்தகாலயத்தாருக்கும், இந்நூலிலுள்ள குற்றங் குறைகளைக் களைவதில் எனக்குத் துணையாக இருந்த அருமை நண்பர் கே.கணேசனுக்கும் என் உள்மார்ந்த நன்றி உரித்தாகுக. இந்நூலுக்குத் தமிழ் மக்கள் அமோகமான ஆதரவளிப்பார் என்ற திடமான நம்பிக்கை எனக்குண்டு.

சென்னை
10–11–51

திருத்து:

அந்த நூலின் இறுதியில் வரும் பாடல் வரிகள் சில

வயலிலும் வீட்டிலும்
எங்கணும் மகிழ்ச்சி!
முதியோர்க்கும் இளைஞர்க்கும்
யாவர்க்கும் இன்பம்!
ஏனெனில்! அவர்களை
இன்று ஏமாற்ற முடியாது
அவர் தம் இன்பக் குரலை
முழங்குதல் காணீர்!

என்று எழுச்சிப் பண்ணோடு அந்த நாவலை நிறைவு செய்தவர் தி.க.சி.

கார்ல்மாக்சின் இல் வாழ்க்கை

பொதுவுடைமைத் தத்துவத்தின் பிதாமகன் கார்ல்மார்க்ஸின் இல்வாழ்க்கை பற்றி 1953 இல் தி.க.சி. நூல் ஒன்று எழுதியுள்ளதாக கவிஞர் மீரா குறிப்பிடுகிறார். அந்த நூல் இதுகாறும் அடியேன் பார்வையில் அகப்படவேயில்லை.

தி.க.சி.யின் மொழி பெயர்ப்பு நூல்கள் வெளிவந்த துவக்க காலத்தில் நெல்லைச் சீமையில் நா.வானமாமலை, வல்லிக்கண்ணன், தொ.மு.சி.ரகுநாதன், சிந்துபூந்துறை சண்முகம், நெல்லை ப.ராமசாமி ஆகியோர் எழுத்துலகில் கொடிகட்டி பறந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் குறித்த சிறு குறிப்புகள் இதோ!

நா.வானமாமலை

சிறந்த நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர், வரலாற்று ஆசிரியர் அறிஞர் நா.வானமாமலை. அவரது இருளின் வலிமை லியோடால் ஸ்டாய் எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு 1942 களிலேயே வெளிவந்தது. 1951 நவம்பரில் லியோடால்ஸ்டாயின் குடும்ப இன்பம் நூலை தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் நா.வானமாமலை.

கு.அழகிரிசாமி

நெல்லை இராஜவல்லிபுரம், ரா.பி.சேதுபிள்ளை, வல்லிக்கண்ணன், இரு சாகித்திய அகாடமி விருதாளர்களை தந்தது. அதுபோல கோவில்பட்டி இடைசெவலும் கி.ராஜநாராயணன், கு.அழகிரிசாமி இருவரையும் சாகித்ய அகாடமி விருதாளராகத் தந்தது. மாக்ஸிம் கார்க்கியின் அமெரிக்காவிலே 159 பக்கங்களை கொண்ட நூலை 1950 இல் தமிழாக்கித் தந்து வெளியிட்டவர் கு.அழகிரிசாமி.

வல்லிக்கண்ணன்

எண்ணற்ற நூல்களின் ஆசிரியர் வல்லிக்கண்ணன். 1944 இல் அவரது முதல் நூலான **கல்யாணி முதலிய கதைகள்** நூலை கோவை விரைட்டி ஹால்ரோடு எஸ்.பி.கிருஷ்ணன் கிருஷ்ணா அன்கோ சார்பில் சினிமா நிலையம் வெளிவந்தது. சென்னை நவயுவன் பிரஸில் அச்சிடப்பட்ட அந்த நூல் ஒரு ரூபாய் நாலணா விலை. 80 பக்கங்கள். அதனைத் தொடர்ந்து தென் திருவிதாங்கூர் (நாகர்கோவில்), கோட்டாறு கவிக்குயில் ஜெயம் தனது 9 வது வெளியீடாக வல்லிக்கண்ணனின் **நாட்டியக்காரி** உள்ளிட்ட 12 கதைகளை 100 பக்கங்களில் 1 ரூபாய் 2 அணா விலையில் 1946 மார்ச்சில் வெளியிட்டது. ஏறத்தாழ 75 நூல்களின் ஆசிரியர் அன்பு அய்யா மறைந்த வல்லிக்கண்ணன் அவர்களது படைப்புகள் 1951க்குள் 27 நூல்கள் வெளிவந்துவிட்டன. விரிவஞ்சி நிறுத்துகிறேன்.

இலக்கிய விமர்சனம் 129 பக்கங்களை கொண்ட நூலைத் தந்தவரும், பிரபல எழுத்தாளர், சாகித்திய அகாடமி விருது பெற்றவர், புதுமைப்பித்தனின் நண்பர், பெரியவர், பண்பாளர், எளியேன் மீது அன்பு கொண்டவருமான தொ.மு.சி.ரகுநாதன் எழுதிய புயல் 1945 செப்டம்பரில் வெளிவந்துவிட்டது. தொ.மு.சி.ரகுநாதன் 1947 சூலையில் நெல்லை மாவட்டத்தில் கலைஞர் கழகம் எனும் அமைப்பு தொ.மு.சி.யை தலைவராகக் கொண்டு துவங்கப்பட்டது. தி.க.சிவசங்கரன் அதன் செயலாளர் இச்சங்கம் குறுகிய காலமே செயல்பட்டது. (பொன்னீலன், ஒரு ஜீவநதி, சென்னை, 2003, பக்கம் 19)

கன்னிகா நாவல் 1950 மேயிலும், மாக்ஸிம் கார்க்கியின் தந்தையின் காதலி நூலை தமிழாக்கம் செய்து 1950 செப்டம்பரில் வெளியிட்டவர் தொ.மு.சி.ரகுநாதன் 1950 நவம்பரில் அவர் எழுதிய ஆணா பெண்ணா? அறிவியல் நூல் சக்திகாரியாலயத்தால் வெளியிடப்பட்டது. 1952இல் மாக்ஸிம் கார்க்கியின் தாய் நாவலை மொழிபெயர்த்து வெளியிட்டவர் தொ.மு.சி. ரகுநாதன். அப்போது நெல்லையில் பணியாற்றிய திகசி, முற்போக்கு எழுத்தாளர் சங்கம் என்ற அமைப்பை தொ.மு.சி.யோடு துவங்கினார். ப.ஜீவானந்தமும், பாலதண்டாயுதம் உரையாற்றினர். 1952இல் புதுமைப்பித்தன் புத்தகக்கண்காட்சி, கலை நிகழ்ச்சி, கருத்தரங்கம் நடத்தப்பட்டன. (முற்போக்கு

இலக்கிய இயக்கங்கள் தொ.மு.சி. ரகுநாதன், பொன்னீலன் நியூசெஞ்சரி புக் ஹவுஸ் லிமிடெட், சென்னை, 1994, பக்கம் 33)

சிந்துபூந்துறை எஸ்.சண்முகம்

அப்டன்சிங்கிளேரின் மிருக வாழ்க்கை நாவலை 1949 மே மாதத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் சிந்துபூந்துறை எஸ்.சண்முகம். 1950 மார்ச்சில் மைக்கேல் சேயர்ஸ், அல்பெரட் இ.கான் ஆகியோர் எழுதிய மாபெரும் சதி நூலை 160 பக்கங்களில் வெளியிட்டவர் சிந்துபூந்துறை எஸ்.சண்முகம்.

நெல்லை பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட் திருநெல்வேலி எனும் அமைப்பை ஆரம்பித்து அரசியல் போதனை எனும் மலரை தொடர்ந்து வெளியிட்டவர் சண்முகம் 1952 மே மலரில் ஜார் ரஷ்யாவில் தொழிலாளர் விவசாயிகளின் வாழ்க்கையும் விடுதலைப் போரும், 1952 ஜூனில் மாபெரும் அக்டோபர் சோசலிஸ்ட் புரட்சி, 1952 ஜூலை மலரில் சோவியத் யூனியனில் சோஷலிச அமைப்பு என்ற தொடர்து திருநெல்வேலி ஜங்ஷன் ஸ்ரீ லெட்சுமி பிரசில் அச்சிட்டு பொதுவுடைமை நூல்கள் பல வெளிவந்து கொண்டிருந்த காலம்.

நெல்லை ப.ராமசாமி

நெல்லை செய்தி பிரசுராலயம் 41, சுவாமி சன்னதி திருநெல்வேலி டவுணில் இருந்து ப.ராமசாமி கிபாட்கின் பிரபு நூலினை மொழிபெயர்த்து 4 அணா விலையில் 1940களில் வெளியிட்டவர். 16.2.1938இல் மைக்கேல் காலின்ஸ் நூலையும், 7.4.1938இல் எல்லோரும் ஓர் குலம், மேனாட்டறிஞர்களின் கருத்துக்களை விளக்கும் நூலையும் வெளியிட்டு மகிழ்ந்தவர் ப.ராமசாமி.

ஸ்ரீமந் நாராயண அகர்வாலின் இந்தியாவின் பொருளாதார அபிவிருத்திக்கான காந்தியத் திட்டம் நூல்களை மொழிபெயர்த்து 1945இல் தினமணி வெளியீடாக வெளியிட்டவர் ப.ராமசாமி.

5.12.1944இல் டெரன்ஸ் மாக்ஸ்வினியின் சுதந்திரத்தின் தத்துவங்கள் நூலை ப.ராமசாமி மொழி பெயர்த்தார். 1945 செப்டம்பரில் சீனத்தலைவர் சியாங்கேஷேக் பற்றி 256 பக்கங்களைக் கொண்ட நூலை எழுதினார்.

மாக்ஸிம் கார்க்கியின் Mother நாவலை 1946 ஆகஸ்டில் 'அன்னை' என்று மொழி பெயர்த்தவர் நெல்லை ப.ராமசாமி.

15.3.1953இல் தான்பீரின் ஐரிஷ் சுதந்திர வீரன் வரலாற்றை வெளியிட்டவர் ப.ராமசாமி.

எழுத்துலகப் பயணம்

நெல்லையில் முற்போக்கு சிந்தனையுடன் புகழ்பெற்ற எழுத்தாளர்கள் உருவாகிக் கொண்டிருந்த காலத்தில் தி.க.சி. போர்வீரன்காதல், வசந்த காலத்திலே, சீனத்துப் பாடகன் நூல்களைத் தந்தார்கள்.

அதனைத் தொடர்ந்து தனது எழுத்துலகப் பயணம் பற்றி தி.க.சி. கூறுகிறார்.

எனது எழுத்துலகப் பயணத்தில் என்னை இலக்கிய விமர்சனத் திசையில் முனையும்படி வழிகாட்டியவர் பேராசிரியர் நா.வானமாமலை. நான் 'கிராம ஊழியன்' இதழில் சினிமா விமர்சனம் எழுதிக்கொண்டிருந்தது நா.வா. அவர்களுக்குப் பிடிக்கவில்லை. சினிமா விமர்சனம் எழுதி வீணாகிக் கொண்டிருக்கிறாய். இனி சினிமா விமர்சனம் எழுதாதே. புத்தக விமர்சனம் எழுது என்று அவர் சொன்னார்.

அந்நாள்களில் மு.வரததராசனாரின் நாவல்களும் இதர நூல்களும் தமிழகத்தில் பரபரப்பாக விற்பனையாகிக் கொண்டிருந்தன. நா.வா.சொல்லியபடி, மு.வ.வின் எண்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களையும் வாங்கி, அனைத்தையும் படித்தேன். அவை பற்றி ஆழ்ந்த விமர்சனக் கட்டுரைகள் எழுதினேன். அவை 'ஜனசக்தி' யில் தொடர்ந்து வெளிவந்தன. பின்னர் அவற்றை தொகுத்து மு.வ.வுக்கு அனுப்பி வைத்தேன். அவர் எந்த விதமான பதிலும் சொல்லாமல், 'உங்கள் கருத்தை சொல்லியிருக்கிறீர்கள் நன்றி' என்று போஸ்ட் கார்டில் தெரிவித்திருந்தார். இதுவும் மறக்க முடியாத நிகழ்ச்சி தான் என்பார் தி.க.சி.

1962–1964 மதுரை வங்கியின் கொச்சி கிளையில் தி.க.சி. பணிபுரிந்தார். அப்போது ஜீவா காலமானார். மலையாள

பூமியில் இருந்தவாறே தி.க.சி. தாமரை இதழுக்குப் படைப்புகளை அனுப்பிக் கொண்டிருந்தார். இதில் க.நா.சு.மௌனி, ந.பிச்சமூர்த்தி, ந.சிதம்பர சுப்பிரமணியன், ஆர்.சண்முகசுந்தரம் போன்ற எழுத்தாளர்களின் சிறு கதைப் படைப்புகளை பற்றிய தி.க.சி.யின் திறனாய்வுக் கட்டுரைகள் வெளிவந்தன.

இந்த காலகட்டத்தில் தான் தமிழ் இலக்கியப் படைப்பாளிகள், விமர்சகர்கள், வாசகர்கள் பார்வை தி.க.சி.யின் மீது அதிக அளவில் திரும்பியது.

எனது எழுத்துலக வாழ்க்கையில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது ‘தாமரை’ முற்போக்கு இலக்கிய இதழின் ஆசிரியப் பொறுப்பேற்று நான் செய்த பணியாகும். 1965–1973 காலகட்டத்தில் அந்தப் பொறுப்பை நான் வகித்திருக்கிறேன். ‘தாமரை’ ஒரு நாற்றாங்காலாக விளங்கியது. பேராசிரியர் நா.வானமாமலை எங்களுக்கு வழிகாட்டினார். ஆண்டு தோறும் சிறுகதை மலர் வெளியிட்டோம். மொழி பெயர்ப்புச் சிறுகதை மலர், கரிசல் இலக்கிய மலர், பாரதி மலர், வியட்நாம் மலர் ஆகியவற்றை ‘தாமரை’ வெளியிட்டது. அந்தக் காலகட்டத்திய கதை இலக்கிய சம்பந்தமான முக்கிய பிரச்சனைகளில் எல்லாம் ‘தாமரை’ அக்கறை கொண்டிருந்தது. தனது நிலைப்பாட்டை உறுதியுடன் தெரிவித்தது. இலங்கைப் படைப்பாளிகளுக்கும் மிகுந்த ஊக்கம் அளித்தது. 1965–75 காலகட்டத்தில் ‘தாமரை’ இதழ்களை ஆராய்ந்து தமிழ்ப் பேராசிரியர் பழனி – ‘இராகுலதாசன்’ ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அது தாமரையின் பொற்காலம் என்று பலராலும் சிறப்பாகப் பேசப்படுகிறது என்பார் தி.க.சி.

தி.க.சி.யின் அரவணப்பு

தாமரை எழுத்தாளர்கள் ஒரு பெரிய கூட்டம், பிரபஞ்சன், பா.செயப்பிரகாசம், பூமணி, வண்ணநிலவன், கோ.ராசராம், சேலம் தமிழ்நாடன், ஆ.மாதவன், அழ.கிருஷ்ணமூரத்தி இப்படி ஒரு தாமரைக்கூட்டம் தி.க.சி. வளர்த்து விட்ட பிள்ளைகள், தி.க.சி.யினுடைய அரவணைப்பு, தமிழ் இலக்கியத்துக்கு அதுவும் இடதுசாரி இலக்கியத்துக்கு, அவர் மிகப்பெரிய பங்களிப்பு

செய்திருக்கிறார். அவர் இல்லை என்றால் இன்றைக்கு இருக்கும் எழுத்தாளர்களில் பலர் நமக்குக் கிடைத்திருக்க மாட்டார்கள் என்பர் பூமணி.

ஒரு தமிழன் என்ற முறையிலும் *80* வயதான எழுத்தாளன் என்ற அளவிலும், *60* ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் திறனாய்வுத் துறையில் இயங்கி வருபவன் என்ற வகையிலும், எல்லாவற்றுக்கும் மேலாக ஓர் இந்தியன் என்ற நிலையிலும், என்னை செதுக்கியவர்களின் பட்டியல் நீண்ட நெடியது. உலகளாவியது எனினும் அவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் நால்வர். அவர்கள் மகாகவி பாரதியார், புரட்சிக் கவி பாரதிதாசன், மணிக்கொடி இலக்கிய ஆசான்கள் என்ற இலக்கிய மறுமலர்ச்சி இதழின் மூலவர் வ.ரா.எனும் வ.ராமசுவாமி, ஜனசக்தி எனும் பொதுவுடைமை இதழின் ஆசிரியர் தோழர் ஜீவானந்தம் ஆகியோர். இந்த நால்வரின் வாழ்க்கையும், தத்துவமும் நடைமுறைகளும் இன்னும் எனக்கு வழிகாட்டி வருகின்றன.

இலக்கிய ஆசான்கள்

பாரதியும், பாரதிதாசனும், புதுமைப்பித்தனும் ஜீவாவும் மாக்சிம் கார்க்கியும் பாப்லோ நெரூடாவும் எனும் இலக்கிய

பாரதியார் - பாரதிதாசன்

ஆசான்கள். இவர்களது இலக்கியக் கொள்கையே இன்றளவும் எனது கொள்கை. இவர்களது வழிகளைப் பின்பற்றியே நான் எழுதி வருகிறேன். எனது படைப்புத் திறனை இனங்கண்டு என்னை ஊக்குவித்தவர் வல்லிக்கண்ணன். என்னை மார்க்சிய அழகியல் விமர்சனப் பாதைக்கு திருப்பியவர் பேராசிரியர் நா.வானமாமலை. இவர்களது அடியொற்றி நீண்ட காலமாகக் கலை இலக்கியத்துறையில் நான் ஆற்றிவரும் பணிகளுக்காகக் கிடைத்த ஒட்டு மொத்த அங்கீகாரமாக 2000 ஆம் ஆண்டில் எனக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது என்பார் தி.க.சி.

தி.க.சி. இளமைக்காலம் முதல் எந்த தத்துவத்தின் பேரில் பற்றும், பாசமும் கொண்டிருந்தாரோ அந்தத் தத்துவத்தை தமிழ் கூறும் நல்லுலகம் எங்கும் பரப்பும் வகையில் ‘சோவியத் நாடு’ சிறப்புச் செய்தி மொழிபெயர்ப்பு துறையில் பணியாற்றும் வாய்ப்பு வாய்த்தபோது, அதிலும் உயிர்த்தோழர் ஏ.எஸ். மூர்த்தியின் கடிதம் கண்டபோது யோசனைகளையெல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அதைத் தமது இயக்கத்தின் சிறப்புப் பணியாகக் கருதி அன்றே சென்னைக்குப் பயணமானார். 1964 டிசம்பர் 14இல் சென்னை சோவியத் செய்தித்துறை ஆசிரியர் குழுவில் சேர்ந்தார்.

வங்கியில் பத்தொன்பது ஆண்டுகள் தொடர்ச்சியாக பணிபுரிந்தவர்; தொழிற்சங்கத்தில், அரசியலில், கலை இலக்கியத் துறையில் அனுபவங்கள் பெற்றவர். ஒரு சாதாரண பாமரத் தொழிலாளி போல், அவரின் ‘ஏழணா’ என்னும் சிறுகதையில் வரும் அப்பாவி வங்கி ஊழியர் போல், தனக்குரிய கிராஜூவிட்டி, போனஸ் இன்னும் சில சலுகைகள் எதையும் கேட்டு பெறாமல், சோவியத் தூதரகச் செய்தித்துறையில் பத்திரிக்கையாளராகப் பணியாற்றும் இலட்சிய வேகத்தில், நாலுவரி ராஜினாமா கடிதத்தில், தனக்கு பத்தொன்பது ஆண்டுகளாக வங்கியோடு இருந்து வந்த உறவை அறுத்துக்கொண்டார்.

1964–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கடைசியில் வங்கிப் பணியை ராஜினாமா செய்வதற்கு முன் ஒரு மாத விடுப்பில் சென்னை வந்து சோவியத் நாடு நிறுவனத்தில் பணியாற்றினார். அங்குள்ள நிர்வாகிகளுக்கு மனத்திருப்தி. 1965 முதல் செய்தித்துறையில் (சோவியத் நாடு) நிரந்தரப் பணியாற்றி – 1990

வரை 25 ஆண்டுகள் மொழிபெயர்ப்பாளராகப் பணிபுரிந்தார் தி.க.சி.

தொ.மு.சி. ரகுநாதன், சரஸ்வதி இதழ் நடத்திய வ.விஜயபாஸ்கரன், மாஜினி, கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் ஆகியோருடன் சோவியத் செய்தித்துறையில் தி.க.சி.பணியாற்றியது பற்றி தனி நூலாகவே வெளியிடலாம்.

பிரபஞ்சன்

1965 முதல் 1972 வரை தாமரையின் பொறுப்பாசிரியராகப் பணிபுரிந்தவர் தி.க.சி. 1968 இல் இருந்து தாமரையில் எழுத ஆரம்பித்தவர் பிரபஞ்சன். அப்போது தி.க.சி.யுடன் எனக்கு ஏற்பட்ட உறவு தான் மார்க்சியத்தை முழுமையாகப் பயிலும்படி தூண்டியது. (சாரதா, ஜனவரி 1994 பிரபஞ்சன் பேட்டியில்)

சிற்பி பாலசுப்பிரமணியன்

பிரபஞ்சன், பூமணி, பா.செயப்பிரகாசம், சி.ஆர்.ரவீந்திரன் போன்றவர்கள் தாமரையால் வளர்க்கப்பட்டவர்கள். வானம்பாடிக் கவிஞர்களான சிற்பி, நா.காமராசன், புவியரசு, சக்திக்கனல், தமிழ்நாடன் போன்றவர்களும் தாமரையில் கவிதை எழுதி வளர்ந்தவர்களே.

இளம் படைப்பாளிகளைப் பாராட்டுதல்

இளம் படைப்பாளிகளின் படைப்பில் நல்ல அம்சங்கள் சிறப்பாக முற்போக்கு கருத்துக்கள் சிறிதளவே அடையாளம் காட்டினாலும் அவர்களுக்குச் சொந்த செலவில் கடிதம் எழுதி அவர்கள் படைப்பில் கண்ட நல்ல அம்சங்களைப் பாராட்டியும், குறைகளை எடுத்துக்காட்டுவதோடு பாரதியைப்படி, பாரதிதாசனைப்படி, மார்க்சிம்கார்க்கியைப்படி என்ற பிரபலமானவர்களின் நூல்களையும் அறிமுகப்படுத்தி அவர்களுக்கு உதவிடும் பண்பாளர் தி.க.சி.

வண்ண நிலவன்

தூத்துக்குடியில் வாழ்ந்த கம்யூனிஸ்ட் தலைவர் எஸ்.ஏ.முருகானந்தம் அவர்களின் சாந்தி இதழில் வண்ண நிலவனின் முதல் கதை வெளிவந்தது. அதற்கு உதவிபுரிந்தும்,

வண்ணநிலவனின் ஆரம்பக் கதைகளைப் படித்துத் திருத்தங்கள் செய்து தாமரையில் வெளியிட்டு இலக்கியத்துறையில் மட்டுமன்றி **சொந்த வாழ்க்கையிலும் எனக்குப் பொருளாதார ரீதியில்** உதவிகளை செய்து என் எழுத்துப் பணிக்கு ஆதரவாக இருந்தவர் தி.க.சி. என்று அண்ணன் வண்ணநிலவன் தி.க.சி.யின் மானுடத்தைப் போற்றுவார்.

கி.ராஜநாராயணன்

புகழ்பெற்ற சாகித்ய அகாடமி எழுத்தாளர் கி.ராஜநாராயணனின் சிறப்புமிகு கதையான ‘கதவு’ தாமரையில் வெளிவந்தது. தி.க.சி.யின் பார்வைக்குப் பின்னரே அவர் பாராட்டைப் பெற்ற பிறகே கி.ரா.வின் பல கதைகள் பிரசுரமாயின என்ற தகவலை அண்ணன் வண்ணதாசன் சொல்லியுள்ளார்.

‘தாமரை’ இதழ் தயாரிக்கும் பணியில் தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட தி.க.சி. அதற்காக சென்னை தியாகராயநகர் உஸ்மான் சாலையில் (வடக்கு) எழுத்தாளர் டி.செல்வராஜூடன் தங்கியிருந்த அறையைப் பகிர்ந்து கொண்டார்.

தி.க.சி.யின் தியாகம் மிகப்பெரியது.

இதழ் தயாரிப்புக்கு தோழர்கள் புலவர் ஆ.பழனியப்பன், ‘ஜனசக்தி’ ஆசிரியர் குழுவைச் சேர்ந்த எம்.கே. ராமசாமி போன்றவர்களின் உதவியைப் பயன்படுத்திக் கொண்டு அவர்கள் உற்சாகம் அடையும் வகையில் விருந்து உபசாரம் செய்வதும், தினமும் பத்து, பதினைந்து ரூபாய் வரையில் தம் சொந்தப் பணத்தைச் செலவழிப்பதும், இளம் எழுத்தாளர்கள் எழுதும் கதைகளைப் படித்துப் பார்த்து திருத்தங்களை கடிதம் மூலம் தெரிவித்தும், இவ்வாறு பிரதி மாதம் ரூ.400, 500 என்று செலவழித்தும், 100 தாமரை இதழ்களைத் தயாரித்தார். அந்த அளவில் தி.க.சி.யின் தியாகம் மிகப்பெரியது.

தாமரை இதழின் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் தி.க.சி. ‘சோவியத் நாடு’ நிறுவனத்தில் மொழிபெயரப்பாளராகப் பணிபுரிந்து ஓரளவு கணிசமான ஊதியம் பெற்று வந்தார்.

அதனாலேயே அவருடைய இலக்கியச் சேவைகள் உற்சாகமாக நடைபெற்றன. ஆனால், பொருளாதார ரீதியில் அவருக்கு இழப்புகள் ஏற்பட்டன. அதைப்பற்றி அவர் சிறிதும் கவலைப்படவில்லை.

மனித நேயம்

ஆம், தி.க.சி.க்கு இணையாகவும், மேலாகவும் இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்த இலக்கியத் தோழர்கள் பலர், தமது குடும்பத்தினரின் எதிர்காலம் ஒளிமயமாக இருக்க வேண்டும் என்னும் நோக்கில், எழுத்துத் துறையில் பணம் சேமிக்க ஆரம்பித்தபோது, தி.க.சி. தம் கைப்பணத்தை செலவழித்து, தாமரைக்கு எழுதுவதும், வளர்ந்த – வளரும் எழுத்தாளர்களுக்கு அன்புடன் விருந்து அளிப்பதும், சில நேரங்களில் மூத்த எழுத்தாளர்களின் படைப்புகளுக்கு சன்மானம் அளிப்பதும் அவரின் நல்ல இலக்கிய மனசுக்கு, **மனித நேயத்துக்கு**, பகிர்ந்துண்ணும் பண்புக்கு, அனைத்துக்கும் மேலாக மார்க்சிய கொள்கைக்கு நல்ல அடையாளங்கள் என்பர் மு.பரமசிவம்.

கலை இலக்கியத்துறையில் ஒரு பரந்து விரிந்த ஐக்கிய முன்னணியை அமைப்பதும் அதைக்கண்டு நசிவு இலக்கியத்தை எதிர்த்துப் போராடுவதும் என் இலட்சியம். அந்தக் காலத்தில் அசோகமித்திரன், கு.அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், நா.பார்த்தசாரதி போன்ற மனிதாபிமானிகளையும், இடதுசாரி ஜனநாயகவாதிகளோடு இணைத்து ஒரு வலுவான கூட்டணி! பாரதி, பாரதிதாசன், பிரேம்சந்த், மார்க்சிம் கார்க்கி பாதையை தாமரையில் எங்கள் பாதை! அதில் தெளிவாக இருந்தோம்.

கட்சி எனக்கு முழுச் சுதந்திரம் கொடுத்திருந்ததால் என்னால் முழுமையாக சிந்தித்து ஊக்கமுடன் செயல்பட முடிந்தது. ‘வியட்நாம் போராட்ட சிறப்பிதழ்’, ‘சிறுகதைச் சிறப்பிதழ்’, ‘கரிசல் சிறப்பிதழ்’, ‘மொழிபெயர்ப்பு சிறப்பிதழ்’ என எத்தனையோ சிறப்பிதழ்களை வெளியிட்டோம். தாமரைக்கு அது ஒரு பொற்காலம் என்று பார்க்கும் போதெல்லாம் நினைவுபடுத்துவார் தி.க.சி.

புதிய எழுத்தாளர்களை உருவாக்கியவர்

தி.க.சி. 'தாமரை'யின் பொறுப்பாசிரியராக இருந்த காலத்தில் வெளிவந்த நா.பார்த்தசாரதியின் 'தீபம்', கண்ணதாசனின் 'கண்ணதாசன்' ஆகிய இலக்கிய இதழ்களோடு அவருக்கு நெருங்கிய தொடர்புகள் இருந்தன.

பேராசிரியர் 'கல்கி'யின் மறைவுக்குப் பின் 'கல்கி' இதழில் 'குறிஞ்சி மலர்' என்ற நாவலை எழுதி இலக்கிய உலகில் பலரின் பார்வைக்கு ஆளான நா.பா. பின்னர் அந்தப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும் இருந்தார். அந்தக் காலகட்டத்தில் அந்த நிர்வாகத்தோடு நா.பா.வுக்கு உண்டான மனப்போராட்டத்தை 'எனது வேலைநீக்கம்' என்ற தலைப்பில் தாமரையில் தொடர் கட்டுரையாக எழுதினார். அதற்கு தூண்டுகோலாக இருந்த மனிதநேயப் பண்பாளர் தி.க.சி.

1965–ஆம் ஆண்டு முதல் தீபத்தின் வளர்ச்சியில் நானும் பங்கேற்றேன். 'மணிக்கொடி', 'சீனிவாசன்' டி.எஸ்.சொக்கலிங்கம், நா.வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன் ஆகியோரைத் 'தீபம்' சார்பில் பேட்டி கண்டேன். இத்தகைய பேட்டியுடன் தீபத்தில் நடைபெற்ற இலக்கிய விவாதங்களிலும் பங்கேற்றேன். நூல் மதிப்புரைகளும் எழுதினேன். என்னைவிட அதிகமாக எழுதி, தீபத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவர் மூத்த எழுத்தாளர் வல்லிக்கண்ணன் என்பார் தி.க.சி.

தாமரையில் எழுதிப் புகழ்பெற்ற பல எழுத்தாளர்கள், தீபம், கண்ணதாசன் ஆகிய இதழ்களில் எழுதத் தூண்டுகோலாக இருந்தவர் தி.க.சி.

தமிழில் இலக்கியத்தரமான ஒரு பத்திரிக்கையோ அல்லது புத்தகமோ வெளிவந்தவுடனேயே அவை வல்லிக்கண்ணனுக்கும், தி.க.சி.க்கும் அனுப்பி வைக்கப்படும். அவர்களின் அபிப்பிராயங்களை, ஆலோசனைகளைக் கேட்டு, அவ்வாறு தமக்கு அனுப்பி வைக்கப்படும் பத்திரிகைகளையோ, புத்தகங்களையோ அவர்கள் மேலோட்டமாக அபிப்பிராயங்களை சொல்வதையோ தங்கள் தலையாய இலக்கியப் பணியாகக் கொண்டிருப்பார்கள். ஒரு முறை ஒரு புதிய புத்தகத்தைப் படித்தபோது வல்லிக்கண்ணன் சொன்னார். "எனக்குப் புதிய புத்தகத்தின் வாசனை ரொம்பவும் பிடிக்கும்!" என்று அதைப்போலவே தி.க.சி. புதிய பத்திரிகைகள் வெளிவந்தால் அவற்றைத் தேடிப் படிப்பார். நண்பர்களைப் படிக்கத் தூண்டுவார். அதன் ஆசிரியரை நேரிலோ, கடிதம் மூலமாகவோ பாராட்டுவார்.

தி.க.சி.யின் அந்த அரிய பண்பை, இலக்கிய இதயத்தை கவிஞர் கண்ணதாசனின் உதவியாளராய், 'கண்ணதாசன்' இதழ் இணை ஆசிரியராய் இருந்த எழுத்தாளர் இராம.கண்ணப்பன் ஒரு நேர்காணலில் பின்வருமாறு கூறினார்;

"'கண்ணதாசன்' மாத இதழ் முதன் முதலாக வெளிவந்தபோது அந்த இதழின் சிறப்பை மனதாரப் பாராட்டிய எழுத்தாளர்கள் இருவர், என் வாழ்க்கையில் மறக்க முடியாதவர்கள். ஒருவர் 'மஞ்சரி' ஆசிரியர் 'தி.ஜ.ர.' என வழங்கும் தி.ஜ.ரங்கநாதன். மற்றொருவர் அன்றைய 'தாமரை' ஆசிரியர் தி.க.சி. அதிலும் என்னை நேரில் வந்து பாராட்டி, ஒவ்வொரு இதழும் வெளிவந்தபோது என்னை ஊக்குவித்து உற்சாகப்படுத்தி ஆலோசனைகள் சொன்னவர். அனைத்துக்கும் மேலாக என்னுள் மார்க்சியத்தை விதைத்தவர் தி.க.சி.

தி.க.சி.யுடன் எனக்கு இருந்த தொடர்புதான் – நட்பும், இலக்கிய ஈடுபாடும்தான் 'கண்ணதாசன்' இதழை ஒரு முழுமையான முற்போக்கு இதழாகத் தயாரிக்க உதவியது.

பண்ணரசன் கண்ணதாசன் சொல்வார்; **"ஒருவனின் நாவலில், சிறு கதையிலும் ஒரு வரி அல்லது ஒரு கருத்து சிறப்பாக இருந்தாலும் அதை வெகுவாகப் பாராட்டி அவனை மேலும் மேலும் எழுதத் தூண்ட வேண்டும். அதுதான் நாம் தமிழுக்கும், தமிழ்**

இலக்கியத்துக்கும் செய்யும் பெரிய சேவையாகும்" என்று இந்த அரிய பணியில் தற்காலத் தமிழ் இலக்கிய உலகில் கடந்த அரை நூற்றாண்டு காலமாக தொடர்ந்து சோர்வு இல்லாமல் வல்லிக்கண்ணனும், தி.க.சி.யும் செய்து வந்தார்கள்.

தி.க.சி. நூற்றுக்கணக்கான எழுத்தாளர்களைப் பாராட்டி, பக்குவப்படுத்தி சிறந்த படைப்பாளிகளை அறிமுகப்படுத்தியவர். இவர் நம் காலத்தில் பாராட்டப்பட வேண்டியவர். **மனித நேயத்தாலும்,** கொள்கை பிடிப்பாலும் நம் வணக்கத்துக்குரியவர் என்று கூறுகிறார், இராம கண்ணப்பன்.

இவ்வாறு அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக இலக்கிய இதழ்களோடும், இலக்கிய நண்பர்களோடும் எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமலும், தனது கொள்கைகளையும் விட்டுக் கொடுக்காமலும் வாழ்ந்து வருவதே பண்பும், பயனும் நிறைந்த வாழ்வு என்று வாழ்ந்து வருபவர், இலக்கியத் திறனாய்வாளர் தி.க.சி. என்னும் மு.பரமசிவத்தின் வரிகளுக்குள்ளே **தி.க.சி. என்றொரு மானுடன்** நமக்கு காட்சி தருகிறார்.

தி.க.சி.யின் நண்பர்களில் குறிப்பிடத்தகுந்தவர் 'சிகரம்' ச.செந்தில் நாதன், மற்றொருவர் எழுத்தாளர் என்.ஆர்.தாசன்

1960–ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தோழர் செந்தில்நாதன், தோழர் தி.க.சி. அவர்களை இலக்கியக் கூட்டங்களில் சந்தித்து அவரிடம் கேள்விகள் கேட்டு தெளிவுபெற்று அதன் மூலம் அவரோடு நட்பு கொண்டார். பின்னர் மக்கள் எழுத்தாளர் சங்கத்தை உருவாக்குவதில் பங்குபெற்று தாமரையில் இலக்கிய விமர்சனக் கட்டுரைகள் எழுத ஆரம்பித்தார்.

இறுதிவரை தி.க.சி.யின் நட்பு கொண்டு அவரை நண்பராய், இலக்கிய ஆசானாய் மதித்து பாராட்டியவர் செந்தில் நாதன்.

இத்தகைய சிறப்புவாய்ந்த செந்தில்நாதன் 'கலை, இலக்கியத் துறையில் என்னை பல ஆண்டுகளாக உற்சாகப்படுத்தி, ஊக்குவித்து வருபவர் தி.க.சி.' என்று பல மேடைகளில் மனந்திறந்து சொல்லியிருக்கிறார். இதன் மூலம் தி.க.சி. சிறந்த இலக்கிய விமர்சகரை, பேச்சாளரைப் பெற்றிருக்கிறார் என்பதை விட, நல்ல நண்பரை – பண்பாளரைப் பெற்றிருக்கிறார் என்று சொல்வதே சிறப்புக்குரியதாகும்.

தி.க.சி.யின் திறனாய்வுகள்

தமிழில் இலக்கிய விமர்சனம் வ.வே.சு. ஐயரின் முயற்சிகளிலிருந்து தொடங்குகிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பனின் படைப்புத் திறனை இதர உலக மகா கவிகளின் ஆற்றலையும் ஒப்பிட்டு ஒப்பியில் இலக்கிய விமர்சனத்தை வளர்த்தவர் வ.வே.சு. ஐயர். தத்துவப் போதகர் வீரமா முனிவர் காலந்தொட்டு துவங்கிய தமிழ்ச் சிறுகதை, மகாகவி பாரதியார், வ.வே.சு. ஐயர் என படிப்படியாக வளர்ந்தது. வலிமையும், இளமையும், வனப்பும் எழிலும் மணிக்கொடி எழுத்தாளர்களின் காலத்தில் சிறுகதை செழித்து வளர்ந்தது. கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன், இன்னும் இன்னும் ஏராளமான சிறுகதை எழுத்தாளர்கள் கதைகள் எழுதினார்களே தவிர இலக்கிய விமர்சனத்தில் கருத்து செலுத்தவில்லை என்றாலும் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் விமர்சன ரீதியில் கதை, கவிதை பற்றிய அபிப்பிராயங்களை அழுத்தமாகவே பதிவு செய்துள்ளார்.

க.நா.சுப்ரமணியன்

தமிழில் இலக்கிய விமர்சனத்தை தனித் தீவிரத்துடன் விசேஷ ஈடுபாட்டுடன் வளர்த்தவர் கந்தாண்ட நாராயணசாமி ஐயர் சுப்பிரமணியம் (31.1.1912 – 16.12.1988) சிறுகதை, நாவல், நாடகம், புதுக்கவிதை என்று படைப்பு இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட க.நா.சுப்பிரமணியன் நிறைய விமர்சனக் கட்டுரைகளை எழுதினார். **விமரிசனக்கலை, படித்திருக்கிறீர்களா? முதல் ஐந்து தமிழ் நாவல்கள், இலக்கிய விசாரம், இந்திய இலக்கியம் பத்து சிறந்த இந்திய நாவல்கள், நாவல்கலை இலக்கியத்துக்கு ஓர் இயக்கம், கலை நுட்பங்கள்** போன்ற விமர்சன நூல்களை எழுதியவர் க.நா.சு. (க.நா.சுப்பிரமணியம், மனித சிந்தனைவளம், சென்னை, பக்கம் 4)

இலக்கியச் சாதனையாளர்கள் எனும் நூலினை க.நா.சு. 1985இல் எழுதினார். இதில் ராஜாஜி, புதுமைப்பித்தன், வ.ரா., ஃபாக்னர், மாஸ்தி, கல்கி, குபரா, ஸார்த்தர், கம்யூ, மால்ரோ, மௌனி, ஆர்.கே.நாராயணன், சண்முகசுந்தரம்,

ச.து.சுப்பிரமணியம், கு.அழகிரிசாமி, பி.எஸ்.இராமையா, தகழி சிவசங்கரன் பிள்ளை, ஏ.கே.செட்டியார், டி.கே.சி., அம்ருப்ரீதம், சிதம்பர சுப்பிரமணியன், தி.ஜானகிராமன், ஆர்தர் கொய்ஸ்லர், எஸ்.வி.வி.கம்பதாஸன், கொத்தமங்கலம் சுப்பு, வையாபுரிபிள்ளை, தி.ஜ.ர. சங்கரராம், கே.எஸ். வேங்கடரமணி, ராஜராவ், வை.கோவிந்தன், கிருஷ்ணன் நம்பி, டி.எஸ். சொக்கலிங்கம், பி.ஸ்ரீ.ஆசாரியா, அல்லயன்ஸ் குப்புசாமி அய்யர், ஸ்டீபன் எப்பெண்டர், திரு.வி.க., உ.வே.சா., ரா.ராகவய்யங்கர், ரஸிகன், வடுவூர் துரைசாமி அய்யங்கார், கி.ரா. (இவர் வேறு கி.ரா., புதுவையில வாழும் கி.ராஜ நாராயணன் அல்ல) சீனிவாசராகவன், விசுவநாத சத்தியநாராயணா ஆகியோர் பற்றி இலக்கியச் சாதனையாளர்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுவுடைமை சார்ந்த அவர் காலத்திய தொ.மு.சி., வல்லிக்கண்ணன், சிந்துபூந்துறை சண்முகம், தி.க.சி. போன்றவர்களைப் பற்றி அவர் குறிப்பிட மறந்தது ஏனோ? தெரியவில்லை!

சி.சு.செல்லப்பா

சின்னமனூர் சுப்ரமணியம் செல்லப்பா (29.9.1912 – 18.12.1998) தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் விமர்சனம், புதுக்கவிதை, சிற்றிதழ் இயக்கம் என்று மூன்று தளங்களில் தீவிரமாக செயல்பட்டவர்.

24 மணி நேரமும் இலக்கியம் தான் அவரது பேச்சாக இருக்கும். 1959 இல் 'எழுத்து' எனும் இதழைத் துவங்கினார். 1956இல் சுதேசமித்திரனில், சி.சு.செல்லப்பா 'சிறுகதையின் தேக்கம்' என்ற விமர்சனக் கட்டுரை எழுதினார். அதற்கு அகிலன், ஆர்.வி. பதில் எழுத, விளைவு விமர்சனத்திற்காகப் பிறந்த ஏடு சி.சு.செல்லப்பாவின் 'எழுத்து'. எழுத்து இதழ் முதலில் விமர்சனக் குரலாகப் பிரகடனப்படுத்திக் கொண்டு வந்து பின்னர் இது புது கவிதைக் களமாக மாறியது. எழுத்துவின் தொடக்க காலத்தில் கா.நா.சு. சிட்டி, நா.சிதம்பரசுப்ரமணியம் எழுதினார்கள். அவர்கள் சி.சு.செல்லப்பாவை அவ்வளவாக மதித்தது கிடையாது.

விமர்சனத்திற்கென்றே ஒரு பத்திரிக்கையா? என்று நக்கலும் செய்தார்கள். இவ்வாறு செய்த க.நா.சு. 'க.நா.சு.

இலக்கிய வட்டம்' என்ற மாத இதழைத் துவங்கினார். இது விமர்சனத்திற்காக நடத்தப்பட்ட இதழ்தான்.

சி.சு.செல்லப்பா சிறுகதை, கவிதை, நாவல் ஏன் நன்றாக இல்லை அல்லது நன்றாக இருக்கிறது என்பதற்கான காரணத்தைச் சொல்ல வேண்டும் என்று வாதாடினார். க.நா.சு. நேர் எதிர் நிலை எடுத்தார். 'என் அனுபவத்தைக் கொண்டும் படிப்பறிவைக் கொண்டும் நான் சொல்கிறேன் இந்தப் படைப்பு நன்றாக இருக்கிறது அல்லது நன்றாக இல்லை' என்பார். ஆனால் 'சி.சு.செல்லப்பா', 'க.நா.சு. ஒரு பட்டியல் காரர்' அவ்வப்போது ஒரு பட்டியலை விடுவார். ஏற்கனவே வந்த பட்டியல்களிலிருந்து எடுக்கப்படும், புதியவைகள் சேர்க்கப்படும். இவர் செய்வது மனப்பதிவு ஆய்வு முறை, மனமானது ஒரே தன்மையாக இராது. ஆதலால் பட்டியலில் இடம் பெறுபவைகளை மாறுவன என்பார். (கி.அ. சச்சிதானந்தம், எழுத்து இதழ்த் தொகுப்பு, சி.சு.செல்லப்பா படைப்புகள், சென்னை, 2014, பக்கம் 10)

தமிழில் இலக்கிய விமர்சனம்

தனது எழுத்து பிரசுரம் மூலம் 1974 இல் சி.சு.செல்லப்பா 'தமிழில் இலக்கிய விமர்சனம்' என்னும் 446 பக்கங்களைக் கொண்ட நூலை வெளியிட்டார். அதில் முதல் கட்டுரையான தமிழில் இலக்கிய விமர்சனத்தில் கூறுவார், 'இவைகளுக்கு முன்னால்' தொல்காப்பியத்துக்கே போனால் அதிலிருந்து கிடைக்கும் தகவல்களைக் கொண்டு தமிழில் விமர்சனம் அதிலிருந்தே ஆரம்பமாகிறது என்றும் சொல்ல முன்வரலாம். அதில் உள்ள சில சூத்திரங்களை எடுத்து இவை இலக்கிய விமர்சன தோரணையைக் குறிப்பிடுகின்றன என்று காட்ட வரலாம் என்பார் (தமிழில் இலக்கிய விமர்சனம் – சி.சு.செல்லப்பா 1974, பக்கம் 9)

சி.சு.செல்லப்பாவின் விமர்சனக் கட்டுரைகளிலிருந்தும், புத்தக விமர்சனங்களிலிருந்தும், கருத்துக்களுக்கான ஊற்றுக்கண்கள் காணப்படும். அவற்றிலிருந்து மேலும் விரிவாக்கிக் கொள்ளலாம். ஆழமாகச் செல்லவும் கெட்டிக்கார வாசகனால் முடியும் எனும் கி.அ.சச்சிதானந்தனின் கூற்று சரியானதே. 1961இல் மார்ச் எழுத்து 27வது இதழில் மேல் நாட்டு விமர்சன வளர்ச்சி எனும் கட்டுரை தந்தார். அவரது பல கட்டுரைகளை 494 பக்கங்களில்

கி.அ.சச்சிதானந்தம் தந்துள்ளார். அது அருமையான இலக்கிய விமர்சன நூல்.

இருந்த போதிலும் சி.சு.செல்லப்பாவின் புரட்சிப் படைப்பாளி (எழுத்து இதழ் 7, ஜூலை 1959இல்) ரசமான சம்பவங்கள் எனும் இரு விஷயங்களைப் புதுமைப்பித்தனைப் பற்றி தந்துள்ளார். புரட்சிக்காகப் புரட்சி என்று இல்லாமல் பழசைத் தாக்க வேண்டும், தகர்க்க வேண்டும் என்ற ஒரு வெறியை மட்டும் தன் முன் வைத்துக் கொள்ளாமல், 'உலகத்தோடு சண்டை பிடித்துக் கொள்ள வேண்டும்' என்ற ஒரு வக்ர ஆசை, அதில் ஒரு மகிழ்ச்சியும் கொள்ளாமல் **'அவநம்பிக்கை தான் என் நோக்கு'** என்று பெருமைப்பட்டுக் கொள்ளாமல், ஒரு புரட்சிக்காரனாக இலக்கியத் துறையில் இருக்க முடியுமா? முடியும் என்பதற்கு புதுமைப்பித்தன் ஒரு உதாரணம்.

புதுமைப்பித்தன் தனக்கு நம்பிக்கை வறட்சி இருப்பதாக கூறி இருக்கிறாரே என்று கேட்கலாம். ஆனால் சமூகத்தில் நம்பிக்கை வைத்து அதற்கு கசையடி கொடுத்து, அதைத் தூண்டிச் சொரணை பெறச் செய்யும் ஒரு ஆத்திரத்தைக் கொட்டத்தான் அந்த 'நம்பிக்கை வறட்சி' அவருக்கு உத்வேகம் அளித்தது. ஆனால் அந்த உத்வேகத்தில் அவர் தன்னை மறந்து விடவில்லை. அவரது எழுத்துக்கள் எந்த குறிப்பிட்ட சித்தாந்தத்துக்கும் நம்பிக்கைக்கும் ஆதரவாகவோ எதிரிடையாகவோ உபயோகப்படுத்திக் கொள்ள முடியாத ஒரு சுத்த கலைஞன் புதுமைப்பித்தன்,.

எனவே வேதாந்திகள் கைக்குள் சிக்காத கடவுள் மாதிரி. நான் பிறப்பித்து விட்டவைகள் என்று தன் எழுத்துக்களைப் பற்றி புதுமைப்பித்தன் சொல்லி இருக்கும் படைப்புகள் அவநம்பிக்கை, நம்பிக்கை, வறட்சி, கசப்பு இவைகளுக்கும் மேலாக எழுத்து வாழ்க்கையை ஆழ்ந்த ஒரு அனுதாபத்துடன், அபிமானத்துடன் மனிதன் மனிதனாக வாழ மறந்துவிட்டதை குத்திக்காட்டி, அடிப்படைகளை உணரச் செய்ய வலியுறுத்தும் ஒரு கண்டிதத் தோரணையில் அமைந்தவை.

தனது 42வது வயதில் (1906 – 1948) காலமான புதுமைப்பித்தன் விஷயம், வடிவம், நடை ஆகிய மூன்று அம்சங்களிலும் புரட்சிகரமான சோதனைகளைச் செய்து

அவைகளில் சாதனை காட்டியவர். அவரது நூறு கதைகளும் நூறு வகையான கதைகள். அவைகளில் நூற்றுக்கும் குறையாத கோணங்களையும் வேற்றுமைகளையும் காண்கிறோம். புதுமைப்பித்தன் ஒரு கலகக்காரராக சாதித்திருப்பதை ஓரளவு அளவிடுகிறேன் என்பார் சி.சு.செல்லப்பா. (சூலை 1959 எழுத்து இதழ் 7)

புதுமைப்பித்தனைப் பற்றி 1959களில் நம்பிக்கை வறட்சி கொண்டவர் என்று சி.சு.செல்லப்பா கூறியிருப்பதை விளக்குவதற்கு காரணம் அதே கருத்தை அதே காலகட்டத்தில் சொன்னவர் தி.க.சி.

பிரிய சகோதர

பிரியசகோதர என அழைத்து வல்லிக்கண்ணன் தி.க.சி.க்கு 1.6.1995இல் எழுதிய கடிதத்தில் சி.சு.செல்லப்பா குறித்து, 'அவர் உடல் தளர்ந்து, சருமம் வெளுத்து' சிரமத்துடனேயே நடக்கிறார். கண் பார்வையும் சரியில்லை. காது அரைவாசி கேட்கும். டயபட்டீஸ், பி.பி. இருக்கின்றன. மாத்திரைகள் சாப்பிடுகிறார். ஆனாலும் உற்சாகமாக இருக்கிறார்.....



வல்லிக்கண்ணன்

பெங்களூர் எனக்குப் பிடிக்க வில்லை

(பெங்களூரில் தனது மகன் வீட்டில் சி.சு.செல்லப்பா சில காலம் இருந்தார். 10.11.2015 அன்று தொலைபேசியில் எனது நண்பர் சென்னை சீனி.குலசேகரன் தந்த தகவல்)

திரும்பவும் நான் பெங்களூர் போக விரும்பவில்லை. இத்தனை காலமும் அங்கே இருந்தது ஜெயில் வாழ்க்கை மாதிரி தான். திருவல்லிக்கேணியிலேயே வீடு பார்க்கச் சொல்லியிருக்கிறேன். எனக்கு வயது 83 அவளுக்கு

79. இருவரும் தனியாகவே இருப்போம். பெங்களூரில் அமைதி இல்லை. **வழக்கமான மாமியார் மருமகள் ஒத்துப்போகவில்லை.** *என்றார். மிக முதுமையில் உள்ள இருவரும் தனியாக வசிக்க முடியுமா? என்பது பெரும் சிக்கல். அவர் ஆசைப்படுகிறார், மகனும் மற்றவர்களும் என்ன செய்வார்களோ! சொல்வார்களோ! (சுகதேவ், சீனிகுலசேகரன், பிரியசகோதர, தி.க.சி.க்கு வல்லிக்கண்ணனின் கடிதங்கள், கலைஞன் பதிப்பகம் சென்னை 2012 பக் 122–123)*

வல்லிக்கண்ணன் திகசிக்கு எழுதிய இந்த மூலக்கடிதத்தை சீனி, குலசேகரனிடம் கொடுத்து அச்சுக்கு அனுப்பியபோது உடனிருந்தவன் அடியேன்.

சீனி.குலசேகரன்

அந்தக் காலத்தில் சி.க.செல்லப்பாவின் **குடும்பத்தினர் குறித்த தகவல்களை கண்டிப்பாக அச்சிடக்கூடாது என்று கண்டிப்புடன் சொல்லிக் கொடுத்தவர் தி.க.சி. அவரது மானுடப் பண்பை அருகிலிருந்து அடியேன் பார்த்த பல சந்தர்ப்பங்களில் ஒன்று அது. அது மட்டுமா?** *அதே நூலில் 26.2.1994இல் சென்னையிலிருந்து வல்லிக்கண்ணன் திகசிக்கு எழுதிய கடிதம் 83, 84 களில் வந்துள்ளது. அதில் 'தாமரை' இதழ் குறித்து அதில் ஆசிரியர் குழுவில் பணியாற்றும் ஒருவர் குறித்தும் வல்லிக்கண்ணன் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். அதனையும் அந்தக் கடிதத்திலிருந்து எடுத்து விடுங்கள்.* **வல்லிக்கண்ணன் குறிப்பிடும் அந்த ஆசிரியர் குழுவில் வரும் பெயரை நீக்கி விடுங்கள் என்று பிறர் மனம் நோகாமல் இருக்க வேண்டும் என்று கண்ணுங் கருத்துமாக இருந்த மானுடச் செம்மல் திகசி. இந்த உண்மைகளை அந்நூல் தொகுத்து வெளியிட்ட சீனி. குலசேகரன் நன்கு அறிவார், அருகிருந்த அடியேனும் அறிவேன்.**

அதுமட்டுமா அந்தக கடிதத்தேடல்கள், பழைய இதழ்களின் தேடல்கள், தி.க.சி. அவர்களின் 21ஈ சுடலைமாடன் கோவில் தெருவில் புத்தகப் பகுதிகளுக்கிடையே வாரக்கணக்கில் பகல் முழுவதும் உழைத்தோம்.

அந்த உழைப்பின் பயனாக தி.க.சி.யின் பல மறைந்து கிடந்த படைப்புக்கள் வெளி உலகுக்கு வந்தது.

வே.முத்துக்குமார்

சான்றுக்கு, தி.க.சி. 1948 காலங்களில் எழுதிய நாட்குறிப்பு அப்போது புதையலெனக் கிடைத்தது. அதனை நல்ல முறையில் நண்பர் வே.முத்துக்குமார் சந்தியா பதிப்பகம் வாயிலாக தி.க.சி. நாட்குறிப்புகள் எனும் நூலாக 175 பக்கங்களில் வெளியிட்டுள்ளார். அதில் தி.க.சி. என்ற இளைஞனின் இலக்கியத் தேடலையும் பல்வேறு உள நிலைகளையும் பலவீனங்களையும் பிரதிபலிப்பதை நாம் படிக்கும்போது உணரலாம்.

திகசியின் திறனாய்வுகள்

சென்னை கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் சார்பில் 1993 பிப்ரவரியில் தி.க.சி.யின் திறனாய்வுகள் நூல் 329 பக்கங்களில் வெளிவந்தது. அதில் தி.க.சி. எழுதிய என்னுரை இதோ;

தி.க.சி.யின் என்னுரை

நம் நாடு விடுதலை பெற்ற பிறகு, அரசியல், பொருளாதாரம், சமுதாயம், கலாச்சாரம் ஆகிய துறைகளில் பொதுவாக, புதுமையும், வளர்ச்சியும், முன்னேற்றமும் ஏற்பட வேண்டும் என்ற தாகம் அனைவரிடமும் இருந்தது.

கலை – இலக்கியத் துறையில் படைப்பாளிகளுக்கிடையே புதிய தேடல்களுக்கான அறிகுறிகள் தென்பட்டன.

ஆனால், படைப்பிலக்கியத் துறையிலும், வணிக இலக்கியப் போக்குகளின் ஆதிக்கமே மேலாங்கி இருந்தது.

புதுமை, தனித்தன்மை, கலையழகு, எதார்த்த நோக்கு இவற்றின் அடிப்படையில் நவீன இலக்கியங்களை உருவாக்க வேண்டும் என்ற உத்வேகம் கொண்ட படைப்பாளிகளுக்கு, வணிகப் பத்திரிகையில் இடம் கிடைக்காத அவலநிலை அன்று நிலவியது.

இந்தப் போக்கை மாற்றுவதற்கு இலக்கிய விமர்சனம் என்ற கருவியைப் பயன்படுத்த வேண்டும் என்ற எண்ணமும் அப்போது தீவிரமாக எழுந்தது.

அந்தக் காலகட்டத்தில்தான் தோழர் ப.ஜீவானந்தம், பேராசிரியர் நா.வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன், ஆர்.கே.கண்ணன், எஸ்.ஆர்.கே. போன்ற மார்க்சியவாதிகள், தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர்.

இவர்களின் பாதையைப் பின்பற்றி, நானும் தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையில் அடியெடுத்து வைத்தேன்.

ஐம்பதுகளில் ஜனசக்தி, தாமரை, சரஸ்வதி, சாந்தி போன்ற பத்திரிகைகளில் டாக்டர் “மு.வ.”, கவியரசு கண்ணதாசன், பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர்களின் படைப்புக்களை விமர்சனம் செய்துள்ளேன். ஆனால் துரதிருஷ்டவசமாக அக்கட்டுரைகளை நான் சேகரித்து தொகுத்து இத்தொகுப்பில் இப்போதைக்கு வெளியிட இயலவில்லை.

1956இல் சரஸ்வதியில் வெளிவந்த கட்டுரைகளும், அதன் பிறகு தாமரை, செம்மலர், தீபம், எழுத்து, இலக்கிய வட்டம் முதலிய இதழ்களில் வெளிவந்த கட்டுரைகளும் இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

1948இல் புதுமைப்பித்தன் மறைந்த பிறகு, புதுமையில் நாட்டம் கொண்ட அன்றைய இளைய தலைமுறைக்கு, மணிக்கொடி படைப்பாளிகள் முன்னோடிகளாகத் திகழ்ந்தனர்.

எனவே, அவர்களது படைப்புகளைப்பற்றி விமர்சனம் செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாயிற்று. ‘மணிக்கொடி’ எழுத்தாளர்களில் சிலரைப்பற்றி அறுபதுகளில் நான் எழுதிய சில கட்டுரைகளை இத்தொகுப்பில் சேர்த்துள்ளேன்.

மகாகவி பாரதியைப் பற்றி கட்டுரைகள், அன்றும், இன்றும், என்றும் நமக்குத் தேவையானவை என்பதால் அவைகளும் இத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

இவை தவிர, தற்கால இலக்கியப் படைப்பாளிகள், போக்குகள் பற்றிய பல திறனாய்வுக் கட்டுரைகளும் இத்தொகுப்பில் உள்ளன.

எனது திறனாய்வுக் கோட்பாட்டின் அடிப்படையில், இந்நூலின் பின்னிணைப்பாக விளங்கும் பேட்டியில் தரப்பட்டுள்ளன.

தமிழ் இலக்கியத் திறனாய்வுத் துறையின் வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும், இந்நூல் ஓரளவேனும் பயன்படும் என்பது என் நம்பிக்கை.

இக்கட்டுரைகளைப் படைப்பதற்கும், வெளியிடுவதற்கும் வாய்ப்பளித்த ஏடுகளுக்கும், இலக்கிய அமைப்புகளுக்கும் பதிப்பகங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

இந்நூலில் உள்ள கட்டுரைகளைச் சேகரிக்க உறுதுணைபுரிந்த வல்லிக்கண்ணன், 'தீபம்' எஸ்.திருமலை, 'சரஸ்வதி' வ.விஜயபாஸ்கரன், வீர.வேலுசாமி, என்.மாரியப்பன், துரை சீனிச்சாமி, மு.மகாதேவன், ஜி.ஜி.ராதாகிருஷ்ணன், எஸ்.எஸ்.போத்தையா, சூரங்குடி ஆ.முத்தானந்தம், பசுமைக்குமாரர், என்.ஆர்.தாசன் மற்றும் பலருக்கும் எனது உளமார்ந்த நன்றி.

இந்நூலைத் தொகுப்பதில் பேருதவி புரிந்த இளவல் கழனியூரன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி.

சீரிய படைப்பாளியும், தரமான தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பேரார்வம் கொண்டவரும், கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் செயலாளருமான அருள்திரு. டாக்டர் தி.தயானந்த பிரான்சிஸ் அவர்கள் இந்நூலை வெளியிடுவதற்கு காட்டிய ஆர்வத்தையும், ஒத்துழைப்பையும் என்னால் என்றென்றும் மறக்க இயலாது. அவர்களுக்கும், C.L.S. பதிப்பகத்தார்க்கும் என் உளங்கனிந்த நன்றி.

மிகக் காலந்தாழ்ந்தேனும் இந்நூலை வாசகர்களுக்கு வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியும், மனநிறைவும் அடைகிறேன்.

அன்புடன்
தி.க.சிவசங்கரன்
21ஈ, சுடலைமாடன் கோவில் தெரு,
திருநெல்வேலி –5

டிசம்பர் 1992

இந்நூலில் அடங்கும் கட்டுரைகளைத் தேடிப்பிடித்து வரிசைப்படுத்தி தருமாறு தி.க.சி. அவர்களை டாக்டர் தயா கடந்த ஐந்து ஆறு ஆண்டுகளாகக் கேட்டு வந்தார்.

கடந்த ஆண்டில் டாக்டர் தயா, தி.க.சி. அவர்கள் இல்லத்திற்கு சென்று அவ்வன்பு வேண்டுகோளைச் சற்று அழுத்தமாகவே விடுத்ததன் விளைவாகத் திரு. தி.க.சி. இந்தக் கட்டுரைகளைச் சில மாதகாலத்திற்குள்ளாக அனுப்பி விட்டார். அவற்றுள் எதையும் நீக்கிவிடாமல் எவ்விதத் திருத்தமும் செய்யாமல் டாக்டர் தயா அவர்களின் நெறிப்படுத்தலோடு நூல் வெளி வந்தது.

தமிழ் இலக்கிய ஆர்வலர்கள், அறிஞர் பெருமக்கள், ஆய்வாளர்கள், திறனாய்வாளர்கள் பலருக்கும் நெடுங்காலத்திற்குத் துணை நிற்கக்கூடிய ஒரு கருத்துப் பெட்டகமாக இந்நூல் திகழ்கின்றது. பாரதி, வ.ரா., புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, கா.ந.சு. மற்றும் ஜீவா போன்ற மாபெரும் இலக்கிய மேதைகள் பற்றி தி.க.சி.யின் பார்வைகளைக் கொண்ட கட்டுரைகளும், திறனாய்வுக் கலை மற்றும் சிறுகதை ஆய்வுகள் பற்றிய அவருடைய ஆணித்தரமான கருத்துக்களை எடுத்துரைக்கும் எழுத்தோவியங்களும் இந்நூலில் நமக்குச் சிறந்த விருந்துப் படைப்புகளாக விளங்குகின்றன. எழுத்துச் செல்வர் – பெரியவர் திரு.வல்லிக்கண்ணன் அவர்களின் பிறந்த நாள் நிதி அளிப்பு விழாவின் போது அவருடைய இரண்டு நூல்களைக் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்ட வேளையில் திரு.தி.க.சி. வழங்கிய ஆய்வுக் கட்டுரையை எங்கள் பூக்கூடை இதழில் வெளியிட்ட பின்னர் இத்தொகுப்பிலும் இதனை திரு.தி.க.சி. சேர்ந்திருக்கின்றார். இந்நூலின் இறுதியில் திரு.ஜி.ஜி.இராதாகிருஷ்ணன் தி.க.சி.யோடு நிகழ்த்திய உரையாடல் ஒன்றும் இடம் பெறுகிறது.

கிறிஸ்தவ இலக்கியச் சங்கத்தின் சார்பில் ஸ்வீட்லின் பிரபாகரன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த அந்த நூலில் இடம் பெற்றுள்ள கட்டுரைகளின் தலைப்பு

புதுமைப்பித்தன்
வீர வணக்கம் வேண்டாம்
புதுமைப்பித்தனைப் பற்றி இன்னும் கொஞ்சம்
அழியாச் சுடர்
மாங்காய்த்தலை
மணிக்கூண்டு
சூரியகாந்தி

மனமயக்கம்
வெள்ளிக்கிழமை
கார்னிவல்
மகாகவியின் மரபில் வந்த பேனாவீரர்
வ.ரா.வின் இலக்கிய நோக்கு
பாரதியின் தனிப் பெரும் சீடன்
பாரதியைச் சரியாகப் புரிந்துகொள்வோம்!
சுதேசியும் நடிப்புச் சுதேசியும்
பாரதியின் பாதையை வலுப்படுத்துவோம்
பாரதி இந்துவா இந்தியனா?
புதிய கோணங்கியும் பழைய பயித்தியமும்
பாரதியின் பத்துக் கட்டளைகள்
தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும் – ஒரு மதிப்பீடு
காகித மலர்கள் – ஒரு மதிப்பீடு
தமிழில் விமர்சனத்துறை – சில போக்குகள்
இன்றைய ரசனை
இன்றைய சிறுகதைகள்
இன்றைய தமிழ் இலக்கியத்தில்....
மணிக்கொடி மரபும் சிறு பத்திரிகைகளும்
செப்டம்பர் மாதச் சிறுகதைகள்
ஜீவா என்றொரு மானுடன்
இதோ ஓர் அற்புதம்
வல்லிக்கண்ணனின் மன்னிக்கத் தெரியாதவர்
பாரதியும் ஷெல்லியும்

தி.க.சி.யின் திறனாய்வுகள்

1993 பிப்ரவரியில் வெளிவந்த தி.க.சி.யின் திறனாய்வுகள் நூல் 31 கட்டுரைகள் மற்றும் தி.க.சி.யுடன் ஓர் உரையாடலுடன் வந்தது. அதே கட்டுரைகள் மீண்டும் மறுபதிப்பாக 2001 டிசம்பரில் வெளிவந்தது. **தமிழில் விமர்சனத்துறை சில போக்குகள்** *சென்னை பத்மா பதிப்பகம் வெளியிட்டது. 1993 இலும் 2001 டிசம்பரிலும் வெளிவந்த அந்த நூலில்* **1956 செப்டம்பரில்** *சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன் குறித்த விமர்சனத்தை தி.க.சி. எழுதியுள்ளார்.*

(சி.சு.செல்லப்பா புதுமைப்பித்தனை விமர்சித்தது **1959 ஜூலை** *என்பதை நினைவில் கொள்ள வேண்டுகிறேன்)*

புதுமைப்பித்தன்

புதுமைப்பித்தன்

தொடர்ந்து 1957 ஆகஸ்டில் விஜயபாஸ்கரன் நடத்திய சரஸ்வதி இதழில் 'வீர வணக்கம் வேண்டாம்' என்ற கட்டுரையை தி.க.சி. எழுதினார். புதுமைப்பித்தனைப் பற்றி 'இன்னும் கொஞ்சம்' எனும் தலைப்பிலும் அதே இதழில் எழுதினார். அதிலிருந்து சில பகுதிகள் தி.க.சி.யின் நேர்மையான நடுநிலையான திறனாய்வுக்குச் சான்றாகத் திகழ்ந்திடும் வைர வரிகள் இதோ;

1955 டிசம்பர், 1956 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாத 'சரஸ்வதி' இதழ்களில் திரு.ஆர்.கே.கண்ணனும், ஜூலை இதழில் திரு.ரா.'ஹரியும்' புதுமைப்பித்தனைப் பற்றித் தமது மதிப்பீட்டை வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தச் சூழ்நிலையில் நானும் புதுமைப்பித்தனைப் பற்றிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலில் புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்தைப் பற்றியும், அக்காலத்தில் அவரது வாழ்க்கை நிலை பற்றியும் சில விவரங்களை நினைவில் வைத்துக் கொள்வோம்.

புதுமைப்பித்தன் 1906ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25ஆம் தேதி பிறந்தார். 1948ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதி மறைந்தார். அவர் வாழ்ந்த காலம் 42 ஆண்டுகளும், 2 மாதமும், அதாவது சுமார் 43 ஆண்டுகள்.

உலக சரித்திரத்திலும், இந்திய சரித்திரத்திலும் இவை மிக முக்கியமான ஆண்டுகள் ஆகும்.

*1911*இல் டில்லி தர்பார், *1917*இல் நவம்பர் புரட்சி, *1930*இல் உப்புச் சத்தியாகிரகம், *1933*இல் ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சி, *1934*இல் மத்திய சட்டசபைத் தேர்தல் *1936*இல் மாகாண சட்டசபைத் தேர்தல், (ராஜாஜி மந்திரி சபை), *1938* இல் இரண்டாம் மகாயுத்தம், *1942*இல் ஆகஸ்டு போராட்டம், *1947*இல் இந்திய சுதந்திரம் ஆகிய பிரசித்திபெற்ற நிகழ்ச்சிகளை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்தக் காலகட்டத்தில் தமிழ் இலக்கிய உலகத்தையும் நாம் சிறிது கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

*1921*இல் பாரதி அமரர் ஆனார்; இன்று போல் அன்றும் 'சுதேசமித்திரன்' தினசரி நடந்து வந்தது. *1930* – உப்புசத்தியாகிரக எழுச்சியையொட்டி, தமிழ் இலக்கியத்திலும் ஒரு புது எழுச்சி உண்டாகிறது. 'சுதந்திரச் சங்கு', 'காந்தி', 'மணிக்கொடி', 'ஆனந்த விகடன்', 'கலைமகள்', 'நவசக்தி', ஆகிய அரசியல், இலக்கிய சஞ்சிகைகளும், 'தினமணி'ப் பத்திரிகையும் தோன்றுகின்றன.

இந்தப் பத்திரிகைகளின் தோற்றத்தால் தமிழ் இலக்கியத்தின் உருவகத்திலும், உள்ளடக்கத்திலும் ஒரு பெரிய மாறுதல் ஏற்படுகிறது. எளிய, இலக்கியச் சுவை மிகுந்த, ஜீவனுள்ள தமிழில் ஏராளமான கட்டுரைகளும், நவமான அழகும், நுணுக்கமும் கொண்ட ஆயிரக்கணக்கான சிறுகதைகளும் தோன்றுகின்றன. தமிழ் இலக்கியம் தேசிய உருவத்தையும், ஜனநாயக உள்ளடக்கத்தையும் பெறுகின்றன.

இந்தக் காலகட்டத்தைப் பற்றி புதுமைப்பித்தன் கூறுவதைக் கேளுங்கள்;

1930 ஆம் வருசத்துக்குப் பின் உப்புசத்தியாகிரகத்தின் இலக்கிய அலையாக ஒரு புது வேகம் இலக்கியத்தில் ஏற்பட்டது. அதாவது எதையும் சிரிக்கச் சிரிக்க எழுதவேண்டும் என்று ஒரு பாணியை வகுத்து அந்தத் துறையில் சிலர் இறங்கித் திறமைகளைக் காட்ட முயன்றார்கள். இவர்களுள் பிரதானஸ்தர் கல்கி. இவர்களுக்குச் சிரிப்பு மூட்டக்கூடிய தன்மையில் எழுத வேண்டும் என்பதே பிரதான லட்சியம். ஹாஸ்யச் சுவை என்பது இயல்பாக அமைய வேண்டிய விவகாரமாதலால், வரிந்து கட்டிக்கொண்டு சிரிக்கவைக்க முயல்வது போட்டோவுக்காகச் சிரித்த மாதிரியாகத் தான் அமையும், கல்கியும், பிறரும் மேல்நாட்டு

ஹாஸ்ய சாம்ராட்டுகளை மொழிபெயர்த்துத் தந்தார்கள். அவற்றை அனுசரித்தும், ஒட்டியும், பெயர்த்தும் எழுதினார்கள். கல்கி பிரபல்யத்துக்கு வந்தது. அவர் சிரிக்கச் சிரிக்க எழுதுவார் என்பதிலிருந்துதான். ஆனால் பிற்காலத்தில் அவர் சிறுகதைத் துறையில் இறங்கியபொழுது அவரது எழுத்துக்களில் மருந்துக்குக்கூட சிரிப்பு இல்லாமற் போனதற்குக் காரணம் ஹாஸ்யம், இவருக்கு இயல்பான குணம் அல்ல என்பதுதான். ஆனால் ஹாஸ்யமாக கதை எழுதக்கூடியவர்கள் தமிழில் உண்டு. அவர்கள் இருவர், எஸ்.வி.வி.யும், கொனஷ்டையில், எஸ்.வி.வி.யைவிட கொனஷ்டையிடம் கலையம்சம் ரொம்பவும் நயமாக இருக்கும். கதைப்பாணி இருக்கும். இந்த ஹாஸ்ய யுகத்தின் வேகம் ஒடுங்கும் நிலையில்தான் இன்னும் ஒரு பேரலை எழுந்தது. அதில்தான் சிறுகதை தமிழில் பூரண வடிவம் பெற்றது. இதைச் சிறப்பாக மணிக்கொடி யுகம் என்று சொல்ல வேண்டும்.

இக்காலத்தில் சிறுகதைக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட்டது. பிச்சமூர்த்தி, கு.ப.ரா., பி.எஸ்.ராமையா, சிதம்பர சுப்ரமணியன் முதலியவர்களும், நானும் கதைகள் எழுத ஆரம்பித்தோம். வாழ்வுக்குப் பொருள் கொடுப்பது தான் கலை. சிறுகதை, வாழ்வின் பல சூட்சமங்களையும் எழுத்தில் நிர்மானித்துக் காண்பித்தது. “பரமசிவன் வந்து வந்து வரங்கொடுத்துப் போவார். பதிவிரதைக் கின்னல் வரும்பழையபடி தீரும்“ என்றிருந்த நிலைமை மாறி, நிலாவும், காதலும், கதாநாயகனுமாகச் சோபித்து சிறுகதைகள் வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க ஆரம்பித்தன.

(புதுமைப்பித்தன் கட்டுரைகள் - ஸ்டார் பிரசுரம்)

வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க வேண்டும் என்பதை லட்சியமாகக் கொண்ட மணிக்கொடி எழுத்தாளர்களின் தலைவன் புதுமைப்பித்தன்.

இந்த லட்சியத்தின் விளைவாகவே, பக்தகுசேலோ, நாசகாரக் கும்பல், துன்பக் கேணி, மனிதயந்திரம், பொன்னகரம், இது மிஷின் யுகம், கல்யாணி, வாடா மல்லிகை, கவந்தனும் காமனும், நிசமும் நினைப்பும், செல்லம்மாள், கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும், மகாமசானம், சுப்பையா பிள்ளையின் காதல்கள்,

நியாயந்தான், ஆண்மை, ஒரு நாள் கழிந்தது, தெரு விளக்கு, நினைவுப்பாதை ஆகிய புதுமைப்பித்தன் கதைகளை அவர் சிருஷ்டித்தார்.

புதுமைப்பித்தனின் கதாபாத்திரங்கள், கருத்து, தமிழ்நடை எல்லாமே இலக்கியத் சநாதனிகளை ஒரு கலக்கு கலக்கின.

பரங்கிப் புண்பெற்ற ...., தெருவோரத்து விபசாரியையும், ஓட்டல் சிப்பந்தியையும், வர்த்தகக் குமாஸ்தாவையும், கிராமத்துப் பண்ணையாரையும், முதலாளித்துவ நாகரீகத்தின் சின்னமான ஓட்டுப் பொறுக்கியையும், பாலிய விதவையையும், நாற்சந்தியில் செத்துக் கொண்டிருக்கும் பிச்சைக்காரனையும், கடவுளிடம் ஜீவிய சந்தாவசூலிக்கும் பத்திரிக்காசிரியனையும், எழுத்தாளனை ஏமாற்றும் பிரசுரகர்த்தாவையும் புதுமைப்பித்தன் கதாபாத்திரங்களாக ஆக்கினார். இந்த பாத்திரங்களின் வாயிலாக நிலப்பிரபுத்துவத்தின் கொடுமையையும், வளர்ந்து வரும் முதலாளித்துவத்தின் அநீதியையும் அநாகரீகத்தையும் அம்பலப்படுத்தினார்; பழமைவாதிகள் மீது கண்டனக் கணைகளை ஏவி, கைகொட்டிச் சிரித்தார்; பழமைவாதிகளும், வேடதாரிகளும் வெட்கப்பட்டார்கள்; வெகுண்டெழுந்தார்கள்; ‘புதுமைப்பித்தன் கலைமரபு தெரியாதவர், பண்பாடு அறியாதவர்’ என்றெல்லாம் அவர்கள் தூற்றத் தொடங்கினார்கள்; எதிர்க்கச்சைக் கட்டினார்கள்; தாங்களால் முடிந்த மட்டும் இலக்கியத் துறையில் புதுமைப்பித்தனைத் தாக்கவும் செய்தார்கள்.

ஆனால் புதுமைப்பித்தன் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சவில்லை. உண்மையும், உயிர்த்துடிப்பும், புதுமையும், கலையழகும் கொண்ட அவரது படைப்புகளை இளைஞர் உலகமும், சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்டோரும் வாழ்த்தி வரவேற்றனர்.

என்னுடைய கதைகளைப் பொறுத்தவரை அபரிதமான பாராட்டும் பரவசமும் ஒரு சாரார்; மற்றொருபுறம் பலத்த மனப்பூர்வமான கண்டனம். இந்த இரண்டும் என்னுடைய கதைகள் பெற்றுள்ள கவர்ச்சிகள். ஒரு பரம ரசிகர் என்னுடைய கதைப்புஸ்தகத்தைக் கண்டவுடன் ‘இந்த மனிதன் எப்பொழுது கதை எழுதுகிறதை நிறுத்திக்கொள்வான்’ என்று ஆவலுடன்

கேட்டார். அந்தப் பரம ரசிகருக்குத்தான் என்னுடைய புத்தகத்தை, அவருடைய கொய்னா மாத்திரையை, சமர்ப்பிக்கப் போகிறேன். மற்றொரு கலைநுணுக்க வாதி 'இவர் என்ன சூனியமானவன்?' என்று கேட்டார். என் கட்சி பேச ஆசைப்பட்ட ஒருவர் 'அவரும் நம்மைப்போல் ஒரு மனிதர் தான்' என்று தெளிவுப்படுத்திக் கொடுத்தார். இதே மாதிரிதான் பரவசமும் பாராட்டுதலும் அவையும் தன்னை மறந்த சாமியாட்டமாக இருக்கிறது.

என் கதைகளில் உள்ள கவர்ச்சிக்கு ஓரளவு காரணம். நான் புனைந்து கொண்ட புனைப் பெயராகும். அது அமெரிக்க விளம்பரத் தன்மை வாய்ந்திருக்கிறது என்பதை இப்போது அறிகிறேன். நான் எடுத்தாளும் விஷயம் பலர் வெறுப்பது; சிலர் விரும்புவது.

நான் கதை எழுதுகிற சீர் சிறப்பு எல்லாம் இந்த மாதிரி தான் என்று வைத்துக் கொள்ள வேண்டாம். அதாவது நான் எழுத வேண்டியது தான் பாக்கி. அது நேராகப் பத்திரிகையின் பக்கங்களில் போய் உட்கார்ந்து கொள்வது நிச்சயம் என்று கருத வேண்டாம். அப்படி ஒன்றும் இல்லை. ஒரு காலத்தில் என் கதைகளைப்போல பத்திரிகைகளில் நுழைய அனுமதி மறுக்கப்பட்டவை வேறு இருக்க முடியாது. இப்பொழுது பிரசுரித்துள்ளவற்றின் அளவுக்கு ஏறக்குறையச் சமமான எண்ணிக்கையுள்ள கதைகள், அவை எழுதப்பட்ட காலத்திலிருந்து பத்திரிகை காரியாலயங்கள் எல்லாவற்றையும் சேஷத்திர தரிசனம் செய்துவிட்டுத் திரும்பியவையாகும்.

(புதுமைப்பித்தன் கட்டுரைகள் - ஸ்டார் பிரசுரம்)

மேற்குறித்தவற்றிலிருந்து எவ்வளவு எதிர்ப்புகும் வெறுப்புக்கும் இடையில் புதுமைப்பித்தன் கதைகள் பிரசுரமாயின என்பது தெளிவுபடுகிறது.

இவ்வளவு எதிர்ப்பும் வெறுப்பும் இருந்தும் புதுமைப்பித்தன் கதைகளுக்கு மவுசு ஏன்?

காரணம், புதுமைப்பித்தன் எழுத்துக்களிலுள்ள கலையம்சந்தான்; அவரது சிருஷ்டிகளில் காணப்படும் ஜீவத்துடிப்பும் பூரணத்துவமும் தான்.

புதுமைப்பித்தனுடைய சிருஷ்டித் திறன் வியக்கத் தகுந்தது; மேதாவிலாசம் பொருந்தியது. அவரது ஒவ்வொரு கதையும் ரஸத்துணுக்கு என்றே சொல்ல வேண்டும். நெஞ்சில் உரமிருந்தால், நேர்மைத் திறம் இருந்தால், வாழ்க்கை படம் பிடிக்க வேண்டும் என்னும் சத்திய ஆவேசம் இருந்தால், புதுமைப்பித்தனுடைய சிருஷ்டிகளில் ஒரு கம்பீரம். ஒரு வீரியம் இருந்தது. தமிழ் பண்பாட்டில் வேரூன்றி, உலக இலக்கியங்களையும் கற்றுத் தேர்ந்த கலையுள்ளம் அவருடையது. எனவே அவர் எழுத்தில் ஒரு மோகன லாகிரி இருக்கிறது. அவருடைய கட்டுக்கோப்புத் திறனும், கலைநயமும், மாற்றாரையும் மயங்கச் செய்தன; செயலற்றுப் போகச் செய்தன. பழமைப்பித்தர்களின் ‘பாச்சா’ பலிக்கவில்லை.

தமிழ் இலக்கியத்தில் ‘சிறுகதை’ என்னும் பகுதி தோன்றி சுமார் 60 ஆண்டுகள் தாம் ஆகின்றன. புதுமைப்பித்தன் சொல்வது போல் ‘தமிழுக்குச் சிறுகதையும் புதிது’ நாவலும் தமிழ் இலக்கியத்தால் வசன நடையும் புதிது. இந்தப் புதுமையிலும் புதுமை விளைத்தவர் புதுமைப்பித்தன்!...............

மணிக்கொடி யுகத்தில் தமிழ்ச் சிறுகதைக்குப் பூரண உருவையும், உயிர்ப்பையும் அளித்த முதல்வன் புதுமைப்பித்தன் என்று தாராளமாகக் கூறலாம். இதற்கு அவருடைய படைப்புகளே சான்று.

புதுமைப்பித்தனின் சாதனைகள் என்ன? தமிழ் இலக்கியத்திற்கு அவர் செய்த நன்மைகள் யாவை?

புதுமைப்பித்தன் தமது படைப்புகளால் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தினார். தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தைச் செழுமைப்படுத்தினார். தமிழ்ச் சிறுகதையை உலகத்துச் சிறுகதைகளுக்கு ஒப்பாகத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்தார்.

‘அனுபவத்துக்கு நேர் முரணான விஷயங்களை ஒதுக்கிவிட்டு, நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கௌரவக் குறைச்சல் ஒன்றுமில்லை’ என்னும் யதார்த்தவாதக் கொள்கையை தமிழ்ச் சிறுகதை உலகில் ஸ்தாபித்தவர் அவர்.

‘சாதாரண மனிதர்களின் வாழ்வுக்குச் சிறுகதையில் இடமளித்து முதலாளித்துவக் கொடுமையைப்பற்றி எழுதுவதில்

கௌரவக் குறைச்சல் ஒன்றுமில்லை' என்னும் யதார்த்தவாதக் கொள்கையை தமிழ்ச் சிறுகதை உலகில் ஸ்தாபித்தவர் அவர்.

'சாதாரண மனிதர்களின் வாழ்வுக்குச் சிறுகதையில் இடமளித்து முதலாளித்துவக் கொடுமையையும், நிலப்பிரபுத்துவ அநாகரிகத்தையும் அம்பலப்படுத்தியவர் அவர்.

புதுமைப்பித்தன் அநீதியின் விரோதி; அற்பத்தனத்தின் எதிரி; ஆஷாடபூதிகளின் பகைவன்; அல்லற்பட்டு அழுந்துவோரின் ஆப்த நண்பன்; அவர் சிருஷ்டித்தது மக்கள் விரோத இலக்கியமல்ல; மனிதாபிமான இலக்கியம்!'

புதுமைப்பித்தனின் இலக்கியம் ஜனநாயக இலக்கியம்; தமிழ்ச் சிறுகதைகளின் சரித்திரத்தில் ஒரு புதிய மாறுதலை, புரட்சியைத் தோற்றுவித்தவர் புதுமைப்பித்தன்.

இதற்காக நாம் அவருக்கு உள்ளன்புடனும், தன்னடக்கத்துடனும்; பெருமிதத்துடனும் நன்றி செலுத்த வேண்டும்.

தமிழன்னையின் தவப்புதல்வர்களில் ஒருவர் புதுமைப்பித்தன். தமிழ்மொழி வாழவும், தமிழ் இலக்கியம் செழித்துக் கொழிக்கவும் தன்னையே தியாகம் செய்தவர் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தன் எழுத்துக்களில், யதார்த்தவாதத்தில், தத்துவ விசாரத்தில் எத்தனையோ குறைபாடுகள் உண்டு. இருந்தாலும் அவர் நமது பாராட்டுதலுக்கு உரியவர் தான்! போற்றுதலுக்குத் தகுந்தவர் தான். இதில் சிறிதும் ஐயமில்லை.

இதுவரை புதுமைப்பித்தன் குணங்களைக் கூறினேன்; அவரது குற்றங்களையும் எடுத்துக்கூற வேண்டியது என் கடமை. அப்படியானால் தான் புதுமைப்பித்தனைப் பற்றி ஒரு சரியான முடிவுக்கு வாசகர்கள் வரமுடியும்.

சென்ற இதழ் 'சரஸ்வதி'யில் புதுமைப்பித்தன் படைப்புகளின் சிறப்பைக் கூறினேன். இனி அவரது எழுத்துக்களிலும், தத்துவ விசாரத்திலும் உள்ள குறைகளைக் காண்போம்.

புதுமைப்பித்தனை நான் ஒரேடியாகத் தூக்கி வைத்து எழுதியிருப்பதாக என்னிடம் ஒரு நண்பர் கூறினார்! எனக்குக் கொஞ்சம் கோபம் வந்தது.

புதுமைப்பித்தனை ஒரு சிலர் ஒரேடியாகக் குழியை வெட்டி இறக்கிப் பார்க்கிறார்கள். நான் அப்படிச் செய்ய இயலாது. புதுமைப்பித்தனுக்கு உரித்தான மதிப்பை நாம் வழங்கத் தவறக்கூடாது. அவரது குறைகளையும் நான் மூடிமறைக்க விரும்பவில்லை. 'அடுத்த இதழ் வரும்வரை பொறுத்திருந்து முடிவு சொல்லுங்கள்' என்றேன் நான்.

புதுமைப்பித்தன் இலக்கியங்களிலுள்ள முக்கிய ஊனம், அவரது தத்துவ விசாரம் தான்.

மனித வாழ்வைப் பற்றியும் கலை இலக்கியத்தைப் பற்றியும் அவர் கொண்டிருந்த கருத்துக்கள் விபரீதமானவை; விசித்திரமானவை, தவறானவை.

புதுமைப்பித்தன், கலை, கலைக்காகவே! என்னும் கொள்கையுடையவர்.

'மனித குலம் முன்னேறும்; மனித சமுதாயம் வளர்ந்து, அக வாழ்விலும், புறவாழ்விலும் மேம்பட்டுத் திகழும்' என்னும் கொள்கையில் அவருக்கு நம்பிக்கை கிடையாது.

'மனிதன்! என்ன கம்பீரமான வார்த்தை!' என்று நாவலிக்கிறார் மாக்ஸிம் கார்க்கி.

'மனிதன் – அவனைப் போல் அசட்டுத்தனமான பிரகிருதிகள் கிடையாது. மனிதன் புழு!' என்று ஏசுகிறார். புதுமைப்பித்தன், நொந்து போன உள்ளத்திலிருந்து வந்து விழும் வெம்பல் வார்த்தைகள் இவை! ஆம்; மனிதனைச் சிறுமைப்படுத்துவதோடு, தன்னையும் சிறுமைப்படுத்திக் கொள்ளும் வார்த்தைகள்! (ஆனால் இதை அவர் உணரவில்லை)

'என் கதைகளில் ஒவ்வொன்றும் ஒரு விவகாரத்தைப் பற்றியதாக இருக்கும். ஆனால் **என் கதைகளின் பொதுத் தன்மை நம்பிக்கை வறட்சி' என்கிறார் புதுமைப்பித்தன்.**

புதுமைப்பித்தன் படைப்புகளில் மிகவும் குணக்கேடான அம்சம் இந்த நம்பிக்கை வறட்சிதான், தன்னம்பிக்கையின்மைதான்.

'பொன்னகரம்' என்ற கதையில், மில் கூலியான அம்மாளு சீக்காய்க்கிடக்கும் கணவனுக்குக் கஞ்சி வார்க்க, தன் கற்பை முக்கால் ரூபாய்க்கு விற்கிறாள்; புதுமைப்பித்தன் இந்த

'விவகாரத்தைப்' படம் பிடித்துவிட்டு, ''கற்பு, கற்பு'' என்று கதைக்கிறீர்களே, இதுதான் ஐயா, பொன்னகரம்! என்று கதையை முடிக்கிறார்.

"தொழிலாளிப் பெண்கள் சர்வசாதாரணமாகக் கற்பைவிலை பேசுகிறார்கள்" என்னும் தவறான எண்ணத்தைத்தான் இந்த கவிதை வாசகர்களுக்கு உண்டாக்கும்.

வறுமையின் கோரப்பிடியில் சிக்கி, கற்பை விற்கும் தொழிலாளப் பெண்கள் சிலர் உண்டு. எல்லா தொழிலாளப் பெண்களுமே மானத்தை விலை பேசக்கூடியவர்களா? கொடிய அடக்கு முறையிலும், போலீஸ் சித்திரவதையிலும் தலைநிமிர்ந்து நின்று, கண்ணின் கருமணிப்போல, தமது கற்பைக் காக்கும் ஆயிரக் கணக்கான தொழிலாளப் பெண்மணிகள் இல்லையா? வெள்ளையன் ஆட்சியை ஒழிக்கவும், உள்நாட்டுக் கொள்ளையன் சுரண்டலை ஒடுக்கவும் நூற்றுக்கணக்கான பாட்டாளிப் பெண்கள் கோவையிலும் மதுரையிலும் பம்பாயிலும் கான்பூரிலும் வீரப் போராட்டங்கள் நிகழ்த்தித் தமது இன்னுயிரையும், தமது கணவன், மகன், சகோதரன், தந்தை ஆகியோரின் விலை மதிக்க வொண்ணா வாழ்வையும் தியாகம் செய்யவில்லையா? ஆனால், பாவம் புதுமைப்பித்தன் மனிதனின் சிறுமைகள், தப்பிதங்களைத்தான் பார்க்கிறார். மனிதனின் பெருமைகளை, வெற்றிகளை அவரால் பார்க்க முடியவில்லை. அவருடைய வாழ்க்கை தத்துவம் அவ்வளவு குருட்டுத் தனமாக இருக்கிறது; அவரது இலக்கியப் பார்வை அவ்வளவு மழுங்கலாக, ஒரு பக்கப் பார்வையாக, குறுகிக் கோணியதாக இருக்கிறது.

'மனித இயந்திரம்' என்னும் கதையில் வர்த்தகக் குமாஸ்தா மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வாழ்வைச் சித்தரிக்கிறார் புதுமைப்பித்தன். வாழ்க்கையில் குட்டுப்பட்டுக் குட்டுப் பட்டு நொந்துபோன மீனாட்சி சுந்தரம், சிறிது கடைப்பணத்துடன் வெளியூருக்கு ஓடிப் போக முனைகிறார். ஆனால் ரயிலடியில் ஒரு போலீஸ்காரரைக் கண்டதும் அவரது திட்டம் தவிடுபொடியாகி விடுகிறது. திரும்பவும் வாலைக் குழைத்துக் கொண்டு முதலாளியின் சேவகத்திற்குத் திரும்பி விடுகிறார்!... தமது கதாபாத்திரங்களின் தோல்வியை, வீழ்ச்சியைப் படம் பிடிப்பதில் புதுமைப்பித்தனுக்கு அளவு கடந்த ஆனந்தம்!

வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க வேண்டும் என்கிறார் புதுமைப்பித்தன். ஆனால் அவருடைய கதாபாத்திரங்கள் வாழ்வை, உண்மையை தைரியமாக நேர் நின்று நோக்குவதில்லை; எதிர்த்துப் போராடுவதும் இல்லை; வாழ்க்கையிலிருந்து தப்பி ஓடுவதுதான், ஏங்கி ஏங்கிப் பெருமூச்சு விடுவதுதான் அந்தப் பாத்திரங்களின் அலுவலாக இருக்கிறது.

இதுதான் புதுமைப்பித்தன் எழுத்துக்களிலுள்ள முரண்பாடு; அவருடைய தத்துவம் ஏங்கி ஏங்கிப் பெருமூச்சுவிடும் மத்திய தர வர்க்கத்தின் கையாலாகாத தத்துவம்! பாட்டாளி வர்க்க உணர்வு அற்ற படிப்பாளியின் தத்துவம்!

'வாழ்க்கையைப் பார்த்து எழுதுவேன்; ஆனால் வாழ்வின் இருண்ட பகுதிகளையும் வறண்ட உள்ளங்களையும் இலக்கியச் சிருஷ்டியாக்குவதே என் குறிக்கோள்'. இதுதான் புதுமைப்பித்தனின் பிடிவாதமான இலக்கியக் கண்ணோட்டம். இந்த வறட்டுப் பிடிவாதமும், வக்கரித்த இலக்கியத் தத்துவமும் பரிதாபத்திற்குரியன; முற்போக்காளர்களின் கண்டனத்திற்கு முற்றிலும் ஏற்றன. 'மக்களுடைய முன்னேற்றத்திற்காகவே கலை' என்னும் இலட்சியமுடைய எழுத்தாளரும், வாசகரும் இதை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் என்பது திண்ணம்............

புதுமைப்பித்தன் ஒரு தனி மனிதவாதி (individualist) அதாவது, தன் மனம்போன வாக்கில் ஒரு பொருளைப் பற்றி எழுதத் தனக்குப் பரிபூரண உரிமை உண்டு என்று வாதம் செய்பவர். அவர் அழகைப்பற்றியும் எழுதுவார்; ஆபாசத்தைப் பற்றியும் எழுதுவார்; எதையும், எப்படியும் எழுதுவார்; ஒருவரும் அவரைக் குறைக்கூறக் கூடாது, கண்டிக்கக்கூடாது! **தனி மனிதவாதிகளுக்குக் கும்பல் பிடிக்காது; கூட்டம் பிடிக்காது; மக்களுடைய கூட்டுச் சக்தியிலும், உழைப்பிலும், இயக்கத்திலும் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது. தனிமனித வாதிகளுக்குத் துணை சுத்த அறிவும், சுத்த அகங்காரமும் தான்!**

புதுமைப்பித்தன் தனி மனிதவாதி மட்டுமல்ல, அவர் ஒரு சந்தேகவாதி (கிரீஸிஷீஃமீ வீநீ)அவருக்கு கடவுள் மீது சந்தேகம். மனிதன் மீதும் சந்தேகம்; இயற்கையின் மீது சந்தேகம், விஞ் ஞானத்தின் மீதும் சந்தேகம்; பாஸிஸத்தின் மீதும் சந்தேகம்; கம்யூனிஸத்தின் மீதும் சந்தேகம். நம்பிக்கை வறட்சியை

அடித்தளமாகக் கொண்டவர்களுக்கு யார்மீதும் எதன் மீதும் சந்தேகம் ஏற்படுவது இயல்புதானே?

சுருங்கச் சொன்னால், புதுமைப்பித்தன் ஒரு கருத்து முதல்வாதி (Idealist) கருத்து முதல்வாதம் முற்றிப் பழுத்த அராஜவாதமும் அவரது படைப்புகளில் காணப்படுகிறது.

புதுமைப்பித்தன் சரித்திரத்திலும் பொருளாதாரத்திலும் பி.ஏ. பட்டம் பெற்றிருந்தாலும், சமூக விஞ்ஞானமுறைப்படி சரித்திரத்தையோ, பொருளாதாரத்தையோ கற்றதில்லை. எனவே, தவறுகளை செய்தாலும் மனிதன் படிப்படியாக உறுதியாக கம்பீரமாக எப்பொழுதும் முன்னேறிக் கொண்டிருக்கிறான்; வானுயர வளர்ந்தோங்கிக் கொண்டிருக்கிறான் என்னும் தத்துவஞானமும், சரித்திர உணர்வும் அவருக்கு இல்லை. இதனால்தான் 'கலை கலைக்காகவே' என்னும் பிற்போக்குக் கொள்கையிலிருந்து அவரால் மீளமுடியவில்லை.

புதுமைப்பித்தனின் இலக்கிய வாழ்வு – அவர் எழுதிக் கொண்டிருந்த காலம் (1933 முதல் 1948 வரை) 15 ஆண்டுகள்; அதாவது அவரது இலக்கிய சேவை 27ஆம் வயதில் தொடங்கி 43ஆம் வயதின் முற்பகுதியில் முடிவுற்றிருக்கிறது.புதுமைப்பித்தனைப் பத்திரிகை உலகிற்கு இழுத்து வந்தவர் சிந்தனையாளர் வ.ரா. (வ.ராமசாமி) என்பது வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும் வ.ரா. மகாகவி பாரதியின் பரமானந்த சீடர்; வாழ்க்கையிலும், மக்களிடத்தும் பெரு நம்பிக்கை கொண்டவர்; சிறந்த சீர்திருத்தவாதி.

அழுகுணிச் சித்தர்

வ.ரா. வால் பத்திரிக்கைத் துறையில் நுழைந்த ஒருவர் வ.ரா.வுடன் பழகிய ஒருவர் (புதுமைப்பித்தன்) 'கலை கலைக்காகவே!' என்று வாதாடுவதும், 'நம்பிக்கை வறட்சியே என் கதைகளின் குணாம்சம்' என்று துணிந்து கூறுவதும் விந்தையாக இல்லையா? உண்மை என்னவெனில், புதுமைப்பித்தன் 'ஊழியன்' பத்திரிகைக்கு வருமுன்பே, 1933க்கு முன்பே, தமது இலக்கியக் குறிக்கோளை வகுத்துக் கொண்டுவிட்டார்; **அழுகுணிச் சித்தர்** ஆகிவிட்டார்!

1933 முதல் 'ஊழியன்', 'சுதந்திரச்சங்கு', 'தினமணி', 'தினசரி' ஆகிய பத்திரிகைகளில் 12 ஆண்டுகள் அலுவல் பார்த்திருக்கிறார்

புதுமைப்பித்தன். 1945 முதல் 3 ஆண்டுகள் சினிமாத்துறையில் உழைத்திருக்கிறார். இந்தக் காலத்தில் உலக மக்கள் வாழ்விலும், நம் நாட்டு மக்கள் வாழ்விலும் எத்தனையோ புரட்சிகரமான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆயினும் புதுமைப்பித்தனின் இலக்கியப் படைப்புகளில் புரட்சிகரமான மக்களையோ, இயக்கத்தையோ நாம் தெளிவாக, உறுதியாக, திட்டவட்டமாகக் காணமுடியவில்லை ஏன்?

இதற்கு முக்கிய இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று; 'கலை வேறு; அரசியல் வேறு' என்று புதுமைப்பித்தன் கருதினார். இதன் அடிப்படையாகத்தான் 'கலை கலைக்காகவே' என்னும் கொள்கை அவருள்ளத்தில் வேரூன்றியது. இரண்டு புதுமைப்பித்தன் தொழில் நிலைமையும் பொருளாதார நிலையும்.

இந்த இரு காரணங்களில் புதுமைப்பித்தன் வாழ்க்கை நிலை (அவரது வேலை; சம்பளம், ஓய்வு ஆகியவை) அவரைப் பெரும்பாலும் பின்னுக்கு இழுத்தன என்று கூற வேண்டும்.

அந்தக் காலத்தில் 12 ஆண்டுகள் ஒருவருக்குத் தினசரிப் பத்திரிகையில் அலுவல் என்றால், அது சர்க்கார் சிப்பந்தியைவிட மோசமானது என்றுதான் சொல்ல வேண்டும்.

சர்க்கார் சிப்பந்திக்காவது மாதா மாதம் ஒழுங்காகச் சம்பளம் கிடைக்கும். 1933இல் பத்திரிகைத் துறையில் இருந்தவர்களுக்கு அதுவும் கிடையாது.

சம்பளம்தான் ஒழுங்காகக் கிடையாது; வேலை நேரம், வேலை நிர்யணம், வேலை நிரந்தரம் என்றாவது உண்டா? அதுவும் இல்லை.

அந்த நாளில் ஒரு உழைக்கும் பத்திரிகையாளன் (நாள் இதழில் அலுவல் பார்ப்பவன்) இரவும் பகலும் தந்திச் செய்திகளை மொழி பெயர்க்க வேண்டும். 'புரூப்' திருத்த வேண்டும்; எழுதி எழுதிப் பத்திரிகையின் பக்கங்களை நிரப்ப வேண்டும். ஆனால் மாதச் சம்பளம் 40 ரூபாய்கூட (இது என் உத்தேச கணக்கு) உண்மைச் சம்பளம் இதற்கும் குறைவாக இருந்திருக்கும்) ஒழுங்காய்க் கிடைத்திருக்குமோ என்னவோ?

1947 ஆகஸ்டில் சுதந்திரம் வந்த பிறகு, உழைக்கும் பத்திரிக்கையாளர் சங்கம், இயக்கம், கிளர்ச்சி, சட்டம் என்றெல்லாம் ஏற்பட்டு, இன்று உழைக்கும் பத்திரிகையாளர் நிலை ஓரளவு நன்றாயிருக்கிறது.

புதுமைப்பித்தன் 'தினமணியில்' வேலை பார்த்த அந்தக் காலத்தில் (1933 முதல் 1943 வரை) அவருடைய வாழ்க்கை நிலை எவ்வாறு இருந்தது?

அப்பொழுதுதான் புதுமைப்பித்தனுக்கு திருமணம் ஆகியிருந்தது. மனஸ்தாபத்தின் காரணமாக, குடும்பத்தின் ஒட்டுறவை அறுத்துக் கொண்டு, மனைவியுடன் புதுமைப்பித்தன் தன்னந்தனியாக, 'தினமணி'ப் பத்திரிகையை நம்பி சென்னையில் வாழ்க்கை நடத்துகிறார்! குறைந்த சம்பளம், நிறைந்த வேலை; சம்பள பாக்கி; கடன்; மனைவியின் நகைகளை அடகுவைத்தும், விற்றும் வாழ்க்கை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம். இந்த நிலையில் புதுமைப்பித்தனின் நெஞ்சில் கசப்பையும், சலிப்பையும், வெறுப்பையும், நிராசையையும் தவிர வேறு என்ன மிஞ்சி இருக்க முடியும்?

'வேலையுண்டு; வீடு உண்டு' – என்னும் போலிக் கௌரவத்துடன் போலி நிம்மதியுடன் வாழ்ந்தவரும் பெரும்பாலான மத்திய தர மக்களைப் போலவே வாழ்க்கை நடத்தினார் புதுமைப்பித்தன். அரசியல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவோ, அரசியல் போராட்டங்களில் ஈடுபடவோ அவருக்கு தெம்பு இல்லை. 'உள்ள வேலையும் போய்விட்டால், குடும்பத்தை எப்படி நடத்துவது?' என்ற கவலைதான் அவருக்கு. ஆகவே, தந்திச் செய்திகளை மொழி பெயர்ப்பதோடு, அன்றாடப் பத்திரிகைகளைப் படிப்பதோடு அவர் தமது 'அரசியல் நடவடிக்கை'யை நிறுத்திக் கொண்டு விட்டார். 'அரசியல், சிறைவாசம்' இதெல்லாம் நம் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாது' என்று ஒதுங்கிக் கொண்டார் போலும்!

ஒதுங்கும் மனப்பான்மையும், தனிமை மனப்பான்மையும் புதுமைப்பித்தனைத் தனிமனிதவாதியாக்கின.

சுத்த, சுயம்பிரகாச இலக்கியவாதி என்று தம்மை எண்ணிக்கொண்டு அவர் மக்களைவிட்டு விலகியிருந்தார்; மக்களுடைய பிரச்சனைகளைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல்,

தம்மைச் சுற்றிலும் நல்வாழ்வுக்காக மக்கள் இடைவிடாது போராடுவதைக் கண்டு புதிய ஒளி பெறாமல், தன்னைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டிருந்தார் புதுமைப்பித்தன். ஆயினும், வாழ்க்கை அவரைச் சும்மா விட்டுவிடவில்லை. வறுமையும், பற்றாக்குறையும், பசியும், பட்டினியும் அவரை உலுக்கி எழுப்பின. அப்போதைக்கப்போது அவரது அகக்கண்களைத் திறந்தன; அவரது மனச்சாட்சி அவ்வேளைகளில் குமுறி எழுந்தது. அதன் விளைவாகப் 'பக்த குசேலா', 'நாசகாரக்கும்பல்', 'துன்பக்கேணி', 'மனித இயந்திரம்', 'பொன்னகரம்', 'கவந்தனும் காமனும்', 'நிசமும் நினைப்பும்' முதலிய கதைகளை எழுதினார் புதுமைப்பித்தன்.

ஆரம்ப காலத்தில் புதுமைப்பித்தனுக்கு மனசாட்சியின் உறுத்தல் அதிகமாயிருந்தது! அநீதியையும், அக்கிரமத்தையும் அநாகரிகத்தையும் கண்டு மனம் புழுங்கினார் அவர்; வெளிப் பூச்சுக்காரர்களையும், பழமைவாதிகளையும் வெறுத்தார். அவருடைய உள்ளக் குமுறல்களை மேற்கண்ட கதைகளில் நாம் தெளிவாகக் கேட்கிறோம். இதற்காக அவரை நாம் மனமாரப் பாராட்டவும் செய்கிறோம்.

ஆனால் பிற்காலத்தில் அவருடைய மனச்சாட்சியில் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவருடைய மனச்சாட்சியின் கூர்மழுங்க ஆரம்பித்தது. அவருடைய நியாய ஆவேசம் குன்றி வந்தது. சமூக அநீதியைப்பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. கிராமத்துப் பெருந்தனக்காரர்களையும், மிஷின்யுகத்தின் கொடுமைகளையும் கண்டித்தவர் தமது கண்டனத்தை நிறுத்திக்கொண்டார். அதற்குப் பதிலாக 'விபரீத ஆசை', 'கயிற்றரவு', 'காஞ்சனை', 'கட்டிலை விட்டிறங்காக் கதை' போன்ற கதைகளை எழுத ஆரம்பித்தார்!

முதலாளித்துவ – நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு நிலையை விட்டுப் பின்வாங்கி பிற்போக்குச் சக்திகளோடும், கொள்கையோடும் சமரசம் செய்து கொண்டார் புதுமைப்பித்தன். சமரசம் செய்து கொண்டார் என்று சொல்வதைவிட, 'சரணாகதி' அடைந்தார் என்று கூறுவதே பொருந்தும்!

தனிநபர் வாதிகள் இந்த நிலையை எய்துவது இயற்கையே! தனித்தபோக்கு அகம்பாவத்திலும், அழிவிலும்தான் கொண்டு

போய்விடும். இதற்குப் புதுமைப்பித்தன் மட்டும் விதிவிலக்காக முடியுமா என்ன?

சிலர் புதுமைப்பித்தனைப் பாரதியோடு ஒப்பிட்டுப் பார்க்கிறார்கள்; 'பாரதியின் அடியொற்றி நடந்தாரா புதுமைப்பித்தன்?' என்று கேட்டுக் கொண்டு விமர்சனம் செய்கிறார்கள்.

மகாகவி பாரதியோடு புதுமைப்பித்தனை ஒப்பிடுவது தவறு. பாரதி, பாரதி தான்; புதுமைப்பித்தன் புதுமைப்பித்தன் தான்!

அந்த மா கடல் எங்கே? இந்தச் சிற்றாறு எங்கே? அந்த மணி மாளிகை எங்கே? இந்த சிறு சாளரம் எங்கே?

பாரதியின் தத்துவத்திற்கும், புதுமைப்பித்தனின் தத்துவத்திற்கும் ஏணி வைத்தால் கூட எட்டாது.

பாரதி முழு நேர விடுதலை ஊழியர்; 'நாட்டு மக்கள் நலமுற்று வாழவும், நானிலத்தோர் மேனிலை எய்தவும்' அல்லும் பகலும் அயராது உழைத்த தேசபக்தர். 'நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல், இமைப்போதும் சோராதிருத்தல்' என்று எழுத்தாளனுக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த மகாகவி.

பாரதி மனிதனை நேசித்தார்; மனிதனோடு மனிதனாகத் தன்னை இணைத்துக் கொண்டார். மனிதகுல விடுதலைக்காகக் கனவு கண்டார். மானிட சாதியின் சுதந்திரத்திற்காகப் போராடினார். ஒரு புதிய யுகத்தைச் சமைப்பதற்காகத் தமது கவிதையைக் கருவியாக்கினார். கிருதயுகம் எழுகமாதோ! என்று அப்பொன்னு லகத்தை வாழ்த்தி வரவேற்புக் கூறினார்.

பாரதிக்கு பின்வந்த புதுமைப்பித்தன் ஒரு சாதாரண மனிதன்; பாரதியின் ஆதர்சமோ, தத்துவ தரிசனமோ அவருக்குக் கிடையாது. பாரதியைப்போல முழு நேர நாட்டுத் தொண்டனாய் விளங்கப் புதுமைப்பித்தனுக்குத் தெம்பும் திராணியுங் கிடையாது; அதற்கு வேண்டிய மனப்பக்குவமும், சூழ்நிலையும் அவருக்கு இல்லை.

'சித்தெப் பசியாற, செல்லரிக்கும் நெஞ்சாற, மெத்தப் பழங் கதையைப் புத்தி தடுமாறிப் புகன்று வந்த' எத்தனையோ எழுத்தாளர்களில் புதுமைப்பித்தனும் ஒருவர். 'சோகக் கதை என்றால் சோடி ரெண்டு ரூபா! காதல் கதை என்றால்

கை நிறைய தரவேணும்! ஆசாரக்கதை என்றால் ஆளுக்கு ஏற்றதுபோல்; பேரம் குறையாது; பேச்சுக்கு மாறில்லை!' என்று எழுத்தை ஏலம்போட்டு விற்க வேண்டிய நிலையில் இருந்த எழுத்தாளரில் அவரும் ஒருவர்.

இந்த நிலைக்காக நாம் வெட்கமும், துக்கமும், ஆத்திரமும் கொள்ள வேண்டுமே தவிர, புதுமைப்பித்தனை ஒரேடியாகக் குறைகூறிப் பயன் இல்லை.

புதுமைப்பித்தன் ஒரு 'என்.ஜி.ஓ.'வைப் போல் அன்று வாழ்க்கை நடத்தினார். அவருடைய வாழ்க்கையின் எல்லை வட்டம் மிகச் சுருங்கியது. உலகத்தின் இயக்கத்திலிருந்து தன்னைக் கத்தரித்துக் கொண்டு, தான் உண்டு, தன் பேனா உண்டு , தன் புத்தகங்கள் உண்டு என்ற நிலையில் இருந்தவர் அவர்.

அவர் பத்திரிகை ஆபீசுக்கோ, கடை வீதிக்கோ செல்வார்; வருவார். அப்பொழுது மவுண்ட்ரோடு ரவுண்டானாவில், ஜன இயக்கத்தின் மத்தியில் தெருவோரத்தில் ஒரு பிச்சைக்காரன் நிம்மதியாகச் செத்துக் கொண்டிருப்பதைக் காண்பார்; அவன் மீது அனுதாபமும், 'மனிதயந்திர'ங்களின் மீது கசப்பும், நகர நாகரிகத்தின் மீது விரக்தியும் அவருக்கு உண்டாகும். இந்த உணர்ச்சிகளின் விளைவாக 'மகா மசானம்' என்னும் சிறுகதை பிறக்கும்.

அவர் செம்புதாஸ் தெருவில் மாலை நேரத்தில், ஒரு வேசியின் வசைமாரியையும், குமாஸ்தாவின் ஓட்டத்தையும் கேட்டிருப்பார்; பார்த்திருப்பார்; வேசியின் சுயமரியாதை அவர் உள்ளத்தைத் தொட்டிருக்கும். இதன் அடிப்படையில் 'கவந்தனும், காமனும்' என்னும் கதை பிறக்கிறது.

இப்படியாக விபசாரி, ஓட்டல் சிப்பந்தி, பிச்சைக்காரன், வர்த்தகக் குமாஸ்தா, எழுத்தாளன், பத்திரிக்காசிரியன் ஆகியோரைக் கதாப்பாத்திரங்களாகக் கொண்டு தாம் கண்ட வாழ்வை, தமது உள்ளத்து எதிரொலிகளைச் சிறுகதையாக்கியிருக்கிறார் புதுமைப்பித்தன். அவர் காலத்தில் இப்படி எழுதினவர்கள் ஒருவரும் இல்லை; இப்படி எழுதுவது 'இலக்கிய மரபு அல்ல' 'கலை மரபு அல்ல' என்று பெரும்பாலான எழுத்தாளர்கள் கருதினார்கள். பத்திரிகையாசியர்களும்,

பிரசுரகர்த்தர்களும், அவ்வாறே எண்ணினார்கள். இந்தப் பழமைப் பித்தகர்களின் பாதையிலிருந்து விலகி, '**அனுபவத்துக்கு நேர் முரணான விஷயங்களை ஒதுக்கிவிட்டு, நடைமுறை விவகாரங்களைப் பற்றி எழுதுவதில் கவுரவக் குறைச்சல் ஒன்றுமில்லை' என்று துணிந்து எழுதியவர் புதுமைப்பித்தன்.** இது தமிழ்ச் சிறுகதையின் சரித்திரத்தில் ஒரு படி முன்னேற்றம் அல்லவா? முற்போக்கு அல்லவா? இதை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டாமா? புதுமைப்பித்தனுக்கு உரித்தான பாராட்டை மனம் உவந்து வழங்க வேண்டாமா?

புதுமைப்பித்தன் ஒரு முரண்பாட்டுக் குவியல், அவர் எழுத்துக்களில் முரண்பாடுகள் உண்டு; ஒப்புக்கொள்கிறேன்.

ஆனால், இந்த முரண்பாடுகள் அவரது வாழ்விலும், தத்துவத்திலும் உள்ள முரண்பாடுகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

புதுமைப்பித்தனுக்கு வரையறைகள் (Limitations) உண்டு. ஒரு குறிப்பிட்ட காலத்தில், ஒரு குறுகிய எல்லை வட்டத்திற்குள் இருந்து கொண்டு ஒரு எழுத்தாளன் என்ன சாதித்திருக்கிறான். அந்தச் சாதனையால் தமிழ் இலக்கியத்திற்கு லாபமா, நஷ்டமா என்பதைத்தான் நாம் கவனிக்க வேண்டும்.

'உன்னுடைய எல்லை வட்டத்தை நீ ஏன் மீறவில்லை? நீ ஏன் சோஷலிஸ்டாகவோ, கம்யூனிஸ்டாகவோ ஆகவில்லை?' என்று கேட்பதும், மனத்தில் இருத்திக்கொண்டு விமர்சனம் செய்வதும் சரியில்லை.

அந்தக் காலத்தில் மார்க்ஸிஸ்டுகள் கவிதை பாடியிருக்கலாம்; கதை எழுதி இருக்கலாம். ஆனால் அந்தச் சிருஷ்டிகள் 'மாஸேதுங்' கூறியது போல 'Poster & Slogan Style' இல் (சுவரொட்டி – முழக்கங்கள்போல) இருந்தனவே தவிர, அவற்றில் என்ன கலை அம்சம் இருந்தது? கலையம்சம் இல்லாத எழுத்துக்கள் எத்தனை நாள் நீடித்து நிற்கும்?

புதுமைப்பித்தனுக்கு மார்க்ஸியக் கண்ணோட்டம் இல்லை; ஆனால் மனிதாபிமானம் இருந்தது. ஏழை எளியவர்களின் துன்பம் துயரங்களையும் இந்த யுகத்தின் போலிப் பண்பாட்டையும், ஒழுக்கத்தையும் அம்பலப்படுத்த வேண்டும்

என்ற ஆர்வமும், துணிச்சலும் இருந்தன. இத்தனைக்கும் மேலாக அற்புதமான கலைத் திறமை இருந்தது.

புதுமைப்பித்தனுக்கு ஜனநாயக உணர்வும், தேச பக்தியும் இருந்தன. ஆனால் அவை உள்ளடங்கியிருந்தன; பாரதியைப் போல் குமுறிக் கொந்தளித்து, மடைதிறந்த வெள்ளமாகப் பெருகவில்லை.

ஜனநாயக உணர்வும், தேசபக்தியும் இல்லாவிட்டால், ‘நாசகாரக் கும்பல்’ என்னும் சிறுகதையையும்,’அன்னையிட்ட தீ’ என்னும் நாவலையும் அவரால் எழுதியிருக்க முடியுமா?

புதுமைப்பித்தனுடைய ஜனநாயக உணர்வும், தேசபக்தியும் திசைமாறிப் போயிருக்கலாம்; வக்கரித்துப் போயிருக்கலாம். இவற்றைச் சரியான திசை வழியில் செலுத்த இடதுசாரிகளாகிய நாம் அன்று என்ன முயற்சிகள் எடுத்துக்கொண்டோம்? புதுமைப்பித்தன் நூல்களை முறையாகப் படித்தோமா? நமது பத்திரிகைகளில் அவர் எழுத்துக்களை விமர்சித்தோமா? அவருடன் நெருங்கிப் பழகி, நேர்மையாக விமர்சனம் செய்து, அவருக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தோமா?

இல்லை. நாம், நமது கடமையில் தவறிவிட்டோம் என்பதை வருத்தத்துடன் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.

அன்று புதுமைப்பித்தனுக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க இடதுசாரிகள் முன்வரவில்லை. எனவே, அவர் வலதுசாரிகள் முகாமில் இருந்தார். பிற்போக்குத் தத்துவங்களுக்கு இரையானார்.

‘முதலாளித்துவத்தின் வலையில் வீழ்ந்துவிட்ட ஒரு சிறந்த கலைஞன்’ என்று தான் நான் புதுமைப்பித்தனைக் கருதுகிறேன்.

புதுமைப்பித்தன் ‘தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும்‘ என்ற உண்மையைப் படம் பிடித்தார். ஆனால் ‘தருமம் மறுபடி வெல்லும்‘ என்னும் மகத்தான சரித்திர உண்மையைச் சித்தரிக்கவில்லை. இதுதான் அவர் எழுத்துக்களிலுள்ள முக்கிய குறைபாடு.

புதுமைப்பித்தன் எழுத்துக்களில் ‘புதுமையும்‘, ‘பித்தமும்‘ கலந்திருக்கிறது. அவருடைய சீக்குப்பிடித்த தத்துவ விசாரத்தை

நம்பிக்கை வறட்சியை தனிமனித வாதத்தை இருண்ட கண்ணோட்டத்தை நாம் தள்ளிவிட வேண்டும். இந்த 'பித்தம்' தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு உதவாது. அவருடைய கற்பனை, மனோதர்மம், கலைத்திறன், நடையழகு, சொல்லாட்சி, கட்டுக்கோப்பு, உயிர்த்துடிப்பு தமிழ் எழுத்தாளர்களுக்கு வேண்டும். இதுதான் நாம் கைக்கொள்ள வேண்டிய 'புதுமை'.

புதுமைப்பித்தனுடைய படைப்புகள் தமிழ் இலக்கியக் கருவூலத்தின் ஒரு பகுதியாகும்.

புதுமைப்பித்தன் தமிழ் அன்னையின் அருந்தவப் புதல்வர்களில் ஒருவர்.

புதுமைப்பித்தனுக்கு நாம் அளிக்கும் மரியாதை தமிழ், மொழிக்கும், இலக்கியத்துக்கும் அளிக்கும் மரியாதையாகும்.

வீர வணக்கம் செலுத்த வேண்டாம்

வீர வணக்கம் செலுத்த வேண்டாம் எனும் கட்டுரையில் தி.க.சி. கூறுகிறார் இதோ;

புதுமைப்பித்தன் மறைந்து ஒன்பது ஆண்டுகள் உருண்டோடி விட்டன.

புதுமைப்பித்தன் நினைவு நாளில், அவருடைய சிறுகதைகளையும், கட்டுரைகளையும், கவிதைகளையும், பிறவற்றையும் ஒரு தரம் மீண்டும் திரும்பிப் பார்க்கும்போது, தமிழ் இலக்கியக் கருவூலத்தின் ஒளிமுத்துக்களாயுள்ள அவரது படைப்புகளை எண்ணி எண்ணி என்னுள்ளம் பூரிப்படைகிறது. தமிழ் இலக்கியத்துக்கு அவர் ஆற்றியுள்ள அருந் தொண்டுக்காக என் இதயம் அஞ்சலி செய்கிறது.

நான் இந்தப் புதுமைப்பித்தன் நினைவுநாளில் அவருக்கு மனப்பூர்வமாக வணக்கம் செலுத்துகிறேன். ஆனால் வீரவணக்கம் செலுத்த விரும்பவில்லை!

புதுமைப்பித்தன் தமிழ் சிறுகதை எழுத்தாளர்களிலேயே தலை சிறந்தவர் என்றும், ஆசிய எழுத்தாளர்களின் 'சீனத்து மாக்ஸிம் கார்க்கி' எனப் போற்றப்படும் லூசுனுக்குச் சமமானவர் என்றும் சில அன்பர்கள் புதுமைப்பித்தனுக்கு வீர வணக்கம் செலுத்துகின்றனர்.

புதுமைப்பித்தனைப் புறக்கணிப்பது என்பது எவ்வளவு தவறோ அவ்வளவு தவறு புதுமைபித்தனுக்கு வீர வணக்கம் செலுத்துவதும், இரண்டும் உண்மையை மறந்த சாமியாட்டம்தான்; வெறித்தனம் தான்!

தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்களிலேயே தலைசிறந்தவர் என்று என்னால் புதுமைப்பித்தனை ஏற்க முடியவில்லை.

கு.ப.ராஜகோபாலன், பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமணியன் ஆகியோர்களின் கதைகளைப் படித்துவிட்டு, புதுமைப்பித்தன் கதைகளையும் மீண்டும் படித்த பிறகு இவர்கள் எல்லாம் பல அற்புதமான கதைகள் எழுதி சிறப்பை அளித்திருக்கிறார்கள் என்றே சொல்லத் தோன்றுகிறது.

புதுமைப்பித்தனின் சிறுகதைகளுக்கு உலக அந்தஸ்து உண்டென்றால், கு.ப.ரா. பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியன் முதலியோரின் கதைகளுக்கும் நிச்சயமாக உலக அந்தஸ்து உண்டு. இவர்களுக்கும், இவர்களைப் போன்று சிறந்த கலைஞர்களும் சேர்ந்தே தமிழ்ச் சிறுகதைத் துறையின் புது மலர்ச்சியை உண்டாக்கினார்கள். எனவே, உரித்தானவர்க்கும், தகுதியானவர்க்கும் சேர வேண்டிய புகழை, புதுமைப்பித்தன் ஒருவருக்கு மட்டுமே அளித்துத் தனிநபர் வழிபாடு செய்வது வீர வணக்கம் செய்வது நீதியோ நேர்மையோ ஆகாது அல்லவா?

'தலைசிறந்த தமிழ் சிறுகதை எழுத்தாளர்களில் புதுமைப்பித்தன் ஒருவர்' என்பதை யாரும் மறுப்பாரில்லை, மறுக்க இயலாது.

தமிழ் சிறுகதை எழுத்தாளர்களிலேயே தலைசிறந்தவர் இவர் தான் என்னும்போது, கு.ப.ரா., பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமணியன் முதலானோர் எழுத்துக்களிலே தனித்தன்மையும், கலைத்தன்மையும் இல்லையா, ஐயா? என்று எனக்குத் திருப்பிக் கேட்கத் தோன்றுகிறது. புதுமைப்பித்தன் எழுத்துக்களிலே உருவமும், கலையம்சமும், உயிர்த் துடிப்பும் மிகச்சிறப்பாக இருக்கின்றன என்றால் கு.ப.ரா., பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமணியன் ஆகியோருடைய எழுத்துகளிலும் இவை மிகச் சிறப்பாக இருக்கின்றன.

புதுமைப்பித்தன் சாகாவரம் பெற்ற சில சிறுகதைகள் எழுதியிருக்கிறார் என்றால், ஏனையோரும் அவ்விதமே எழுதியிருக்கிறார்கள்.

இதில் சுவையான செய்தி என்னவென்றால், மேற்கூறிய உண்மையைப் புதுமைப்பித்தனே ஒப்புக்கொண்டிருக்கிறார். ஆனால் புதுமைப்பித்தன் மனமுவந்து ஒப்புக்கொண்டிருக்கும் இவ்வுண்மையை, புதுமைப்பித்தனுக்கு வீரவணக்கம் செலுத்துவோர் மறைத்துவிடுகிறார்கள். புதுமைப்பித்தன் மீதுள்ள பற்று, வெறியாகிவிடுவதன் விளைவு இது!

நமது வசதிக்காக நமக்குப் பிடித்தமானவர் என்பதற்காக நமது தமிழ் நாட்டுக்காரர் என்பதற்காக நாம் புதுமைப்பித்தனை ஏற்றிப் போற்றி விமர்சனம் செய்தால், வீரவணக்கம் செய்தால், தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு மிகுந்த இன்னல் வரும் என்பதே என் கருத்து.

புதுமைப்பித்தனின் இந்த நினைவு நாளில் நாம் அவருக்குப் பணிவன்புடன், மனதார வணக்கம் செய்வோம். ஆனால் வீர வணக்கம் வேண்டாம்! (சரஸ்வதி, ஆகஸ்ட் 1957)

புதுமைப்பித்தனைப் பற்றி இன்னும் கொஞ்சம்

புதுமைப்பித்தனைப் பற்றி இன்னும் கொஞ்சம் என்று தொடர்ந்து தி.க.சி. எழுதுகிறார்.

'சரஸ்வதி' புதுமைப்பித்தன் மலரில் நான் எழுதிய 'வீர வணக்கம் வேண்டாம்!' என்ற கட்டுரை சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கிறது.

நான், புதுமைப்பித்தனுக்கு மிகப்பெரிய அநீதி இழைத்துவிட்டதாகச் சில நண்பர்கள் என் மீது கோபப்படுகிறார்கள்! சிலர் வருத்தப்படுகிறார்கள். சிலர் அனுதாபப்படுகிறார்கள். சொல்ல வந்ததைத் துணிச்சலுடன் சொல்லியதற்காக, சிலர் என்னைப் பாராட்டவும் செய்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில் கருத்து இதுதான். 'சரஸ்வதி' தலையங்கத்தில் காணப்படும் இந்த முக்கியமான பகுதியை நான் ஏற்றுக்கொள்கிறேன். **'கலகக்காரர்தான் ஆனால் புரட்சிக்காரரில்லை புதுமைப்பித்தன்.' நெஞ்சிலே கனலை மூட்டிவிட்டு, பிறகு நிராசையை நிரப்புகிறவரும் புதுமைப்பித்தன்தானே!** *சமுதாயப் பிரச்சினைகளை அன்றைய இலக்கியச் சம்பிரதாயம் பாராமல் தமிழிலக்கியத்தில் "போட்டு உடைத்து" நாட்டைக் கலக்கியவர்*

புதுமைப்பித்தன் என்றபோதிலும் அந்தப் பிரச்சனைகளை எழுப்பிய பாவனையிலே முறையிலேயே அவரது திருஷ்டிகளும், முடிவுகளும் எதிரொலிக்கின்றன. அவற்றின் விளைவு? ஆம்! **நம்பிக்கை வறட்சி! விரக்தி! இந்த அம்சத்தையும் நமது எழுத்தாளர்கள் நன்கு பரிசீலிக்க வேண்டும்.**

புதுமைப்பித்தன் நினைவுநாளில், நாம் அவருடைய முற்போக்கு அம்சத்தை எடுத்துக்கூறுவதுடன், பிற்போக்கு அம்சத்தையும் ஒருங்கே எடுத்துக்கூறவேண்டும்.

புதுமைப்பித்தன் நல்ல இலக்கியத்தையும் எழுதியிருக்கிறார்; நசிவு இலக்கியத்தையும் எழுதியிருக்கிறார்.

புதுமைப்பித்தன் எழுத்துக்களிலே விஞ்ஞானமும் இருக்கிறது. அஞ்ஞானமும் இருக்கிறது.

புதுமைப்பித்தன் எழுத்துக்களில் அமுதமும் உண்டு; நஞ்சும் உண்டு.

புதுமைப்பித்தனின் யதார்த்தவாத சிருஷ்டிகளை வரவேற்க வேண்டும்; பழைமைவாதப் படைப்புகளை ஒதுக்கித் தள்ள வேண்டும்.

புதுமைப்பித்தனுடைய வெற்றிகளைக் கண்டு கும்மாளம் போட்டால் போதாது; அவருடைய தோல்விகளையும் மக்களுக்கு துணிச்சலுடன் எடுத்துரைக்க வேண்டும். சுருங்கச் சொன்னால், புதுமைப்பித்தனைப் பற்றி ஒரு சமநிலையான விமர்சனத்தை விஞ்ஞான ரீதியான விமர்சனத்தை விருப்பு, வெறுப்பு அற்ற விமர்சனத்தை மக்களுக்கு நாம் வழங்க வேண்டும்.

ஆனால், இன்று பெரும்பாலும் நாம் அப்படிச் செய்வதில்லை, நம்முடைய எழுத்துக்களிலும் பேச்சுக்களிலும் புதுமைப்பித்தனுக்குப் புகழ்பாடும் பண்பு – வீரவணக்கம் செய்யும் பண்பு வளர்ந்து கொண்டே செல்கிறது. புதுமைப்பித்தனின் எழுத்துக்களிலுள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காண்பிக்கும் பண்பு வளரவில்லை. இந்தப் போக்கு, முற்போக்கு இலக்கிய வளர்ச்சிக்கு கேடுவிளைவிக்கும்.

உதாரணமாக, ‘துன்பக்கேணி’ ‘நாசகாரக்கும்பல்’, ‘பக்த குசேலா’ ‘கவந்தனும் காமனும்’ ‘இது மிஷின் யுகம்’ ‘மனித

யந்திரம்' 'சங்குத் தேவனின் தர்மம்' 'காலனும் கிழவியும்' 'பொன்னகரம்' 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' 'நியாயம்தான்' ஆகிய கதைகளை எழுதிய முற்போக்குப் புதுமைப்பித்தனைப் பற்றி நாம் நிரம்பப் பேசுகிறோம்.

'விபரீத ஆசை' 'கயிற்றரவு' 'இலக்கிய மம்மநாயனார் புராணம்' 'கட்டிலை விட்டிறங்காக் கதை' 'புரட்சி மனப்பான்மை' 'கோபாலபுரம்' ஆகிய கதைகளை எழுதிய பிற்போக்குப் புதுமைப்பித்தனைப் பற்றி பேச அஞ்சுகிறோம். மக்களுக்கு புதுமைப்பித்தன் மீது இருக்கும் மதிப்பும் குறைந்து விடுமோ என்று பயப்படுகிறோம்.

'காஞ்சனை' 'கபாடபுரம்' 'பிரம்ம ராஷஸ்' 'வேதாளம் சொன்ன கதை' 'ஞானக்குகை' ஆகிய கதைகளை எழுதியவர் இன்னொரு வகையான புதுமைப்பித்தன். மாயாவதியான புதுமைப்பித்தன். இவரைப் பற்றியும், நாம் வாய் திறக்கக் கூசுகிறோம்.

'சாபவிமோசனம்' 'அன்று இரவு' 'அகல்யா' ஆகிய புராணக் கதைகளைப் புது மெருகிட்டு எழுதிய புதுமைப்பித்தனைப் பற்றியும் நாம் வெளியே பேசுவதில்லை.

'செல்லம்மாள்' 'நினைவுப்பாதை' 'சித்தி' 'சிவ சிதம்பரச் சேவகம்' ஆகிய விரக்தி செறிந்த கதைகளை எழுதிய 'துறவு' புதுமைப்பித்தனைப் பற்றியும் நாம் மக்களக்குத் துல்லியமாக எடுத்துரைப்பதில்லை.

புதுமைப்பித்தன் ஒரு முரண்பாட்டுக் குவியல். அதாவது, ஒரு புதுமைப்பித்தனுக்குள் எத்தனையோ புதுமைப்பித்தர்கள் இருக்கிறார்கள். நம்பிக்கை வறட்சியைத் தமது கதைகளின் ஆதாரச் சுருதியாகக் கொண்ட புதுமைப்பித்தன் **சிறந்த இலக்கியத்தையும் படைத்திருக்கிறார். சீர்கெட்ட இலக்கியத்தையும் படைத்திருக்கிறார். இந்த முழு உண்மையை மக்களுக்கு நாம் எப்பொழுதும் எடுத்துச் சொல்லிக்கொண்டேயிருக்க வேண்டும்.**

புதுமைப்பித்தன் எழுத்துக்களிலே பழமையும் இருக்கிறது; புதுமையும் இருக்கிறது. காலத்திற்கு ஒத்த கருத்தோட்டமும் இருக்கிறது. **காலத்திற்கு ஒவ்வாத கருத்தோட்டமும் இருக்கிறது.**

புதுமைப்பித்தனுடைய 'கலை கலைக்காகவே' என்னும் கருத்தோட்டம், காலத்திற்கு ஒத்த கருத்தோட்டமும் இருக்கிறது. காலத்திற்கு ஒவ்வாத கருத்தோட்டமும் இருக்கிறது.

புதுமைப்பித்தனுடைய 'கலை கலைக்காகவே' என்னும் கருத்தோட்டம், காலத்திற்கு ஒவ்வாத கருத்தோட்டம், பழமைவாதக் கருத்தோட்டம், பித்துப்பிடித்த கருத்தோட்டம். இதன் விளைவாக, 'விபரீத ஆசை' 'கயிற்றரவு' ஆகிய பிற்போக்குக் கதைகளை அவர் எழுதியிருக்கிறார்.

கலைஞனுக்குப் பிடித்தமான பொருளைப் பற்றி, பிடித்தமான வகையில் எழுத உரிமை உண்டு. அது கலைஞனின் சுதந்திரம் ஆகும். அந்தச் சுதந்திரத்தை யாரும் கட்டுப்படுத்தக் கூடாது என்பது 'கலை கலைக்காகவே' என்னும் சித்தாந்தத்தின் அடிப்படைக் கருத்து. இந்தக் கருத்திலிருந்து புதுமைப்பித்தன் இறுதிவரை மாறவில்லை.

ஆனால், புதுமைப்பித்தன் 'கலை கலைக்காகவே' என்ற முகாமில் இருந்தபோதிலும், இலக்கியத் துறையில் புதிய பரிசோதனைகளைச் செய்தார். ஐரோப்பிய இலக்கியங்களுக்கு இணையாகத் தமிழ் இலக்கியம் செழிக்க வேண்டும் என்னும் கருத்தினால் தமிழ்ச் சிறுகதையின் பரப்பையும் ஆழத்தையும் அதிகப்படுத்தினார். புதிய புதிய விஷயங்களைக் கையாண்டார். புதிய புதிய பாத்திரங்களை நமக்கு அறிமுகம் செய்து வைத்தார். இதனால் 1930க்குப் பிறகு தமிழ்ச் சிறுகதை உலகில், ஓர் உயிர்ப்பும், உணர்வும் உண்டாயிற்று.

தமிழ்ச் சிறுகதை உலகில், இந்த உயிர்ப்பையும் உணர்வையும் புதுமைப்பித்தன் மட்டும் தோற்றுவித்து விடவில்லை. அவருடைய சகாக்களான கு.ப.ராஜகோபாலன், ந.பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியம், பி.எஸ்.ராமையா, த.நா. குமாரஸ்வாமி முதலியோருக்கும் இதில் முக்கிய பங்கு உண்டு. இந்த உண்மையை கு.ப.ரா., ந.பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்பிரமணியம் ஆகியோரின் சிறுகதைகளை விருப்பு வெறுப்பு இன்றிப் படிப்பவர்கள் மட்டுமே உணர முடியும்.

(சரஸ்வதி, ஆகஸ்டு 1957)

இவ்வாறு துணிச்சலுடன் புதுமைப்பித்தனை விமர்சித்தவர் தி.க.சி.

கொடிய வறுமையில் வாடிய போதும்

எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா

இறைவா! இறைவா! இறைவா!

என்று *25.2.1921* சுதேசமித்திரனில் பாரதி கீதம் இசைத்து மகிழ்ந்தார்.

ஆனால் புதுமைப்பித்தனுக்கு ஓரளவு வசதியிருந்தும் தனது கதைகளில் துன்பக்கேணியையல்லவா காட்டுகிறார். **படைப்பாளிக்கு நம்பிக்கை வேண்டுமய்யா!** என்று எத்தனையோ தடவை எளியேனிடம் தி.க.சி. அவர்கள் இதுபற்றி கூறியது உண்டு.

மனக்குகை ஓவியங்கள்

1999 களில் தி.க.சி.யின் மனக்குகை ஓவியங்கள் நூல் *240* பக்கங்களில் வெளிவந்தது. அதில் பக்கம் *53*ல் (*1998* ஆகஸ்டில்) புதுமைப்பித்தனைப் பற்றி தி.க.சி. சொல்கிறார் இதோ,

1948 ஜூன் *30*!

1998 ஜூன் *30*!

இவ்விரண்டு தேதிகளுக்கும் ஒரு முக்கியமான வரலாற்றுத் தொடர்பு உள்ளது. சிந்தித்துப் பாருங்கள்.

ஆம், தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையை சமைத்த மகத்தான கலைஞன் புதுமைப்பித்தன் மறைந்த நாள் தான், *1948* ஜூன் *30*!



புதுமைப்பித்தன் அமரராகி அரை நூற்றாண்டு ஆகிவிட்டது. ஓ! காலம் தான் எவ்வளவு வேகமாக இறக்கை கட்டி பறக்கிறது! நமக்குத்தான் எத்தனை மறதி!

புதுமைப்பித்தன் எனும் அற்புதப் படைப்பாளியின் சாதனைகள் பற்றி விதம் விதமாக, பக்கம் பக்கமாக எவ்வளவோ எழுதலாம். ஆராய்ச்சி செய்யலாம். வெவ்வேறு முடிவுகளுக்கு வரலாம். காலத்தின் தீர்ப்புக்கு விட்டு விடலாம்.

இங்கே புதுமைப்பித்தன் என்னும் மனிதனைப் பற்றி அவனது ஆளுமையைப் பற்றி, சில எண்ணங்களை உங்களுடன் சுருக்கமாகப் பகிர்ந்து கொள்ள விருப்பம்.

என் அருமை நண்பர்கள் தொ.மு.சி.ரகுநாதன் போலவோ, கு.அழகிரிசாமி போலவோ, புதுமைப்பித்தனுடன் நெருங்கிப் பழகியவன் நான் அல்ல. பெரியவர் வல்லிக் கண்ணனுக்கும் புதுமைப்பித்தனுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் இல்லை. 1944ஆம் ஆண்டில் ஒன்றிரண்டு தடவைகள், அதுவும் சில நிமிடங்கள் புதுமைப்பித்தனை அவரது சென்னை ராயப்பேட்டை இல்லத்தில் சந்தித்துப் பேசியதாக, என்னிடம் வல்லிக்கண்ணன் சொல்லியிருக்கிறார்.

புதுமைப்பித்தன் என்ற மனிதனை அவரது படைப்புகள் வாயிலாகவும், 1943ல் இந்துக் கல்லூரியில் அவர் நிகழ்த்திய உரையின் மூலமாகவும், ஓரளவு அறிந்திருக்கிறேன். அவரது ஆளுமை எத்தகையது?

புதுமைப்பித்தனின் தத்துவதரிசனம் (Vision) மிக உயர்ந்தது. அது மகாகவி பாரதியின் 'சுதந்திரம்', 'சமத்துவம்' 'சகோதரத்துவம்' எனும் புரட்சிகரமான லட்சியங்களில் வேரூன்றியது. எனவே தான் பாரதியைப் போலவே, தமது லட்சிய ஈடேற்றத்திற்காக, புதுமைப்பித்தன பேனாவை ஆயுதமாகக் கொண்டார். எழுத்தாளன் எனும் அபாயகர வாழ்க்கையைப் பெரிதும் விரும்பித் தேர்ந்தெடுத்தார். அதன் விளைவுகளைத் துணிவுடன் ஏற்றுக்கொண்டார். வாழ்க்கை முட்களில் விழுந்தது, அவரது உள்ளம் ரத்தம் கக்கிய போதிலும், அவர் ஒரு தலைசிறந்த தத்துவ ஞானியாகத் திகழ்ந்தார். அவரது வாழ்க்கைத் தத்துவம் சம நீதியையும், மனித நேயத்தையும், மனிதகுல விடுதலையையும், முன்னேற்றத்தையும் உயிர் நாடியாகக் கொண்டது. எனவே மிகச் சிறப்பானது.

புதுமைப்பித்தனின் லட்சியப்பணியும் (Mission) பாத்திரமும் (Role) அவரது தத்துவ தரிசனத்தோடு இணைந்தவை, பிரிக்க முடியாதவை.

தமிழ் இலக்கியத்தில் புதுமையையும், மறுமலர்ச்சியையும் காண விழைந்த புதுமைப்பித்தன், சமுதாயத்தில் அடக்கி ஒடுக்கப்பெற்ற, சுரண்டப்பட்ட, இழிவுபடுத்தப்பட்ட பெரும்பான்மை மக்களின் விடுதலையில் முன்னேற்றத்தில், மிகுந்த அன்புக்குரிய தோழராக விளங்கினார். "தமிழ் மக்களுக்காக பாரதி விட்டுச் சென்ற, முக்கியமான சொத்துக்களில் ஒன்று, பாரதிதாசன்" என்று உறுதியாகக் கூறினார்.

மார்க்சியம், சோஷலிசம், புரட்சிகர சமுதாய மாற்றம் இவற்றில் பாரதிதாசனைப் போலவே, புதுமைப்பித்தனுக்கும் லட்சியதாகமும், வேகமும் இருந்தன. இவற்றைத் தமது எழுத்துக்களில் தலை சிறந்த கலையழகுடனும், ஒப்பற்ற தனித் தன்மையுடனும் மேதாவிலாசத்துடனும் புதுமைப்பித்தன் பதிவு செய்தார். தமிழ் மொழியும் இனமும் பண்பாடும். இவ்வுலகில் உள்ளவரையில் புதுமைப்பித்தன் அமரர்தான். காலதேவன் அவரது உயிரை மட்டுமே பறித்தான். அவரது படைப்புகளின் உயிரை ஒளியை, அவனால் ஒரு காலும் அசைக்க முடியாது. 1948இல் தேசப்பிதா மகாத்மா காந்தி ஒரு இந்து மத வெறியனால் சுட்டுக் கொல்லப்பட்ட காலம் வரையிலான வரலாற்றின் சாரத்தை உள்வாங்கிக் கொண்டு, தமது படைப்புக்களில் கலை நயத்துடன், கருத்து வளத்துடன் பிரதிபலித்தவர் புதுமைப்பித்தன்.

இரண்டு உலகப் போர்கள் (1914- 18) (1939-1945). உலக அரங்கில் அவற்றின் அரசியல், பொருளாதார, சமுதாய கலாச்சார விளைவுகள், இவற்றை உணர்ந்த கலைஞர்; மேலைய இலக்கியம், கீழைய இலக்கியம் இவற்றின் உன்னத மரபுகளின் சங்கமத்தில் மலர்ந்த அற்புத மலர்!

புதுமைப்பித்தன், தமிழ் இலக்கியத்திற்கு ஒரு புதிய திருப்பம் தந்த தீவிர மனிதாபிமானி (Radical Humanist) விமர்சன யதார்த்தவாதம் (Critical Realism) என்பது அவரது புரட்சிகரமான படைப்பு முறை. புதுமைப்பித்தன் மரபை மென்மேலும் செழுமைப்படுத்துவதும், முன்னெடுத்துச் செல்வதும், அதற்கான வழிவகைகாண்பதும், இன்றைய படைப்பாளிகளின் குறிப்பாக இளைய தலைமுறையின் உடனடிக் கடமை.

–கணையாழி ஆகஸ்ட்' 98



"அவர் படைப்புகளே அவரின் வாக்குமூலம்!"

செம்மலர் மாத இதழுக்காக அருணன், சோழ நாகராஜன் சந்தித்தபோது தி.க.சி. நவம்பர் 1998இல் தந்த பேட்டியின் சில பகுதிகள் இதோ,

நம்முடைய காலகட்டத்திற்குக் கல்கியும் தேவை, புதுமைப்பித்தனும் தேவை என்கிற கொள்கையானது வரவேற்கத்தக்கது. ஏனெனில் இன்றைக்குக் கலை இலக்கியத்தில் பன்முகத்தன்மை என்பது அவசியமாக இருக்கிறது. கல்கி ஒருவகையான பணியினை இலக்கியத் துறையில் ஆற்றி இருக்கிறார் எனில் புதுமைப்பித்தன் வேறு ஒரு வகையான பணியினை ஆற்றியிருக்கிறார். பொதுவான அம்சம் என்னவெனில் இருவரும் பாரதியின் வழித்தோன்றல்களே. பாரதியின் லட்சியங்களான நாட்டுப்பற்று, மொழிப்பற்று ஆகியவற்றை அவர்கள் கொண்டிருந்தார்கள். வாழிய

செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித்திருநாடு என்பது தான் அவர்களின் அடிநாதமான கொள்கையாக இருந்தது. எனவே செம்மலர், கல்கிக்கும் புதுமைப்பித்தனுக்கும் சிறப்பு மலர் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதாகவே எனக்குத் தோன்றுகிறது. கல்கி ஒரு தேசியவாதியெனில் புதுமைப்பித்தனும் தேசியத்தையும் சர்வ தேசியத்தையும் இணைத்துப் பார்த்திருக்கிறார் என்று சொல்லலாம்.

புதுமைப்பித்தன் தேசியத்தையும் சர்வ தேசியத்தையும் இணைத்தே பார்த்திருக்கிறார். அவர் பார்வை மிகவும் விசாலமானது. பாரதியைப் போல சர்வதேசிய நிகழ்ச்சியைப் பிரதிபலிக்கக் கூடிய வாய்ப்பு புதுமைப்பித்தனுக்கும் இருந்தது. 1929, 30 களில் உலகப் பொருளாதாரத்தில் பெரிய வீழ்ச்சி ஏற்பட்டது. அப்போது பாசிசம் தலை தூக்கியது. இவற்றையெல்லாம் புதுமைப்பித்தன் உள்வாங்கிக் கொண்டார்.

அவரது ஆளுமை மகத்தானதாக இருந்தது. படிக்கிற காலத்திலேயே அவர் ஒரு கிளர்ச்சிக்காரனாக, கலகக்காரனாக இருந்திருக்கிறார். படித்து முடித்து அரசாங்க வேலைக்குச் செல்லக்கூடாது என்று முடிவெடுத்துவிட்டார். அவரது தந்தையார் அவரைச் சட்டம் படிக்கச் சொன்னபோது அதையும் மறுத்துவிட்டார். வெள்ளைக்காரனிடம் அடிமை உத்தியோகம் பார்க்கமாட்டேன் என்கிற உறுதியான முடிவை எடுத்தார். ஒரு தாசில்தாரின் மகன் நினைத்திருந்தால் அரசு உத்தியோகத்திற்குப் போயிருக்க முடியும். ஆனால் அதையெல்லாம் மறுதலித்து ஒரு உழைக்கும் பத்திரிக்கையாளனாக சொற்ப வருமானத்துடன் வறுமையுடனேயே வாழ்ந்தார்.

புதுமைப்பித்தன் ஒரு சமூக விஞ்ஞானியாக இருந்தார். வாழ்க்கையின் அடித்தட்டு மக்களைப் பார்த்து உருகியிருக்கிறார். உலகின் பொருளாதார நெருக்கடி முன்னுக்கு வந்தகாலத்தில் தான் அவர் பத்திரிகைத் துறையில் அடியெடுத்து வைத்தார். எனவே சாதரண ஜனங்களுக்காக அவர்களின் மறுமலர்ச்சிக்காக எழுத வேண்டும் என்கிற மனஉறுதி அவரிடம் இருந்தது. அப்போது தான் “பொன்னகரம்“ போன்ற கதைகளை எழுதினார். வாழ்க்கையை ஒரு மலர்ப் படுக்கை என்று எண்ணக்கூடாது. அதனை ஊடுருவிப் பார்க்க வேண்டும்.

அதன் யதார்த்தத்தை எழுத வேண்டும் என்றெல்லாம் அவர் எண்ணினார். ‘துன்பக்கேணி’யில் ஒரு தாழ்த்தப்பட்ட பெண் தேயிலைத் தோட்டத்திற்கு வேலைக்குப் போக நிர்பந்தம் ஏற்பட்டதை எழுதினார். பாரதி பிஜித்தீவில் இந்தியப் பெண்கள் படும்பாட்டை எழுதியதைப் போல. காரணம், புதுமைப்பித்தன் பாரதியில் ஊறிப்போயிருந்தார். பாரதியின் படைப்புகளை முழுவதுமாக உள்வாங்கி இருந்தார் என்று சொல்லலாம்.

அவருக்குப் பழந்தமிழ் இலக்கிய மரபிலும் ஆழ்ந்த தேர்ச்சி இருந்தது. ஓய்வு நேரத்தில் புதுமைப்பித்தன் வையாபுரிப் பிள்ளையிடம் சென்று தமிழ் இலக்கியம் குறித்து நிறையப் பேசுவார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் அவருக்கு ஒரு தேடல் இருந்தது. ஒரு தாகம் இருந்தது. அது உலகம் முழுவதும் போனது. ருஷ்யக் கதைகள், அயர்லாந்துக் கதைகள் என்று பல நாடுகளின் கதைகளையெல்லாம் தேடிப்பிடித்து மொழி பெயர்த்திருக்கிறார். “மணிக்கொடி”யில் சொந்தக் கதை அல்லது மொழிபெயர்ப்புக் கதை எழுதுவார். **மற்றவர்கள் தொடாத விஷயங்களை நாம் தொட வேண்டும் என்பதுதான் புதுமைப்பித்தனை அன்று இருந்த எழுத்தாளர்களிடையே மாறுபட்டவராக மிளிரச் செய்தது.**

ஷெல்லி, பைரன், கீட்ஸ் என்று மேலை நாட்டு இலக்கியவாதிகளின் படைப்புகள் முழுமையும் படித்திருந்தார். ஹெச்.ஜி.வெல்ஸ், பெர்ட்ரண்ட் ரசல், ஷா எழுத்துக்களையெல்லாம் படித்திருக்கிறார். அவருக்குத் தத்துவ இயலில் மிகவும் ஈடுபாடு உண்டு. அவரது தீவிரத் தேடல், படிப்பு ஒரு உலகப் பார்வையைத் தந்தது. தனது 30 ரூபாய் சம்பளத்திலும் பட்டினி கிடப்பார். அப்போதும் மூர்மார்க்கெட்டில் புத்தகம் வாங்கிப் படித்தாக வேண்டும் அவருக்கு.

மணிக்கொடி எழுத்தாளர்களால் நவயுகப் பிரசுராலயம் என்று ஒரு பதிப்பகம் தொடங்கப்பட்டது. பெயரில் கூட நவயுகம் என்று புதுமை செய்தனர். புதுமைப்பித்தனும் அவரது சகாக்களும் துணிச்சல் மிக்க புதிய உலகைப் படைக்க விரும்பினார்கள் என்பதற்கு இதுவும் சான்றாக உள்ளது. மணிக்கொடியின் நோக்கமே தமிழ் இலக்கியத்தை உலக இலக்கியதரத்திற்கு உயர்த்த வேண்டும் என்பதாகத்தான்

இருந்தது. மணிக்கொடியைப் பற்றி அதன் தலையங்கத்தில் 'உப்பு சத்தியாக் கிரகத்தின் இலக்கிய அலை' என்று எழுதினார்கள். மணிக்கொடியில் எழுதி வந்த சொக்கலிங்கம், ஸ்டாலின் சீனிவாசன் இவர்களெல்லாம் சுதந்திரப் பேராட்டத்தில் நேரடியாக ஈடுபட்டவர்கள். அவர்கள் ஜெயிலுக்குப் போன பின்பு, வ.ரா. இலங்கையில் வேலை கிடைத்துப் போன பின்பு அதை சிறுகதை மணிக்கொடியாக மாற்றினார்கள்.

அந்தக் காலத்தில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியின் தாக்கம் புதுமைப்பித்தனுக்கும் ஏற்பட்டது. ராஜாஜியே அபேதவாதம் என்ற நூல் எழுதிய காலகட்டம். அப்போது பக்தகுசேலா – கலியுகமாடல் என்று எழுதினார். அதில் உவமையாகவும், உருவகமாகவும், குறியீட்டாகவும் எழுதியிருக்கிறார். அவர் விஞ் ஞான சோஷலிசப் பார்வையில் மார்க்சிய லெனினிசத்தைப் புரிந்து கொண்டு எழுதினார் என்று சொல்ல முடியாது. ஆனால் நலிந்த பிரிவினருக்காக எழுத வேண்டும் என்ற கொள்கையை மணிக்கொடி எழுத்தாளர்கள் ஏற்றிருந்தார்கள்.

புதுமைப்பித்தன் 'மணிக்கொடி எழுத்தாளர்களில் ஒரு மணிமுடி' என்று நான் கூறுவேன். கு.ப.ரா. பெண்ணைப் பற்றி எழுதினார். பிச்சமூர்த்தி தாகூரின் மரபில் கதை எழுதினார். மௌனி, ராமையா இவர்களெல்லாம் ஒவ்வொரு விதத்தில் எழுதினார்கள். ஆனால் புதுமைப்பித்தனைப் போல – நீள, அகல, உயரத்திற்குப் போனவர் யாரும் கிடையாது. மணிக்கொடி எழுத்தாளர்களின் முழுமையான பணியை நாம் மறுக்க முடியாது. ஆனால் புதுமைப்பித்தன் மணிக்கொடி என்ற நட்சத்திர மண்டலத்திற்குத் தலைமை வகித்தார் என்றே சொல்லலாம்.

நிரந்தரமான குடும்பக் கஷ்டங்கள், வறுமை, பசிப்பிணி இவற்றிற்கிடையேயும் புதுமைப்பித்தன் இலக்கியத்தைக் கைவிடவில்லை. என்றைக்கும் அவர் தேசியத்தை விட்டு விலகவில்லை. எந்தவிதமான பிற்போக்குக் கொள்கைகளையும் அவர் கொண்டிருக்கவில்லை. இவற்றோடு ஒரு சர்வதேசியக் கண்ணோட்டம் அவருக்கு விரிந்த அளவில் இருந்தது.

இன்றைக்கு சில எழுத்தாளர்கள் அவருக்கு ஜாதி உணர்வு இருந்தது என்று எழுதுகிறார்கள். கனவிலும், நினைக்க முடியாத

ஒரு போலித்தனமான குற்றச்சாட்டு இது என்பேன். இதற்கு ஆதாரமே இல்லை.

அந்தக் காலத்தில் திருநெல்வேலியில் பிள்ளைமார் சமூகத்தவர்களில் பலர் நிலப்பிரபுக்களாக இருந்தனர். அவர்கள் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கி வந்தனர். தஞ்சாவூர் நிலப்பிரபுக்கள் செய்து அதே கொடுமைகளை இவர்கள் செய்த வந்திருக்கின்றனர். இந்த விஷயத்தை புதுமைப்பித்தன் அம்பலப்படுத்தி எழுதியிருக்கிறார். தனது 'நாசகாரக் கும்பல்' சிறுகதையில் தலித்துக்கள் மீது பரிவுணர்ச்சியுடன் 'துன்பக்கேணி' எழுதினார்.

அவரிடம் பாசிச எதிர்ப்பு இருந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு இருந்தது. முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு இருந்தது. இவற்றின் சாராம்சங்களை கூறுகளை அவரது அனைத்துக் கதைகளிலும் பார்க்கலாம்.

திருநெல்வேலிப் பிள்ளைமார்களின் பழமைச் சிந்தனைகளை புதுமைப்பித்தன் அளவுக்கு கிண்டல் செய்தவர் யாருமில்லை. பாரதியைப் போல சுயசாதி விமர்சனம் செய்தவர் என்றே சொல்லலாம். காரணம் அவர்களெல்லாம் சாதியை மறந்துவிட்டார்கள். அதனால் அவர்களது நேர்மையைச் சந்தேகிப்பது நியாயமல்ல, 'புதுமைப்பித்தனின் நேர்மையைச் சந்தேகிப்பது நியாயமல்ல' 'புதுமைப்பித்தனின் எழுத்து இந்து சனாதனக் கறைபடிந்த ஒரு மொழி விளையாட்டு', 'புதுமைப்பித்தனின் மனோபாவம் மேட்டிமைத் தன்மைமிக்க மேல்சாதி மனப்பான்மை', 'புதுமைப்பித்தனின் புனைப் பெயர் கூட இந்து மரபுத்தாக்க விளைவு' என்று அ.மார்க்ஸ் எழுதுகிறார். புதுமைப்பித்தனின் எழுத்துக்களை இவர் போன்றவர்கள் கேவலப்படுத்துகிறார்கள். ஒரு ஆர்.எஸ். எஸ்.காரன் கூட சொல்லாத வார்த்தைகளை அ.மார்க்ஸ் போன்றோர் சொல்வதேன்? இது மிகவும் தவறான, மோசமான வாதம் தப்பான கணிப்பு.

கர்நாடகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சித்தலிங்கய்யா என்பர் 'தலித் இலக்கியம் என்பது மார்க்சியத்திற்கு எதிரானதல்ல' என்கிறார். உண்மை இப்படி இருக்க இங்கே சிலர் புதுமைப்பித்தனைத் தாறுமாறாகக் கேவலப்படுத்துவதன்

மூலம் முற்போக்கு இயக்கங்களுக்கு இவர்கள் எதிரிகளாக, விரோதிகளாகத் தங்களை நிரூபிக்கிறார்கள்.

இன்னொருவேடிக்கை, சில நவீனவாதிகள் புதுமைப்பித்தனின் யதார்த்த சிறுகதைகளைப் புறக்கணித்து பிரம்மராக்ஷஸ், ஞானக்குகை போன்ற கதைகளின் வடிவ உத்தியை மட்டும் வைத்துக் கொண்டு அதுதான் உலகத் தரமான எழுத்து என்று அந்த வழியே நம் வழி, அதுவே சிறந்த உண்மையான இலக்கியம் என்றும் கூறும் போக்குகளும் இருக்கிறது. இவர்களுக்கு நாம் சொல்ல வேண்டியது புதுமைப்பித்தன் ஒரு பன்முகப்பட்ட பரிமாணமுள்ள எழுத்தாளர் தான். அதே சமயம் அவர் கடைசியாக எழுதிய 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்', 'தலித்தியம்' என்று இப்போது இவர்கள் சொல்கிறார்களே அதற்கெல்லாம் முன்பே "நாசகாரக்கும்பல், "துன்பக்கேணி" என்றெல்லாம் படைப்புகளைத் தந்திருக்கிறார் பாரதி. "ஆறில் ஒரு பங்கு" எழுதினார். அந்த மரபுதான் புதுமைப்பித்தனுடையது.

அது மட்டுமல்ல 1936ல் மாக்சிம் கார்கி ரஷ்யாவிலிருந்து ஒரு குரல் கொடுத்தார். உலகம் முழுவதும் தலைதூக்கி வரும் பாசிசத்தை எதிர்த்து 'பாசிச எதிர்ப்பு எழுத்தாளர் முன்னணி' ஒன்று உலகம் முழுவதும் வேண்டும் என்று இதனைத் தொடர்ந்து இந்தியாவில் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஏற்பட்டது. முல்க்ராஜ் ஆனந்த், பிரேம்சந்த் போன்றோர் தொடங்கிய இந்த எழுத்தாளர் சங்கத்தினை நேரு, சரோஜினி நாயுடு, தாகூர் வாழ்த்தினர். கேரளத்தில் தகழி "தோட்டியின் மகன்" எழுதினார். முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் கொள்கைத் தீர்மானங்களையெல்லாம் கேரள எழுத்தாளர்கள் அமல்படுத்தினர். தகழி, பொற்றேகாட், பஷீர் போன்றோர் அப்போதே வந்துவிட்டனர். இந்தப் போக்கினை ஓரளவுக்காவது பிரதிபலிப்பது தமிழகத்தில் மணிக்கொடி எழுத்தாளர்கள் என்று சொல்லலாம். பி.எஸ். ராமையா போன்றோர் ஜெயிலுக்குப் போய் இந்தி படித்தவர்கள். இந்தியிலிருந்து பிரேம் சந்த் கதைகளைத் தமிழில் மொழி பெயர்த்து மணிக்கொடியில் வெளியிட்டார்கள்.

புதுமைப்பித்தன் பலவிதமான பரிசோதனைகளைச் செய்து பார்த்தார். பிரான்சின் மாபசான் போல விமர்சன யதார்த்த

வாதத்தில் எழுதியிருக்கிறார். பால்சாக் போல எழுத்தில் சத்தியத்தைச் சொல்ல வேண்டும் என்று எழுதியிருக்கிறார். ரஷ்யாவின் செகாவ் கதைகளை முழுவதும் படித்திருக்கிறார். சோலகோவ் கதைகளை மொழிபெயர்த்திருக்கிறார். டால்ஸ்டாய் கதைகளைத் தமிழில் கொண்டு வந்தார். இதுபோன்ற அவரது மகத்தான இலக்கியப் பணியினையெல்லாம் மறைத்துவிட்டு அவர் பரிசோதனையாகச் செய்த சில கதைகளை எடுத்துக் கொண்டு – இருப்பத்திலேயே மோசமானவற்றை இதுதான் புதுமைப்பித்தன் என்று கூறுபவர்கள் புதுமைப்பித்தனின் ஆத்மாவைப் புரிந்து கொள்ளாதவர்கள் என்பேன். அவர் உண்மையிலேயே சமூக நீதிக்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவுமே இருந்திருக்கிறார். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமாயின் பிரெஞ்சுப் புரட்சியின் கோஷங்களான சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதுதான் புதுமைப்பித்தனின் அடி நாதம். தேச விடுதலை மட்டுமின்றி சமுதாய விடுதலையையும் அவர் விரும்பினார். பாரதிதாசன் அவரது சிறந்த நண்பர். பாரதிதாசனுக்கு பொற்கிழி வழங்கப்பட்டபோது அந்தக் கமிட்டியில் புதுமைப்பித்தன் இருந்தார். தனது வறுமை நிலையிலும் நூறு ரூபாய் நன்கொடை தந்தார். பாரதியார் தமிழகத்திற்கு விட்டுச் சென்ற சொத்துக்களில் முக்கியமான சொத்து பாரதிதாசன் என்று எழுதினார்.

சமுதாயம் மாற வேண்டும் என்பதுதான் புதுமைப்பித்தனின் உள்ளக்கிடக்கை. பாரதிதாசனின் பகுத்தறிவுக் கொள்கைகளில், சுயமரியாதைக் கொள்கைகளில் அவருக்கு ஈடுபாடிருந்தது. இப்படி இருக்கையில் புதுமைப்பித்தனைக் கொச்சைப்படுத்தி அவனொரு தனிமைவாதி, சமுதாயத் தொடர்பற்றவன், சமுதாயச் சிந்தனையற்றவன் என்று சொல்கிறவர்களுக்கு அவரது படைப்புகள் தான் அவரின் வாக்குமூலம். அவரது படைப்புகள் மனிதனின் முழு விடுதலையைத்தான் லட்சியமாகக் கொண்டிருக்கின்றன.

எதார்த்தவாதம் செத்துவிட்டது என்று சில 'அறிவுஜீவி'கள் கூறுகின்றனர். இது அப்பட்டமான பொய்யாகும். அபத்தமாகும், வரலாற்று உண்மைகளை மூடி மறைப்பதாகும். புதுமைப்பித்தனின் படைப்புகள், இன்றைய காலகட்டத்தில் எதார்த்தவாதக் கலை இலக்கியங்களின் தேவையை மேன்மேலும்

வலியுறுத்துகின்றன. அந்த மேதையின் எழுத்துக்கள் சமுதாய உண்மைகளை முழுமையாக உற்று நோக்கி, கலையழகுடனும், உயிர்த் துடிப்புடனும் வாசகர் உள்ளங்களை ஈர்த்துவிடுகின்றன. அவை உலக இலக்கிய தரம் வாய்ந்தவை. மகாகவி பாரதியின் வழித்தோன்றலான புதுமைப்பித்தன் ஒரு தீவிர மனிதாபிமானி (Radical Humanist) சமுதாயக் கேடுகளுக்குக் காரணமாக விளங்கும் சக்திகளை அம்பலப்படுத்தும் அவரது 'விமர்சன எதார்த்தவாதப் படைப்புமுறை' இன்று நமக்கு மிகமிக அவசியமாகும்.

வெளிநாட்டு, உள்நாட்டு சந்தைக் கலாச்சாரத்தின் ஆளுகை, தமிழ்க் கலை இலக்கிய உலகிலும், ஊடகங்களிலும் மேலோங்கி வரும் இவ்வேளையில் – தமிழ் மக்களின் உள்ளங்களில் விழுமிய உணர்வுகள் சிதைக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் – மகாகவி பாரதி, பாவேந்தர் பாரதிதாசன், சிறுகதை மேதை புதுமைப்பித்தன் ஆகிய உன்னத ஒளி விளக்குகளின் படைப்புகள் ஒவ்வொரு தமிழ் நெஞ்சத்திலும் இடம்பெற வேண்டும். குறிப்பாக, நமது இளைய சமுதாயத்திற்கு வழிகாட்ட வேண்டும். எனவே தமிழக அரசு புதுமைப்பித்தனின் படைப்புகளை நாட்டு உடமையாக்கி, சிறந்த முறையில் மலிவுப் பதிப்புகளாக வெளியிட வேண்டும். ஒவ்வொரு நூலகத்திலும், இல்லத்திலும் புதுமைப்பித்தன் படைப்புகள் இடம் பெற வேண்டும். இதற்கான பணியில் 'செம்மலர்' ஏடுகளும், 'தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்' முதலிய அமைப்புகளும் ஒன்றுபட்டு வீறுடன் ஈடுபட வேண்டும். வெற்றி பெற வேண்டும் இது என் அன்பான வேண்டுகோள்.

– *செம்மலர், நவம்பர் '98*

என்று தி.க.சி. பின்னாளில் வலியுறுத்தினார். அவ்வாறே அவரது கோரிக்கை அரசால் ஏற்கப்பட்டு அவரது படைப்புகள் நாட்டுடமை ஆக்கப்பட்டு விட்டது.

புதுமைப்பித்தன் பார்வையில் இந்தியா

நம் நாடு விடுதலை பெறும் முன்பே, 1945ஆம் ஆண்டிலேயே சிறந்த தேச பக்தரான புதுமைப்பித்தன், இந்தியாவின் அவல நிலை குறித்து மிகவும் மனம் வருந்தினார். தனது துயரத்தை

ஒரு நையாண்டிப் பாடலாகத் திருச்சியிலிருந்து வெளிவந்த 'கலாமோஹினி' என்னும் மறுமலர்ச்சி மாத இதழில் (சிற்றேட்டில்) எழுதினார்.

'இணையற்ற இந்தியா' எனும் அப்பாடலை முழுமையாகக் கீழே தருகிறேன். அதிலுள்ள நையாண்டியை அனுபவிப்பதுடன் இன்றைய இந்தியா குறித்தும் ஆழ்ந்து சிந்திக்க வேண்டுகிறேன்.

இணையற்ற இந்தியா

இந்தியா தேசம் - அது
இணையற்ற தேசம் என்று
யாங்களுமறிவோம் - வெள்ளை
ஆங்கிலரறிவார் - பிள்ளைத்
துருக்கனுமறிவான் - அறிவால்
சூழ்ந்தது தொல்லை!

வேறு

சிந்தையில் பின்னிவைத்த சிலந்தி வலைச் செல்வி
செல்வழியில் கண்ணியிட்டுச் செயத் தம்பம் நாட்டும்!
எந்தையர்கள் நாடல்லோ இமையவர்கள் நாடு!
இமவானின் ஆதரவில் இருந்து வரும் நாடு.
கந்தமலர் பூச்செறிவில் கடவுளர்களோடு
கன்னியர்கள் கந்தருவர் களித்து வளர் நாடு!
என்று பல சொல்லியதைச் சொல் லளவில் நம்பி
எவனுக்கும் மண்டியிடும் ஏந்து புய நாடு!
ஆற்றுக்கரையருகே அணிவயல்கள் உண்டு;
சோற்றுக்குத் திண்டாட்டம் சொல்லி முடியாது!

வேறு

வேதம் படித்திடுவோம், வெறுங்கை
முழம் போட்டிடுவோம்;
சாதத்துக்காகச் சங்கரனை விற்றிடுவோம்!

அத்தனைக்கும் மேலல்லோ, அகிம்சாக் கதை பேசி,
வித்தகனாம் காந்தியினை விற்றுப் பிழைக்கின்றோம்!
இந்தியா தேசம் – அது
இணையற்ற தேசம்!

இதுதான் 1945ல் புதுமைப்பித்தன் கண்டு உணர்ந்த இந்தியா தேசம்!

இந்த 'இணையற்ற இந்தியா' அன்று எப்படியிருந்தது? 'எவனுக்கும் மண்டியிடும் ஏந்து புய நாடாக இருந்தது! இன்று – 1997 ஆம் ஆண்டிலும் – அப்படித்தானே இருக்கிறது? அமெரிக்கா, கனடா, பிரிட்டன், இத்தாலி, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளிடமும் உலக வங்கி சர்வதேச நிதி நிறுவனம் முதலிய அமைப்புகளிடமும் கையேந்தும் நாடாகத்தானே இருக்கிறது?

புதுமைப்பித்தன் வாழ்ந்த காலத்தில் (1942–1945 கால கட்டத்தில்) வங்காளத்தில் கொடிய பஞ்சம், பல லட்சக்கணக்கான மக்கள் பசியால் மாண்டனர். வீதிகளிலே அவர்களது பிணங்களைக் கழுகுகளும் ஓநாய்களும் கொத்தித் தின்றன. அன்று கங்கைக் கரை முதல் காவிரிக்கரை வரை அணிவயல்கள் இருந்தன. ஆனால், மக்களின் வாழ்வில் 'அன்ன விசாரம்' அதுவே விசாரமாக இருந்தது. 'நாடெங்கும் உணவுப் பஞ்சம்' பசி, பட்டினி, (அப்போது இரண்டாம் உலகப்போர்க் காலம்) வெள்ளை ஆட்சியாளர்களுக்கு, இந்தியர்களைப் பற்றிக் கவலையில்லை. இந்தியர்கள் வாழ்ந்தாலென்ன, செத்தால் என்ன? இந்தியர்களைப் பலிகடாக்களாக்கி போரில் வெல்ல வேண்டும். தமது ஏகாதிபத்தியத்தை எப்படியும் காப்பாற்ற வேண்டும். இதுவே அவர்களது சிந்தனை, செயல்பாடு.

இந்தச் சூழ்நிலையில் 1942ல் 'வெள்ளையனே வெளியேறு' 'செய் அல்லது செத்துமடி' என்னும் முழக்கங்களுடன் இந்திய விடுதலைப் போராட்டம் வீறு கொண்டு எழுந்தது. தேசத் தலைவர்களும், தொண்டர்களும், சிறைகளை நிரப்பினர். எனினும் வாய்ச் சொல்லி வீரர்களாக நடிப்புச் சுதேசிகளாக, இந்திய மக்களில் ஒரு பகுதியினரும் இருந்தனர். அவர்கள் வேதம் படித்தனர். வெறுங்கை முழம் போட்டனர். அத்துடன் நிற்கவில்லை. சாதத்துக்காகச் சங்கரனை விற்கவும் துணிந்தனர்.

தங்களது சுயநலத்திற்காக நுகர்வுக் கலாச்சாரத்திற்காக எத்தகைய இழி செயல்களிலும் ஈடுபட்டனர். 'சங்கரனையே' (உன்னதப் பண்பாடுகளையே) விற்றனர்.

அன்றைய நடிப்புப் சுதேசிகள், 'அகிம்சைக் கதை' பேசினர். நாட்டு விடுதலைக்காக சுண்டு விரலைக் கூட அவர்கள் அசைக்க வில்லை. தேச பக்தி என்பது அவர்களுக்கு வாய் வேதாந்தமாகவே ஆகிவிட்டது. அவர்கள் அத்துடன் நிற்கவில்லை. வித்தகனாம் காந்தியை விற்றுப் பிழைக்கத் துணிந்துவிட்டனர். 'காந்தியம்' என்பதும், 'சுதந்திரம்' என்பதும் அவர்களுக்கு வாய் வேதாந்தமாகவே ஆகிவிட்டது.

இத்தகைய கேவலமான நிலையைக் கண்டு நெஞ்சு பொறுக்காமல்தான்

'இந்தியா தேசம் – அது
இணையற்ற தேசம்!'

என்று நையாண்டியாகப் பாடுகிறார் புதுமைப்பித்தன்!

இந்தக் கவிதை வெளிவந்து 52 ஆண்டுகளாகி விட்டன. 1948 ஜூன் மாதத்தில் புதுமைப்பித்தன் மறைந்து விட்டார். எனினும், அன்று அவர் சுட்டிக்காட்டிய அவல நிலையும், இழி தகமைகளும் இன்றும் நம் நாட்டில் அகலவில்லையே? மேன்மேலும் பற்பல வடிவங்களில் அவை பெருகி வருகின்றன என்பதற்கு எத்தனையோ ஆதாரங்கள் உள்ளன.

1947 ஆகஸ்ட் 15ல் வெள்ளையன் நம் நாட்டை விட்டு வெளியேறினான் என்பது உண்மை. எனினும் பற்பல அழுக்கு மூட்டைகளை, 'நோய்க் கிருமி' களை அவன் இங்கே விட்டுச் சென்றுள்ளான். அவை கடந்த ஐம்பதாண்டுக் காலத்தில் பல்கிப் பெருகி நம் நாட்டின் சுதந்திரத்தையும், சுயாதீனத்தையும் அழித்து வருகின்றன. 21ம் நூற்றாண்டை நோக்கி அடியெடுத்து வைக்கும் இவ்வேளையில் புதியதொரு அடிமைத்தளத்தில் – நவ காலனி ஆதிக்கத்தில் நாடு ஆழ்த்தப்படுகிறது என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். புதுமைப்பித்தனின் 'இணையற்ற இந்தியா' எனும் பாடல் நமக்கு வழங்கும் முக்கியச் செய்தி இதுதான்.

– புதிய பார்வை

புதுமைப்பித்தன் ஓர் ஒளி விளக்கு

இந்திய இலக்கிய ஜாம்பவான்களில் ஈடு இணையற்ற படைப்பாளிகளில் புதுமைப்பித்தனும் ஒருவர்.

மகாகவி பாரதிக்குப் பின்னர் சிறுகதைத் துறையில் புதுமைப்பித்தனுக்கு நிகராகச் சாதனை புரிந்தவர் எவரும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

சிறுகதையில் மட்டுமின்றி, கட்டுரை, கவிதை, நாடகம், திறனாய்வு, மொழி பெயர்ப்பு, வாழ்க்கை வரலாறு முதலிய துறைகளில் புதுமைப்பித்தனின் ஈடுபாடும், உழைப்பும், வெற்றிகளும் வியக்கத்தக்கன; போற்றத்தக்கன.

"மணிக்கொடி" யில் புதுமைப்பித்தனுடன் பிச்சமூர்த்தி கு.ப.ராஜகோபாலன், மௌனி, பி.எஸ்.ராமையா, சிதம்பர சுப்ரமண்யன், கி.ரா. ஆகியோர் 1934 – 39 காலகட்டத்தில் எழுதினார். இக்கால கட்டத்தில்தான் தமிழ்ச் சிறுகதைக்கு மாபெரும் அந்தஸ்து ஏற்பட்டது.

1930க்குப் பிந்திய காலகட்டத்தில் இந்திய இலக்கிய மறுமலர்ச்சி எப்படியிருந்தது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். வங்காளியில் ரவீந்திரநாத்தாகூர், சரத்சந்திரர், நஸ்ருல் இஸ்லாம், பானர்ஜி; இந்தியில் பிரேம் சந்த்; மராத்தியில் வி.எஸ்.காண்டேகர், தெலுங்கில் மகாகவி ஸ்ரீஸ்ரீ, கன்னடத்தில் சிவராம கரந்த், மலையாளத்தில் தகழி, வைக்கம் முகம்மது பஷீர், கேசவதேவ், உருதுவில் கிருஷ்ண சந்தர், ஆங்கிலத்தில் முல்க்ராஜ் ஆனந்த், சரோஜினி தேவி, ஹரீந்திரநாத் சட்டோபாத்யா இவ்வாறாக இந்திய இலக்கியத்தில் புதுமையும் புரட்சியும் பூத்துக்குலுங்கத் தொடங்கின. இவர்கள் அனைவரும் இந்திய விடுதலையின் லட்சியங்களுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட படைப்பாளிகள்.

இத்தகைய இலக்கிய ஜாம்பவான்களிடையே ஓர் எரி நட்சத்திரமாக மிளிர்கிறார் புதுமைப்பித்தன். தமிழ் சிறுகதையை இந்திய மட்டத்திற்கு மட்டுமின்றி, உலக மட்டத்திற்கும் உணர்த்தியவர் அவர்.

இதற்குக் காரணமான அவரது ஆளுமையும், படைப்பாற்றலும் மகாகவி பாரதியின் மரபில் வந்தவை; பாரதியின் லட்சியங்களான

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமூகநீதி, சமுதாய முன்னேற்றம் இவை தாம் புதுமைப்பித்தனின் தத்துவ தரிசனங்கள்.

பாரதியைப் போலவே நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும் இனப்பற்றும் கொண்டவர் புதுமைப்பித்தன். அரசியல், பொருளாதாரம், கலாச்சாரம், சமுதாயம் ஆகிய துறைகளில் நமது மகாகவியைப் போலவே சர்வதேசியப் பார்வையும் மனிதாபிமானமும் ஜனநாயக லட்சியங்களும் கொண்டவர். இந்த அடிப்படையில்தான் புதுமைப்பித்தன் வாழ்வையும், படைப்புக்களையும் நாம் அணுக வேண்டும்; மதிப்பீடு செய்ய வேண்டும்.

வாழ்வை, உண்மையை நேர் நின்று நோக்க வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்ட மணிக்கொடி எழுத்தாளர்களின் தலைவன் புதுமைப்பித்தன்.

புதுமைப்பித்தனின் கதாபாத்திரங்கள் படைப்பின் மையக் கருத்து. தமிழ் நடை கதைகளுக்கு அவர் தேர்தெடுத்துக் கொண்ட விஷயங்கள், நம் வாழ்வின் அடிப்படை நியதிகள் மற்றும் மதிப்பீடுகள் குறித்து அவர் எழுப்பியுள்ள துணிச்சலான வினாக்கள். இவை இலக்கிய சநாதனிகளையும் பழமைப் பித்தர்களையும் எரிச்சலுறச் செய்தன. அவர்கள் புதுமைப்பித்தனைக் கேலியும் கிண்டலும் செய்தனர். இழித்தும் பழித்தும் பேசினர். ஆனால் புதுமைப்பித்தன் எதிர்ப்புகளைக் கண்டு அஞ்சவில்லை. இறுதிவரை தமது பணியைத் தொடர்ந்தார். அவர் வாழ்வே ஓர் எதிர் நீச்சல் தான்!

புதுமைப்பித்தனுடைய சிருஷ்டித்திறன் வியக்கத்தக்கது. மேதாவிலாசம் பொருந்தியது; அவரது ஒவ்வொரு கதையும் ரஸத்துணுக்கு என்றே சொல்ல வேண்டும். நெஞ்சில் உரமும், நேர்மைத் திறனும், வாழ்வை யதார்த்தமாகச் சித்தரிக்க வேண்டும் என்ற சத்திய ஆவேசமும் கொண்டவர் புதுமைப்பித்தன். எனவே, அவரது படைப்புகளில் ஒரு கம்பீரம், ஒரு வீரியம் மிளிர்கிறது. தமிழ்ப் பண்பாட்டில் வேரூன்றி உலக இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்த கலையுள்ளம் படைத்தவர். அவர் எழுத்தில் ஒரு மோகனலாகிரி இருக்கிறது. அவருடைய படைப்புகளில் கட்டுக்கோப்புத் திறனும், கலைநயமும் மாற்றாரையும் மதிமயங்கச் செய்வன.

தலித்தியம், பெண்ணியம், சூழலியம், மார்க்சியம், மதச்சார்பின்மை முதலிய கோட்பாடுகள், இன்றைய தமிழ் இலக்கியத்தில் முன்னணிக்கு வந்துள்ளன. இவற்றின் வேர்களை எடுத்துக்காட்டுகளைப் புதுமைப்பித்தன் கதைகளில் காணலாம். துன்பக்கேணி, நாசக்காரக்கும்பல் ஆகிய கதைகள் தலித் இலக்கியத்திற்குச் சான்றுகள், சாப விமோசனம் பெண்ணியத்திற்கு உதாரணம். இப்படிச் சொல்லிக் கொண்டே போகலாம்.

புதுமைப்பித்தன் கட்டுரைக் கலையிலும் வல்லவர், ‘என் கதைகளும் நானும், ‘சிறுகதை’, ‘மதிப்புரை’, ‘பாட்டும் அதன் பாதையும்‘, ‘கவிதை’, ‘நாட்டுப் பாடல்கள்’ ஆகிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை.

பாரதிதாசனின் ‘புரட்சிக்கவி’ பற்றிய அவரது திறனாய்வு மிகவும் குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசன் பற்றிப் புதுமைப்பித்தன் இவ்வாறு கூறுகிறார்.

“பாரதியார் இன்று நமக்கு வைத்துவிட்டுப் போன சொத்துக்கள் பல. இவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில்பாட்டு, பாஞ்சாலி சபதம், கனக சுப்புரத்தினம் என்ற பாரதிதாசன் என்று சொல்ல வேண்டும். பாரதி வகுத்த பாதையிலே பல அழகுக் கனவுகளை அவர் நிர்மானித்துத் தந்திருக்கிறார். பாரிச வாய்வும், பக்கவாதமும் போட்டலைக்கும் இன்றைய கவிதை உலகிலே அவருடைய பாட்டுக்கள் ஒன்றுதான் நிமிர்ந்து நடக்கின்றன” புதுமைப்பித்தனின் நேர்மையான விவேகமான ஆணித்தரமான திறனாய்வுக்கு இது ஓர் எடுத்துக்காட்டு.

மொழிபெயர்ப்புத் துறையிலும் புதுமைப்பித்தனின் சாதனைகள் பாராட்டத்தக்கவை. ‘உலகத்துச் சிறுகதைகள்’, ‘உலக நாடக அரங்கு’, என்னும் நூல்களில் உலக இலக்கியச் செல்வங்களை அவர் உயிர்த்துடிப்புள்ள தமிழில் வழங்கியுள்ளார். தமிழாக்கம் என்னும் பலகணியின் வாயிலாக தமிழ் இலக்கியம் வலிவும் பொலிவும் பெறுவதற்கு புதுமைப்பித்தனின் மொழிபெயர்ப்புகள் வகை செய்கின்றன.

முசோலினியைப் பற்றி “ஃபாசிஸ்ட் ஜடாமுனி” என்ற தலைப்பிலும், ஹிட்லரைப்பற்றி “கப்சிப் தர்பார்” என்ற தலைப்பிலும் அவர் எழுதியுள்ள வாழ்க்கை வரலாறுகள் குறிப்பிடத்தக்கவை. (“கப்சிப் தர்பாரில்” ஒரு பாதியை புதுமைப்பித்தனும், மறுபாதியை ராமரத்னம் என்ற அவரது சகாவும் எழுதியுள்ளார் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்)

நாடகத்துறையை எடுத்துக் கொண்டால், “வாக்கும் வக்கும்“, “சார் நிச்சயமா நாளைக்கு”, “பக்த குலேசா” என்னும் மூன்று நாடகங்கள் அவரது தொகுப்பில் உள்ளன. இவற்றில் பக்த குலேசா (கலியுக மாடல்) என்னும் நாடகம், இன்றைய நமது சமுதாய நிலவரத்திற்குப் பொருத்தமானது. கலியுகமானாலும் அனுயுகமானாலும் நம்மிடையே “குசேலர்” திருக்கூட்டத்திற்கு எவ்விதப் பஞ்சமும் இல்லை.

கவிதைத்துறையிலும், புதுமைப்பித்தன் புகழ்க் கொடி நாட்டியுள்ளார். அவரது கவிதைகளில் புதுமை, தனித்தன்மை, வேகம், ஓசை நயம், கருத்தாழம் இவையெல்லாம் நம்மைக் கவருகின்றன. அங்கதக் கவிதைகள் மட்டுமின்றி அவலக் கவிதைகளையும் அவர் பாடியுள்ளார். “ஓடாதீர்”, “உருக்கமுள்ள வித்தகரே”, “தொழில்” இவை புதுமைப்பித்தனின் நையாண்டிக் கவிதைகளுக்கு உதாரணம் என்றால் “இருட்டு”, “பாதை” என்பவை அவலச் சுவைக்கு எடுத்துக்காட்டு. “இணையற்ற இந்தியா” என்னும் கவிதை இன்றைய இந்தியாவுக்கு அப்படியே பொருந்துகிறது.

> “வேதம் படித்திடுவோம்;
> வெறுங்கை முழம் போட்டிடுவோம்;
> சாதத்துக்காகச் சங்கரனை
> விற்றிடுவோம்!
> அத்தனைக்கும் மேலல்லோ
> அகிம்சைக் கதைபேசி
> வித்தகனாம் காந்தியினை
> விற்றுப் பிழைக்கின்றோம்!”

என்று 1945ல் பாடினார் புதுமைப்பித்தன். என்ன தீர்க்க தரிசனம்! இன்று 50 ஆண்டுகளுக்குப் பிறகும் அவரது வாக்குப் பொய்க்கவில்லையே!

புதுமைப்பித்தனின் கடிதங்கள், அவரது உள இயல்புகளை மிகத்துல்லியமாகக் காட்டுகின்றன. அவர் தமது மனைவிக்கு எழுதியுள்ள கடிதங்கள் கண்மணி கமலாவுக்கு எனும் தொகுப்பாக அண்மையில் வெளிவந்துள்ளது. புதுமைப்பித்தனின் இதய ஒலியை, ஆன்மத்துடிப்பை வெளியிடும் ஆவணங்கள் இவை.

இந்திய இலக்கிய மேதைகளில் ஒருவரான புதுமைப்பித்தன் இன்று நம்மிடையே இல்லை; அவர் மறைந்து 48 ஆண்டுகள் ஆகின்றன எனினும் அவரது படைப்புகள் உலக இலக்கியத்துவம் பெற்றுவிட்டன; காலத்தை வென்று நிற்கின்றன.

வல்லிக்கண்ணன், தொ.மு.சி.ரகுநாதன், கு.அழகிரிசாமி, ஜெயகாந்தன், சுந்தரராமசாமி முதலிய படைப்பாளிகள் புதுமைப்பித்தன் பாதையில் செல்கின்றனர். இந்தப் பாதையை மேன்மேலும் விரிவுபடுத்தவும் உலகின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் கொண்டு செல்லவும் நாம் இடையூறாது உழைக்க வேண்டும். இது தமிழ் நெஞ்சம் படைத்த ஒவ்வொருவரின் கடமையாகும்.

ஈடு இணையற்ற இந்திய இலக்கியப் படைப்பாளி, தமிழ் இலக்கியத்திற்குப் புதிய ஒளி பாய்ச்சிய கலங்கரை விளக்கம் புதுமைப்பித்தன்! புதுமைப்பித்தன் படைப்புகள் ஒவ்வொரு தமிழன் வீட்டிலும் பயிலப்பட வேண்டும் என்பது என் வேண்டுகோள்.

அமரர் புதுமைப்பித்தன் புகழ், அகிலமெல்லாம் பரவுக!

– செம்மலர், டிசம்பர் 95

தி.க.சி.யின் திறனாய்வுகளுக்குச் சான்றாக புதுமைப்பித்தன் பற்றிய அவரது கருத்துக்களை மாத்திரம் இங்கே எடுத்து வைத்துள்ளேன்.

1956 செப்டம்பர், 1957 ஆகஸ்ட் 'சரஸ்வதி' இதழிலும், 1995 டிசம்பர் செம்மலர் மாத இதழிலும், 1995 டிசம்பர் செம்மலர் மாத இதழிலும், புதிய பார்வை இதழிலும், 1998 ஆகஸ்ட் கணையாழி இதழிலும், 1998 நவம்பர் செம்மலர் இதழிலும் தி.க.சி. புதுமைப்பித்தன் பற்றி கூறிய விமரிசனத்தை மட்டுமே இங்கு எடுத்து வைத்துள்ளேன்.

1956, 1957 களில் இருந்த விமரிசன நிலையும், 1995– 1998இல் இருந்த விமரிசன நிலையும் தி.க.சி. என்றொரு மானுடனின் உள்ள நிலையை உள்ளவாறு நமக்கு புலப்படுத்துகிறது.

மௌனியின் கதை குறித்து தி.க.சி. கூறுகிறார்.

“மௌனியின் கதைகளில் மனமுறிவும், மரணமும் தான் முக்கிய அம்சங்கள். வேதனையில் தோய்ந்த எண்ணங்களும், நினைவுகளும், மனசஞ்சலமும், ஏக்கமும், அச்சமும், வெறுப்பும் அவர் கதைகளில் ஊடும் பாவுமாக ஓடிக்கொண்டே இருக்கும். மௌனியின் கதாபாத்திரங்கள் எப்படிப்பட்டவர்கள்?

நம்பிக்கை வறட்சியில் முக்குளித்து, சித்தபிரமையில் மூழ்கி, ஏன்? எதற்காக? எங்கே? என மன உளைச்சலில் தவித்துக் கொண்டிருப்பவர்களே. ஆறிய மனப்புண்களைக் கீறிவிட்டு அழுது கொண்டிருப்பவர்கள். கடந்த காலத்தில் காதல் முறிவால் ஏற்பட்ட வடுக்களின் வலியை மீண்டும் நினைவுக்கு கொண்டு வந்து சோகப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பர்கள். விநோதமான, விசித்திரமான, விபரீதமான பாத்திரங்கள் அவர்கள்.

மௌனி, கால் நூற்றாண்டுக்கு முன் ‘மணிக்கொடி’யில் எழுதினாலும் ‘மணிக்கொடி’யின் தேசிய இலட்சியத்தை ஒட்டி புதுமைப்பித்தன்,ந.பிச்சமூர்த்தி,கு.ப.ரா.,சிதம்பர சுப்பிரமணியம், பி.எஸ்.இராமையா போல் கதைகள் எழுதவில்லை. பாரதி பரம்பரையாக இலக்கியம் சமைக்கவில்லை.

மௌனியின் பரம்பரை பாரதிக்கு முந்தைய சித்தர்கள் பரம்பரை; மெய்ஞானம் வேண்டித் ‘திருமந்திரம்‘ எழுதிய திருமூலர் பரம்பரை.

மௌனியின் கதைகள் பற்றி என் கருத்துக்கள் இவைதான்.

க.நா.சு.வின் கதைகள் பற்றி தி.க.சி.யின் மதிப்பீடு இது,

வ.ரா. சிறுகதை எழுதினால் எப்படியிருக்கும்? அப்படித்தான் இருக்கிறது க.நா.சு.வின் ‘சோதனைக்கதைகள்’ வ.ரா.வின் நடை, அவர் சிறுகதையில் சமைக்க விரும்பும் உருவத்துக்குப் பகையாளியாக விளங்குகிறது என்பதுதான் என் கருத்து. முடிவாகக் கூறுமிடத்து இந்தத் தொகுதியில் உள்ள 16 கதைகளில் 4 கதைகள் தான் உருப்படியாக தேறுகின்றன.

25 ஆண்டுகளாக சிறுகதை எழுதியும் க.நா.சு. இத்துறையில் போதிய வளர்ச்சி காணவில்லை. காரணம், இவரிடம் விஷயம் இருக்கிறது. கலைத்திறன் குறைவு. இவருக்கு பல ஆண்டுகள் பின்னால் எழுதத் துவங்கிய லா.ச.ரா., கு.அழகிரிசாமி, தி.ஜானகிராமன், சுந்தர ராமசாமி, ஜெயகாந்தன் ஆகிய இன்னும் பலர் இவரைவிட தமது கலைத்தன்மையால் எவ்வளவோ தொலைவில் முன்னேறிவிட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

'மணிக்கொடி' எழுத்தாளர்களில் 'மணிமுடி'யாகத் திகழ்பவர் புதுமைப்பித்தன் என்பது தி.க.சி.யின் அழுத்தமான அபிப்பிராயம்.

க.நா.சு. சிறந்த சிந்தனையாளர், உலக இலக்கியங்களை நன்கு கற்றவர்; அவர் காலத்தில் அலை அலையாக எழுந்த தமிழ் முற்போக்கு எழுத்தாளர்களை அவர் தம் படைப்புகளை அறிமுகப்படுத்தவோ, அடையாளம் காட்டவோ தவறியதோடு முற்றிலுமாக முற்போக்கு எழுத்தாளர்களை இருட்டிப்பு செய்தார் என்பதே தி.க.சி.யின் கருத்து. அதன் பொருட்டே க.நா.சு.வின் எழுத்துக்கள் அனைத்தையும் படித்ததற்குப் பின்னரே மேற்கண்ட கருத்தை பகிரங்கமாகத் தெரிவித்தார்.

தி.க.சி.யின் விமர்சனம் க.நா.சு.வின் ஆதரவாளர்களுக்கு முகச்சுளிப்பை ஏற்படுத்தியது. அவரை "ஆகா ஓகோ!" என்று வானளாவப் புகழ்ந்தவர்களை எல்லாம், "அப்படியா!" என்று யோசிக்க வைத்தது. எது எப்படியோ இலக்கிய உலகில் க.நா.சு. 'மதிப்பு' எத்தகையது என்பதை தாமரை இதழில் எழுதிய கட்டுரைகள் மூலமாக அடையாளப் படுத்தியவர் தி.க.சி.

விரிவஞ்சி தி.க.சி.யின் இலக்கியத் திறனாய்வுகளில் அடங்கிய விஷயங்களை நிறுத்திக் கொள்கிறேன்.

விமர்சனத் தமிழ்

சிவகங்கை அன்னம் (பி) லிமிடெட் சார்பில் தி.க.சி.யின் விமர்சனத் தமிழ் நூல் 1993 ஏப்ரலில் 253 பக்கங்களில் வெளிவந்தது. அதில் தி.க.சி. எழுதிய என்னுரை இதோ,

என்னுரை

இந்நூலை நான் வெளியிடுவதற்கான காரணம் எனது ஐம்பதாண்டுக்கான எழுத்து அனுபவமே! நாவல் தவிர, ஏனைய இலக்கியத் துறைகளில் எனது எழுத்துக்கள் தமிழகத்திலும், இலங்கையிலும் உள்ள பல்வேறு பெரிய, சிறிய இதழ்களில் வெளிவந்துள்ளன.

திறனாய்வு என்பது, படைப்பிலக்கியத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் என்பதால், ஐம்பதுகளில் இருந்து திறனாய்வுத் துறையின் பக்கம் என் கவனம் திரும்பியது.

படைப்பிலக்கியத்துறையில் என்னை ஈடுபடுத்தியவர் வல்லிக்கண்ணன் அவர்கள். விமர்சனத்துறையில் எனக்கு வழிகாட்டியவர்கள் பேராசிரியர் நா.வானமாமலை அவர்களும் தோழர் ப.ஜீவானந்தம் அவர்களும்

மார்க்ஸ், எஸ்கல்ஸ், லெனின், கார்க்கி மற்றும் பல உலகச் சிந்தனையாளர்களின் கருத்துக்கள், “மார்க்சிய அழகியல்” குறித்து எனக்கு வெளிச்சம் தந்தன.

அவற்றை இந்தியச் சூழலுக்கும் தமிழக மரபுக்கும் ஏற்பப் பொருந்திப் பார்த்து எனக்கென ஒரு விமர்சனப் பார்வையை உருவாக்கிக் கொண்டேன்.

நாற்பத்தி இரண்டுகளில் இருந்து எனது படைப்புகளும், விமர்சனக் கட்டுரைகளும் இன்று வரை வெளிவந்தாலும், பல்வேறு காரணங்களால் அவைகளை நான் தொகுத்து வைக்கவில்லை.

*1990*ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பணியில் இருந்து நான் ஓய்வு பெற்ற பிறகு, எனது கட்டுரைகளைத் தொகுத்து நூலாக வெளியிட நேரிலும், கடிதங்களின் வாயிலாக பல்வேறு நண்பர்கள் வற்புறுத்தி வந்தனர்.

இந்தச் சூழலில், எனது கட்டுரைகளைத் தொகுக்க முயன்றேன். இப்பணியில் மிகுந்த ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செயல்பட்டு, பல்வேறு கால கட்டங்களில், பற்பல இதழ்களில் வெளிவந்த எனது கட்டுரைகளைத் தேடிப்பிடித்துச் சேகரித்து எனக்கு அனுப்பி உதவிய இனிய நண்பர்கள் வீர.வேலுசாமி, என்.மாரியப்பன், டாக்டர் துரை,

சீனிவாசன், எஸ்.எஸ்.போத்தையா, சூரங்குடி அ.முந்தானந்தம், வல்லிக்கண்ணன், "தீபம்" எஸ் திருமலை, "சரஸ்வதி", வ.விஜய பாஸ்கரன், என்.ஆர்.தாசன், மு.மகாதேவன், ஜி.ஜி.ராதாகிருஷ்ணன், பசுமைக்குமார் மற்றும் பல இலக்கிய நெஞ்சங்களுக்கு எனது உளங்கனிந்த நன்றி.

இந்நூலைத் தொகுப்பதில் உறுதுணையாக விளங்கிய இளவல் – கழனியூரன் அவர்களுக்கும், எனது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றி.

இந்நூலில் வெளிவந்துள்ள கட்டுரைகளை வெளியிட்ட பத்திரிக்கையாளர்களுக்கும், பதிப்பகங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

எனது நெடுங்கால நண்பரான கவிஞர் மீரா அவர்கள் அன்னம் பதிப்பகத்தின் வாயிலாக அழகிய முறையில் இந்நூலை வெளியிடுவது குறித்து மன நிறைவடைகிறேன். அவருக்கும், அன்னம் பதிப்பகத்தார்க்கும், அச்சுத் தோழர்களுக்கும் என் நன்றி உரியது.

தமிழ்த் திறனாய்வுத் துறையின் வளர்ச்சிக்கு இந்நூல் சிறிதளவேனும் உதவுமாயின் நான் மிக மகிழ்ச்சி அடைவேன்.

அன்புடன்

தி.க.சி.

21ஈ, சுடலைமாடன் கோவில் தெரு,
திருநெல்வேலி –6
15–12–1992

பொருளடக்கம்

இலக்கியம் சொந்த விஷயமா?
இலக்கியம் கலையா? வியாபாரமா?
இப்படியும் ஒரு கருத்து
புழுதியில் எறிந்த வீணை
கதைத் துறை
ஒளிபடைத்த கண்ணினாய் வா, வா, வா,

வ.ரா.சில சிந்தனைகள்
முன்னேறுகிறோம் முன்னேறுவோம்
பதினேழு ஆண்டில் இலக்கியம்
அசுரகணத்துடன் போரிடுக
இரவல் விசிறி மடிப்புகளும் செவிலித் தாய்களும்
தமிழ் ஒளி - சில நினைவுகள்
நாகம்மாள்
மண்ணில் தெரியுது வானம்
தமிழ்ப் பத்திரிகைத் துறையில் சித்தாந்தப் போராட்டம்
1971 ஆம் ஆண்டில் ‘கசடதபற’
வாசக நோக்கில் தமிழ்ச் சிறுகதைகள்
இன்றைய தமிழ் நாடகம்
நா.வானமாமலை - ஓர் அறிமுகம்
படைப்புலகில் சித்தாந்தப் போராட்டம்
முற்போக்கு இலக்கியத்தின் மூன்று எதிரிகள்
எதிர் நீச்சல் போடும் இலட்சியப் படைப்பாளி
திறனாய்வு: புதிய சிந்தனைகள் புதிய அணுகுமுறைகள்
வெளிச்சத்தை நோக்கி - ஒரு கண்ணோட்டம்
திறனாய்வு துறையில் ஒளிவிளக்கு
இலக்கிய விமர்சனத்துறையில் தற்காலப் படைப்புகளும் போக்குகளும்
அபாயம் எங்கிருந்து வருகிறது
நா.பா.வும் தீபமும்; சில நினைவுகள்
பாரதியின் இரு சீடர்கள்
தமிழ்ச் சிறுகதைகள் - ஓர் உரத்த சிந்தனை
சிந்தனையும் சமுதாய வளர்ச்சியும்
இன்றைய சூழலில் படைப்பும் படைப்பாளிகளும்
எண்பதுகளில் தமிழ் நாவல்
பன்னிரண்டு கதைகள் - ஒரு மதிப்பீடு
தோழர் ஆர்.கே. கண்ணனின் கலை இலக்கியப் பணிகள்

கட்டுரை விஷயங்களை தி.க.சி.யின் நூலை வாசித்து அறிந்து கொள்க.

திகசியின் விமர்சனத் தமிழ் நூல் இரண்டாம் பதிப்பு டிசம்பர் 2011 இல் சென்னை பூங்கொடி பதிப்பகம் சார்பில் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பிற்கு தி.க.சி. வழங்கிய என்னுரை இதோ;

1993 ஏப்ரலில் வந்த நூல் டிம்மி சைஸ் 1/8. 2011இல் வந்த நூல் கிரவுண் சைஸ் அவ்வளவு தான் வித்தியாசம், கட்டுரைகள் எல்லாம் ஒன்றுதான்.

இந்த நூலுக்கு பதிப்புரை எழுதிய கவிஞர் மீராவின் தங்க வரிகள் இதோ,

இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்று தமிழை பகுத்து முத்தமிழ் என்கிறோம்.

தமிழிலக்கியம் நான்காந்தரத்துக்குத் தள்ளப்பட்டு விடக்கூடாது என்று தடுத்தாட் கொள்ளவே தமிழில் நான்காவது தமிழ் 'விமர்சனத் தமிழ்' வேண்டும் என்கிறோம்.

தி.க.சி. வல்லிக்கண்ணனின் 'இளந்தமிழன்' எனும் கையெழுத்து ஏட்டில் தான் முதன் முதலாக எழுதினார். 1942 இல் நாரண துரைக் கண்ணனின் 'பிரசண்ட விகடன்' இதழில் இவரது முதல் கதை வெளிவந்தது. அதிலிருந்து தொடர்ந்து, கிராம ஊழியன், கலாமோகினி, ஹிந்துஸ்தான், ஹனுமான், சக்தி, ஜனசக்தி, சரஸ்வதி, சாந்தி, தாமரை, செம்மலர், கண்ணதாசன், ஆனந்தவிகடன், குமுதம், இந்திய டுடே, தினமணி, கணையாழி, எழுத்து, இலக்கிய வட்டம், மல்லிகை, சுபமங்களா, புதிய பார்வை முதலான இதழ்களில் 50 ஆண்டுகளாக எழுதி வந்துள்ளார். நாவல், ஓரங்க நாடகம், கவிதை, சிறுகதை என்ற அளவில் படைப்பாளியாகவும் கட்டுரை, திறனாய்வு, மொழி பெயர்ப்பு என்று பல்வேறு இலக்கியத்துறை எழுத்தாளராகவும் பங்களிப்பை நல்கி உள்ளார்.

தி.க.சி., த.நா. கலை இலக்கியப் பெருமன்றம், முற்போக்கு எழுத்தாளர் சங்கம், இலக்கியச் சிந்தனை, இலக்கிய வீதி, சி.எல். எஸ். இலக்கிய நண்பர் வட்டம் ஆகிய அமைப்புகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு அவற்றின் மூலம் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

திறனாய்வுத் திலகமாகத் திகழ்வதற்குக் காரணமே இவர் வரையறையின்றி வருவதையெல்லாம் படிக்கும் நல்ல வாசகர் என்பதனால் தான். மூழ்க மூழ்கத்தான் முன்பு முங்கிய இடம் ஆழம் குறைந்தது எனக்கண்டு கொள்ள முடியும். நிறையப் படிக்கப் படிக்கத்தான் படித்து முடித்த சிலவற்றின் குறைகள் பளிச்சென்று தெரியவரும். இவர் பல்கலைக் கழக வளாகத்தில் தொங்கும் தோள்பையோடு திரியும் வறட்டுத் தனமான ஆய்வு விமர்சகராகவோ க.நா.சு. போல் கடுமையான அபிப்ராயங்களைக் கொட்டும் விமர்சக விமர்சகராகவோ அல்லாமல் பாமரர்களும் ஏற்கும் வண்ணம் ஒரு 'வாசக' விமர்சகராக விளங்குவது தமிழுக்கு யோகம்.

தி.க.சி. படைப்புகளை மட்டுமின்றி படைப்பாளர்களையும் போற்றுவதில் முன் நிற்பவர். எடுத்துக்காட்டுகளை இந்த நூலிலேயே காணலாம். இதில் வ.ரா. தமிழ் ஒளி, நா.வானமாமலை, கலாநிதி கைலாசபதி, தீபம் நா.பார்த்தசாரதி, ஆர்.கே.கண்ணன், வல்லிக்கண்ணன் ஆகியவர்களின் வாழ்க்கை ஓவியங்கள் விமர்சன நோக்கில் தீட்டப் பெற்றுள்ளன. "வல்லிக்கண்ணன் ஓர் உண்மையான கலைஞனுக்கு இருக்க வேண்டிய அழகுணர்ச்சியைப் பெற்றவர். அவர் இயற்கையின் அழகுக்கோலங்களை மிகவும் ரசிப்பதோடு, மனிதனால் படைக்கப் பெற்றுள்ள சிற்பங்களையும் ஓவியங்களையும் ஏனைய கலைகளையும் ஆழ்ந்து ரசிப்பவர்" என்று நமக்கு அவரின் ரசனை ஓவியத்தைக் காட்டிவிட்டு அவரைப்பற்றி பலருக்குத் தெரியாத ஒரு செய்தியை, அதாவது

"லைலாமஜ்னு என்ற தமிழ் திரைப்படத்திற்கு அவர் வசனம் எழுதியுள்ளார்" என்பதை வெளிப்படுத்தியவர் தி.க.சி.

ஒரு கட்டுரையில் வளர்ச்சி நிறைவாக இல்லாத நிலையில் பத்திரிகை தொடர் கதை எழுதி வருபவர்கள்

"சிறிது ஓய்வு எடுத்துக் கொண்டு உலக இலக்கிய சிகரங்களை மொழி பெயர்பிலாவது படித்து உணர வேண்டும்; அவற்றுடன் தமது சாதனைகளையும் ஒப்ப நோக்க வேண்டும்".

தி.க.சி.யின் விமர்சனத்தில் தன் நக்கீரப் பார்வையை என்றைக்கும் விட்டுக்கொடுப்பதில்லை. புதுமைப்பித்தனைப் போற்றி எழுதிய இவரே புதுமைப்பித்தன் குறைகளையும் சுட்டிக்காட்டத்

தவறியதில்லை. ஆர்.பி. மல்லாரி என்ற எழுத்தாளர் ஒரு ஆங்கிலப் பத்திரிகையில் வந்த கதையை மொழிபெயர்த்து ஒரு இதழில் வெளியிட்டுவிட்டார். அந்த பத்திரிகை ஆசிரியர் கண்ணில் அவர் மண்ணை தூவ முடிந்தபோதிலும், தி.க.சி. போன்ற விழிப்புள்ள விமர்சகர் கண்களில் இருந்து தப்ப முடியவில்லை.

இவரைப்போன்ற இலக்கியக்காவலர்கள் இருப்பதால் தான் ஓரளவுக்காவது இலக்கியத் திருடர்கள் அச்சத்துடன் திருட்டை நிறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இல்லாவிடில் மொழிபெயர்ப்பெல்லாம் சொந்தப் படைப்புகளாகிவிடும். காரணம் இதழாசிரியர்கள் எல்லோருக்கும் உலக இலக்கிய ஞானம் மட்டுமல்ல உள்ளூர் இலக்கிய ஞானமும் இருப்பதில்லை. புரியாமல் புரிந்ததுபோல் கௌரவத்திற்காகத் தலையாட்டும் கூட்டமாக நாம் இருக்கக்கூடாது என்ற கொள்கையுடையவர் தி.க.சி.

“புரியாமை” என்பது தான் நவ நவீனத்துவத்தின் முக்கிய அம்சம் என்றால் நவநவீனத்துவம் (Post Modernism) தனக்குத்தானே குழி தோண்டிக் கொள்கிறது என்று துணிச்சலாகக் குறிப்பிடுவார் தி.க.சி.

“இலக்கியம்” என்பது யதார்த்த வாழ்க்கையிலிருந்து எழுகிறது. அந்த யதார்த்த வாழ்க்கை சமுதாயத்தினால் அமைக்கப் பெறுகிறது. சமுதாயம் இல்லாமல் தனிமனிதன் இல்லை. ஆகவே இலக்கியம் என்பது தனி மனிதனை ஊற்றுக் கண்ணாகக் கொண்டு பிறந்தாலும் கங்கையைப் போல், காவிரியைப்போல், பொருநையைப் போல், சமுதாயத்தின் சொத்து ஆகும்.

கருவரங்கத்துள் இருந்தபோது இவர்கள் எண்ணம் எப்படியோ நாமறியோம். ஆனால், இவ்வுலகமென்னும் திருவரங்கத்துட் புகுந்து, கலைப்பற்றும் மொழிப்பற்றும் தம்மை ஆட் கொண்டவுடன், இவர்கள் கன்னித் தமிழின் காவலர் ஆகி, நம்மையெல்லாம் ஆட்டுவிக்கத் தொடங்கி விடுகின்றனர்.

தி.க.சி.க்கு இவ்வாறு நயமாக திவ்வியப் பிரபந்தத்துட் புகுந்து வரும் நடையும் உண்டு என்று போற்றிப் பாராட்டுபவர் கவிஞர் மீரா.

விமர்சனத் தமிழ் இரண்டாம் பதிப்பு வெளியிடும்போது தி.க.சி. எழுதிய என்னுரை இதோ;

1993ஆம் ஆண்டில் எனது பெருமதிப்பிற்குரிய நண்பர் பேராசிரியர் கவிஞர் மீரா அவர்களால் 'விமர்சனத் தமிழ்' என்னும் இந்நூலின் முதற்பதிப்பு வெளியடப்பட்டது இப்போது 7 ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் எனது பெருமதிப்பிற்குரிய நண்பர் திரு வே.சுப்பையா அவர்களின் ஆதரவில் பூங்கொடி பதிப்பகம் வாயிலாக இரண்டாம் பதிப்பு வெளிவருவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன்.

தமிழ் இலக்கியம் உலக இலக்கியமாக மலர்ந்து வரும் இன்றையக் காலகட்டத்தில் விமர்சனத் தமிழின் முக்கியத்துவம் குறித்து விரித்துரைக்க வேண்டியதில்லை.

"புதிய மனிதனுக்காக புதிய வாழ்க்கைக்காக, புதிய கலாச்சாரத்திற்காக" கலை, இலக்கியமும், விமர்சனமும் பயன்பட வேண்டும் என்பது என் கருத்து. *அதை இந்நூல் வலியுறுத்துகிறது என்று நம்புகின்றேன்.*

இலக்கிய ஆர்வலர்களுக்கு மட்டுமின்றி, ஆய்வாளர்களுக்கும் பரந்த அளவில் இது ஆக்கப்பூர்வமாகப் பங்காற்றியுள்ளது என்று பலராலும் மதிப்பிடப்படுகிறது.

தமிழ்த் திறனாய்வுத்துறையில் நடு நிலைமையான நேர்மையான அறிவுபூர்வமான விமர்சனங்கள் மேன் மேலும் வளரவேண்டும் என்ற வேகமும் தாகமும் அதிகரித்து வரும் வேளையில், இந்நூலின் இரண்டாம் பதிப்பு வெளிவருவதில் நான் பெருமகிழ்ச்சியும் மன நிறைவும் கொள்கிறேன்.

தமிழ்த் திறனாய்வுத்துறையின் தேவையை நிறைவு செய்யும் வகையில் இந்நூலை வெளியிடும் சிறந்த தமிழன்பரான "பூங்கொடி" வே.சுப்பையா அவர்களுக்கு என் இதயம் கனிந்த நன்றி.

இந்நூலின் முதற்பதிப்பை வெளியிட்டு, சிறந்த முன்னுரை வழங்கிய பேராசிரியர் கவிஞர் மீரா அவர்களுக்கும் எனது நூல்கள், வெளியீடுகள் அனைத்திற்கும் இடையறாது உதவும் இளவல் கழனியூரன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி!

அன்புடன்
தி.க.சி.

விமர்சனங்கள் - மதிப்புரைகள் பேட்டிகள்

கோவை விஜயா பதிப்பகம் 1994 டிசம்பரில் தி.க.சி.யின் விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகளை நூலாக 323 பக்கங்களில் வெளியிட்டது. அந்த நூலுக்கு தி.க.சி. வழங்கிய என்னுரை இதோ;

இந்நூல் எனது மூன்றாவது 'கட்டுரைத்' தொகுப்பு.

1966 முதல் 1994 ஏப்ரல் வரையிலான எனது "விமர்சனங்கள் – மதிப்புரைகள் – பேட்டிகள்" பலவும் இதில் அடங்கியுள்ளன.

1993 இல் வெளியான "தி.க.சி.யின் திறனாய்வுகள்" "விமர்சனத் தமிழ்" ஆகிய எனது இரு நூல்களுக்கும் மன நிறைவளிக்கும் வகையில் சிறந்த வரவேற்புக் கிடைத்துள்ளது. அத்தகைய வரவேற்பை இந்நூலும் பெறும் என்று நம்புகிறேன்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக எனது எழுத்துக்களை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும், பதிப்பகங்களுக்கும் எனது உளமார்ந்த நன்றி!

இந்நூலைத் தொகுப்பதில் மிகவும் உறு துணையாக இருந்த இளவல் கழனியூரன் அவர்களுக்கும் எனது நன்றி உரியது.

கட்டுரைகளைத் தந்து தொகுப்புக்கு உதவிய திருவாளர்கள் தொ.மு.சி.ரகுநாதன், வல்லிக்கண்ணன், ஆர்.ஹரீந்திரன், அகிலன் கண்ணன், வண்ண நிலவன், மா.அரங்கநாதன் (முன்றில்), என்.ஆர்.தாசன், சு.வெங்கடேசன் (செம்மலர்), எஸ்.திருமலை (தீபம்), செ.ஞானன், சுப்ர பாரதி மணியன் (கனவு), கவிதாசரண், சிவகாமி மற்றும் தாமரை, செம்மலர் ஆசிரியர் குழுவினருக்கும் எனது இதயம் கனிந்த நன்றி.

இந்நூலை மனமுவந்து வெளியிடும் அருமை நண்பர் விஜயா பதிப்பக உரிமையாளர் திரு.மு.வேலாயுதம் அவர்களுக்கும் என் நன்றி உரியது.

அன்புடன்
தி.க.சிவசங்கரன்

21இ, சுடலைமாடன் கோவில் தெரு, திருநெல்வேலி –6
நாள்: 25–03–1994

அந்த நூலில் உள்ள பொருளடக்கம் இதோ;

பகுதி I விமர்சனங்கள்

புனலும் மணலும் - ஒரு ரசிகனின் அனுபவம்
மூலதனம் - ஓர் அறிமுகம்
நான் படித்த நாவல்கள்
தமிழ் நாவலும் தத்துவப் போக்குகளும்
தமிழ்ச் சிறுகதையின் எதிர்காலம்
"சிங்கப்பூர் - இலக்கியக் களம்"
'இப்படிக்கு உங்கள் எதார்த்தமுள்ள'
சிறுகதைத் தொகுப்பு - முன்னுரை
உங்களுடன் ஒரு கணம்
பாரதி பாதையில் விந்தன்
'மரக்குதிரை' ஒரு கருத்துரை
"தொ.மு.சி.யின் கவியரங்கக் கவிதைகள்"
புதுக்கவிதை மெல்லச் சாகிறது?
பாரதியின் தத்துவமும், இன்றையச் சூழ்நிலையும்
புழுதியில் எறிந்த வீணை
"நா.பா."வின் பண்பும் பணிகளும்
அமரர் "நா.பா." - சில நினைவுகள்
நா.வா.வின் ஆராய்ச்சி இதழ் 42 ஜனவரி 1993 ஒரு மதிப்பீடு
நண்பர் வட்டம் ஒரு மதிப்பீடு
இலக்கிய இயக்கங்கள்
ஈடு இணையற்ற சாதனை
சோவியத் இலக்கியம் - சில உண்மைகள்
இளைஞர்களும் இலக்கியச் சிந்தனையும்
ஓர் இலக்கியவாதியின் அரசியல் சிந்தனை
கவிஞர் தயாவின் ஆளுமை
தமிழ்ப் புத்தக வெளியீடு; செய்ததும் செய்ய வேண்டியதும்
மனித நேயத்தின் மகத்தான சின்னம்

என்.ஆர்.தாசன், ஆளுமையும் படைப்பாற்றலும்

சகோதர எழுத்தாளனுக்கு ஒரு திறந்த மடல்

பகுதி II மதிப்புரைகள்

சமுதாய வீதி

பொய்யான இரவுகள்

ஒரு குடும்பத்தின் கதை

தலைகீழ் விகிதங்கள்

கரிப்பு மணிகள்

பிறகு

கலையாத கனவுகள்

புதிய புத்தகங்கள்

இந்திய இலக்கியச் சிற்பிகள்

விழிகள் தொட்ட தூரமெல்லாம்

பழமலய் கவிதைகள்

கலைநயம் வாய்ந்த கதைகள்

அகிலன் ஜெயகாந்தன் மரபில் ஓர் இளங்கலைஞன்

தடைகளை தகர்க்கும் தமிழ்ப் பெயர்

உலகளாவிய மனித நேயம்

நேர்காணல் தொ.மு.சி. ரகுநாதன்

பகுதி III பேட்டிகள்

ரகுநாதன்

தி.க.சி.

புதுமையைவிட பித்தம் தான் அதிகம்

தி.க.சி. - முற்போக்குக் கலை இலக்கியத்தில் உறுதிமிக்க வழிகாட்டி

ஆகிய 48 கட்டுரைகள் அந்த நூலில் இடம் பெற்றிருந்தது.

தி.க.சி. திறனாய்வுகள்

1994 டிசம்பரில் கோவை விஜயா பதிப்பகம் வெளியிட்ட தி.க.சி. விமர்சனங்கள் – மதிப்புரைகள், பேட்டிகள்

நூலினை காலமுறையில் நிரல்படுத்தி, தி.க.சி. அறிமுகம் என்ற பகுதியை மட்டும் புதிதாக சேர்த்து சென்னை மக்கள் வெளியீடாக, மே.து.ராசுகுமார், ரா.வசந்தா ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு டிசம்பர் 2003 இல் 256 பக்கங்களில் அந்த நூல் **தி.க.சி. திறனாய்வுகள்** எனும் தலைப்பில் வெளிவந்தது.

எளியேன் இரு நூல்களையும் ஒப்பிட்டுப்பார்க்கையில் மானுட சங்கமம், பகத்சிங்கும் புரட்சித் தோழர்களும் என்ற இரண்டு தலைப்பில் கட்டுரைகள் இதில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இது தி.க.சி.யின் விமர்னசங்கள், மதிப்புரைகள், பேட்டிகள் நூலில் இருக்கும் புதிய புத்தகங்கள் என்ற கட்டுரையை இரு பிரிவுகளாக மாற்றி வெளியிட்டுள்ளது மட்டும் தான் மற்றபடி இரு நூலும் ஒன்று தான்!

எழுத்தாளர்கள் – வாசகர்களுக்கான கையேடு

15.3.1995இல் வல்லிக்கண்ணன் தி.க.சி.க்கு எழுதிய கடிதத்தில் தி.க.சி. விமர்சனங்கள் – மதிப்புரைகள் – பேட்டிகள் புத்தகத்தை படித்து முடித்து விட்டேன். ஒரு கட்டுரை இரண்டு மூன்று என்றும் சமயம் கிடைக்கிற போதெல்லாம் படித்தேன். நல்ல பயனுள்ள தொகுப்பு. இன்றைய வாசகர்கள் – எழுத்தாளர்களுக்கும் இனி வரும் எழுத்தாளர்கள் – வாசகர்களுக்கும் ஒரு கையேடு ஆக – ரெபரன்ஸ் புக் ஆக பயன்படக்கூடிய நூல் என்று அன்பிற்குரிய அய்யா வல்லிக்கண்ணன் அந்த நூலுக்கு வழங்கிய சான்றுக்குப் பிறகு, அது குறித்து அடியேனும் சொல்லிடவும் வேண்டுமோ!

19.7.1999

தீக்கதிர் இலக்கியச் சோலை பகுதியில் விமர்சனம் வேருக்கு நீராக வேண்டும் என்று வந்தனாவின் நேர்காணலில் விவரித்திருந்தார் தி.க.சி.

அவரிடம் தமிழின் சிறந்த விமர்சகர்கள் யார் என்று கேட்டபோது அவர் சொன்னார். மார்க்சீய விமர்சகர்கள் என்று

எடுத்துக் கொண்டால் கைலாசபதி சிவத்தம்பி, வானமாமலை, தொ.மு.சி.ரகுநாதன், பொன்னீலன் அருளன் மற்றும் பலருண்டு. காந்திய விமர்சனங்களில் தி.க.சி. ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் சி.சு.செல்லப்பா, ந.பிச்சமூர்த்தி மற்றபடி யாராவது என்று கேட்டபோது சொல்லத் தோன்றவில்லை என்று பதில் தந்தார் தி.க.சி. (தினமணி கதிர் பேட்டி – சுகதேவ் 18.3.2001, நான் தபால் கார்டு இலக்கியவாதியா?)

கடல் படு மணல்

தி.க.சி.யின் மீது தனது முழு அன்பையும் செலுத்திய, செலுத்துகிற, செலுத்தி வருகிற நண்பர் வே.முத்துக்குமார் தி.க.சி.யின் 87வது பிறந்த நாளில் 30.3.2011இல் கடல் படு மணல் எனும் 112 பக்கங்களை கொண்ட நூலினை வெளியிட்டார். அத்தொகுப்பில் சித்தனும் உதவினார்.

தி.க.சி.யின் நேர்காணல்கள்

நண்பர் வே.முத்துக்குமாரைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு தி.க.சி. நேர் காணல்கள் எனும் நூல் 187 பக்கங்களில் 2011 டிசம்பரில் வெளிவந்தது.

காலத்தின் குரல்

மார்ச் 2012 இல் காலத்தின் குரல் தி.க.சி. எனும் நூலினை வே.முத்துக்குமார் 63 பக்கங்களில் வெளியிட்டார்.

தி.சுபாஷினி

அதே ஆண்டில் கண்ணியத்திற்குரிய சகோதரியார் தி.சுபாஷினி "தந்தைமைத் தவழும் வளைவு வீடு" எனும் 40 பக்கங்களைக் கொண்ட நூலினை தி.க.சி. குறித்து எழுதி இலவசமாகவே அனைவருக்கும் தந்தார்.

பா.செயப்பிரகாசம்

பேசும் கால்க்காசு கடுதாசி தி.க.சி.யின் திறனாய்வுகள் காலச்சுவடுகள் வெளியிட மறுத்த கட்டுரை எனும் 32 பக்கங்கள் கொண்ட நூலினை நண்பர் பா.செயப்பிரகாசம் வெளியிட்டு தி.க.சி.யின் ஆளுமையைப் பறைசாற்றினார்.

தி.க.சி.யின் நூலினை 2014இல் தி.க.சி.யின் நாட் குறிப்புகள் வே.முத்துக்குமாரால் வெளியிடப்பட்ட செய்தியினை முன்னரே கூறிவிட்டோம்.

தி.க.சி. என்ற மனிதன் சில மதிப்பீடுகள்

நண்பர் அ.நா.பாலகிருஷ்ணன் அவர்களைத் தொகுப்பாசிரியராகக் கொண்டு தி.க.சி. என்ற மனிதன் சில மதிப்பீடுகள் எனும் நூல் 120 பக்கங்களில் டிசம்பர் 2004இல் வெளிவந்தது.

குள்ளக்காளிபாளையம் கே.பாலசுப்பிரமணியன்

தி.க.சி. அவர்களுக்கு 13.10.2009 முதல் 4.10.2012 வரை எழுதிய கடிதங்களின் தொகுப்பை குள்ளக்காளிபாளையம் நண்பர் கே.பாலசுப்பிரமணியம் “நிழல் விடுத்து நிஜத்திற்கு” எனும் 123 பக்கங்களைக் கொண்ட நூலினை 2013 மார்ச்சில் தந்தார்.

தி.க.சி. என்றொரு தோழமை

படைப்புலக பிரம்மாக்கள் பலரிடமிருந்து கட்டுரைகளைப் பெற்று அண்ணன் கழனியூரன் தி.க.சி. என்றொரு தோழமை எனும் 274 பக்கங்களைக் கொண்ட நூலினை 2014இல் தி.க.சி.யின் மறைவிற்குப் பிறகு வெளியிட்டார்.

காவ்யா சண்முகசுந்தரம்

போற்றுதலுக்குரிய அண்ணன் காவ்யா சண்முகசுந்தரம் அந்த நூலினை அவரது ‘காவ்யா’ பதிப்பகம் மூலம் வெளியிட்டார்.

திகசி என்ற எழுத்துலகப் பிரம்மாவுக்கும் திவான் என்ற எளியேனுக்கும் உள்ள தொடர்பு பற்றி அந்த நூலில் எதுவும் இல்லை. மதிப்புமிகு தோழர் எஸ்.வி. ராஜதுரையின் கட்டுரையில் மட்டும் எளியேனது பெயர் வரும் அவ்வளவுதான்!



தி.க.சி. - தீவான்

இந்தியாவில் 1948ல் பொதுவுடைமை இயக்கம் தடைசெய்யப்பட்டது. முன்னணி, பேரணி, உலக அரசியல், ஜனநாயகம் எனும் இதழ்கள் வெளிவந்தது. குயிலன், தமிழ் ஒளி, எஸ்.ஆர்.எஸ். ஆகியோருடன் அப்போது இணைந்து பணியாற்றியவர் தி.க.சி. (பெ.சீனிவாசன், தமிழக கம்யூனிஸ்ட் வீரர்கள் பகுதி, சென்னை 2005, பக்கம் 253, 254)

1953களில் ஜனசக்தி வாரப் பத்திரிகையிலும், நா.வானமாமலையின் ஆராய்ச்சி குழுக் கூட்டத்தில் தொ. மு.சி.ரகுநாதனின் சாந்தி இதழிலும் திறனாய்வுக் கட்டுரைகள் தி.க.சி. எழுதிக்கொண்டிருந்த காலத்தில் 1.9.1954இல் அடியேன் பிறந்தேன். அவர் கட்டி முடிக்கப்பட்ட கோபுர நிலையில் இருந்தபோது அடியேன் கொட்டிக் கிடக்கும் செங்கலாக இருந்தேன்.

1990களில் சோவியத் நாடு செய்தித்துறை ஆசிரியர் குழுவில் இருந்து ஓய்வுபெற்று சொந்த ஊரான நெல்லைக்கு வந்தார்.

1993 களில் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மறுமலர்ச்சி; நெல்லையிலிருந்தே கழகப் பணிகளை தமிழர் தலைவர் வைகோ அவர்களின் தலைமையில் செயலாற்றிட வேண்டிய நிலைமை. நீறுபூத்த நெருப்பாக 1972 களில் இருந்தே இருந்து வந்த எழுத்துலக ஆசை வேகமானது. நெல்லை டவுண் 21ஈ, சுடலைமாடன் கோவில் தெருவை நோக்கி நடந்தேன்.

அப்பப்பா! முதல் சந்திப்பே மறக்க முடியாதது. அத்தனை அளவிற்கு மனிதாபிமானத்துடனும், மனித நேயத்துடனும் எளியேனிடம் தி.க.சி. நடந்து கொண்டார்கள்.

தனது முதுமையிலுங்கூட யார் வீட்டுக்கு வந்தாலும் அவர்களை முற்றம் தாண்டி, குறுக்குச் சுவர் தாண்டி வீதி வரைவந்து வழி அனுப்பி வைத்திடும் பாங்கு, தந்தை பெரியார், சிறு வயதினரைக் கூட எழுந்து நின்று 'வாங்க' என்னும் மரியாதை செய்திடும் நிகழ்வு எளியேனுக்கு நினைவுக்கு வந்தது.

மானுடம் கோலோச்சிய இடம் இது என்று இதயத்தில் இருத்திக் கொண்டேன். இங்கே சொல்ல வேண்டியது இன்றியமையாதது என்பதனையும் இதயத்தால் உணர்ந்து கொண்டேன். இதயபூர்வமான தந்தை – தனயன் உறவு இனிதே தொடர்ந்தது.

ஒரு நாள் தி.க.சி.க்கு வந்திருந்த கதைகள், நாவல்கள் சிலவற்றை எடுத்துப் பார்த்தேன். அப்போது தி.க.சி. சொன்னார்கள். அதையெல்லாம் எடுக்காதீர்கள். உங்கள் துறை வரலாறு; வரலாறு சம்பந்தமான நூல்கள் எது இருந்தாலும் இங்கிருந்து தாங்கள் என் அனுமதியுடன் எடுத்துச் செல்லலாம். பின்னர் திரும்பத் தரலாம் என்றார்கள்.

எதற்கு அய்யா கதைகள், நாவல்கள் எடுக்காதீர்கள் என்றேன். அப்போது சொன்னார்கள். நான் துவக்க காலத்தில் சினிமா விமர்சனம் எழுதினேன். அது சரிப்பட்டு வரவில்லை. எனவே அதனை நிறுத்திவிட்டேன் என்றார்கள்.

அப்போது தி.க.சி. என்னிடம் தந்த ஒரு திரை விமர்சனம் இதோ;

சரஸ்வதி

ஆசிரியர்: வ. விஜயபாஸ்கரன்

கை வருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம்—பாரதி

மலர் 3 இதழ் 6	ஜூன் 1957	ஹேவிளம்பி வைகாசி

உள்ளே

உங்கள் குரல் ...		2
மாபெரும் தேசிய எழுச்சி ...	ஆர். கார்த்திகைவேலு	5
காட்டிக்கொடுத்தவன் (சிறு கதை) ...	வல்லிக்கண்ணன்	9
ரகுநாதனைக் கேளுங்கள் ...	ரகுநாதன்	17
கவனக் குறைவு (ருஷ்யக் கதை) ...	செகாவ்	25
புதையல் (திரை உலகம்) ...	தி. க. சிவசங்கரன்	31
வளரும் தமிழ் ...	சாமி. சிதம்பரனார்	33
சினம் எனும் தீ (சிறு கதை) ...	ஜெயகாந்தன்	37
தோட்டியின் மகன் (தொடர் கதை) ...	தகழி சிவசங்கரம் பிள்ளை	49
வள்ளைப் பாட்டுகள் ...	'வித்யா'	61
இந்திய நினைவுகள் (புத்தகச் சுருக்கம்)	இலியா எரன்பர்க்	65

அட்டைப் படத்தில்

கேரள நாட்டின் முதன் மந்திரி திரு. இ. எம். சங்கரன் நம்பூதிரிபாத் அவர்கள் சென்ற மாதம் சென்னை வந்திருந்தார். சென்னை மக்கள் அவருக்கு அமோக வரவேற்பு அளித்தனர். வரவேற்புக்கு இ. எம். எஸ். நம்பூதிரிபாத் பதிலளிக்கிறார்.

படம்: ஜே. எம். கல்யாணம்

தனிப் பிரதி விலை 25 நயா பைசா. ஆண்டு சந்தா ரூ 3.

அடுத்த மாத இதழ் புதுமைப்பித்தன் மலராக மலர்கிறது

புதையல்

கமால் பிரதர்ஸின் "புதையல்" அதன் தயாரிப்பாளர்களுக்கும், டைரக்டர் கிருஷ்ணன் பஞ்சுவுக்கு, வசனகர்த்தா மு.கருணாநிதிக்கும், பட விநியோகஸ்தர்களுக்கும் ஒரு மகத்தான தோல்வியாகும்.

அம்மையப்பன், ராஜா ராணி, ரங்கோன் ராதா ஆகிய மூன்று படங்களையும் தொடர்ந்து இந்தப் படத்திலும் கருணாநிதிக்கு நற்பெயர் கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மு.கருணாநிதி கதையா? எழுதியிருக்கிறார்? கதை என்ற பெயரில் எதையோ கிறுக்கித் தள்ளியிருக்கிறார். நம்ப முடியாத நிகழ்ச்சிகளையும், செய்திகளையும் ஒன்று சேர்த்துக் குழப்பி, ஏதோ சரடுவிட்டிருக்கிறார். இதற்குப் பெயர் அறிவுப் படையலாம்! அபத்தக் களஞ்சியத்திற்கு அவரின் அகராதியில் இப்படி ஒரு புதுப்பொருள் இருக்கிறது போலும்!

நெசவாளியின் மகளான கதாநாயகி பரிமளா (பத்மினி) அரசகுமாரி போல் ஆடையணிந்து தோழிகளுடன் கடற்கரையிலும், தாமரைக் குளத்தருகிலும் ஆடிப்பாடி கும்மாளம் போடுகிறாள். தபால்காரனாக துரை (சிவாஜி கணேசன்) 'அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்க் காட்சியளிக்கும் கதாநாயகனாகத் துள்ளிக் குதிக்கிறான்'. இது போன்ற நெசவாளியின் மகளையும், தபால்காரனையும் எங்கு கண்டாரோ கருணாநிதி? பகுத்தறிவுக்கு விடை கொடுத்துவிட்டுக் கற்பனையூரில் வாழ்பவர்களால் தான் இது போன்ற 'புத்தம் புதுக் கதாபாத்திரங்களை' படைக்க இயலும்! லாகிரி மயக்கத்தில் சொக்கியிருப்பவர்களால்தான் இந்தக் கதாபாத்திரங்களை ரசிக்க முடியும்!

கருணாநிதியின் கதையும், கதாபாத்திரங்களும் இப்படியென்றால், வசனமும் பெரும்பாலும் சாரமற்ற சக்கையாகவே இருக்கிறது. கதையின் வேகத்தையும் விறு விறுப்பையும் தொலைத்துக் கட்டுவதற்கு, கருணாநிதியின் அடுக்குமொழி வசனங்களும், வர்ணனைகளும் நன்கு பயன்படுகின்றன.

கருணாநிதியின் கதாபாத்திரங்கள் எல்லாரும் கலைஞர்கள், கவிஞர்கள் காதலியை வர்ணித்தால் 'இது இயற்கை' என்று பொறுத்துக் கொள்ளலாம். உபபாத்திரமான மாயாண்டி (எம்.கே.ராதா) கூட இயற்கை வர்ணனையில் இறங்கும்போது உண்மையில் நாம் அவர் பால் இரக்கப்பட வேண்டியவர்கள் ஆகிறோம். அடுக்கு மொழி வசனத்திற்கும், அந்தி மயக்கப் பிதற்றலுக்கும் ஓர் அளவு வேண்டாமா?

கிருஷ்ணன் பஞ்சு டைரக்ஷன் என்றால், கண்ணை மூடிக்கொண்டு "படம் நன்றாயிருக்கும்" என்று சொல்லி விடலாம் என்று ஒரு நம்பிக்கை தமிழ்படம் பார்ப்போரிடையே இதுவரை இருந்து வந்தது. அந்த நம்பிக்கையை இப்போது கெடுத்து விட்டார்கள் டைரக்டர்கள் கிருஷ்ணன் பஞ்சு.

கிருஷ்ணன் பஞ்சு உண்மையிலேயே அக்கறையுடன் டைரக்ட் செய்திருந்தால், கண்டிராஜா தெருக்கூத்தும், சந்திரபாபுவின் பெண் வேட ஆபாச நடனமும் இடம் பெற முடியுமா? இடைவேளைக்குப் பின் படம் உயிரற்று, செத்த சவமாய்ப் போய்விட்டதே!

டைரக்டர் கிருஷ்ணன் பஞ்சு திரைக்கதையின் கோர்வையிலும், ஓட்டத்திலும் நடிகர்களின் எல்லை தாண்டாத நடிப்பிலும் கவனம் செலுத்தவில்லை. கவர்ச்சியிலும், சிவாஜி கணேசனின் 'ஸ்டண்டு' வேலைகளிலும், சந்திரபாபுவின் மிகை நடிப்பிலும் கவனம் செலுத்திய அவற்றுக்கே 'புதையலில் சிறப்பிடம் அளித்திருக்கின்றனர்.'

'புதையலின்' தோல்விக்குக் கருணாநிதியின் கதை அமைப்பும், கிருஷ்ணன் பஞ்சுவின் டைரக்ஷனும் முக்கிய காரணம் ஆகும்.

இந்தப் படத்தில் டி.எஸ்.பாலையா ஆதி முதல் அந்தம் வரை மிகச் சிறப்பாக நடித்திருக்கிறார். எம்.என்.ராஜம் சிறிது நேரம் வந்து போனாலும் கூட, அருமையாக நடித்திருக்கிறார். சிவாஜி கணேசனின் நடிப்பில் ஒரு விதச் சோர்வு தென்படுகிறது. பத்மினி இடைவேளைக்குப் பிறகு நன்கு நடிக்கிறார். எம்.கே. ராதாவின் நடிப்பு மனநிறைவு அளிக்கிறது.

ஒன்றிரண்டு பாடல்களைத் தவிர, வேறு ஒன்றும் சுகமில்லை. அநேகம் பாடல்கள் படத்தின் விறுவிறுப்புக்கு இடைஞ்சல் செய்கின்றன.

ஜி.விட்டல் ராவின் படப்பிடிப்பு இந்தப் படத்தின் சிறந்த அம்சங்களில் ஒன்று.

சுருங்கச் சொன்னால், திறமையான நடிப்பு இருந்தும், கதை வசனம், டைரக்ஷன், இசையமைப்பு ஆகியவற்றில் ஊழல்களும், கோளாறும் மலிந்திருப்பதால் கமால் பிரதர்ஸின் "புதையல்" தோல்விப் படங்களின் பட்டியலில் சேர்ந்து விட்டது.

பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இப்படம் வெளிவந்திருந்தால், கதாசிரியருக்கும், தயாரிப்பாளருக்கும் மக்களின் பாராட்டுக் கிடைத்திருக்கும்! அய்யகோ, காலம் கடந்து போய்விட்டது!!

14.5.1957
சரஸ்வதி

தி.க.சி. தனது வாழ்வில் சினிமா விமர்சனத்தை நிறுத்திக் கொண்டதை நாமும் இங்கே பின்பற்றுவோம்.

தி.க.சி. அவர்களை நேரில் சென்று வாரத்திற்கு ஒரு முறை சந்தித்து வருவேன். எனவே எளியேனுக்கு அவர்கள் எழுதிய கடிதங்கள் மிகக்குறைவானதே. அவர்களது பல கடிதங்கள் அடியேனிடம் காலகதியால் மறைந்து போக, எஞ்சிய சில கடிதங்களையும், எளியேனைப் பற்றி அவர்கள் சொல்லிய கருத்துக்களையும் தொகுத்துத் தருகிறேன்.

12.11.98 இல் தி.க.சி. அடியேனுக்கு எழுதிய வரிகள் இதோ,


தி.க. சிவசங்கரன்
(தொலைபேசி: 333456)
21 E. சுடலைமாடன் தெரு,
நெல்லை 627006,
12.11.98, வியாழன், 8 Am

அருமை நண்பர் திவான் அவர்களுக்கு,

வணக்கம். நலம்; நலமறிய அவா. ஒர் உதவி தேவை:-
'எது நாகரிகம்' என்னும் எனது மொழிபெயர்ப்பு நூல்,
1951-52ல் தமிழ்ப் புத்தகாலயம் வெளியிட்டது;
சுமார் 100 பக்கங்கள்; மாக்சிம் கார்க்கியின் அரிய
கட்டுரைகள் அடங்கியது; என் தமிழாக்கம்; அது
தங்களிடமோ அல்லது பாளை மத்திய (அரசு) நூலகத்
திலோ, சேவியர் கல்லூரி நூலகத்திலோ, பிற கல்லூரி
நூலகங்களிலோ இருந்தால், தேடிப் பிடிக்கவும்;
எனக்கு விரைவில் தகவல் தரவும். அந்நூல் →


மறுபதிப்புச் செய்ய
விரும்பும்
பிரதி என்னிடமில்லை;
அதைத் தேடிப் பிடித்துத்
தாங்கள் தர வேண்டுகிறேன்;
'ஜெராக்ஸ்' நகல் எடுத்துக்
கொண்டு, திருப்பித் தருவேன்.
○ தாங்கள் சென்னை சென்றால்,
அங்குள்ள மறைமலை அடிகள்
நூலகம், கன்னிமாரா நூலகம்
இவற்றில் இந்நூல் உள்ளதா
எனத் தேடுங்கள்; இருந்தால்,
தகவல் தாருங்கள்; அது போதும்.
○ என்றும் அன்புடன் — தி.க.சி.

पोस्ट कार्ड POST CARD

திரு. செ. திவான் அவர்கள்,
ஆய்வாளர்,
106, எப்.5,
திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை
पिन PIN 627002
பாளையங்கோட்டை — நெல்லை-2

*12.11.99*இல் தி.க.சி. தனது மனக்குகை ஓவியங்கள் நூலினை அடியேனுக்கு அளித்தபோது எழுதிய வரிகள் இதோ,

அருமைத் தோழர்,

சிறந்த ஆய்வாளர்

செ.திவான் அவர்களுக்கு

மிக்க அன்புடன்

தி.க.சி.

நெல்லை–*6*
12.11.99

'அணைய வேண்டிய அயோத்.... தீ' எனும் அடியேனது நூலை 24.3.2002 இல் வெளியிட்டு தி.க.சி. ஆற்றிய உரை இதோ,

வரலாற்று ஆசிரியரின் இன்றைய கடமைகள்

பேரன்பு மிக்கத் தலைவர் அவர்களே! தமிழ்ச் சான்றோர்களே! அறிஞர் பெருமக்களே! அனைவர்க்கும் வணக்கம்

"அணைய வேண்டிய அயோத்...........தீ" எனும் நூலை வெளியிடும் வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது; மிக்க மகிழ்ச்சி.

வரலாற்று ஆசிரியர் செ.திவான் அவர்களுக்கும் பதிப்பகத்தாருக்கும் என் நன்றி,

ஆன்மாவை விலை பேசாத அபூர்வ எழுத்தாளரான அமரர் தொ.மு.சி.ரகுநாதன் அவர்களுக்கு, இந்நூலை திவான் அர்ப்பணித்துள்ளார்; மிகப்பொருத்தமான, பொருள் பொதிந்த அர்ப்பணிப்பு!

ஆய்வுத் துறையில் இடைவிடாது ஈடுபட்டு, நாட்டுப்பற்று, மொழிப்பற்று, தமிழ் இனப்பற்றுடன் தேனீயைப் போல இயங்கிக் கொண்டிருக்கும் திவான், தமிழ்ப் பெருமக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற, ஒரு வரலாற்று ஆசிரியர்; அவரது 49வது படைப்பு இது; நம் நாட்டின் வாழ்வில், ஒரு நெருக்கடியான காலகட்டத்தில், தக்க தருணத்தில், வெளிவந்துள்ளது. நாம் அனைவரும் படித்துச் சிந்திக்கவும், செயல்படவும் தூண்டும் நூல்.

இன்றைய கால கட்டத்தில், ஒரு வரலாற்று ஆசிரியனுக்கு மூன்று அடிப்படையான பண்புகள் மிக அவசியம், அதாவது உண்மை, நீதி, சமுதாய முன்னேற்றம் ஆகிய தத்துவங்களில் அவனுக்குத் தணியாத தாகமும், வேகமும் தேடலும் வேண்டும். தனது ஆய்வுகளைச் சான்று ஆதாரங்களுடன் வெளியிட்டு, மக்களை ஏற்கச் செய்யும் ஆற்றலும் வேண்டும். இவையெல்லாம் திவானிடம் முறையாக வளர்ந்து வருகின்றன. இந்நூலும் அதற்கு ஒரு சான்று.

"எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு" - இது வள்ளுவம்

வள்ளுவத்தின் வெளிச்சத்தில், இந்நூலின் மெய்பொருளை நீங்கள் காண்பீர்கள் என நம்புகிறேன்.

மகாகவி பாரதியின் உலகு தழுவிய விடுதலைக் கண்ணோட்டத்திலும், **மனித நேயத்திலும்** இந் நூலைப் படிக்க வேண்டும்.

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தினராயின்

வேதியராயினும் ஒன்றே - அன்றி
வேறு குலத்தவராயினும் ஒன்றே
என்று சமத்துவ கீதம் இசைத்தவன் பாரதி

ஓர் குடியரசு என்றால், எப்படியிருக்க வேண்டும் என்று 80 ஆண்டுகளுக்கு முன்பே அவன் இலக்கணம் கூறினான்.

"எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்,
எல்லாரும் ஓர் நிறை, எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் - ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்" என்று மக்களாட்சி தத்துவத்தை அற்புதமாக வரையறுத்தான்.

புதிய பாரத சமுதாயத்தை வரவேற்று, வாழ்த்தும் பாடினான்...

இன்று, நம் நாடு விடுதலை பெற்று 54 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. ஆனால் பாரதி கனவு கண்ட "பாரத சமுதாயம்" எங்கே? நமது குடியரசுச் சட்டமும், ஜனநாயக சமத்துவ சமதர்ம நெறிகளும், மனித உரிமைகளும் ஏன் மீறப்படுகின்றன.

நாம் அனைவரும் பொறுப்புடன் சிந்திக்க வேண்டிய வேளை இது.

அயோத்தியில் (உத்திரபிரதேசத்தில்) மட்டுமின்றி, குஜராத்திலும், ஒரிசாவிலும் இன்னும் பல பகுதிகளிலும் மக்களிடையே வெறுப்புத்தீயை, பகை நெருப்பை மூட்டி, பல்லாயிரக்கணக்கான அப்பாவி மக்களை பலி வாங்கும் நாசகார சக்திகளின் வெறியாட்டத்தை அல்லவா இன்று நாம் காண்கிறோம்.

ஓர் இருண்ட எதிர்காலத்திற்கு, 100 கோடிக்கு மேற்பட்ட இந்திய மக்களை இழுத்துச் செல்லும் தீய சக்திகளையும், அமைப்புகளையும், ஆட்சியாளர்களையும் அல்லவா இன்று நாம் பார்க்கிறோம். உலக அரங்கில் இந்தியாவின் மதிப்பு என்ன? நாம் சிந்திக்க வேண்டும். இன்றையச் சூழ்நிலையில்

ஓர் எழுத்தாளனின், வரலாற்று ஆசிரியரின் கடமை என்ன? வரலாற்றுச் சக்கரங்களைப் பின்னுக்குத் தள்ளும் இந்தக் கொடிய சக்திகளை, நாட்டு மக்களுக்கு இனம் காட்டி, அவர்களிடையே விழிப்பு உணர்வைத் தூண்டுவதா? அல்லது "சும்மா இருப்பதே சுகம்" என்று பதுங்கிக் கொள்வதா?

சுருங்கச் சொன்னால், இன்றைய எழுத்தாளன் மனச்சாட்சியைக் கொன்றுவிட்டு, மறத்தின் பீடத்தில் மண்டியிட்டு நிற்க வேண்டுமா? இந்த வினாக்களுக்கு ஓரளவு விடையளிக்கிறது செ. திவானின் இந்நூல்.

இதை இன்னும் விரிவாக ஆழமாக, ஒரு பெரிய வரலாற்றுக் களஞ்சியமாகத் திவான் எழுதவேண்டும் என்பது என் அவா. தமது வரலாற்றுக் கடமையைச் சரியாகச் செய்துள்ள ஆசிரியர் செ.திவானுக்கு என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்!

நன்றி! வணக்கம்!

தனது நூல் ஒன்றை 14.5.2002இல் தந்த போது தி.க.சி. எழுதியது இதோ;

என் அருமை நண்பர் சீரிய வரலாற்று ஆய்வாளர் சிறந்த பண்பாளர் தோழர் செ.திவான் அவர்களுக்கு,

என்றும் அன்புடன்

தி.க.சி.

நெல்லை –6
14.5.2002

9.11.2002 இல் இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. நூலினை அண்ணன் ஐ.சாமுவேல் தலைமையில் "அறம் வளர்ந்திடுக; மறம் மடிவுறுக" வெளியிட்டு தி.க.சி. அவர்கள் ஆற்றிய உரை இதோ,

இலக்கிய விமர்சகர் தி.க.சி. உரை:

கப்பலோட்டிய தமிழன்; செக்கிழுத்த செம்மல், மகாகவி பாரதியுடன் தோளோடு தோள் நின்று, வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராக போராடிய ஒப்பற்ற வீரத்தளபதி, அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றிய பெரும் புலவன், நேரிய ஆய்வாளர், சீரிய பதிப்பாளன் என்று பலவாறாகப்

போற்றப்பெறும் வ.உ.சிதம்பரனாரின் 66ஆவது நினைவு நாள் வருகிற நவம்பர் 18 ஆகும்.

இந்த முக்கியமான நினைவு நாளையொட்டி, வரலாற்று ஆசிரியர் செ.திவான் அவர்கள் 'இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி.' எனும் தலைப்பில் "இன்னிலை – வ.உ.சி. விருத்தியுரையுடன்" எனும் நூலை, நெல்லையில் இன்று (9.11.2002) வெளியிட என்னைப் பணித்துள்ளார்கள். "இன்னிலை" என்பது பொய்கையார் எனும் பழம் பெரும் கவிஞர் இயற்றிய 45 வெண்பாக்களும், விருத்தியுரையும் கொண்ட நூல்.

தேசபக்தச் செம்மல் **வ.உ.சி. வாலேஸ்வரன்** அவர்கள் இந்நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொள்கிறார்கள். இது நமக்கெல்லாம் பூரிப்பும், பெருமையும் தருவதாகும்.

வரலாற்று ஆசிரியர் செ.திவான் இதுவரை 51 நூல்களை எழுதி, தொகுத்து வெளியிட்டுள்ளார். வ.உ.சி.யின் பல்வேறு ஆளுமையையும், படைப்பாற்றலையும், தமிழ்த் தொண்டையும், மக்களிடையே பரப்புவதை இன்றியமையாகக் கடமையாகக் கொண்டவர் செ.திவான். தன்னலமற்ற, நேர்மையான, நம்பகமான, தமிழக ஆய்வாளர்களில் ஒருவர். திவான் எழுதி, தொகுத்த வ.உ.சி. பற்றிய நூல்களில், இது 13வது நூல் ஆகும். இந்நூலில் இலக்கிய புரட்சியாளர் வ.உ.சி. எனும் தலைப்பில், திவான் எழுதியுள்ள 20 பக்க ஆய்வுரை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாக, 45 செய்யுள்கள் அடங்கிய இன்னிலை எனும் ஏட்டுச்சுவடியைத் தமது விருத்தியுரையுடன் பதிப்பித்து வ.உ.சி. 1917இல் சென்னையில் துணிவுடன் வெளியிட்டதையும், அதன் மறுபதிப்பை 1930ல் அவரே வெளியிட்டதையும், ஓர் "இலக்கியப் புரட்சி" என்று ஆழமான சான்றுகளுடன் எடுத்துரைக்கிறது. நெடுங்காலம் புறக்கணிக்கப்பட்டு கிடந்த இந்த நீதி நூலை, மூன்றாம் பதிப்பாகச் செ.திவானின் 'சுஹைனா பதிப்பகம்' இன்று வெளியிடுகிறது என்பது பெரிதும் வரவேற்கத்தக்கது; பாராட்டத்தக்கது. வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக்கெட்டுப் பாழ்பட்டு நிற்கிறது. நமது இந்தியத் திருநாடு; தமிழ்நாடும், இதற்கு விதிவிலக்கல்ல; "கொடுமையே அறமாகி"க் கோலோச்சும் இந்நாள்களில், "அறம் வளர்ந்திடுக; மறம் மடிவுறுக" என்பதற்கான பொதுமக்களின் ஒன்றுபட்ட போராட்டம், மகாகவி பாரதி – மாபெரும் விடுதலை வீரர்

சிதம்பரனார் பாதையில் வளர்ந்தோங்கும் என்பது, என் நம்பிக்கை. இலக்கியப் புரட்சியாளர் வ.உ.சி. எனும் இந்நூல், "தருமம் மறுபடி வெல்லவும்" நம் வாழ்வில் அனைத்து அடிமைத் தளைகள் அகலவும், அறநெறிகள் தழைக்கவும், உரிய பங்காற்றும் எனவும், வ.உ.சி.யின் புரட்சிப் பணிகளை முன் எடுத்துச் செல்லும் எனவும் நம்புகிறேன்; நன்றி; வணக்கம்.

25.3.2003இல் வ.உ.சி.யின் உயில் என்ற எனது நூலை வெளியிட்டு தி.க.சி. ஆற்றிய உரை இதோ;

பிரபல வரலாற்று ஆசிரியரான செ.திவான் அவர்களின் 52வது நூல் "**வ.உ.சி.யின் உயில்**" எனும் அரிய ஆவணமாக மலர்ந்துள்ளது.

செ.திவான் எழுதிய, தொகுத்த வ.உ.சி. நூல்களில் இது 14வது படைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

"கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சி.யின் கடைசி நாள்கள் எவ்வாறு கொடிய வறுமையிலும், துயரத்திலும், தனிமையிலும் கழிந்தன என்பதையும், அவரது வாழ்க்கைக் கப்பல் பொருளாதார நசிவு எனும் நாசகாரச் சூறாவளியில் சிக்கி, எவ்வாறு மூழ்கியது என்பதையும் அவரது குடும்ப உறுப்பினர்களின் அன்றாட வாழ்க்கை எவ்வாறு இருண்டு கிடந்தது என்பதையும், கடன் சுமையில் பெரிதும் தத்தளித்த குடும்பத்தைக் காப்பாற்றத தமது உயிலில் வ.உ.சி. செய்துள்ள நேர்மையான ஏற்பாடுகளையும், இந்த உயிலில் காண்கிறோம்.

இதை ஒரு முறைக்கு இரு முறை படித்துவிட்டுச் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் ஒட்டு மொத்த வாழ்க்கையையும் நினைவுக்கு கொண்டு வரும்போது, இந்த நாட்டில் சுதந்திரப் பயிர் வளர்க்கத் தன்னலமின்றித் தொண்டாற்றிய தேச பக்தர்களுக்கு என்ன கதி நேர்ந்தது, நேர்ந்து கொண்டிருக்கிறது, இவர்களுக்கு ஏன் இந்த அவலம்? இந்த தியாகசீலர்களை உரிய முறையில் நாடு போற்ற வேண்டாமா? எனும் எண்ணங்கள்; நாட்டுப் பற்றும் மொழிப்பற்றும், இனப்பற்றும் உள்ள ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் எழும் என்பதில் ஐயமில்லை.

"மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதும்

நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ"

"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர்,
வாராது போலவந்த மாமணியைத் தோற்போமோ?"

என்று வ.உ.சி. போன்ற மகத்தான சுதந்திரப் போராட்ட வீரர்களை நினைத்து பாடியுள்ளார் நமது மகாகவி பாரதியார். அத்தகைய மாமணிகளை, இன்றும் நாம் இழந்து கொண்டிருக்கிறோம் என்பது வேதனையான உண்மையாகும்.

வ.உ.சி.யின் உயிலுடன் 17.11.1936 செவ்வாயன்று 'தினமணி'யில் வந்துள்ள செய்தியினை இந்நூலில் திவான் வெளியிட்டிருக்கிறார்; இரண்டையும் சேர்த்துப் படித்துப் பார்க்கும்போது, கடைசி மூச்சு பிரியும் நேரத்திலும் மகாகவி பாரதியின் கீதங்களை கேட்பதற்கு வ.உ.சி. எவ்வளவு ஆவல் கொண்டிருந்தார் என்பதையும் நம்மால் உணர முடிகிறது.

22 பக்கங்களேயுள்ள இந்நூலில் ஓர் இதிகாச நாயகனின் ஒப்பு உயர்வற்ற சுதந்திர போராட்டத் தியாகியின் வாழ்க்கை சரித்திரத்தை மிகச் சிறப்பாக செ.திவான் அவர்கள் உள்ளம் உருக எழுதியுள்ளதால், பல்லாயிரக்கணக்கில் இந்நூல் தமிழ் மக்களிடையே பரவ வேண்டும். நாட்டு மக்களிடையே விழிப்பையும், விடுதலை உணர்வையும் தட்டியெழுப்ப வேண்டும் என்பது என் வேண்டுகோள். செ.திவான் அவர்களின் தமிழ்த் தொண்டு. வாழ்க; வளர்க; வெல்க!

தியாக நெருப்பில் வைகோ

ஈழத்தமிழர் நலனுக்காக பொடா சிறை வாசத்தில் 19 மாதங்கள் தமிழர் தலைவர் வைகோ வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட கொடுமையான காலத்தில் அடியேன் எழுதிய

தியாக நெருப்பில் வைகோ நூலுக்கு 12.9.2003இல் தி.க.சி. அனுப்பிய வாழ்த்துச் செய்தி இதோ;

தி.க.சி., 21ஈ, சுடலைமாடன் தெரு, நெல்லை – 627006, 12.9.03

வாழ்த்துச் செய்தி

அன்புள்ள தோழருக்கு வணக்கம்

செ.திவான் அவர்களின் 'தியாக நெருப்பில் வைகோ' நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ் பெற்றேன்; மிக்க மகிழ்ச்சி; நன்றி.



அனைத்து வகையிலும், விழா வெற்றி பெறுக!

தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும் மறுமலர்ச்சி தோன்றுக.

வரலாற்று அறிஞர் செ.திவான் அவர்களின் இந்நூல், தமிழ் இளைஞர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கிடட்டும்! தியாக நெருப்பில் நமது இளைய தலைமுறை புடம் போட்டு எடுக்கப்படட்டும்!

விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும்

வணக்கங்களுடன்

தி.க.சி.

தி.க.சி., 21இ. சுடலைமாடன் தெரு, நெல்லை-627006, 12.9.03

அன்புள்ள தோழருக்கு, [வாழ்த்துச் செய்தி]

வணக்கம். செ. திவான் அவர்களின் 'தியாக நெருப்பில் வைகோ' - நூல் வெளியீட்டு விழா அழைப்பிதழ் பெற்றேன்; மிக்க மகிழ்ச்சி; நன்றி.

- அனைத்து வகையிலும், விழா வெற்றி பெறுக! ....
- தமிழகத்தின் எல்லாத் துறைகளிலும், மறுமலர்ச்சி தோன்றுக!
- வரலாற்று அறிஞர் செ. திவான் அவர்களின் இந்நூல், தமிழ் இளைஞர்களுக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக விளங்கட்டும்! தியாக நெருப்பில், நமது இளைய தலைமுறை புடம் போட்டு எடுக்கப்படட்டும்!
- விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் வணக்கங்களுடன் - தி.க.சி.

மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள்

2004 ஜூனில் அடியேன் எழுதிய மாநபி (ஸல்) காட்டிய மனித உரிமைகள் நூலினை வெளியிட்டு தி.க.சி. ஆற்றிய உரை இதோ;

அனைவருக்கும் என் அன்பு வணக்கம்

"மாநபி காட்டிய மனித உரிமைகள்" எனும் செ.திவான் அவர்களின் நூலை வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சியும் மனநிறைவும் அடைகிறேன்.

உலகமயம், தனியார் மயம், தாராள மயம் எனும் கொள்கைகள் உலகெங்கும் நிறைவேற்றப்படும் இன்றைய காலகட்டத்தில், இவற்றில் மனித உரிமைகளும், மனித குலத்தின் சுதந்திரம், வளவாழ்வும், நிம்மதியும் பறிக்கப்படும் விபரீத முரண்பாட்டையும், மனித உயிர்கள் பல்வேறு சித்திரவதைகளால் அழிக்கப்படும் கொடுமைகளையும் இன்று நாம் காண்கிறோம்.

இந்தச் சூழ்நிலையில் இந்த அவலத்திலிருந்து மனித குலம் விடுதலை பெறுவதற்கு நபிகள் நாயகம் காட்டும் வழி என்ன என்பதை வரலாற்று ஆசிரியர் செ.திவான் அவர்கள் 32 பக்கங்களில் மிகச் சுருக்கமாகவும், மிக நேர்மையாகவும், வாசகர்களுக்கு எடுத்துரைக்கிறார்.

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் எனும் அறநெறியை அடிப்படையாகக் கொண்டது இஸ்லாம் என்பதும், 1400 ஆண்டுகளுக்கு முன்பு நபிகள் நாயகம் காட்டிய இந்த அறநெறி இன்றைக்கும் பொருத்தமானது, மிகத்தேவையானது, என்பதையும், இந்நூலை வாசிக்கும் அனைவரும் ஏற்றுக்கொள்வர். அத்தகைய சிறந்த முறையில், உலகச் சிந்தனையாளர்களை ஆதாரம் காட்டி, நம் இதயத்தை ஈர்க்கும் வண்ணம், இந்நூலைப் படைத்துள்ளார் செ.திவான் அவர்கள்.

"அடிப்படை உரிமைகள் அனைத்தும் தந்தவர்" எனும் இந்நூலின் பகுதி (பக்கம் 30) மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். உரிமைகள் பற்றி நபிகள் நாயகத்தின் அறஉரைகளின் சாரம் என்று இப்பகுதியைக் கூறலாம்.

'ஒடுக்கு முறையிலிருந்து விடுதலை' எனும் பகுதியில் (பக்கம் 29) காணப்பெறும் வரிகள், இன்றைய காலகட்டத்தில் மிக முக்கியமானதாகும். ஒடுக்கப்பட்டவர்கள், கொடுமைக்காரர்களுக்கு எதிராகத் திரண்டெழுந்து அவர்களைத் தண்டிப்பதற்கும், தலைநிமிர்ந்து நிற்பதற்கும், அவர்களுக்குள்ள உரிமையைத் திருக்குர்ஆன் அங்கீகரிக்கிறது. இது தான் விடுதலை தெளிவான இறைஇயல் கொள்கையாகும் என்று அறிஞர் அஸ்கார் அலி என்ஜினியர் அழகுற வலியுறுத்துகிறார். இதுவே, இந்நூலாசிரியர் செ.திவான் அவர்களின் கொள்கையாகும்; மனித உரிமைகளுக்காகப் போராடும் எந்த எழுத்தாளரும், படைப்பாளியும், இக்கருத்தை உலகெங்கும் மதவெறியும் போர்வெறியும் மேல் ஓங்கி, மனித உரிமைகள் மிகத் தந்திரமாகவும், கொடிய முறையிலும் ஒடுக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் "மாநபி காட்டிய மனித உரிமைகள்" எனும் நூலை எழுதிய வரலாற்று ஆசிரியர் செ.திவான் அவர்களின் அறநெறி உணர்வும், சீரிய சமுதாய நலப்பணியும் பெரிதும் போற்றத்தக்கன. அவருக்கு என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள் !

வைகோ வெற்றிப் பாதை வீரச்சங்கொலி

எளியேனது வைகோ வெற்றிப்பாதை வீரச்சங்கொலி நூலுக்கு 20.7.2004இல் தி.க.சி. அனுப்பிய வாழ்த்துச் செய்தி இதோ;

அருமைத் தோழர் செ.திவான் அவர்களுக்கு,

வணக்கம்.

தங்களின் 57ஆவது படைப்பான "வைகோ வெற்றிப் பாதை....வீரச்சங்கொலி" எனும் நூல், நேற்று பெற்றேன்; மிக்க மகிழ்ச்சி; நன்றி.

தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நிற்கும் தமிழகமும், தமிழ்ச் சமுதாயமும் மறுமலர்ச்சி பெற, தமிழக இளைஞர்களை அணி திரட்டுவதிலும், மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான புரட்சிப் பாதையில் நமது

இளைஞர்களை ஒருங்கிணைப்பதிலும், தங்களது முயற்சிகளும், வெளியீடுகளும் மேன்மேலும் வெற்றிபெற உளமார வாழ்த்துகிறேன்.

வணக்கம்

என்றும் தோழமையுடன்

– தி.க.சி.

விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள்

அடியேனது விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள் நூலுக்கு 17.9.2004இல் தி.க.சி. அவர்கள் அனுப்பிய வாழ்த்துச் செய்தி இதோ;

எங்கள் அருமைத் தோழர் திவான் அவர்களுக்கு வணக்கம். "விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிம்கள்" பெற்றேன்; மிக்க மகிழ்வு; நன்றி.

தங்களது பெரிய தந்தையார் – நாட்டு விடுதலைப் போராட்ட வீரர் – டாக்டர் எஸ்.ஏ.ரஷீத் அவர்களுக்குக் காணிக்கையாகப் பெற்ற இந்நூல் (தங்களது 58 வது படைப்பு) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது; வரலாற்றின் இருண்ட பக்கங்களில் ஒளி பாய்ச்சவல்லது; தமிழ்ப் பெருமக்களின் பேராதரவைப்பெறும் என்பது உறுதி... தங்களுக்கு நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களுடன் – தி.க.சி.

பின்னர் அந்த நூல் வெளியீட்டு விழாவில் தி.க.சி. ஆற்றிய உரை இதோ;

தி.க.சி.யின் மதிப்புரை

வரலாற்று ஆய்வாளர் செ.திவான் எழுதிய

"விடுதலைப் போரில் வீரமிகு முஸ்லிமகள்" காலத்தின் தேவையை நிறைவேற்றும் அரிய நூல்.

– தி.க.சிவசங்கரன்

அண்மையில் நான் படித்த அரிய வரலாற்று ஆவணங்களில் இதுவும் ஒன்று.

தென்னக முஸ்லிம்கள், இந்திய விடுதலைப் போரில், பாளையக்காரர் காலத்தில், தன்னிகரற்று வெளிப்படுத்திய வீரத்தையும், தியாகத்தையும் இந்நூலில் மிகச் சிறப்பாகவும் ஆழ்ந்து அகன்ற ஆதாரங்களுடனும், நடுநிலையுடன் ஒப்புநோக்கி, திறம்பட வழங்கியுள்ளார். வரலாற்று ஆசிரியர் செ.திவான் காலத்தின் தேவையை நன்கு நிறைவேற்றும் நூல்.

மார்த்தாண்ட வர்மா கால முஸ்லிமகள் (1741) முதல் தளவாய் வேலுத் தம்பி கால முஸ்லிம்கள் (1809) வரையிலான காலகட்டத்தில், வெள்ளை ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், தாயகத்தின் சுதந்திரத்திற்காகவும், சுய மரியாதைக்காகவும், சாதி, மத, இன, மொழி வேற்றுமையின்றி, அனைத்து மக்களுடனும் தோளோடு தோள் நின்று, தமது இன்னுயிரைத் தியாகம் செய்த முஸ்லிம் பெருமக்களின் வீரவரலாறு, பற்பல காரணங்களால், வரலாற்றின் பக்கங்களில் மறைக்கப்பட்டுள்ளது; மறுக்கப்பட்டள்ளது; இருட்டு அடிப்புச் செய்யப்பட்டுள்ளது; தமக்குக் கிடைத்த சான்று ஆதாரங்களின் துணையுடன், வரலாற்றின் இருண்ட பக்கங்களில், அற்புதமான ஒளிபாய்ச்சி, உண்மைகளை, மிகுந்த நேர்மையுடன் நம்முன் வைக்கும், செ.திவான் இந்நூலின் 208 பக்கங்களையும் படித்து முடிக்கும் தமிழ் நெஞ்சங்கள், தாயகத்தின் விடுதலைக்காகவும், தன்மானத்திற்காகவும், நல்வாழ்வுக்காகவும், அளப்பரும் தியாகம் செய்துள்ள அந்தச் சுதந்திரப் பேராட்ட வீரர்களின் நினைவுக்குத் தலை தாழ்த்தி அஞ்சலி செய்வர் என்பதில் ஐயமில்லை.

மகாகவி பாரதி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ஆகியோரைத் தமது ஆசான்களாகக் கொண்டு, வரலாற்று நூல்களை, நாட்டுப் பற்றும், மொழிப்பற்று, இனப்பற்றுடன், சீராகவும், செம்மையாகவும் படைத்து வரும் செ.திவான் அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்! சாதி வெறியும், மத வெறியும், மொழி வெறியும், இன வெறியும் இல்லாத ஒளிமயமான இந்தியாவையும், வளமான இந்திய மக்களையும் உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரும் இந்நூலை வரவேற்பர் என்பது உறுதி.

30.8.2005இல் தி.க.சி. தனது நூலை அடியேனுக்கு அளித்தபோது குறிப்பிட்டது இதோ;

தி.க.சி. என்ற மனிதன்

சில மதிப்பீடுகள்

எங்கள் அருமைத் தோழர்
சிறந்த வரலாற்று ஆய்வாளர்
செ. திவான் அவர்களுக்கு,

என்றும் அன்புடன்,
தி.க.சி.

நெல்லை-6
30.8.2005

தொகுப்பாசிரியர் :

அ.நா. பாலகிருஷ்ணன்

14.12.2005இல் தி.க.சி. அடியேனுக்கு அனுப்பிய கடிதம் இதோ

அருமைத்தோழர் செ.திவான் அவர்களுக்கு வணக்கம்.

நலம் நலமறிய மிக்க அவா.

தங்கள் அன்பளிப்பு – திராவிட இயக்கம் வரலாற்றுக் குறிப்புகள் – பெற்றேன். மிக்க நன்றி!

தங்களது 55வது நூலான இது பல பதிப்புக்களைக் காணும் என நம்புகிறேன்.

சீரிய வரலாற்று ஆய்வாளரான தங்களது படைப்புக்கள் மேன்மேலும் தமிழ்ச் சமுதாய வரலாற்றுக்கு வளம் சேர்க்குமாக!

8.2.2006இல் தி.க.சி. அடியேனுக்கு அனுப்பிய கடிதம் இதோ,

தி.க.சி., 21ஈ, சுடலைமாடன் தெரு,
நெல்லை – 6.
8.2.2006 புதன் காலை 10.00

அருமைத் தோழர் திவான் அவர்களுக்கு, வணக்கம்

6.2. அன்று கூரியரில், தங்களது வரலாற்று ஆய்வுத் தொடர் – சுஜாதாவிற்கு சவால் – 7 கட்டுரைகள் கிடைத்தன. எஞ்சியுள்ள 3 அத்தியாயங்களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். இனிய வாழ்த்துக்கள்!

நேற்று மாலை, தோழர் கழனியூரன் என்னை சந்தித்தார். நெடு நேரம் உங்களைப் பற்றி உரையாடினோம். இந்தத் தொடரின் ஆய்வுக்காகத் தாங்கள் மேற்கொள்ளும் மிகக் கடுமையான உழைப்பு, பெரிதும் போற்றத்தக்கது. எனினும், தங்கள் உடல் நலனையும், நன்கு பேணுங்கள். இது என் அன்பு வேண்டுகோள்; பிற, பின்னர் என்றும் தோழமையுடன்

– தி.க.சி.

தி.க.சி. அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தெய்வானை அம்மாள் வயது 82. 14.12.2006 காலை 9 மணிக்கு இயற்கை எய்தினார்.

15.12.2006 வெள்ளி காலை 10 மணிக்கு இறுதிச் சடங்குகள் திருநெல்வேலி டவுணில் நடைபெற்றது. இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டதோடு, வாழ்க்கை துணையை இழந்த தி.க.சி.க்கு எளியேனும் ஆறுதல் கூற அடிக்கடி சென்று வந்தேன்.

தி.க.சி. - தெய்வானை அம்மாள்

20.9.2007இல் தி.க.சி. அவர்கள் எளியேனுக்கு அனுப்பிய கடிதம்


தி.க.சி, 21E-சுடலைமாடன் தெரு, நெல்லை-6, 20.9.07, வியாழன்

அருமைத் தோழர் திவான் அவர்களுக்கு, வணக்கம்.

தங்கள் 62, 64, 65 ஆம் நூல்கள், நேற்று பெற்றேன்; மிக்க மகிழ்ச்சி; மனமார்ந்த நன்றி.

சரித்திய வரலாற்று ஆய்வாளராகப் புகழ்பெற்றுள்ள தங்கள் உழைப்பும் படைப்பும், பெரிதும் மதிக்கத் தக்கவை; மக்களின் வாழ்வு, [illegible], வளவாழ்வு, ஒற்றுமை, உயர்வு, எனும் உயரிய இலக்கோள்களுக்காகத் தன்னலமின்றிக் காரத்தாலும் கருத்தாலும் தொண்டாற்றிவரும் தங்கள் படைப்பாற்றல்கள், மேன் மேலும் வளர்க! வெல்க! இதயங் கனிந்த நல் வாழ்த்துக்கள்! வாய்ப்புள்ள போது, எமது இல்லம் வருக! தங்களது 63 ஆம் படைப்பு அச்சில் இருக்கும் என நம்புகிறேன்; நேரில் விரிவாகப் பேசுவோம்!...

என்றும் தோழமையுடன்,
தி.க.சி.

வீரத் தலைவர் வ.உ.சி.

வீரத் தலைவர் வ.உ.சி. குறித்து இருபது நூல்களை வெளியிட்டுள்ளேன். தி.க.சி. அய்யா உயிரோடு இருந்த காலம் வரை 16 நூல்களை வ.உ.சி. குறித்து எளியேன் வெளியிட்டிருந்தேன். அப்போது தி.க.சி. அடியேனுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தி இதோ;

தமிழகத்தின் தலைசிறந்த வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவரும், தமிழ் மொழி, தமிழ் இனம், தமிழ்ப் பண்பாடு இவற்றின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்டவருமான திரு.செ.திவான் அவர்கள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் மீது நீங்காப் பற்றும் பாசமும் கொண்டவர்.

மாபெரும் சுதந்திரப் போராட்ட வீரரான வ.உ.சி.யின் வாழ்வும் பணிகளும் குறித்த பல வரலாற்று நூல்களை செ.திவான் அர்ப்பணிப்பு உணர்வுடன் தொடர்ந்து எழுதி வருகிறார்.

செக்கிழுத்த செம்மல் வ.உ.சி.யின் வரலாற்று நூல்கள் மட்டுமல்லாமல், பிற சுதந்திரப் போராட்ட வீரர்களின் வெளிச்சத்துக்கு வராத வாழ்க்கை பற்றியும், மிக நேர்மையாகவும் சான்று ஆதாரங்களுடனும் ஆவணப்படுத்தும் முயற்சியில் இவரது அயராத பணி, மிக முக்கியமானது.

தமிழகத்தில் சுதந்திரதாகம் மிகவும் குன்றியுள்ள இக்கால கட்டத்தில் வெளிவரும் வ.உ.சி.யின் சுயசரிதை மறுபதிப்பு, பெரிதும் வரவேற்கத்தக்கது.

தன்னிகரற்ற தியாகம், அளப்பரும் தமிழ்ப் பற்று கொண்ட கொள்கையில் உறுதியினை உணர்த்தும் இந்நூல், எல்லாத் தமிழர்களின் இல்லங்களிலும் இடம் பெறுதல், அவசர அவசியமாகும்.

வ.உ.சி. புகழ் பரப்பும் செ.திவான் அவர்களுக்கு என் உளங்கனிந்த வாழ்த்துக்கள்.

என்றும் தோழமையுடன்,

தி.க.சி.

17.10.2008

வாரத்திற்கு இருமுறையேனும் தி.க.சி. அவர்களது இல்லத்திற்குச் சென்று அவரது இல்லத்தில் உழவாரப் பணிகள் செய்துவிட்டு, அய்யா அவர்களுக்கு வேண்டிய சிறு சிறு பணிகளில் பங்கெடுத்து, அவர்களின் ஏவலாளராக, தொண்டராக, தேநீர் வாங்கி வருவது முதல் இத்யாதி இத்யாதி காரியங்களில் நேரடியாகச் செயல்பட்டு வந்தேன்.

அவர்களின் மனிதாபிமானம் மனதிற்கு பிடித்திருந்ததால் நேரில் அடிக்கடி சென்று ஆறுதல் பெற்றதால் கடித தொடர்புகளுக்கான சாத்தியம் இல்லாது போயிற்று.

திகசியின் 87வது பிறந்த நாளில் அவர்களது கடல் படுமணல் நூலை அடியேனுக்கு அளித்தபோது அவர்கள் கைப்பட எழுதித்தந்தது இதோ,

(இந்நூல் வெளியீட்டு விழா *27.3.2011* அன்று நெல்லை ஜானகிராம் ஹோட்டலில் நடைபெற்றது)

என்னுடைய தோழர், தமிழறிந்த
தமிழ்த் தேசியவாதி, நேர்மையான
வரலாற்று ஆசிரியர்— ஆய்வாளர்

கடல் படு மணல்

தி.க.சி

செ.திவான் அவர்களுக்கு,



என்றும்
அன்புடன்,
தி.க.சி
30.5.2011
(நெல்லை–6)

தி.க.சி.நேர் காணல்கள்

தொகுப்பு: வே.முத்துக்குமார்

நூலினை அடியேனுக்குத் தந்தபோது தி.க.சி. அவர்கள் எழுதியது இதோ;

என் அருமைத் தோழர் சீரிய வரலாற்று நூல்களைத் தமிழில் வழங்கும் அரிய படைப்பாளி செ.திவான் அவர்களுக்கு,

என்றும் தோழமையுடன்,

தி.க.சி.

நெல்லை *–6*
26.2.2012

முதியோர் காவலன் இன்றைய நாளைய முதியோர் நலன் நாடும் இதழ் (சங்கொலியில் கிருஷ்ணன்) முதல் பக்கத்தில் ஈரோடு மக்கள் சிந்தனைப் பேரவை பாராட்டிய செய்தியை, துணைவேந்தர் க.ப.அறவாணன் தி.க.சி. படத்துடன் வெளியிட்டார்.

தி.க.சி. அவர்களின் காலத்தின் குரல் நூலை அடியேனுக்கு அளித்தபோது தி.க.சி. அவர்கள் அன்புடன் எழுதித் தந்தது இதோ;

காலத்தின் குரல்

தி.க.சி

பேரன்புத் தோழர், வரலாற்றை மிக நேர்மையுடன் தமிழ் மக்களுக்குத் தொடர்ந்து வழங்கும் பேராசிரியர் செ. திவான் அவர்களுக்கு, என்றும் அன்புடன்,

தி.க.சி.

(29.5.2012)

தி.க.சி.க்கு வல்லிக்கண்ணன் எழுதிய கடிதங்களின் தொகுப்பு நூலான ‘பிரிய சகோதரா....’ எனும் நூல் அடியேனுக்கு அளித்தபோது தி.க.சி. அவர்கள் எழுதித்தந்த வரிகள் இதோ;

அருமைத் தோழர் நடுநிலை வரலாற்று ஆய்வாளர், சிறந்த நூல் ஆசிரியர், திரு.செ.திவான் அவர்களுக்கு,

என்றும் தோழமையுடன்

தி.க.சி.

நெல்லை –6
16.7.2012

நண்பர் வே.முத்துக்குமார் அவர்களின் ஒரு வயலினும் சில நினைவுக்குறிப்புகளும் எனும் நூலினை *5.2.2013*இல் தி.க.சி. அவர்கள் தந்தபோது எழுதித்தந்தது இதோ,

நட்பின் இலக்கணம்,

சீரிய வரலாற்று ஆய்வாளர், அருமைத் தோழர் செ.திவான் அவர்களுக்கு என்றும் தோழமையுடன்

தி.க.சி.

5.2.2013
நெல்லை–6

தடம் பதித்த மாமனிதன் ரசிகமணி டி.கே.சி. எனும் சகோதரி தி.சுபாஷினி நூலினை எளியேனுக்கு அளித்த போது தி.க.சி. எழுதிய வரிகள் இதோ,

என்னருமைத் தோழர், சீரிய

வரலாற்று பேராசிரியர்

செ.திவான் அவர்களுக்கு,

என்றும் தோழமையுடன்

தி.க.சி.

நெல்லை –6
(18.2.2013)

கேணி ஞாநி வீட்டில் சந்திப்புகள் எனும் தி.சுபாஷினி நூலினை *9.2.2014* இல் தந்தபோது தி.க.சி. எழுதிய வரிகள் இதோ;

என்றும் இனிய தோழர், சீரிய வரலாற்று ஆய்வாளர் – ஆசிரியர் செ.திவான் அவர்களுக்கு என்றும் அன்புடன்

தி.க.சி.

9.2.2014
நெல்லை–6

தி.க.சி.யின் இல்லத்திற்கு காலையிலேயே சென்றுவிடுவேன். காலை டிபன் முடித்த நிலையில் அவர்களும் 21ஈ, சுடலைமாடன் கோவில் தெரு அவர்கள் அலுவலக அறைபோல் செயல்பட்ட அறையின் வாசலில் (கல்படி) உட்கார்ந்து கொண்டு, சிறு ஸ்டூலில் வைத்து தபால் கார்டு அல்லது உள்நாட்டுக் கடிதம் எழுதிக் கொண்டிருப்பார்கள்.

அடியேன் சென்றதும் வாங்க வாங்க என்று வாய் மணக்க எளியேனை அழைப்பார்கள். நீர் வந்தாத்தாய்யா அரசியல் பற்றிய செய்திகளைத் தெரிய முடியும் என்று நடப்பு அரசியல் விவகாரங்கள் முதல் உலக அரசியல் வரை பேசுவார்கள்; பேசுவோம். இடையில் சென்று தேநீர் வாங்கி வரவேண்டிய தொண்டர் பணி. தனக்கு வந்துள்ள இளந்தமிழன் இதழ்களை இதப்படியுமய்யா என்று தருவார்கள். (அவர்கள் மறைந்த பிறகு சில காலம் அந்த இதழைப் பெற முடியவில்லை)

தி.வ.மெய்கண்டார்

சிறந்த ஆய்வாளரும் இளந்தமிழன் ஆசிரியருமான மனித நேயமிக்க தி.வ.மெய்கண்டார் தற்போது எளியேனுக்கு தொடர்ந்து இளந்தமிழன் இதழை அனுப்பித் தருகிறார்கள். 30.3.2013 அன்று 89வது பிறந்த நாள் விழா அன்று தனது இதழில் மே 2013 இதழ் 9 மலர் 11இல் தி.க.சி.யின் படத்தை அட்டையில் வெளியிட்டு மகிழ்ந்தார்கள்.

நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே திடீரென பிரபலங்கள் வந்துவிடுவார்கள். ஒரு நாள் தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் வந்துவிடுவார். இன்னொருமுறை மதிப்பிற்குரிய எஸ்.வி.இராஜதுரை வந்துவிடுவார். திடீரென பழ.நெடுமாறன் வந்துவிடுவார்.

பொன்.வள்ளிநாயகம்

அடிக்கடி வந்து அன்றாடம் ஓவியர் எனது நண்பர் பொன். வள்ளிநாயகம் வந்து செல்வார்; தி.க.சி. வாழ்ந்த தெருவில் திருக்குறள் முழக்கமிட்ட எங்களின் ரவிவர்மா அவர்.

தி.க.சி. சரவணன்

தி.க.சி.யின் இறுதிக் காலத்தில் தம்பி சரவணன் உடனிருந்து எல்லாக் காரியங்களையும் கவனித்தார். தி,க.சி. பெற்றெடுக்காத

கடைசிப் பிள்ளையாக அல்லது பேரனாக திகழ்ந்த அந்தத் தம்பியை மறக்கத்தான் முடியுமா?

பால் முஹம்மது

பேட்டையிலிருந்து தம்பி பழைய புத்தக வியாபாரம் செய்யும் கம்யூனிஸ்ட் தோழர் பால் முஹம்மது வருவார்.

எப்படியாவது ஆட்கள் வந்து கொண்டே இருப்பார்கள். பேசிவிட்டு சென்று கொண்டே இருப்பார்கள். மதிய உணவு வேளை....... கல்யாணம், 'அவரவர் வீட்டில் சாப்பாடு' என்று சிரித்துக் கொண்டே செல்வார் தி.க.சி.

நாங்கள் அருகில் உள்ள ஹோட்டல்களில் சென்று சாப்பிட்டுவிட்டு வருவோம். தி.க.சி. மதியம் சிறிது ஓய்வு எடுப்பார். வெளியில் உள்ள கல்திண்ணையில் நானும் துண்டை விரித்து தூங்குவேன். குள்ளக் காளிபாளையம் கே.பாலசுப்பிரமணியம், சென்னை சீனி.குலசேகரன் வீட்டின் உள்ளே படுத்திட ஏற்கனவே இடம் பிடித்திருப்பார்கள்.

25.3.2014

அடியேனது வாழ்வில் குடும்பத்தில் அநேகப் பிரச்சினைகள். இது குறித்து எதுவும் என்னிடம் கேட்கவில்லை தி.க.சி. ஒரு நாள் 'அய்யா என் வீட்டில்' இப்படி.... என்று ஆரம்பித்தேன்; சரிதான் விடுமய்யா, எந்த வீட்டில் இல்லை, கவலைப்படாதீர், என்று எத்தனை எத்தனையோ உதாரணங்களைச் சொல்லி உழன்று கொண்டிருந்த எளியேனது உள்ளத்தை சரி செய்த மானுடன் தி.க.சி. 25.3.2014 அன்று செவ்வாய் கிழமை இரவு 10.30 மணிக்கு காலமாக இருக்கிறார் என்பது எங்களுக்கு எப்படி தெரியும். அதற்கு சில நாட்களுக்கு முன்பே "யோவ் இந்த வருடம் வழக்கம் போல 30.3.2014ல் 90வது பிறந்த நாள் விழா. நமது நண்பர்கள் குழாம் ஜனநேசன், கிருஷி, டாக்டர் அஹ்மது கான் உள்ளிட்ட 25, 30 பேர்களுக்கு சிற்றுண்டி, சிறு கூட்டம் எல்லாம் தயார், மெனு தயார், லிஸ்ட் தயார். நீர் எங்கேயும் போய்விடக்கூடாது. அய்யா அதெப்படி அன்னக்கி வேறெங்கேயும் போவேன். அன்று காலையிலேயே வந்துவிடுவேன் என்று சொன்னேன்.

ஆனால் *25.3.2014* இரவில் இதயத்தில் இடி விழுந்தது. தி.க.சி. தனியார் மருத்துவமனையில் மறைந்தார்.

26.3.2014 தினமணி

இலக்கியத் திறனாய்வாளர் தி.க.சி. காலமானார் என்று பாரம்பரியமிக்க தினமணி இதழ் தனது வாழ்நாள் முழுவதும் தினமணி கட்டுரைகளை வாசகர் கடிதங்களை அஞ்சல் அட்டையில் எழுதித் தந்து கொண்டிருந்த அந்த மனித நேயப் பண்பாளருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் முதல் பக்கத்தில் மூன்று பத்தி செய்தியாக முத்தாய்ப்பாக வண்ணப் புகைப்படத்துடன் வெளியிட்டு, தனது நன்றியை காணிக்கையாக்கிக் கொண்டது.

27.3.2014

26.3.2014 முழுவதும் அவரது உடல் 21ஈ, சுடலை மாடன் கோவில் தெருவில் வைக்கப்பட்டிருந்தது. மாநிலமெங்கும் தலைவர்கள் அஞ்சலி, படைப்பாளிகள், எழுத்தாளர்கள், மனித நேயமிக்கவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

ஆர்.நல்லகண்ணு

இந்திய கம்யூனிஸ்ட் தலைவர் ஆர்.நல்லகண்ணு, பழ.நெடுமாறன், பொதுவுடைமை இயக்கத் தலைவர்கள் தோழர்கள் ஸ்டாலின் குணசேகரன், தோப்பில் முகம்மது மீரான், நாஞ்சில் நாடன், விஞ்ஞானி நெல்லை முத்து, கலாப்ரியா, கழனியூரான், சு.வெங்கடேசன், எஸ்.ஏ.பெருமாள்,



மரபின் மைந்தன் முத்தையா, செந்தில் நாதன் போன்ற படைப்பாளிகள் இறுதி மரியாதை செலுத்தினார்கள்.

வைகோ

27.3.2014 அன்று தமிழர் தலைவர் வைகோ நேரில் வந்து தி.க.சி.யின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

27.3.2014 தீக்கதிர்

இடதுசாரி இலக்கிய ஆளுமை தோழர் தி.க.சி. காலமானார் என்று மார்க்சிஸ்ட் கட்சி அஞ்சலி செலுத்தியதை தீக்கதிர் *27.3.2014* முதல் பக்கத்தில் செய்தி தந்தது.

களந்தை பீர்முகம்மது

தி இந்து தமிழ் இதழில் *27.3.2014*இல் படைப்பாளிகளை உருவாக்கிய தி.க.சி. எனும் கட்டுரையை சகோதரர் பீர்முகம்மது தந்தார்.

28.3.2014 செய்யது முதாகர் சாஹிப்

கண்ணியத்திற்குரிய சகோதரர் செய்யது முதாகர் சாஹிப் 'His Pen cut a huge swathe connect Thi-ka -si, was another gift of Tamiraparani'என்று விரிவான கட்டுரையை ஆங்கில ஹிந்து

இதழில் தந்தார். இதில் ஓரிடத்தில் அடியேன் பெயரையும் குறிப்பிட்டிருந்தார்.

தி.க.சி. தனது இறுதி நாட்களில் மருத்துவமனையில் இருந்தபோது அவரது உதவியாளர் தம்பி சரவணனிடம் **'வைகோ இந்தத் தடவை எப்படியாவது நாடாளுமன்றத்திற்கு எம்.பி.யாக போகணுமய்யா'** என்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்கள் என்ற தகவலை என்னிடம் சொன்னார்.

அடியேனும் தம்பி சரவணனிடம் தி.க.சி. இதுகுறித்து பல தடவை இவ்வாறு என்னிடம் கூறியதை அவருக்கு அப்போது நினைவுபடுத்தினேன்.

CAR குட்டி @ சண்முகசிதம்பரம்

தி.க.சி. அவர்கள் எனக்கு முதலில் அறிமுகம் செய்து வைத்தது திருநெல்வேலி டவுண் வெள்ளந் தாங்கிய பிள்ளையார் கோயில் தெருவில் வாழ்ந்து வரும் குளத்தூர் ஜமீன்தார் C.A.R. குட்டி @ சண்முகசிதம்பரம் அவர்கள் தான். அவரது தாயாரின் திருமணத்தை நடத்தி வைத்தது பரலி.சு.நெல்லையப்பர்.

தி.க.சி.யின் உடல் இறுதி யாத்திரைக்கு கொண்டு செல்லப்பட்டபோது C.A.R. குட்டி @ சண்முகசிதம்பரம் நடந்தே வந்தார். அவருக்கு தி.க.சி. மாமா முறை. ம.தி.தா. இந்துக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் சிதம்பரநாதன் (ரசிகமணி டி.கே.சிதம்பரநாதனின் பேரன்) நெல்லை டவுண் சுந்தரலிங்கம் உள்ளிட்ட எண்ணற்றவர்கள் இறுதி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, நெல்லை கருப்பந்துறை இடுகாட்டில் 27.3.2014 மாலையில் தி.க.சி. உடல் எரியூட்டப்பட்டது.

மானுடம் மலர்ந்திருக்கும், அந்தத் திருமுகத்தை எந்நாள் காண்போம் இனி?

30.3.2014

தினமணி தமிழ்மணியில் தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் @ கலாரசிகன் தி.க.சி. குறித்து எழுதியது இதோ;

கடந்த செவ்வாய் கிழமை கன்னியாகுமரி விரைவு ரயிலில் நான் திருநெல்வேலி விரைந்தபோது எப்படியும் தி.க.சி.

ஐயாவைப் பார்த்துவிட முடியும்; பேசிவிட முடியும்; அவருடன் நான் அளவளாவ முற்பட்டால், அந்த உற்சாகத்திலேயே அவரது மண்ணுலக வாழ்வு நீண்டு நிற்கும் என்றெல்லாம் தான் நான் நினைத்தேன். “நெல்லைக்கு வாருமய்யா, ரொம்ப நாளாச்சு உங்களோட பேசி... நிறைய நிறையப் பேச இருக்கிறது” என்று அவர் தொலைபேசியில் அழைத்ததால், அவர் சற்று சோர்ந்து போயிருக்கிறார் என்று நான் புரிந்து கொள்வேன். அந்த அளவுக்கு எங்களுக்குள் ஒரு புரிதல் நிலவியது.

கடந்த ஏழு ஆண்டுகளில் பல நாள்களில் அவர் என்னை அழைத்திருப்பார். அன்றைய தலையங்கம் பற்றி பாராட்டவோ, விவாதிக்கவோதான் அந்த அழைப்பு, “சரியாத்தான் போயிட்டிருக்கு... பாரதி வழியில் தமிழ் தேசியம்... கடையேனுக்கும் கடைத் தேற்றம் என்று இருக்கிறது உங்கள் கண்ணோட்டம் இதுதான் நம்மை இணைக்கிறது.” என்று மனம் திறந்து பாராட்டுவார்.

தி.க.சி.யிடம் நான் கற்ற பாடம், மனம் திறந்து மற்றவர்களைப் பாராட்டுவது. “மழை பொழிவது போல நாம பாராட்டிடணுமய்யா” புல், பூண்டு புல்லாத்தான் இருக்கும். மரமா வளர்வது மரமா உயர்ந்து வளரும். அப்படித்தான் எழுத்தாளர்களும். மழை பெய்யாமல் இருந்தால் எப்படி மரமும், வளராமல் போயிடுமோ. அப்படித் தான் பாராட்டாம இருந்தா வளர வேண்டிய எழுத்தாளனும் வளராமலேயே போய்விடுவான் என்பது அந்த அரிஸ்டாட்டில் எனக்குக் கற்றுத் தந்த பாடம்.

நண்பர் திருப்பூர் கிருஷ்ணன் என்னிடம் ஒரு நாள் தி.க.சி. பற்றி நா.பார்த்தசாரதி கூறிய கருத்தொன்றைப் பகிர்ந்து கொண்டார். “அதியமானுக்கு கிடைத்தாற்போன்ற நெல்லிக் கனி ஒன்று எனக்குக் கிடைத்தால் நான் அதை தி.க.சி.க்குக் கொண்டு போய் கொடுத்து விடுவேன். அதை நான் புசித்தால் ஒரு நா.பா.தான் சிரஞ்சீவியாக வாழ முடியும். தி.க.சி. புசித்தால் நூற்றுக்கணக்கான நா.பா.க்களை உருவாக்க முடியும்“ என்றாராம். அந்தக் கூற்றின் நிதர்சன உண்மையை உணர்ந்த எத்தனை எத்தனை நெஞ்சங்கள் இப்போது நங்கூரம் இழந்து கலங்களாக, உள்ளமெல்லாம் சோகத்துடன் தவிக்கிறதோ... நான் உள்பட!

இன்னும் ஐந்து நாள்கள் வாழ்ந்திருந்தால், தனது 90ஆவது வயது கொண்டாடப்பட்ட உற்சாகத்தில் இன்னும் ஐந்து ஆண்டுகள் அவர் வாழ்ந்திருக்க கூடும்.

என்னாலேயே தாங்கிக் கொள்ள முடியவில்லையே. ஓவியர் வள்ளிநாயகமும், பேப்பர் கடை பொன்னையனும், பாபுவும் எப்படி இந்தப் பிரிவை எதிர் கொள்ளப் போகிறார்ள். “காலையில் இனி நான் யாருக்குப் பேப்பர் வாங்கப் போகிறேன்.” சொல்லும்போதே வெடித்துச் சிதறிவிடுகிறார் வள்ளி. “வள்ளி அண்ணனை நினைத்தால் தான் கவலையாக இருக்கிறது” என்று தனது துக்கத்தையும் மீறி வள்ளிக்காகக் கவலைப்படுகிறார் பொன்னையன்.

வயதை மீறி, தலைமுறை இடைவெளி இல்லாமல் தி.க.சி. ஐயாவால் எங்களிடமெல்லாம் எப்படி பழக முடிந்தது. வயது உடலுக்குத்தான் மனதுக்கல்ல என்பதை எங்களுக்கெல்லாம் வாழ்ந்து காட்டியவர் அவர். அவர் படிக்காத பத்திரிக்கைகள் இருக்காது. விவாதிக்காத புத்தகங்கள் இருக்காது. விவாதிக்காத விஷயங்கள் இருக்காது... நான் அடிக்கடி ‘விஷயம்‘ என்கிற வார்த்தையைப் பயன்படுத்துகிறேன் என்பதைக்கூட கூர்ந்து கவனித்துச் சொல்ல தி.க.சி.யால் மட்டுமே முடியும்.

தோழர் ஜனநேசன் கடந்த சனிக்கிழமையே தொலைபேசியில் அழைத்து ‘தி.க.சி.யின் உடல் நிலை சரியில்லை. ஒரு நடை போய் பார்த்துவிட்டு வாருங்களேன்’ என்று சொன்னார். செவ்வாய்க் கிழமைதான் புறப்பட்டேன். ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபோதே தி.க.சி. காலமாகிவிட்டதாக தகவல் வந்தது.

புதன் கிழமை காலையில் எனது கல்லூரி ஆசான் பேராசிரியர் தோத்தாத்ரியுடன் இறுதி மரியாதை செலுத்த சுடலை மாடன் தெருவுக்குப் போனபோது, நான் சலனமற்றிருந்தேன் ஏன் தெரியுமா? முந்தின நாள் இரவு ரயில் பயணம் முழுவதும் தி.க.சி. ஐயாவின் பிரிவை தாங்க முடியாத துக்கத்தை எல்லாம் அழுது தீர்த்திருந்தேனே அதனால் தான்!

கடந்த 18ஆம் தேதி அலுவலகக் காரியங்களுக்காக, கோவை செல்வதற்கு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நீலகிரி

விரைவு ரயிலில் அமர்ந்திருந்தேன். வியர்க்க விறுக்க ஓடிவந்தார் மகேந்திரா புத்தக நிறுவன மகேந்திரன்.

"சந்தியா பதிப்பகத்தார் வே.முத்துக்குமார் தொகுத்திருக்கும் தி.க.சி.யின் நாட்குறிப்புகள்" என்கிற புத்தகத்தை வெளியிடுகிறார்கள். இப்போது தான் நேராக அச்சாபீசிலிருந்து புத்தகத்தைப் பெற்றுக் கொண்டு வருகிறேன். உங்களுக்கு தான் முதல் பிரதி என்றபடி என்னிடம் தந்தார்.

தி.க.சி.யின் 90வது பிறந்த நாள் சிறப்பு வெளியீடாக வெளிக்கொணரப்படும் அந்த புத்தகத்தை பிறந்த நாள் விழாவில் வெளியிட உத்தேசித்திருந்தார் வே.முத்துக்குமார். 1948ஆம் ஆண்டில் தன்னுடைய 23வது வயதில் தாம்கோஸ் வங்கியில் பணியாற்றிய காலத்தில் சுமார் 304 நாள்கள் அவர் எழுதிய நாட்குறிப்புகளின் தொகுப்புத்தான் அந்த புத்தகம்.

'ஒரு வருடத்திற்கு முன்பே இந்நாட் குறிப்புகளை ரகசியமாக வாசிக்கின்ற வாய்ப்பு கிடைத்தது எனக்கு'. நாட்குறிப்பேட்டின் பெரும்பாலான பக்கங்கள் முனை மழுங்கி, நொறுங்கி, உதிர்ந்த நிலையிலும், ஊதா மை எழுத்துக்கள் மங்கிய நிலையில் இருந்தன. எல்லாவற்றையும் சீர்படுத்தி, குறிப்பெடுத்து, தி.க.சி.யோடு பலமுறை நேரில் உரையாடித் திருத்தங்கள் மேற்கொண்டு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் நிரம்பத் தயக்கம் காட்டியவர். பின் தொடர்ந்த நாட்களில், "நீங்க டைரியை வாசிக்கறதை கேட்கும்போதே எனக்கு மறுபிறவி எடுத்த மாதிரியிருக்கு" என உற்சாகமாகி உரையாடத் தொடங்கி விடுவார் என்று பதிவு செய்கிறார் முத்துக்குமார்.

உதாரணத்திற்கு இரு நாட்குறிப்புகள்

சர்வஜித்து தை மீ 8 உ புதன்: ரகுநாதனுடைய சங்கீத ருசியே தனி. சித்தூர் கச்சேரி அவருக்கு மிகவும் பிடிக்கும். எம்.எஸ்.பிடிக்காது!'

சர்வதாரி ஆனி மீ 19 உ வெள்ளி: பாரதிக்கு பிறகு தமிழ் இலக்கியத்திலேயே புதுமைப்பித்தன் பரம்பரை தோன்றியது. இன்று புதுமைப்பித்தன் சகாப்தம் ஆரம்பமாகி விட்டது. பாரதியைப் போலவே செத்த பிறகுதான் இவருக்கும் புகழ்

கிடைக்கப் போகிறது. புதுமைப்பித்தன் அமரரானார். அவர் ஆன்மா சாந்தியடையட்டும்!

புத்தக வெளியீட்டு விழாக்களில் கலந்து கொள்ளாத நான், 'தி.க.சி.யின் நாட்குறிப்புகள்' புத்தகத்தின் முதல் பிரதியை மகேந்திரனிடமிருந்து பெற்றுக் கொண்டேன்!

தி.க.சி.யின் புதல்வன் எழுத்தாளர் வண்ணதாசன் என்கிற கவிஞர் கல்யாண்ஜியின் கவிதைகளைப் படித்து ஆறுதலடையலாம் என்கிற எண்ணத்துடன் 'கல்யாண்ஜி கவிதைகள்' தொகுப்பை எடுத்துப் படித்தேன். என் மன நிலையைப் பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது ஓர் கவிதை.

ஏற்றி வைத்தாயிற்று விளக்கை
எண்ணெய் மிஞ்சுமா
திரி மிஞ்சுமா
இறுதியில் என்ற வாதங்கள்
இப்போது அவசியமற்று
ஒளி என்ற ஒன்றுமட்டும்
பரவிக் கொண்டிருக்கிறது.
இந்த நேரத்து உண்மையாக.

29.3.2014 – அருள்தாசன்

தி இந்து (தமிழ் நாளிதழ்) 29.3.2014 அன்று கலை இலக்கிய பகுதியில் படைப்பின் பாதைகள் பகுதியில் விமர்சனமும் கரிசனமும் என்ற அருள்தாசன் கட்டுரையில் அறம், அழகியல், அறிவியல் ஆகியவற்றை தி.க.சி. எழுத்தாளர்களிடம் வலியுறுத்துவதையும், ஏதோ ஒன்றைச் சாதிக்கலாம் படைப்பாளி சென்றுவிடக்கூடாது என்று தி.க.சி. கூறுவதையும் சுட்டிக்காட்டியிருந்தது.

தி.க.சி. மறைந்தபோதும் தி.க.சி. 90 என்ற விழா 7.5.2014இல் நெல்லையில் நடத்தப்பட்டது. இதோ இது குறித்த தகவல்கள்



கி.ராஜநாராயணன்

தி.க.சி. மறைந்த வேளையில் முதுபெரும் எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அடியேனுக்கு எழுதிய கடிதம் இதோ,

புதுவை–8

09.05.2014

அருமை சகோதரர் செ.திவான் அவர்களுக்கு கி.ரா வாழ்த்துக்களுடன்,

குஞ்ஞாலிகள் (புதையல்) கிடைத்தது.

உங்கள் கடும் உழைப்புக்கு முன்னால் நாங்கள் கடும் சோம்பேறிகள்.

ஆயுள் உங்களுக்கு நீண்டு கொண்டே போக வேண்டும். அவ்வளவுக்குத் தமிழ் இலக்கியத்துக்கு யோகம்.

தோழர் தி.க.சி. இறங்க வேண்டிய ஸ்டேஷன் வந்துவிட்டது; இறங்கிக் கொண்டார். நம்முடைய ஸ்டேஷன் எது, எப்போது இறங்க வேண்டும் என்று தெரியவில்லை. புழங்கிக்கொண்டிருக்கும் ஏனங்கள் (பாத்திரங்கள்) போல் பழசாகிக் கொண்டே வருகிறோம்.

இங்கே வெயில் கொல்ல வேண்டிய நேரத்தில் மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. இயற்கையின் அழகிலா விளையாட்டை யார் அறிவார்கள். புத்தகத்தைப் படித்து முடிக்க நாட்கள் செல்லும்.

பிரியங்களுடன்...

கி.ரா

புதுகைத் தென்றல்

மார்ச் 2014 புதுகைத் தென்றல் இதழில் கு.சின்னப்பாரதியின் படைப்பாளிகளுக்கு ஒரு கற்பக விருட்சம் தி.க.சி. எனும் கட்டுரை வந்தது.

ஆசிரியர் புதுகை எம்.தருமராசன் 90 வயது இளைஞர் திறனாய்வுத் தென்றல் தி.க.சி. என்று வர்ணித்திருக்கிறார். பிப்ரவரி, 2015 புதுகைத் தென்றலில் ஓர் அந்தியின் சந்திப்பில் எனும் தி.சுபாஷினி அவர்களின் அருமையான கட்டுரையும் பிரசுரம் ஆகி இருந்தது.

ஜனவரி 2012 புதுகைத் தென்றல் 100வது இதழில் முகப்பு பக்கத்தில் தி.க.சி. படத்தை வெளியிட்டு மகிழ்ந்தது.

செம்மலர் – பொதிகை மின்னல்

ஆழ்வை அசாருதீன் தி.க.சிவசங்கரன் எனும் கட்டுரையை பொதிகை மின்னலில் ஏப்ரல் 2014இல் தந்தார். தி.க.சி. படைப்பாளிகளைக் கொண்டாடிய படைப்பாளி என்று ஏப்ரல் செம்மலர் தி.க.சிக்கு அஞ்சலி செலுத்தியது. 6.4.2014 வண்ணக்கதிரில் நா.வே.அருள் திரும்ப வருவார் (தி.க.சி.) எனும் கவிதை தந்தார்.

ஜூனியர் விகடன்

2.4.2014 ஜூனியர் விகடனில் தமிழ் மகன் 21இ, சுடலைமாடன் கோவில் தெரு எனும் அஞ்சலிக் கட்டுரை தந்துள்ளார்கள்.

27.4.2014 வண்ணக்கதிரில் மனித நேய ஊற்று – அவர் என்று தி.க.சி. அவர்களைப் பற்றிய ஜனநேசனின் கட்டுரை வெளிவந்தது.

ஜனநேசன் – மனிதநேய நீரோட்டம்

திி.க.சி. குறித்து ஜனநேசன் சொல்வார்;

மாறுபட்ட கருத்தோட்டங்களுக்கு அப்பால் அவரிடம் ஒரு மனித நேய நீரோட்டம், பாவித்துக் கொண்டே இருந்தது. அதனை நேரில் நன்கு அறிந்து, தெரிந்து புரிந்து உணர்ந்து சொல்கிறேன். நானும் தி.க.சி. என்றொரு மானுடன் என்று!

ஆ.சிவ சுப்பிரமணியன்

காலச்சுவடு மாத இதழ் மே 2014இல் தி.க.சிவசங்கரன் இளம் படைப்பாளிகளின் வழிகாட்டி எனும் பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் அவர்களது கட்டுரையை வெளியிட்டு அஞ்சலி செலுத்தியது.

தாமரை – சி.மகேந்திரன்

'நான் ஒரு எளிய தோட்டக்காரன், எல்லாச் செடிகளுக்கும் தண்ணீர் பாய்ச்சுவேன், மலர்கின்ற செடி மலரட்டும், எந்த செடியும் கருக எனக்கு மனம் இடம் தராது' நிறைய படைப்பாளிகளை உருவாக்குவதே எனது நோக்கம் என்ற தி.க.சி.யின் முழக்கத்தை முகப்பிலே தாங்கி ஏப்ரல் 2014 தாமரை இதழ் தோழர் தி.க.சி. உருவப் படத்துடன் வெளிவந்தது. சாய்ந்துவிட்ட ஆலமரம் தி.க.சி. எனும் கட்டுரையில் சி.மகேந்திரன் அந்த இதழில் தந்தார்.

உயிர்எழுத்து

ஏப்ரல் 2014 உயிர்எழுத்து சுதீர்செந்தலின் தி.க.சி. என்ற தோழர் எஸ்.வி.ராஜதுரையின் தி.க.சி. (இக்கட்டுரையில் அடியேனின் பெயரையும், தி.க.சி. அவர்களை எஸ்.வி.ராஜதுரை சந்தித்த அன்று அடியேன் உடனிருந்த புகைப்படத்தையும் வெளியிட்டவர் எஸ்.வி.ராஜதுரை – உயிர் எழுத்து இதழ்)

தேடல் – படைத்தல் – பகிர்தல் என்று தி.க.சி.யின் கட்டுரையையும், தி.க.சி. உறவில் கலந்து, உணர்வில் நனைந்து எனும் வே.முத்துக்குமாரின் கட்டுரையும் உயிர் எழுத்து வெளியிட்டு தனது அஞ்சலியை தி.க.சி.க்கு செலுத்தியது.

தி.க.சி. என்றொரு தோழமை

உயிர்மை ஏப்ரல் 2014 இதழில் தி.க.சி. என்றொரு தோழமை எனும் அண்ணன் கழனியூரனின் கட்டுரைத் தொகுப்பு வெளிவந்தது. அட்டையிலும் திகசியின் படம் இடம் பெற்றிருந்தது. ஏப்ரல் 2014 உங்கள் நூலகம் தி.க.சிவசங்கரன் எனும் ஆளுமை என்ற அரசு கட்டுரையும் படைப்பாளிகளின் பாதுகாவலன் தோழர் தி.க.சி. எனும் டி.செல்வராஜின் கட்டுரையும், திறனாய்வாளர், படைப்பாளிகளின் படைப்பாளி, திரு.தி.க.சிவசங்கரன் அவர்களுக்கு மக்கள் சிந்தனைப் பேரவையின் வீர வணக்கம் எனும் நண்பர் த.ஸ்டாலின் குணசேகரனின் கட்டுரையும் இடம் பெற்றிருந்தது.

கவிதை உறவு எனும் மனித நேய இலக்கியத் திங்களிதழ் தி.க.சி.யின் உருவப்படத்தை முக்பபிலே தாங்கி 2014 ஏப்தல் இதழ் வெளியிட்டது. ஏர்வாடியாரின் மனத்தில் பதிந்தவர்கள் எனும் தலைப்பில் இலக்கியத் திறனாய்வாளர் தி.க.சிவசங்கரன் (திகசி) எனும் கட்டுரையை ஏர்வாடி எஸ்.ராதாகிருஷ்ணன் தந்திருந்தார்.

2014 ஏப்ரல் மே இதழில் (ம.சு.பாண்டியன் ஆசிரியர்) கருக்கல் விடியும் வரை இதழில் தி.க.சி. வண்ணப்படம் வெளியிட்டு அதன் கீழே 21இ, சுடலைமாடன் தெரு என்று மட்டும் குறிப்பிட்டு, தி.க.சி.க்கு நினைவஞ்சலி செலுத்தியது.

மகாகவியின் மரபில் வந்த பேனா வீரர்

ஜூன் 1983 தீபம் தமிழ இலக்கிய மாத இதழ் மகாகவி மரபில் வந்த பேனா வீரன் எனும் தி.க.சி.யின் கட்டுரை மணிக்கொடி பி.எஸ்.ராமையா அவர்களைப் பற்றி பக்கம் 4,5,6 இல் பிரசுரமாகி இருந்தது. அதே வரிகளை அடியேன் தி.க.சி.க்கு அணிவித்து மிகழ்கிறேன். **தி.க.சி.யும் மகாகவி மரபில் வந்த பேனா வீரர் தான்!**

பழ.நெடுமாறன்

தினமணி தீபாவளி மலர் 2013இல் சிறியன சிந்தியா தான் எனும் கட்டுரையில் அண்ணன் பழ.நெடுமாறன் தந்தார். இதில் குறிப்பிடுவார் தி.க.சி.யின் பஞ்சசீலக் கொள்கை

தமிழியம்
பெண்ணியம்
தலித்தியம்
சுற்றுச் சூழலியம்
மார்க்சியம்

என்று தன்னை நேர்மையின்றி விமர்சித்தவர்கள் கூட தி.க.சி. என்றும் பகைமை பாராட்டியதில்லை. ஒரு படைப்பாளியிடம் ஒவ்வொரு படைப்பிலும் மூன்று முக்கிய அம்சங்கள் வேண்டும் என்பார் தி.க.சி.

*28.6.2014*இல் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் சார்பில் நம்ம ஆளு தி.க.சி. என்ற தி.க.சிவசங்கரன் திருவுருவப்படம் திறப்பு நினைவேந்தல் நிகழ்ச்சி பேராசிரியர் எஸ்.தோதாத்ரி தலைமையில் நடைபெற்றது.

தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன்

தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் திருஉருவப் படத்தை திறந்து வைத்தார். பேராசிரியர் நா.இராமச்சந்திரன் உள்ளிட்ட பெருமக்கள் பலர் உரையாற்றினர். பொன்னீலன் நினைவுரை தந்தார். இரா.காமராஜ் கருத்துரை தந்தார். ப.ஆனந்தகுமார் அரிய உரை தந்தார். செ.பரத்வாஜ் நன்றி சொன்னார்.

20.11.2014 ம.தி.தா. இந்துப் பள்ளியில் கழனியூரன் தி.க.சி. என்றொரு தோழமை நூல் காவ்யா பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது.

இவ்வாறு காலந்தோறும் தி.க.சி. குறித்த நிகழ்வுகள் தொடர்கின்றன. தொடரும் – தொடர வேண்டுமென்று துதிக்கிறேன்.

28.10.2015 தினமணி மகளிர் மணியில் தி.சுபாஷினி கட்டுரை வந்தது.

எழுத்துக் குடும்பம்

தி.க.சி.க்கு கணபதி, கல்யாணசுந்தரம் கல்யாணிஜி என்ற வண்ணதாசன், சேது இராமலிங்கம் என்ற மூன்று மகன்கள், ஜெயலெட்சமி, சாந்தா, கௌரி என்ற மூன்று பெண் மக்கள்.

மூத்த மகன் கணபதி நல்ல எழுத்தாளர். முழுமுதலோன், தெய்வமைந்தன், திருவேந்தி என்ற புனைப் பெயர்களில் எழுதினார். இவர் நல்ல ஓவியர். 2009ல் குறுந்தொகையின் முதல் நூறுபாடல்களுக்கு நவீன தெளிவுரை எழுதினார். இரண்டாவது தொகுதி சென்னை சந்தியா பதிப்பகம் 101– 200 குறுந்தொகை பாடல்களுக்கு உரையுடன் வெளிவந்தது.

24.9.2012 அன்று என்னருமைத் தோழர், வரலாற்று நூல் வித்தகர் செ.திவான் அவர்களுக்கு

என்றும் தோழமையுடன்

தி.க.சி.

நெல்லை –4

என்று கையொப்பமிட்டு அந்த நூலினை அடியேனுக்கு தந்தவர் தி.க.சி.

கலீல்ஜிப்ரானின் Brokenwings எனும் படைப்பை தமிழில் முறிந்த சிறகுகள் எனும் நூலாக கணபதி என்ற திருவேந்தி தந்தார்.

நாடறிந்த நல்ல எழுத்தாளர் ஓவியர், கவிஞர் கல்யாண்ஜி என்கிற வல்லிக்கண்ணதாசன் என்கிற வண்ணதாசன் என்கிற கல்யாணசுந்தரம். அவரது படைப்புகளை அகிலம் அறியும். அடியேனும் அறிவேன்.

கலைக்க முடியாத ஒப்பனைகள், ஒளியிலே தெரிவது, நொடி நேர அரைவட்டம், பெயர் தெரியாமல் ஒரு பறவை, உயரப் பறத்தல், மனுஷா மனுஷா, சின்னு முதல் சின்னுவரை, சமவெளி, சினன் விஷயங்களில் மனிதன், தோட்டத்திற்கு வெளியிலும் சில பூக்கள், பனை போல் இருக்கிற மினி, கனிவு. மணல் உள்ள ஆறு எனும் பல நூல்களைத் தந்தவர் வண்ணதாசன்.

தி.க.சி.யின் மூன்றாவது மகன் சேது நல்ல வாசிப்பாளி. ஓரிரு முறை அவரைச் சந்தித்துப் பேசியுள்ளேன்.

‘திசைகள்’ இதழின் செய்தியாளராகப் பணியாற்றியவர் அவர்.

தி.க.சி.யின் குடும்பம் எழுத்துக் குடும்பம். தி.க.சி.யின் துணைவியார் தெய்வானை அம்மாள் எழுதிய கடிதங்களும் இலக்கிய மிக்கவை என்பார் அண்ணன் வண்ணதாசன்.

கலை அழகு

தி.க.சி. படைப்பாளிகளிடம் உலகளாவிய மனித குல நேயம், சமூக நோக்கு இருக்க வேண்டும் என்பார்.

எழுத்தாளனின் பேனா சமுதாய விரோதிகளுக்கு எதிரான வாளாகவும், மக்களை காக்கும் கேடயமாகவும் விளங்க வேண்டும் என்று வலியுறுத்தும் தி.க.சி. அடிக்கடி சொல்வார் 'தி.க.சி. என்ற மனிதன் இறந்து விட்டால் ஓர் எழுத்தாளன் என்று கூற வேண்டாம்' ஒரு நல்ல மனிதன், உற்ற தோழன் போய் விட்டான் என்று நினைத்துக் கண்ணீர் விட ஒரு நூறு பேராவது வேண்டும். இதுதான் இன்றும் என்றும் என் இதய ஒலியாகும் என்று தி.க.சி. உரத்த சிரிப்புடன் சொல்லியது இன்னும் எளியேனின் காதுகளில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. மானுடகுலம் இருக்கும் வரை தி.க.சி. என்றொரு மானுடனும் வாழ்வான் மக்கள் மனத்தினிலே!

நிறைவாக

மனிதம் மிக்க மாமனிதர்

ஏப்ரல் 2011 புதுகைத் தென்றல் இதழில் டி.எஸ். ரவீந்திரதாஸ் தி.க.சி. குறித்து எழுதிய கட்டுரை மங்கா மா மனிதர், கடல் நுரையைப் போல மதிந்து வரும் தி.க.சி.யின் நினைவுகளை அசைபோடுவதில் மனம் மகிழ்கிறது. அவரின் அன்பையும் அடக்கத்தையும் அறிவையும் நினைத்து அவரை நான் என் நெற்றியில் ஒற்றிக் கொண்டு என் நினைவில் பதித்துக் கொண்டேன் **மனிதம் மிக்க மா மனிதர்** அவர் என்பார் டி.எஸ்.ரவீந்திரதாஸ், சுபாஷினி – மனிதர் தந்தமை தவழும் வளைவு வீடு நூலில் எளிய படைப்பாளிக்ள உருவாக்கும் மனிதர் என்ற பகுதி இதிலும் இடம் பெற்றுள்ளது. 2014இல் அண்ணன் கழனியூரனின் தொகுப்பில் தி.க.சி. என்றொரு தோழமை எனும் நூல் காவ்யா பதிப்பகத்தால் வெளிவந்தது. அதில் உள்ள கட்டுரைகள் இதோ;

நீர்ப்பாச்சி - கி.ராஜநாராயணன்
தி.க.சி. - எஸ்.வி.ராஜதுரை *(இதில் மட்டும் அடியேன் பெயர் உள்ளது)*
தி.க.சி. சில நினைவுகள் - தீப.நடராஜன்
சிறியன சிந்தியாதான் - பழ.நெடுமாறன்
பேசும் கால்க்காசு கடுதாசி - பா.செயப்பிரகாசம்
அன்பெனும் பெரு வெள்ளம் - கலாப்ரியா
சாய்ந்துவிட்ட ஆலமரம் - சி.மகேந்திரன்
தி.க.சி.யின் மரணசாசனம் - பொன்னீலன்
தி.க.சி. எனும் ஆளுமை - வீ.அரசு
விமர்சன வித்தகர் - எஸ்.தோத்தாத்ரி
நினைத்தபடியே நடந்தது - வண்ணநிலவன்
தி.க.சி.க்கு அஞ்சலி - எஸ்.ராமகிருஷ்ணன்
தி.க.சி. நினைவலைகள் - ஜெயமோகன்
அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் - பாவண்ணன்
மரணத்தை யாசித்த தி.க.சி. - எஸ்.ராஜகுமாரன்
தி.க.சி.யின் இலக்கிய உள்ளுணர்வு - தமிழவன்
இளம் படைப்பாளிகளின் வழிகாட்டி - ஆ.சிவசுப்பிரமணியன்
படைப்பாளிகளை உருவாக்கியவர் - களந்தை பீர்முகம்மது
தி.க.சி.யின் திறனாய்வுப் போக்கு - பி.தட்சணாமூர்த்தி
தி.க.சி. என்றொரு நண்பர் - பா.ராகவன்
இலக்கிய அனுபவங்கள் - வே.சபாநாயகம்
படைப்பாளிகளின் பாதுகாவலன் - டி.செல்வராஜ்
தூண்டாமணி விளக்கு - இந்திரன்
89திலும் தம்மைப் புதுப்பித்துக் கொண்டவர் - பொ.மணியரசன்
தி.க.சி. நினைவுகள் நிரந்தரமானவை - குரு. ராதாகிருஷ்ணன்
கனிந்தமானுடன் - விக்கிரமாதித்தன்
நீங்காத நினைவுகள் - ஜோதிர்லதா கிரிஜா
என்றும் அன்புடன் தி.க.சி. - சுகுமாரன்
தொழிற்சங்கவாதி தி.க.சி. - சத்யானந்தன்
தி.க.சி. மறைவும் தமிழ் இலக்கியமும் - கமலாலயன்

தி.க.சி. என்கிற தோழர் - சுதிர்செந்தில்

ஏகலைவனை உருவாக்கும் தபால்கார்டு - இரா.மோகன்ராஜு

முகவரி - நா.வே. அருள்

தி.க.சி. என்னும் இளைஞன் - சுகா

சுட்டுவிரல் - சௌந்திர மகாதேவன்

படைப்பாளிகளை ஊக்குவித்தவர் - முருகபூபதி

தி.க.சி.யின் தரிசனம் - பாரதி தம்பி

திறனாய்வுத் தென்றல் 'தி.க.சி.' - திருப்பூர் கிருஷ்ணன்

இலக்கியத் திறனாய்வாளர் - ஏர்வாடி இராதாகிருஷ்ணன்

தி.க.சி. என்னும் மாமனிதர் - ந.க.மங்கள முருகேசன்

ஒளி ஏற்றும் தீபம் தி.க.சி. - எம்.ஷா

விமர்சனமும் கரிசனமும் - பொன் வள்ளிநாயகம்

தி.க.சி. - 90 - சுபாஷிணி

தி.க.சி.யின் தனித்துவங்கள் - ஜனநேசன்

தந்தைமையான தோழமை - கே.பாலசுப்பிரமணியன்

உறவில் கலந்து உணர்வில் நினைந்து - வே.முத்துக்குமார்

தி.க.சி. என்றொரு தோழமை - கழனியூரன்

இடதுசாரி இலக்கிய விமர்சகர் - சமயவேல்

வாராது வந்துதித்த மாமணியாய் - பேனா மனோகரன்

தி.க.சி.யின் வரலாறு - வே.மு.குமார்

தி.க.சி.யின் நினைவில் - வெங்கட்சாமி நாதன்

அந்த நாட்கள் - சிகரம் ச.செந்தில்நாதன்

மங்கள முருகேசன்

தி.க.சி. என்றொரு தோழமை நூலில் தந்துள்ள தி.க.சி. என்னும் மாமனிதர் என்ற கட்டுரையில் தி.க.சி.யை அற்புத மனிதர் என்று மங்கள முருகேசன் போற்றுவார்.

ஜூலை 2014இல் பேராசிரியர் நண்பர் இரா.மோகன், புதுவை மு.தருமராசன் இருவரும் தொகுப்பாசியர்களாக இருந்து வானதி பதிப்பகம் வெளியிட்ட நூல் தி.க.சி. எனும் ஆளுமை. ஏற்கனவே வெளிவந்த நூலில் இருந்து 18 கட்டுரைகள் இதிலே உள்ளது.

அது தவிர தினமணி 30.3.2014இல் வெளிவந்த கலாரசிகன் கே.வைத்தியநாதன் தினமணி ஆசிரியரின் தி.க.சி.யி.டம் கற்ற பாடம் எனும் கட்டுரை உள்ளது.

அம்ருதா மே 2014இல் கழனியூரனின் வழித்துணை, தி.க.சி. என்றொரு ஆலமரம் எனும் வண்ண நிலவனின் கல்கி ஏப்ரல் 6, 2014 கட்டுரை, மே 2014 இனிய உதயத்தில் வெளியான தி.க.சி. இல்லாத வெறுமை எனும் மு.மேத்தாவின் கட்டுரை, காவ்யா ஏப்ரல் ஜூன் 2014 இல் வெளிவந்த காவ்யா சண்முகசுந்தரத்தின் வெறிச்சோடிப்போன சுடலைமாடன் தெரு, உங்கள் நூலகம் இதழ் ஏப்தல் 2014 இல் தாய்மையுள்ளம் மிக்க இலக்கிய விமர்சகர் எனும் த.ஸ்டாலின் குண சேகரனின் கட்டுரை, புதுகைத் தென்றல் இதழில் (மே 2014) கே.பாலசுப்பிரமணினம் எழுதிய தி.க.சி. பற்றிய பண்பின் சிகரம் கட்டுரை.

உலகப் பெருந்தமிழர் தி.க.சி. எனும் பழ நெடுமாறன் கட்டுரை, தன்மானக்குரல் 1–15 மே 2014 இலிருந்து இதில் எடுத்தாளப்பட்டுள்ளது. அதுபோலவே 2.4.14 ஜூனியர் விகடனிலிருந்து 21 இ சுடலைமாடன் கோயில் தெரு என்ற தமிழ் மகன் கட்டுரையும் வந்துள்ளது. 9.4.2014 ஆனந்த விகடனில் கதிர் பாரதியின் 'நீர்ப்பாய்ச்சி', வந்தது. ஏப்ரல் 2014 செம்மலர் படைப்பாளிகளைக் கொண்டாடிய படைப்பாளி எனும் இதய அஞ்சலியை தி.க.சி. க்கு செலுத்தியது. 25.3.2014 தினமணியில் பல்வேறு தளங்ககளில் பரிணமித்தவர் எனும் செய்தி தி.க.சி. குறித்து வந்தது. குமுதம் அரசு பதில்கள் 9–4–2014 (படைப்பாளிகளை உருவாக்கிய படைப்பாளி), இந்திய டுடே ஏப்ரல் 9, 2014 (தி.க.சி. எனும் வழிகாட்டி (கவின் மலர்) புதிய தரிசனம் ஏப்ரல் 1–16, 2014 இல் குமரன் அசோக்கின் தோழர் தி.க.சி. காலமானார், ஏப்ரல் 2014 இல் சௌந்தர சுகனில் சிற்றிதழ்களின் தூதர், கல்வெட்டு பேசுகிறது இதழில் தி.க.சி. எனும் சிகரம், பொதிகை மின்னலில் ஆழ்வை அசாருதீனின் தமிழுக்குக் கிடைத்த அற்புதம், அந்திமழையில் தமிழர் தேசியத்துக்கு ஏற்ற மார்க்சியத் தத்துவங்கள், புதிய புத்தகம் பேசுதுவின் இளைஞர்களை உருவாக்கிய இலக்கிய இயக்கம், தென்றலில், எழுத்தாளர்களின் நண்பர், கணையாழியில தி.க.சி. மறைந்தார், மகளிர் ஓசையில் முற்போக்கு இலக்கியவாதிகளின் வழிகாட்டி, காக்கைச் சிறகினிலே தமிழ் எழுத்துப் பரப்பின் ஈடு செய்ய முடியாத இழப்பு எனும் கட்டுரைகள் வெளிவந்தது.

மாமனிதர்

மனித நேயம் கொண்ட மாமனிதராக எல்லோரையும் சமமாக மதித்தவர் என்று அருமை நண்பர் காந்தி தனது சைநெறி இதழில் 2014 மே இதழில் தி.க.சி.யினை வர்ணித்தார்.

ஏப்ரல் தமிழ் இலமூரியாவில் தமிழ் – இலக்கிய உலகிற்குப் பேரிழப்பு, தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம் இதழ் பன்முகப்பட்ட ஆற்றல்களின் வார்ப்பு, மஹாகவிதையில் அஞ்சல் அட்டையால் அன்பை வளர்த்தவர், அத்தோடு மதிலை பிரபாவின் பேரன்புமிக்க இலக்கிய ஆளுமை எனும் கட்டுரை வெளிவந்தது.

ஜூன் 2014 இனிய நந்தவனம் இதழில் விலை மதிப்பில்லாத மணித்துளிகள், ஜனவரி 2015இல் அரிமா நோக்கு வெளியிட்ட தி.க.சிவசங்கரன் (30.3.1925 – 25.3.2014) ஏப்ரல் –ஜூன் 2014 நிறை இதழ் எல்லோராலும் மதிக்கப்பட்ட பண்பாளர், சித்திரை ஏப்ரல் 2014 இதழ் தமிழ்ப்பணி, திறனாய்வுச் செம்மல் தி.க.சி.யை இழந்தோம் எனும் கவிதை, அது போலவே மனித நேயம் இதழில் கருமலைப் பழம் நீ தந்த ஒரு கடித இலக்கியம் கண் மூடிக் கொண்டு எனும் கவிதை 25–5–2014 தினமணியில் பேனா மனோகரனின் நட்சத்திரம் ஒன்று மண்ணுலகிலிருந்து விண்ணுலகுக்கு எனும் கவிதை வெளிவந்தது.

தி.க.சி. என்னும் மானுடன்

ஜீவா என்றொரு மானுடன் எனும் நூலையே தந்த அண்ணன் பொன்னீலன், சாரல் கீதம் மே 2014 இதழில் தி.க.சி. என்னும் மானுடன் என்னும் கட்டுரை தந்தார். அதில் முத்தாய்ப்பாகச் சொல்வார் 'இறுதி நேரத்தில் கூட சமூகத்தையும், இலக்கியத்தையும் தவிர எதையும் சிந்திக்காத அந்த மனிதர் எவ்வளவு சிறந்த மானுடர்' என்பார். கு.சின்னப்பாரதியின் நெஞ்சில் நிலைத்தவர்களில் பக்கம் 41– 45இல் குறிப்பிடப்பட்டுள்ள தி.க.சி. பற்றிய கட்டுரை படைப்பாளிகளுக்கு ஒரு கற்பக விருட்சம், உலா வந்த உந்து; சக்தி எனும் கே.ஜி.இராஜேந்திபாபுவின் கட்டுரையும், வேட்கையின் நிழலில் வெளிவந்த ஆரிசனின் கவிதையான தி.க.சி. எனும் மூன்றெழுத்தில் கவிதையும் இந்த நூலில் இடம் பெற்றுள்ளது.

தினமலர் 15–6–2014இல் தொ.பரமசிவன் தி.க.சி.யின் நாட்குறிப்புகள் பற்றிய கருத்துரை சொல்லும்போது ஒரு தனி

மனிதனின் டைரி எப்படி இருக்க வேண்டும் என்பதை அடுத்த தலைமுறைக்குச் சொல்லிச் சென்றுள்ளார் தி.க.சி. என்பார்.

இரா.மோகன்

புதுகைத் தென்றல் ஜூலை 2014 இதழில் நாட்குறிப்புகள் உணர்த்தும் தி.க.சி.யின் ஆளுமைப் படைப்புகள் எனும் கட்டுரை பேராசிரியர் இரா.மோகன் அவர்களால் எழுதப்பட்டது இந்த நூலில் இடம் பெற்றுள்ளது.

ஆனந்த விகடன்

'பொக்கிஷம்' எனும் தலைப்பில் ஆனந்தவிடன் 16.2.2014இல் தி.க.சி.யின் எனது பஞ்சசீலக் கொள்கை எனும் கட்டுரையை வெளியிட்டுள்ளது. வே.முத்துக்குமார் தொகுத்த தி.க.சி.யின் நாட்குறிப்புகள் நூலிலிருந்து தேடல் – படைத்தல் – பகிர்தல் எனும் கட்டுரையும், தமிழ்ப் பண்பாட்டில் மாற்றங்கள் தேவை, பாரதி பணிகளில் இளைஞர்கள், தமிழுக்கு வளம் சேர்க்கும் புதுமைக் காவியம் எனும் திகசியின் படைப்புகளும், புதுகைத் தென்றல் ஆசிரியருக்கு தி.க.சி. 20–10–2011, 21.11.2012, 21.3.2013, 14.2.2012, 18.3.2013, 16.5.2015 ஆகிய தேதிகளில் எழுதிய கடிதங்களும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இருத்தலுக்கான இயங்குதல், இயங்குதலுக்கான இருத்தல் எனும் தி.க.சி.யின் கருத்துரையும் இடம் பெற்றுள்ளது.

ஜீவா 2014இல் பிறந்த நாள் வெளியீடு சி.கல்யாணியின் கட்டுரையுடன் நிறைவடைகிறது. தி.க.சி. 90 எனும் தலைப்பில் இறுதியில் சில செய்திகள்,

தி.க.சி. எனும் ஆளுமை

விமர்சன வித்தகர் தி.க.சி. எனும் கட்டுரையை பேராசிரியர் எஸ்.தோதாத்ரி தினமணியில் 27.3.2014இல் எழுதியிருந்தார். அதில் சொல்வார்,

தி.க.சி. என்ற இந்த மனிதர் தொடர்பு கொள்வதில் வல்லவர். ஒரு கதை அல்லது கடடுரை வந்தால் அதனை உடனே பாராட்டுவார். தவறு இருந்தால் சுட்டிக்காட்டவும் செய்வார். பல மணி நேரம் உரையாடுவதில் வல்லவர். அவரிடம் சென்று உரையாடிவிட்டு வரும்போது நமக்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்படும் என்ற வரிகளை அடியேனும் அப்படியே வழி மொழிகிறேன்.

எங்கள் தந்தையே தி.க.சி. எனும் உரப்புளி நா.ஜெயராமனின் கட்டுரையும், பாடமாக வாழ்ந்த மா மனிதர் இரா. இரவி கட்டுரையும், புதுகைத் தென்றல் ஜூலை 2014இல மற்றவர்களுக்காகவே வாழந்த மாமனிதர் தி.க.சி. எனும் கட்டுரையும் வெளிவந்தது. அந்த நூலில் பக்கம் 139இல் சொல்வார். தி.க.சி. அவர்களால் ஊக்குவிக்கப் பெற்று எழுத்தாளர்களாகவும், நூலாசிரியர்களாகவும் உயர்ந்தவர்கள் பற் பலர். அவருடன் பழகிய தோழர்களின் அனுபவம் அளவற்றது. எனினும், எல்லோராலும் போற்றப்படும் மையப்புள்ளி – மற்றவர்களுக்காகவே வாழ்ந்த மாமனிதர் தி.க.சி. என்பதாகும்.

சிறந்த மானுடர்– மா மனிதர்

ஓட்டப்பிடாரம் கண்ணம்மாள், நெல்லை டவுண் நெல்லையப்ப பிள்ளை தம்பதியருக்கு 10.9.1931ல் பிறந்த 84 வயது நிரம்பிய பெரியவர் நெ.சுப்பிரமணியன் சொல்வார். ஒரு முறை தி.க.சி. வீட்டில் ஏதோ விசேஷம். தி.க.சி. அதில் நம்பிக்கை கிடையாது. விசேஷ முடிவில் குரு தட்சணையாக ரூபாய் 50 குருக்கள் கேட்டார். அருகில் உள்ளவர்கள் இது அதிகம். ஐந்தோ, பத்தோ தருகிறோம் என்றார்கள். அப்போது தி.க.சி. “நீங்கள் எல்லாம் அரசாங்கத்தில் வாங்கும் சம்பளம் எவ்வளவு அதிகம், அந்த குருக்களுக்கு கேட்ட 50 ரூபாயைக் கொடுங்கள் என்று கனிவுடன் கூறினார். தனது கொள்கை வேறு என்றபோதிலும் மனித நேயம் மிக்க மாமனிதர் தி.க.சி. பற்றி எவ்வளவோ எளியேனால் சொல்ல முடியும்.

தி.க.சி. இறுதி மூச்சு வரை சமூகத்தையும் இலக்கியத்தையும் தவிற வேறு எதையும் சிந்திக்காத சிறந்த மானுடர், சுருங்கக்கூறின், ‘சிறியன சிந்தியாதான்’ என்ற கம்பரின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து காட்டியவர். அவர் தனி ஒருவராக இருந்து ஓர் இயக்கம் போல் பணியாற்றியவர். சிரித்த முகத்துடன் மரணத்தை தழுவிய மா மனிதர். (இது பேராசிரியர் இனிய நண்பர் இரா.மோகன், புதுவை மு.தருமரசன் தந்துள்ள தி.க.சி. எனும் ஆளுமை நூலில் ‘சில சொல்’ பகுதியில் வரும் வைர வரிகள் இவை)

ஆம் தி.க.சி. என்றொரு மா மனிதர் நினைவைத்
தினமும் நினைத்து போற்றுவோம்!
தீந்தமிழ் இருக்கும் வரை அவர் புகழ் நிலைக்கட்டும்!

தி.க.சி. என்றொரு மானுடன் செ.திவான்